# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

### இளம்பூரணர் உரை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

### இளம்பூரணர் உரை

பதிப்பாசிரியர்

**திரு. அடிகளாசிரியர்**

இணைப்பேராசிரியர், ஓலைச்சுவடித் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: **101**

திருவள்ளுவர் ஆண்டு 2019 புரட்டாசி – செப்தம்பர் 1988

நூல் : **தொல்காப்பியம் – சொல்லதிகாரம்**
**இளம்பூரணர் உரை**

ஆசிரியர் (பதிப்) : **திரு. அடிகளாசிரியர்**

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : **உரூ. 45-00**

அச்சு : கே.பி.டி. இண்டஸ்ட்ரீஸ்
அண்ணாமலைநகர்—608 002

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பதிப்பாசிரியர் உரை | ... | 5 |
| | சுருக்க விளக்கம் | ... | 11 |
| 1. | கிளவியாக்கம் | ... | 1 |
| 2. | வேற்றுமையியல் | ... | 71 |
| 3. | வேற்றுமை மயங்கியல் | ... | 97 |
| 4. | விளி மரபு | ... | 124 |
| 5. | பெயரியல் | ... | 142 |
| 6. | வினையியல் | ... | 169 |
| 7. | இடைச் சொல்லியல் | ... | 208 |
| 8. | உரிச்சொல்லியல் | ... | 241 |
| 9. | எச்சவியல் | ... | 285 |
| 10. | நூற்பா-சொல்லகராதி | ... | 347 |
| 11. | உரைப்பொருள் அடைவு | ... | 429 |
| 12. | உதாரண மேற்கோள் அகராதி | ... | 447 |
| 13. | நூற்பா முதற்குறிப்பு அகராதி | ... | 503 |

# பதிப்பாசிரியர் உரை

**தோற்றுவாய்**

உலகத்தில் வழங்கி வரும் எல்லா வகை மொழிகளிலும் உள்ள ஒவ்வொரு சொல்லும் குறிக்கோள் உடையதாகவே இயங்குகின்றது. இக்குறிக்கோளை அறிஞர் 'குறி' என்றும் 'இலக்கண' மென்றும் கூறுவர். தமிழ் மொழியை நன்கு ஆராய்ந்து அறிஞர் பலர் அதற்கு இலக்கணம் எழுதியுள்ளனர்.

**இலக்கணங்களில் தொல்காப்பியம்**

தமிழிலக்கணம் பலரால் எழுதப்பட்டிருப்பினும் அவற்றுள் தொல்காப்பியமே சிறந்த இலக்கண நூலாக உள்ளது. இலக்கண விளக்க நூலார் "இலக்கணமாவது தொல்காப்பியம் ஒன்றுமே; செய்யுளாவது திருவள்ளுவர் ஒன்றுமே" என்று கூறுவதைக் கருதினால் தொல்காப்பியம் ஒப்பு உயர்வற்ற இலக்கண நூலென்பது விளங்கும்.

கற்பனை வகையால் இலக்கணச் செய்திகளைப் படைத்துக் கொள்ளாமல் தமிழுலகத்தில் வழங்கி வரும் இருவகை வழக்கங்களையும் ஆராய்ந்து மெய்ம்மை தோன்ற இலக்கணச் செய்திகளைக் கூறுதலால் தொல்காப்பியத்திற்கு 'மெய்ந்நூல்' என்றொரு பெயர் வழங்குகின்றது. இப்பெயராட்சியை **மயிலைநாதர்** "ஒருபாற் கிளவி யெனைப்பாற் கண்ணும், வருவகை தானே வழக்கெனப் படுமே' என்றார் **மெய்ந்நூலார் தொல்காப்பியனார்** என்று கூறுங் கூற்றால் அறியலாம். 'இலக்கண நூல் வகைகளில் தொல்காப்பியம் பெருநூல் என்னும் வகையைச் சாரும். சூத்திரம், ஒத்து, படலம் மூன்றுறுப்படக்கிய தன்மைத் தாய்வருதலின் பெருநூல் என்று பேசப்படுவதாயிற்று.' என்பர் இளம்பூரணர் (தொல். செய். 765). இத்தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்றுபகுப்பினை உடையது.

### சொல்லதிகாரம்

**இளம்பூரணர்** தொல்காப்பியப் பாயிர உரையுள் "எழுத்தும் சொல்லும் பொருளுமென வைத்துப் பின்னும் மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி (பாயிரம்) என்றது பிறநூல் போலச் சொல்லுள் எழுத்தினை மயக்கிக் கூறாது வேறு சேரக் கூறினான் என்றதென்பது" எனக் கூறுதலின், தொல்காப்பியச் சொல்லதிகராம் சொல்லுள் எழுத்தினை மயக்கிக் கூறாது, சொல்லிலக்கணமே கூறவந்ததென்க. சிலர் இவ்வாறு கூறுவதை நோக்கினால் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் மயக்கிக் கூறிய வேறு இலக்கண நூலும் உண்டு போலும்.

### சொல்லதிகார உரைகள்

தொல்-சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், கல்லாடர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் என்பவர் எழுதியுள்ள உரைகள் இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவற்றுள் இளம்பூரணர் உரையே தொன்மை வாய்ந்த சிறந்த உரையாகும்.

### இளம்பூரணர் உரைச் சிறப்பு

நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதர் தம் உரையுள் இளம்பூரணர் உரைப்பகுதியை அப்படியே எடுத்தமைத்துக் கொண்டுள்ளார். அவர் "இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரணரெனும் ஏதமின் மாதவர் ஓதிய உரை", (நன்.359) என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். மேலும் அவர் இளம்பூரணருக்கு ஆசிரியர் என்னும் பெயரைத் தந்து **இளம்பூரண ஆசிரியர்,** என்று சிறப்பித்துக் கூறுகிறார். சொல்லதிகார உரை முடிவில் சொல்லதிகாரம் உண்மைப் பொருளும் உதாரணமும் முடிந்தன என்று எழுதப்பட்டுள்ளதை எண்ணினால் இளம்பூரணரின் சொல்லதிகார உரை உண்மைப்பொருளை உணர்த்த வந்த உரையாகும் என்பது தெரிகின்றது.

### அச்சிட்டது

தமிழ்ப் பேரறிஞர் உயர்திரு கா. நமச்சிவாய முதலியாரவர்கள் தொல்-பொருள்-அகத்திணையியல் புறத்திணையியல்

இளம்பூரணத்தை 1920-இல் அச்சிட்டனர். பின்னர் அவர்களே தொல்-சொல் இளம்பூரணத்தையும் முதன் முதலாக 1924-இல் அச்சிட்டனர்.

அவர்க்குப் பின் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் 1963-இல் மேற்கண்ட சொல்லதிகாரத்தை அச்சிட்டனர்.

**என் வேண்டுகோள்**

யான் தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தபொழுது தமிழிலக்கண நூல்களை ஆழ்ந்து படித்து வந்தேன். அப்பொழுது அந்நூல்கள் பலவற்றில் பல பிழைகள் இருக்கக் கண்டேன். அப்பிழைகளிற் சிலவற்றை எடுத்துக்காட்டி 'இலக்கண நூல்களில் காணப்படும் பிழைகள்' என்று தலைப்பிட்டுத் தமிழ்ப் பொழில் என்னும் பத்திரிகையில் வேண்டுகோள் கட்டுரையொன்று எழுதினேன்.

அக்கட்டுரையில் தமிழ்க்குக் கருவி நூல்களாகிய இலக்கண நூல்களே பிழையாக அச்சிடப்பெற்று வழங்கப்பெறுவதாயின் அது தமிழ்மொழிக்கு ஆக்கந்தராதென்றும், விரைவில் நாட்டிலுள்ள இலக்கண ஓலைச்சுவடிகளைத் தேடிப் பிடித்து அவற்றுடன் அச்சுப்பிரதிகளை வைத்து ஒப்பாய்வு செய்து இலக்கண நூல்களை அச்சிட்டுக்கொள்ள வேண்டுமென்றும், இந்த ஆய்வு வேலையில் தமிழ்ப் பேரறிஞரெல்லோரும் முழு மூச்சாக இறங்கிப் பணிபுரிய வேண்டுமென்றும் வேண்டுகோள் விட்டிருந்தேன். இக்கட்டுரைப் பிரதிகள் பலவற்றைத் தமிழறிஞர் பலர்க்கு அனுப்பியிருந்தேன். தமிழறிஞர் எவரும் என் வேண்டுகோளைச் சிறிதளவும் கருதவில்லை.

**தமிழ்ப் பல்கலைக்கழகத் தொண்டு**

தமிழ் மக்கள் செய்த தவப்பயனால் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றிற்று. பல்கலைக்கழகத்தார் தொல்காப்பிய இளம்பூரணர் உரையை ஒப்பாய்வு செய்து நல்ல முறையில் பதிப்பிக்க வேண்டுமென்று கருதினர். அப்பணியை அவர்கள் அடியேனுக்கு அளித்தார்கள். எனக்கு இப்பணி செய்வதில் அளவற்ற ஆர்வம் இருந்தது. முதன் முதல் தொல்-

செய்யுளியல் இளம்பூரணர் உரையை ஆராய்ந்து கொடுத்தேன். அதனை 1985-இல் அச்சிட்டு வெளியிட்டனர்.

**சொல்லதிகார ஆய்வு**

செய்யுளியல் ஆராய்விற்குப் பின் தொல்-சொல்லதிகார இளம்பூரணர் உரையை ஆராயத் தொடங்கினேன். திருப் பாதிரிப்புலியூர் தவத்திரு-ஞானியார் மடத்து ஓலைப் பிரதி ஒன்றினையும், திருவாவடுதுறை ஆதீனத்து ஓலைப்பிரதி ஒன்றினையும் இதுவரை அச்சுக்கு வந்த அச்சுப் பிரதிகளை யும் முதற் கருவியாக வைத்துக் கொண்டேன். அவற்றுடன் ஏனைய தமிழிலக்கண இலக்கியங்களையும் அவற்றின் உரை களையும் துணைக் கருவியாக அமைத்துக் கொண்டேன். வரியாக நன்கு படித்துப் பார்த்து ஆராய்ந்தேன்.

**என் ஆராய்வால்**

யான் செய்த ஆராய்வால் பல பிழைகள் திருந்தின. நூற்பாக்களுக்கும் உரைக்கும் நல்ல பாடங்கள் கிடைத்தன வேண்டும் குறிப்புகளை எழுதிச் சேர்த்தேன். உரையைப் படித்துக் கொண்டு வரும்பொழுது உரையிலும் இடைச் செரு கல் இருப்பதாக உணர்ந்தேன். பெயரியலில் பல நூற்பாக்கட் கும் வினையியலில் சில நூற்பாக்கட்கும் எழுதப்பட்டிருந்த இளம்பூரணர் உரை எக்காரணத்தினாலோ சிதைந்து போக சிதைந்த இடங்களில் சேனாவரையர் உரையை வைத்து யாரோ நிறைவு செய்துள்ளனர் என்னுஞ்செய்தி புலனாயிற்று.

**சிதைவு நூல்**

தொல்காப்பியத்தில் ஆங்காங்கே பல நூற்பாக்கள் சிதைந்து போயின என்று யான் எண்ணுவதுண்டு. செய்யு ளியலில் ஒவ்வொரு உறுப்புக்கும் முடிவு கூறும் இறுதி நூற்பா இருந்திருக்க வேண்டும். இப்பொழுது அந்நூற்பாக்கள் சிலவே கிடைக்கின்றன. பல நூற்பாக்கள் சிதைந்து விட்டன. அகவற் பாவிற்கும் வஞ்சிப்பாவிற்கும் சிறப்பிலக்கணம் கூறும் நூற்பா சிதைந்து போய்விட்டது. இளம்பூரணர் பிற்காலத்தில் உள்ள யாப்பிலக்கண நூல்களில் காணப்படும் செய்திகளை எடுத்துக்

கொண்டு அவ்விடங்களை நிறைவு செய்துள்ளார். அதுபோல் இளம்பூரணர் உரையும் சிதைந்து நிறைவு செய்யப்பட்டிருக்கிறது.

**என் வேண்டுகோள்**

தொல்காப்பியம் தமிழ் மொழியைக் கற்பதற்கு வேண்டும் சிறந்த கருவி நூலாகும். அதன் பொருளதிகாரப் பகுதி தமிழ் மக்களின் பழங்கால வாழ்க்கை வரலாறுகளையெல்லாம் அறிந்து கொள்வதற்கு வழிகாட்டியாக உள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகம் தொல்காப்பியத்தின் சிறப்பினை உணர்ந்து அதனுடைய எல்லாப்பகுதிகளையும் எல்லோருடைய உரைகளையும் நன்கு ஆராய்ந்து வெளியிட வேண்டும் என்பது என் வேண்டுகோளாகும்.

இப்பொழுது சொல்லதிகார இளம்பூரணர் உரை அச்சாகி வெளிவரத் தொடங்கியுள்ளது. இதன்பின் பொருளதிகாரத்துள் செய்யுளியல் நீங்கலான எட்டியல்களின் இளம்பூரணருரையும் அச்சாக வேண்டும். இத்தொண்டுகட்கெல்லாம் அடியான தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தக்க சிறப்புடன் வாழ்க என்று இறைவன் திருவருளை நினைந்து வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்

**திரு. அடிகளாசிரியர்**

குகையூர்

1-8-1987.

# சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அக.<br>அகநா<br>அகம். | - | அகநானூறு |
| இ.உ.சு.வே.<br>இ,பூ.சு.வே. | - | இளம்பூரணர் உரை சுவடி வேறுபாடு |
| இடை. | - | இடையியல் |
| இல. கொத். | - | இலக்கணக் கொத்து |
| இல. கொத். பாயி. | - | இலக்கணக் கொதது பாயிரம் |
| இள.<br>இளம். | - | இளம்பூரணா |
| இறை. கள | - | இறையனார் களவியல் |
| உ.ம் | - | உதாரணம் |
| உரி. | - | உரிச்சொல்லியல |
| எச்ச. | - | எச்சவியல் |
| எழு.<br>எழுத். | - | எழுத்ததிகாரம் |
| எ ன் | - | என்நுதலிற்றோ எனின |
| ஐங்குறு. | - | ஐங்குறு நூறு |
| கலி.<br>கலித். | - | கலித்தொகை |
| களவழி. | - | களவழி நாற்பது |
| கழ.<br>கழ.ப. | - | கழகப் பதிப்பு |
| கா.ந. | - | கா.நமச்சிவாய முதலியார் |
| காரி. | - | யாப்பருங்கலக் காரிகை |

| | |
|---|---|
| கிள. / கிளவி. | - கிளவியாக்கம் |
| குற்றி. | - குற்றியலுகரப் புணரியல் |
| குறள். | - திருக்குறள் |
| குறிஞ். | - குறிஞ்சிப் பாட்டு |
| குறு. / குறுந். | - குறுந்தொகை |
| சிந்தா | - சிந்தாமணி |
| சிந்தா. செய். | - சிந்தாமணிச் செய்யுள |
| சி.போ.சூ 2.அதி.2 | - சிவஞானபோதம் சூத்திரம் 2 அதிகரணம் 2 |
| சிலப். | - சிலப்பதிகாரம் |
| சிலப். மங். | - சிலப்பதிகாரம் மங்கலவாழ்த்துக் காதை. |
| சிறுபஞ். | - சிறுபஞ்ச மூலம் |
| சு.வே. | - சுவடி வேறுபாடு |
| செய். | - செய்யுளியல் |
| சேனா. | - சேனாவரையர் |
| சேனா.பா. | - சேனாவரையர் பாடம் |
| சொல். | - சொல்லதிகாரம் |
| சொல். இடை. | - சொல்லதிகாரம் இடையியல் |
| சொல். வே. மய. | - சொல்லதிகாரம் வேற்றுமை மயங்கியல் |
| திருக்கோ. | - திருக்கோவையார் |
| திவா. | - திவாகரம் நிகண்டு |
| தெய். / தெய். உரை | - தெய்வசிலையார் உரை |
| தொல். | - தொல்காப்பியம் |
| தொல். அக. | - தொல்காப்பிய அகத்திணையியல் |

| | | |
|---|---|---|
| தொல். இடை, | - | தொல்காப்பிய இடையியல் |
| தொல. எழு. உயிர். | - | தொல்காப்பிய எழுத்ததிகாரம் உயிர் மயங்கியல் |
| தொல். சொல | - | தொல்காப்பியச் சொல்லதிகாரம் |
| தொல். புள்ளி மயங. | - | தொல்காப்பியப் புள்ளி மயங்கியல் |
| தொல. பொருள். | - | தொல்காப்பியப பொருளதிகாரம் |
| தொல். சொல பெய. | - | தொல்காப்பியச் சொல்லதிகாரப் பெயரியல் |
| தொல். சொல். வினை | - | தொல்காப்பியச் சொல்லதிகார வினையியல் |
| தொல். சொல். வேற் | - | தொல்காப்பியச் சொல்லதிகார வேற்றுமையியல் |
| நச். | - | நச்சினார்க்கினியர் |
| நம்பி. அக. | - | நம்பி அகப்பொருள் |
| நற். | - | நற்றிணை |
| நன். | - | நன்னூல் |
| நாலடி. | - | நாலடியார் |
| நூற். | - | நூற்பா |
| நூ. வேறுபாடு | - | நூற்பா வேறுபாடு |
| நூரன். | - | நூரன் மரபு |
| நெடு<br>நெடுநல் | - | நெடுநல்வாடை |
| நேமி. உரை. | - | நேமிநாதம் உரை |
| நேமி. சொல். | - | நேமிநாதச் சொலலதிகாரம் |
| பக். | - | பக்கம் |
| பதி. | - | பதிப்பு, பதிகம் |
| பதிற்.<br>பதிறறு. | - | பதிற்றுப்பத்து |
| பா.ம். | - | பாடம |

| | | |
|---|---|---|
| பாயி. | - | பாயிரம் |
| பால. | - | பால காண்டம் |
| பா.வே. | - | பாட வேறுபாடு |
| பிங்க. | - | பிங்கல நிகண்டு |
| பின். நாரா | - | பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் |
| புணரி. | - | புணரியல் |
| புறநா. | - | புறநானூறு |
| பெய. | - | பெயரியல் |
| மது. காஞ். / மதுரைக். | - | மதுரைக் காஞ்சி |
| மயிலை. | - | மயிலைநாதர் உரை |
| மரபி. | - | மரபியல் |
| மலைபடு. | - | மலைபடுகடாம் |
| முத்தொள். | - | முத்தொள்ளாயிரம் |
| மெய்ப். / மெய்ப்பா. | - | மெய்ப்பாட்டியல் |
| யா.க. | - | யாப்பருங்கலம் |
| யா.க.வி. | - | யாப்பருங்கல விருத்தி |
| யா.க.வி.கழ. | - | யாப்பருங்கல விருத்தி கழகப்பதிப்பு |
| வ.று. | - | வரலாறு |
| விளி. | - | விளிமரபு |
| வினை. | - | வினையியல் |
| வீரசோ. | - | வீரசோழியம் |
| வேற். / வேற்றுமை | - | வேற்றுமையியல் |

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

### இளம்பூரணர் உரை

### கிளவியாக்கம்

**1. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை யென்மனார் அவரல பிறவே**
**ஆயிரு திணையின் இசைக்குமன்[1] சொல்லே.**

— என்பது சூத்திரம்

இவ்வதிகாரம், சொல்லிலக்கணம் உணர்த்தினமை காரணத்தாற் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து.

சொல் என்பது, எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசையை[2],

அதிகாரம் என்பது முறைமை.

மற்று, அச்சொல் எனைத்து வகையான் உணர்த்தினானோ வெனின், எட்டுவகைப்பட்ட இலக்கணத்தான் உணர்த்தினான் என்க.

**அவையான:—** இரண்டு திணை வகுத்து, அத்திணைக்கண் ஐந்து பால் வகுத்து, எழுவகை வழு வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, ஆறு ஒட்டு[3] வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டு இடத்தான் ஆராய்தல்.

---

நூற்பா பாட வேறுபடு: 1 இசைக்குமன (சேனாவரையர்)
இளம்பூரணர் உரைச் சுவடி வேறுபாடு: 2 ஓசை
3 அறுவகை ஒட்டு

**இரண்டு திணையென்பன**[1]:- உயர்திணையும் அஃறிணையும்.

**ஐந்து பாலென்பன**[2]:- ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று பலவும் என இவை.

**எழுவகை வழு வென்பன**[3]:- திணை வழு, பால் வழு, இட வழு, கால வழு, செப்பு வழு, வினா வழு, மரபு வழு என[4] இவை

**எட்டு வேற்றுமையாவன**:- பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என[5] இவை

**அறு வகை ஒட்டாவன**:- வேற்றுமைத் தொகை, உவமா தொகை, வினையின் றொகை, பண்பின் றொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என[6] இவை.

**மூன்று இடமாவன**:- தன்மை, முன்னிலை, படர்க்கை என[7] இவை

**மூன்று காலமாவன**:- இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என[8] இவை.

**இரண்டு இடமாவன**:- வழக்கிடம், செய்யுளிடமென இவை.

இனி இவ்வதிகாரத்து முதற்கணோத்து என்ன பெயர்த்தே வெனின்,

**கிளவிகள் பொருண் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவி யாக்கம் என்னும் பெயர்த்து**. என்னை? ஒருவன் மேலாமாறிது

---

இ.உ.க.வே: 1 திணையாவன
2 பாலாவன
3 வழுவாவன
4 என்பன
5 என்பன
6 என்பன
7 என்பன
8 என்பன
9 என்பன

ஒருத்தி மேலாமாறிது, பலர் மேலாமாறிது, ஒன்றன் மேலா மாறிது, பலவற்றின் மேலாமாறிது, வழுவாமாறிது, வழுவமைதி யாமாறிது எனப் பொருள்கண்மேல் ஆமாறு உணர்த்தினமை யின் அப்பெயர்த்தாயிற்று[1].

இவ்வோத்தின் தலைக்கட் கிடந்த சூத்திரம்

என்னுதலிற்றோ வெனின், சொல்லும் பொருளும் வரையறுத் துணர்த்துதல் நுதலிற்று.

**''உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டு'**

என்பது உயர்திணையென்று சொல்லுவர் ஆசிரியர் மக்களென்று சுட்டப்படும் பொருளை என்றவாறு. ''**அஃறிணை யென்மனார் அவர் அல பிறவே[2]** என்பது, அஃறிணை யென்று சொல்வர் ஆசிரியர் மக்களல்லாத பிறபொருளை என்றவாறு.''

''**ஆயிரு திணையின் இசைக்கும் மன் சொல்லே**'' என்பது அவ்விரு திணையையும் இசைக்கும் சொல் என்றவாறு.

எனவே, உயர்திணைச் சொல்லும் உயர்திணைப் பொரு ளும், அஃறிணைச் சொல்லும் அஃறிணைப் பொருளும் எனச் சொல்லும் பொருளும் அடங்கின.

உலகத்தின், மக்கள் என்ற பொருளை உயர்திணை யென் றது, கூறுபாடின்மையின்

அஃறிணை கூறுபாடுடைமையின் 'அஃறிணை என்மனார் அவர் அல' என்னாது, 'பிற' என்றான்; அவை உயிருடையன வும் உயிரில்லனவுமென இரண்டு கூற்ற[3] என்பதற்கு. அவற்றது கூறுபாடெல்லாம் அறிந்து கொள்க.

மற்று, உயர் என்னுஞ் சொல் முன்னர்த் திணை என்னுஞ் சொல் வந்து இயைந்தவாறியாதோவெனின்? ஒரு சொன்முன்

---

இ.பூ.உ.வே: 1 இப்பெயர்த்

2 பிற

3 கூற்றன

ஒரு சொல் வருங்கால், தொகைநிலை வகையான் வருதலும், எண்ணுநிலை வகையான் வருதலும், பயனிலை வகையான் வருதலுமென மூன்று வகையான் அடங்கும்.

அவற்றுள் தொகைநிலை வகையான் வந்தது 'யானைக் கோடு' என்பது. எண்ணுநிலை வகையான் வந்தது 'நிலனும் நீரும்' என்பது. பயனிலை வகையான் வந்தது 'சாத்தன் உண் டான்' என்பது.

அவற்றுள் இஃது **உயர்திணையென இறந்த காலந்தொக்க வினைத்தொகை.**

இனி, என்மனார் என்பது, என்ப என்னும் முற்றுச் சொல் லைக், 'குறைக்கும் வழிக் குறைத்தல்' (எச்ச–7) என்பதனாற் பகரங் குறைத்து, 'விரிக்கும் வழி விரித்தல்' (எச்ச.7) என்பத னால் மன்னும் ஆரும் என்பன இரண்டிடைச் சொற் பெய்து விரித்தார்[1].

என்மனார் ஆசிரியர் என்று முடியற்பாற்று.

'முற்றுச் சொல் எச்சப்பெயர் கொண்டு முடியும்'. (இறை–கள–1 என்பவாகலின் இதுசெய்யுள் நோக்கித் தொகுத்துக் கூறினான் என்பது.

இனி, 'மக்கட் சுட்டே' என்பது, 'மக்களென்று வரைந்து சுட்டுதற்குக் காரணமாகிய தன்மை' என்னும் ஒருவன். இனி, 'மக்கள் எனினும் சுட்டு எனினும் அவரையே சொல்லியவாறு' என்ப ஒருதிறத்தார். சுட்டென்பது கருத்து; அக்கருதற் பாடுடைமையிற் சுட்டெனவும் படும் மக்களென்பது.

இனிச் 'சுட்டே' என்புழி ஏகாரம் ஈற்றிசை ஏகாரம்.

'அஃறிணை என்பது, அல் திணை என்றவாறு. அல்லதும் அதுவே, திணையும் அதுவே. மேற் சொல்லப்பட்ட உயர்திணை அல்லாத திணை அஃறிணையெனக் கொள்க. ஈண்டும் என் மனார் என்பதற்கு மேல் சொல்லியவாறே சொல்லுக.

---

இ.பூ.உ.வே: 1 விரித்தான்

இனி, அவர் என்னுஞ் சொல்லின் முன்னர், அல்ல என்னுஞ் சொல் வந்து இயைந்தவாறியாதோ வெனின், அவரினல்ல என்பான் அவரல்ல என்றான், ஐந்தாம் வேற்றுமைப் பொருள் என்பது.

இனி, அல்ல பிற என்பது, அல்லவும் பிறவும் என உம்மைத்தொகை என்றலும் ஒன்று.

இனி, அவ் வுயர்திணை யல்லன வெல்லாம் அவ்வுயர் திணை போல ஓரினத்த அல்ல; தத்தம் வகையான் வேறுபட்டன உயிருடையனவும் உயிரில்லனவு மென்பது. ஏகாரம் ஈற்றசை ஏகாரம்.

'ஆயிரு திணையின் இசைக்கும், என்புழி, ஆயிரு திணையினையும்[1], என ஐகார வேற்றுமை விரித்துரைக்க. இன் சாரியை. இசைக்கும் என்பது செய்யும் என்னும் பெயரெச்சம். மன் என்பது இடைச் சொல். ஏகாரம் ஈற்றசை ஏகாரம்.

## நூற்பாக் குறிப்பு: 'மக்கட்சுட்டு'

யாப்பருங்கல விருத்தியாசிரியர் (கழகம்–பக்–573) "இன்னும் அவ்விதப்பால் உயர்திணையும் அஃறிணையும் ஆமாறு உரைத்தும் என்று கூறி, **'உயர்திணை என்மனார்'** என்ற இத் தொல்காப்பிய நூற்பாவினையும் பெயர் தெரியாத வேறு இலக்கண நூற்பாக்களையும் எடுத்துக்காட்டுகிறார். அந்நூற்பாக்களில் ஒன்று

"மக்கட் சுட்டே உயர்திணை யாகும்"

என்பது. தொல்காப்பியர் குறிப்பிட்ட 'மக்கட்சுட்டு' என்னும் சொல் இந்நூற்பாவில் வந்துள்ளது.

---

இ.பூ.உ.வே 1 ஆயிருதிணையையும்

**'தேவரும் நரகரும் உயர்திணை'**

**தொல்காப்பியர்** ''தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவி'' (கிளவி–4) என்று கூறி அதனை உயர்திணை மருங்கின் பால் பிரிந்திசைக்கும் என்றனர். அவர் நரகரை உயர்திணை என்று யாண்டும் குறிப்பிடவில்லை.

ஆனால், யா–க– விருத்தியாசிரியர் (கழ–ப–573) எடுத்துக் காட்டும்

''தேவரும் நரகரும் மேவவும் பெறுமே''

''மேவிய யிம்மூன் றன்றி யொழிந்தவை
யாவகைப் பொருளும் அஃறிணை யாகும்''

என்னும் நூற்பாக்கள் தேவரும் நரகரும் உயர்திணை யாவ ரென்றும் இம்மூவகைய ரன்றி ஒழிந்த எல்லாப் பொருளும் அஃறிணை யாகுமென்றும் கூறுகின்றன.

பிற்கால நூல்களெல்லாம் இவ்வாறே கூறுகின்றன.

அவை வருமாறு:

''மக்க ணரகரே வானோ ரெனும் பொருள்கள்
தொக்க உயர்திணையாந் தூமொழியாய் – மிக்க
உயிருள் ளனவும் உயிரில் லனவும்
செயிருள அஃறிணையாஞ் சென்று''

(நேமி–சொல்–2)

''மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை''

(நன் – 261)

**மக்கள்**

**தொல்காப்பியர்** ''மக்கள் தாமே ஆறறி வுயிரே'' (மர–33) என்று மக்களைப் பிறவுயிர்களிலிருந்து பிரித்துக் கூறுவர். ஆனால் நன்னூலார் பிறவுயிர்களுடன் கூட்டி,

"வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதிசெவி அறிவோ டையறி வுயிரே" (நன்–448)

என்பர்.

**உயர்திணை அஃறிணை என்னும் சொல்**

இலக்கண நூல்களில் உயர்திணை அஃறிணை என்னும் சொல் மிகுதியாகப் பயின்று வந்துள்ளன. ஆனால் இலக்கியங் களில் அவ்வாறு வரவில்லை. உயர்திணை என்னுஞ் சொல் **குறுந்தொகையிலும்** (224–5) **பட்டினப்பாலையிலும்** (263) வந்துள் ளது. அஃறிணை என்னும் சொல் வந்திருப்பதாகத் தெரிய வில்லை.

**என்மனார் போல் மொழிமனார்**

'என்மனார்' என்னுஞ் சொல் இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வரும்' என்பர் சேனாவரையர் (கிள–1)

இச்சொல் வடிவத்தில் 'மொழிமனார்' என்னும் சொல்லும் உண்டு. அதனை,

"மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
அப்பா லிரண்டென மொழிமனார் புலவர்",

(சொல்–இடை.14)

என்று **தொல்காப்பியரும்**,

"தனியசை யென்றா இணையசை யென்றா
இரண்டென மொழிமனா ரியல்புணர்ந் தோரே"

என்று **காக்கைபாடினியாரும்** (யா–க–வி–கழ–48) கூறியுள்ளார்.

**உரைக்குறிப்பு "சொல்லதிகாரம்"**

1. சொல்லிலக்கணம் உணர்த்தினமை காரணத்தால்
சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து (இளம்)

2. சொல்லிலக்கணம் உணர்த்திற்றாதலாற் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து (மயிலை – 257–நன்)

3. சொல்லினது இலக்கணம் உணர்த்தினமையால் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. (நேமி–சொல்–1–உரை)

4. நன்னூல் எழுத்தியல் முதல் நூற்பாவில் **சங்கரநமச் சிவாயர்** 'இயம்புவன் எழுத்தே' என்றதற்குச் சொல்லுவன் எழுத்திலக்கணத்தை என்று உரை கூறி, எழுத்தென்றது ஆகுபெயர் என்றும், சொல்லதிகார முதல் நூற்பாவில் 'அறைகுவன் சொல்லே' என்றதற்குச் 'சொல்லுவன் சொல் லிலக்கணத்தை' என்று உரை கூறிச் சொல் என்றது ஆகு பெயர் என்றும் விளக்கம் எழுதினர்.

5

இலக்கண விளக்கமும் சொல்லதிகாரம் என்பதனைச் சொல்லை உணர்த்திய அதிகாரம் என விரிக்க; சொல் என்றது அதன் இலக்கணம் என்றும் கூறும்.

ஆனால், சேனாவரையர் முதலியோர் வேறுவகையாகப் பொருள் கூறுவர்,

1. **சேனாவரையர்** நிறுத்தமுறையானே சொல்லுணர்த்திய எடுத்துக் கொண்டார்; அதனால், இவ்வதிகாரம் சொல் லதிகாரம் என்னும் பெயர்த்து என்பர்.

2. **நச்சினார்க்கினியர்** சொல் உணர்த்துகின்றார் ஆதலின், சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து என்பர்.

3. **தெய்வச்சிலையார்** சொற்களைப் பாகுபடுத்துதலால் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து என்பர்.

4. **கல்லாடனார்** சொல்லுணர்த்தினமை காரணத்தால் சொல்லதிகாரம் எனப் பெயர் பெற்றதென்பர்.

மேற்குறிப்பிட்ட இரு பகுதியாருள் இளம்பூரணர் முதலியோர் சொல்லதிகாரம் என்பதற்குக் கூறும் பொருள் தெளிவாக உள்ளது.

## சொல்லிலக்கணப் பாகுபாடு

1. இளம்பூரணர் "மற்று அச்சொல் எனைத்து வகையான் உணர்த்தினானோவெனில்" என்று வினாவிக் கொண்டு எட்டு வகைப்பட்ட இலக்கணத்தான் உணர்த்தினான் என்று கூறி அவற்றைத் திணை முதலான எட்டாக எழுதிக் காட்டுவர்.

இவர் கூறும் எட்டுவகைப்பட்ட சொல்லிலக்கணப் பாகுபாட்டினை **நேமிநாதமும் வீரசோழிய** உரையும் கூறுகின்றன.

2. "ஏற்ற திணையிரண்டும் பாலைந்தும் ஏழ்வழுவும்
வேற்றுமை யெட்டும் தொகையாறும் - மாற்றறிய
மூன்றிடமுங் காலங்கண் மூன்றும் இரண்டிடத்தால்
தோன்ற வுரைப்பதாஞ் சொல்" (நேமி-சொல்-1)

3. **வீரசோழியம்** கிரியாபதப் படலத்தின் ஈற்றில் இவற்றால் சொல் ஆராயப்படும் என்ற தலைப்பில்,

"வேற்றுமை யெட்டுந் திணையிரண்டும் பாலைந்தும்
மாற்றுதற் கொத்த வழுவேழும் - ஆறொட்டும்
ஏற்றமுக் கால மிடமூன் றிரண்டிடத்தால்
தோற்ற வுரைப்பதாஞ் சொல்"

இவ்வண்ணம் எட்டுவகைப்படுத்துச் சொல் ஆராய்ந்தார் **தொல்காப்பியனார்** என்று கூறும்.

இவ்வெண்பாவில் "ஆறொட்டும்" என்று வருதல் போல "ஆறு ஒட்டு வகுத்து" என்ற பாடம் இளம்பூரணச் சுவடியிற் காணப்படுகின்றது. அறுவகை ஒட்டும் என்பது அச்சுப்புத்தகப் பாடமாகும்.

வீரசோழியத்தில் மேற்காட்டிய பாட்டின் பின் 'இதுவும் **அது'** என்ற தலைப்பில்,

திணைபால் மரபு வினாச்செப் பிடஞ்சொல்
இணையா வழுத்தொகையோ டெச்ச – மணையாக்
கவிநயமார் வேற்றுமையுங் காலமயக் குங்கொண்
டவிநயனா ராராய்ந்தார் சொல்.''

எனப் பதின்மூன்றால் ஆய்ந்தார் அவிநயனார்.

இவற்றுள் **தொல்காப்பியனார்** ஆராய்ந்தன நீக்கி மயக்கமும், சொல்லும், செப்பும், வினாவும், எச்சமும், மரபும் ஏற்றமாகச் சொன்னார் என்பர் உரையாசிரியர்.

## கிளவியாக்கம்

1. **இளம்பூரணர்**, 'இனி இவ்வதிகாரத்து முதற்கண் ஓத்து என்ன பெயர்த்தோவெனின், கிளவிகள் பொருண் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து. என்னை? ஒருவன் மேலாமாறிது, ஒருத்தி மேலாமாறிது, பலர் மேலாமாறிது, ஒன்றன் மேலாமாறிது, பலவற்றின் மேலாமாறிது, வழுவாமாறிது, வழுவமைதியாமாறிது எனப் பொருள்கள் மேல் ஆமாறு உணர்த்தினமையின் அப்பெயர்த்தாயிற்று' என்பர்.

2. **நேமிநாதமும்** சொல்லதிகாரத்து முதல் இயலை மொழியாக்க மரபு என்று பெயர் கூறுகிறது. அதன் **உரையாசிரியர்** இளம்பூரணரைப் போலவே மொழிகள் பொருள்கள் மேலாமாறு உணர்த்தினமையின் மொழியாக்க மரபாயிற்று என்பர்.

3. ஆனால், **பேராசிரியர்** மரபியலில் 'மேற்கிளந்தெடுத்த' (100) என்னும் நூற்பாவுரையில், ''எனவே, **வழுவமைக்கின்ற கிளவியாக்கத்து முதற்கண்ணே வினை இயலுட் கூறப்படும் இலக்கணத்தினை ஆண்டு ஓர் உபகாரப்படக் கூறியது போல**'' என்று எழுதுவதை நோக்கினால் **கிளவியாக்கம் வழு அமைக்க வந்ததென்று** அவர் கருதுவது புலனாம்.

4. **சேனாவரையர்** பேராசிரியர் கருத்தை மனத்துட்கொண்டு முதற்கண் 'வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்

டமையால் இவ்வோத்துக் கிளவியாக்கமாயிற்று' என்று கூறிவிட்டுப், பின்னர் இளம்பூரணரைப் பின்பற்றிச் 'சொற்கள் பொருள்கண் மேலாமாறு உணர்த்தினமையால் கிளவியாக்கமாயிற்றெனினும் அமையும்' என்பர். **நச்சினார்க்கினியரும்** சேனாவரையரைப் போலவே கூறுகிறார்.

5. **தெய்வச் சிலையார்** மேற்கூறிய இரண்டு கருத்துக்களினும் மாறுபட்டு "இவ்வதிகாரத்துக் கூறப்பட்ட ஒன்பதோத்தினுள்ளும் முதற்கண்ணது கிளவியாக்கம். அது கிளவியது ஆக்கம் என விரியும். அதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சி என்றவாறு; **சொற்கள் ஒன்றொடொன்று தொடர்ந்து பொருண்மேல் ஆகும் நிலையைக் கிளவியாக்கம்** என்றார்" என்பர். இது இளம்பூரணர் கருத்தினையே ஒத்துள்ளது".

"உயர்திணை அஃறிணை"

**சேனாவரையர்** மக்கட் **சாதி** சிறந்தமையான் உயர்திணை என்றார் என்பர்.

**நச்சினார்க்கினியர்** உயர்திணை என்பது உயர்ந்த **ஒழுக்கம்** என இறந்த கால வினைத் தொகை; அஃது ஆகுபெயராய் அப்பொருளை உணர்த்தி நின்றது. இதனைப் பண்புத்தொகை என்பாரும் உளர். அது பொருந்தாது. என்னை இது காலந் தோன்றி நிற்றலின் என்பர்.

**தெய்வச்சிலையார்** உயர்தல் என்பது மிகுதல், **திணை என்பது பொருள்** என்பர்.

**கல்லாடனார்** உயர்திணை என்பது இறந்தகால வினைத் தொகை என்பர்.

**மயிலைநாதர்** உயர் என்பது மிகுதி; **திணை என்பது பொருள்**. உயர்ந்ததிணை உயர்திணையென வினைத்தொகை என்பர்.

**சங்கரநமச்சிவாயர்** 'திணை நிலம் குலன் ஒழுக்கம்' என்ப வாகலின், திணை என்னும் பல பொருள் ஒரு சொல் ஈண்டுக் **குலத்திணை** உணர்த்திநின்றது. இவ்விரண்டும் **பண்புத்தொகை** என்பர்.

மேலே, திணை என்னும் சொல்லிற்கு உரையாசிரியர்களால் சாதி, ஒழுக்கம், குலம், பொருள் என வெவ்வேறு பொருள் கூறப்பட்டிருப்பினும் அந்நான்கு பொருளில் 'பொருள்' என் னும் பொருளே தக்கதாம்.

**தொல்காப்பியர்,**

> ''பான்மயக் குற்ற ஐயக் கிளவி
> தானறி பொருள்வயிற் பன்மை கூறல்'' (கிளவி-23)

என்னும் நூற்பாவில், தானறி திணைவயின் என்று கூறாது, திணையைப் பொருளென்றே கருதித் தானறி பொருள்வயின் என்று கூறுதலால் என்க.

## இசைக்கும் என்பது பெயரெச்சமா? வினைமுற்றா?

**இளம்பூரணர்** ''ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே'' என்புழி, ஆயிரு திணையையும் என ஐகார வேற்றுமை விரித் துரைக்க. இன் சாரியை. இசைக்கும் **என்பது செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்** என்பர்.

**சேனாவரையர்**:- ''ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே' என்பதற்கு அவ்விரு திணை மேலும் சொற்கள் நிகழும் (இசைக்கும்) என்று பொருள் கூறி இசைக்கும் என்பது **செய்யும் என்னும் முற்றுச் சொல்** என்பர்.

**பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்** பெயரெச்சம் என்றே கூறுவர். **கல்லாடனார்** முற்றென்பர். **தெய்வச்சிலையார்** இசைக்கும் என்ற சொல்லுடன் மன என்பதைச் சேர்த்து இசைக்குமன என்றாக்கி, இசைக்குமன என்பது செய்ம்மன என்னுஞ் தொழிற் பெயர் என்பர்.

**பேராசிரியர்** 'விட்டகல்வின்றி' (மரபியல்–102) என்ற நூற்பா வுரையில் இக்கிளவியாக்க முதல் நூற்பாவிற்கு உரை எழுதி யுள்ளார். அவ்வுரை வருமாறு:-

''உயர்திணை என்று சொல்லுப ஆசிரியர் மக்கட் சுட்டின் கண்; அஃறிணை என்று சொல்லுப ஆசிரியர் அவரல பிறவற் றுக் கண்; அவ்விருதிணை மேலும் இசைக்கும் சொல்லினை.''

மேற்காட்டிய உரையில் அவர், இசைக்கும் என்பதைப் பெயரெச்சமாகக் கருதி, இசைக்கும் சொல்லினை என்பர்.

**நச்சினார்க்கினியர்** 'ஆயிருதிணையின் இசைக்குமன் சொல்லே' என்பதற்கு 'அவ்விரு திணைப் பொருள்களையும் உணர்த்தும் சொற்கள்' என்று, இசைக்கும் என்பதைப் பெயரெச்சமாகக் கருதி உரைத்தலைக் காண்க.

மேலும், அவர் ''பொருளை உணர்த்துவான் ஒரு சாத்தனே எனினும் அவற்கு அது கருவியாக வல்லது உணர்த்தல் ஆகாமை யின், அக்கருவிமேல் தொழில் ஏற்றிச் 'சொல் உணர்த்தும்' என்று கருவிக் கருத்தாவாகக் கூறினார். இவ்வாசிரியர் எவ் விடத்தும் சொல்லைக் கருவிக் கருத்தாவாகக் கூறுமாறு மேலே காண்க'' என்று எழுதிவிட்டுப் பின்னர். ''இசைப்பு இசை யாகும் (உளி–12) என்பதனால் திணையிடமாகச் சொற்கள் நின்று பிறவற்றை யிசைத்தல் வேண்டும் (சேனாவரையரை மறுத்தது) அவ்வாறு இசையாத அதனான் பொருந்தாது.''

''அன்றியும் ஆசிரியர்க்கு அங்ஙனம் பொருள் கூறுதல் கருத்தாயின் (பின் வரும்) ஆடூஉ அறிசொல் முதலிய சூத்திரங் கள் எல்லாவற்றையும் சொல் நிகழ்ச்சிக்குப் பொருளிடமாக ஆடூஉவின்கண் நிகழுஞ் சொல், மகடூஉவின் கண் நிகழும் சொல் என்றே சூத்திரஞ் செய்வர். அங்ஙனம் செய்யாது, ஒரு வன் ஆன்மகனை அறியுஞ் சொல்லும், பெண்டாட்டியை அறி யுஞ் சொல்லுமென அறியும் என்னும் பெயரெச்சம் சொல் என்னும் கருவிப் பொருளைக் கொண்டு முடியச் சூத்திரஞ் செய்தலின் ஆசிரியர்க்கு அங்ஙனம் பொருள் கூறுதல் கருத் தன்மை அறிக'' என்பர்.

நச்சினார்க்கினியர் இவ்வாறு எழுதுவதைக் கருதினால் ''ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே'' என்பதற்கு இவ் விரு திணை மேலும் (திணைக்கண்ணும்) சொல் இசைக்கும் என்று சேனாவரையரைப் போலப் பொருள் கூற விரும்பா மல், 'அவ்விருதிணைப் பொருள்களையும் இசைக்கும் சொல்' என்று பெயரெச்சமாகக் கொண்டு பொருள் கூற விரும்பு கின்றார் என்பது புலனாகும்.

மேலும் **நேமிநாதம்** ''தோன்ற உரைப்பதாம் சொல்'' (சொல்-1) என்று கூறுதலையும், **வீரசோழியம்** ''தோற்ற உரைப்பதாஞ் சொல்'' (84) என்று கூறுதலையும் நோக்குக.

2. **ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்**
**பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி**
**அம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே.**

எ .. ன் மேற் றிணை கூறு செய்தான்; பால் கூறு செய்தல்[1] நுதலிற்று.

'' உயர்திணையை, ஆடூஉவினை[2] அறியுஞ் சொல்லும் மகடூஉவினை அறியுஞ் சொல்லும் பல்லோ ரறியுஞ் சொல் லொடு பொருந்தி[3] முப்பாலை அறிவிக்குஞ் சொல் உயர் திணை யுடையன என்றவாறு.

ஆடூஉ வென்றது ஆண் மகனை. மகடூஉ வென்றது பெண் மகளை. பல்லோர் என்றது அவர் தொக்க பன்மையை.

இனி, அப்பொருண் மூன்று கூறு படவே அவற்றை உணர்த் துஞ் சொல் மூன்று கூறுபடுமென்பது.

இது தந்திரவுத்தி வகைமை கூறல் (2)

---

1 மேற்றிணை கூறு செய்தெனத் திணையுட் பால் கூறுசெய்தல்,
2 உயர் திணை ஆடூஉ வினை,ஆடூஉ வினை
3 பொருந்திய.

**நூற்பாக் குறிப்பு:—**

"அதிகார முறையாவது முன்னம் பலபொருளை அதிகரித்த வழிப் பின்னும் அம்முறையினானே விரித்துணர்த்தல். அஃதாவது உயர்திணை அஃறிணை யென அதிகரித்து 'ஆடூஉ வறி சொல்' என்னுஞ் சூத்திரத்தால் நிறுத்த முறை பிறழாமல் உயர்திணை கூறல்" (தொல். பொருள்-656 இளம்)

**உரைக்குறிப்பு**

சேனாவரையர் "உரையாசிரியரும் **உயர்திணையெனப்பட்ட பகுப்பை** விரிப்புழி இத்துணையல்லது விரிபடா தென்பது ஈண்டுக் கூறியதென் றுரைத்ததூஉம் என்க" என்று உரையாசிரியர் உரையாகக் குறிப்பிடுகிறார்.

இவ்வுரையைக் கருதினால் 'உயர்திணையை' என்ற உரைப் பாடம் தக்கது. இப்பாடம் திருவாவடுதுறைச் சுவடி ஒன்றில் உள்ளது. மேலும் இச்சுவடியுரை சிவணி என்பதை வினையெச்சமாகக் கொள்ளாமல் பெயரெச்சமாகக் கொண்டு 'பொருந்திய' என்று உரை கூறுகின்றது. இவ்வுரைப் பாடப்படி நூற்பா 'சிவணிய' என்ற பாடத்தில் இருத்தல் வேண்டும்.

**3. ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்**
**றாயிரு பாற்சொ லஃறிணை யவ்வே.**

எ...ன், மேல் அஃறிணை என்றார், அதனை 'இணைத்துப் பால்படும் என்று அது படு பாலை[1] விரித்துணர்த்துதல் நுதலிற்று.

"ஒன்று பல வென்னும் இருபாலையும் உணர்த்துஞ் சொல் அஃறிணை உடையன என்றவாறு." (2)

**4. பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**

---

சு.வே: 1 படும்பாலை

**தெய்வஞ் சுட்டிய பெயர் நிலைக் கிளவியும்**
**இவ்வென வறியுமந் தந்தமக் கிலவே**
**உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்**

எ...ன், ஐயம் அறுத்தல் நுதலிற்று.

''பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்'' என்பதனை மொழிமாற்றி 'உயர்திணை மருங்கின் பெண்மை சுட்டிய' எனக் கொள்க.

''தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்'' என்பது தெய்வத்தைச் சுட்டிய பெயர்ப் பொருளும் என்றவாறு.

இனிப் பெயர்நிலைக் கிளவி, என்பதற்கு **ஒருவன் சொல்லுவது**:-

பெயர் என்பதனை ஆகுபெயராற் பொருளாக்கிப் 'பொருண் மேல் நிலைபெற்ற கிளவி' என்னும்.

''இவ்வென வறியும் அந்தந் தமக்கிலவே'' என்பது, தம்மை வேறுபாலறிய நிற்கும் ஈற்றெழுத்தினை இல என்றவாறு.

''உயர்திணை, மருங்கிற் பால் பிரிந்திசைக்கும்''

என்பது, உயர்திணை மருங்கின் முப்பாலினையும் புலப்படுக்கும் எழுத்தினைத் தமக்கு ஈறாக இசைக்கும் என்றவாறு.

(உ...ம்) பேடி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார் எனவும்;

வாசுதேவன் வந்தான், திருவன்னாள்[1] வந்தாள், முப்பத்து மூவரும் வந்தார் எனவும் வரும்.

'இவ்வென வறியும் அந்தம் தமக்கிலவே' என்னும் **இலேசினானே[2]** நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் என்பன கொள்க.

---

சு.வே. 1 திருவனாள்
2 இலேசினான்

**5. னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்.**

எ...ன் ஆடூஉ அறிதற்கு ஈற்றெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

"னஃகானாகிய வொற்று ஆடூஉவினை அறிவார்க்குக் கருவியாஞ் சொல் என்றவாறு".

உ...ம் :- உண்டான் என்னும் இறந்தகாலத்தானும், உண்ணாநின்றான் என்னும் நிகழ்காலத்தானும், உண்பான் என்னும் எதிர்காலத்தானும்; கரியன், செய்யன் என்னும் வினைக் குறிப்பினானும்; இங்ஙன் னகர விறுதியாய படர்க்கை வினைமுற்றுச் **சொல்லால்** உயர்திணை ஆண்பால் உணர்த்தப் படும்.

'படர்க்கை யிடம்' என்பது, முன்னர் வினையியலுட் பெறுதும். 'வினை' என்பது, "இருதிணை மருங்கின் ஐம்பாலறிய" (இவ்வியல்–10) என்னுஞ் சூத்திரத்தாற் பெறுதும்.

'உண்டான்' என்றவிடத்து நான்கெழுத்து உளவே யாயினும் னகரத்தை ஆடூஉவறியுஞ்சொல்லென்றார் அதன்கட் டலைமை நோக்கி.

[1]ஏகாரம் பிரிநிலை.

**6. ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்.**

எ...ன் மகடூஉ அறிதற்கு ஈற்றெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

"ளஃகா னாகிய வொற்று மகடூஉவினை அறிவார்க்குக் கருவியாஞ் சொல் என்றவாறு."

உ...ம்:- உண்டாள், உண்ணாநின்றாள்,உண்பாள்[2]; கரியள்

---

சு.வே: 1 சேனாவரையர் உரைப்படி இப்பாடம் இருத்தல் வேண்டும். ஆனால் இரண்டு ஏட்டிலும் இல்லை.

2 உண்பாள் எனவும் (ஏடு)

செய்யள்[1] என வரும் வினையானும், வினைக் குறிப்பானும் மகடூஉவை விளக்கியவாறறிக.

**7. ரஃகா னொற்றும் பகர விறுதியும்**
**மாரைக் கிளவி யுளப்பட[2] மூன்றும்**
**நேரத் தோன்றும் பலரறி சொல்லே.**

என் பல்லோரை அறியுஞ் சொற்கு ஈறாமாறெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

"ரஃகானும் அதுவே. ஒற்றும் அதுவே; ரஃகான் ஒற்றும் பகரமும் அதுவே, இறுதியும் அதுவே; பகர விறுதியும்; மாரைக் கிளவி உளப்பட மூன்றும் என்பது - மார் என்னுஞ் சொல் லகப்பட மூன்றும் என்றவாறு.

நேரத்தோன்றும் என்பது, நிரம்பத் தோன்றும் என்ற வாறு.

பலரறி சொல்லே என்பது-பலரை அறிதற்குக் கருவியாஞ் சொல் என்றவாறு."

'நேரத் தோன்றும் பலரறி சொற்கு' என்பான், உருபு தொகுத்துச் 'சொல்லே' என்றான் என்பது.

'ஏகாரம் ஈற்றசை யேகாரம்'

உ...ம்:- உண்டார், உண்ணாநின்றார், உண்பார் எனவும், கரியர், செய்யர் எனவும், ரகரவிறுதியாகி நின்ற படர்க்கை வினைமுற்றுச் சொல்லானும், குறிப்பானும் உயர்திணைப் பன்மைப்பால் உணர்த்தப்படும்.

இனி உண்ப, தின்ப, என்ப என்பது எதிர்காலத்துப் பகர விறுதி முற்றுச் சொல் உயர்திணைப் பன்மைப்பாலுணர்த்தப் படும்.

---

சு.வே: 1 செய்யாள் எனவும் (ஏடு)
2 உட்பட (துறைசை)

"ஆர்த்தாகொண் மார்வந்தார் பூக்குழால் ......
என்னையர்க ணில்லாத தீது"

என, மார் இறுதியாக நின்ற எதிர்காலத்துப்படர்க்கை வினை முற்றுச் சொல்லால் உயர்திணைப் பன்மைப்பால் உணர்த்தப் படும்.

குறிப்பு:-

1. **மேல் வந்துள்ள உதாரணப் பாட்டு**

"ஆர்த்தாகொண் மார்வந்தார் பூக்குழால் (என்நினைதி)
என்னையர்க ணில்லாத தீது,

என்ற வடிவத்தில் இருத்தல் வேண்டும். இது தலைவன் தலைவியை நோக்கி உடன்போக்கில் கூறியது. வந்தவர் ஆ கொண் மார் வந்தார். நம்மைத் தேடி வந்த நமரல்லர் என்பது கருத்து.

2. **னகர ளகர ரகர ஒற்று**

**தொல்காப்பியர்,** னஃகான் ளஃகான் ரஃகான் என்னும் மூன்று ஒற்றையும் பின்னர், 'பாலறி மரபின் அம்மூவீறு' (வினை–14) என்று வழங்கியுள்ளார்.

3. **இந்நூற்பா நிலைமண்டில ஆசிரியப்பா**

**நேமிநாத உரை** (எழுத்–7)

"ரஃகா னொற்றும் பகர விறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே."

என்னும் **நிலை மண்டில ஆசிரியப்பாவின்கண்** ரகரம் முதலாக உச்சரித்தவாறு கண்டுகொள்க என்று கூறுகிறது.

**8. ஒன்றறி கிளவி தறட[2] வூர்ந்த
குன்றிய லுகரத்[3] திறுதி யாகும்.**

எ...ன் இஃது அஃறிணை ஒருமைப்பாற்குரிய எழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

---

க.வே: 1 ஆர்த்தார் கொண்மார் (கா , ந)
2 'தடற' வினையியல் 9-ஆம் நூற்பாப்பாடமும் இதுவே
3 குற்றியலுகரம் (துறைசை)

"ஒன்றனை அறிவிக்குஞ் சொல் த, ற, ட க்களை ஊர்ந்த குற்றிய லுகரத்து ஈறாகும் என்றவாறு"

வ--று[1]: உண்டது, உண்ணாநின்றது, உண்பது எனவும், கரியது, செய்யது எனவும், வினையானும் வினைக்குறிப்பானும் தகர மூர்ந்த குற்றியலுகரத்தான் அஃறிணை ஒருமைப்பால் விளங்கும்.

கூயிற்று, தாயிற்று எனவும்; கோடின்று, குளம்பின்று எனவும் வரும் றகரம்.

குண்டுகட்டு, குறுந்தாட்டு என வரும் டகரம்.

குறிப்பு: **ஒத்த நூற்பா**

தொல்-வினை–19ஆம் நூற்பா

"ஒன்றன் படர்க்கைத் தடற வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்" என்பது.

**9. அஆ வஎன வருஉ மிறுதி
அப்பான் மூன்றே பலவறி சொல்லே.**

எ...ன் இஃது அஃறிணைப் பன்மைப் பாற்கு ஈறாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"அ, ஆ, வ என்று சொல்லப்படுகிற இறுதிகளையுடைய அக்கூற்று மூன்று சொல்லும் பலவற்றை அறியுஞ் சொல் என்றவாறு."

உ...ம்:- அகரம்: உண்டன, உண்ணாநின்றன, உண்பன எனவும், கரிய, செய்ய எனவும் வரும்.

ஆகாரம், உண்ணா, தின்னா என வரும். இது மூன்று காலத்தையும் எதிர்மறுக்கும் எதிர்மறைக்கண் ணல்லது பால் விளங்கி நில்லா.

---

1 சுவடிகளில் இந்த இடத்தில் மட்டும் 'வ-று' என்றும், 'வரலாறு' என றும் உள்ளன.
துறைசை ஏட்டில் உரைப்பகுதியில்லை

வகாரம்: உண்குவ, தின்குவ என எதிர்காலம்பற்றி வரும்.

"வருஉமிறுதி யப்பான் மூன்று" என்பது இறுதியையுடைய அக்கூற்று மூன்று என்றவாறு.

குறிப்பு: துறைசை ஏட்டில் உரையில்லை.

**ஒத்த நூற்பா**

தொல்காப்பியம் வினையியல் 18ஆம் நூற்பா, பலவற்றுப் படர்க்கை என்னும், இறுதி ஒழிய மற்றவை இந்நூற்பா வுடன் ஒத்துள்ளன.

**10. இருதிணை மருங்கி னைம்பா லறிய**
**ஈற்றுநின் றிசைக்கும் பதினோ ரெழுத்துந்**
**தோற்றந் தாமே வினையொடு வருமே.**

எ...ன் மேல் பாலுணர்த்தப்பட்ட எழுத்து இனைத்து என்பதூஉம், அவை வினைக்கணின்று உணர்த்துமென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

"இருதிணையிடத்து ஐந்து பாலையும் அறிய இறுதிக்கண் நின்று உணர்த்தும் பதினோரெழுத்தும் வினையொடு வந்து புலப்படும் என்றவாறு."

'வினையொடு வருமே! என்றார், பெயர்க்கண் திரிவுற[1] நிற்கும் திரியாமையும் நிற்குமாகலான் என்பது.

உண்டான் என்றக்கால் திரிவில்லை. கொற்றன் என்பது இருதிணை ஒருமைப்பாற்கும் ஏற்கும் என்பது.

மற்றும் 'பதினோரெழுத்தும், என்றது என்னை. னஃகா னொற்றும், ளஃகா னொற்றும், ரஃகா னொற்றும், குற்றுகர மும், அவ்வும், ஆவும் என அவை ஆறெழுத்தான் அடங்கும் பிற வெனின், அடங்குமே யெனினும்[2], ஈண்டுப் பதினொன்றென்று வேண்டினார்.

---

சு.வே: 1 'திரியவும்' 'திரிவு'
2 'அடங்கும்' ;'அடங்குமே எனினும்'(துறைசை)

என்னை, பளிங்கு செம்பஞ்சி யடுத்தாற் செம்பளிங்கு எனப்படும். கரும்பஞ்சி யடுத்தாற் கரும்பளிங்கு எனப்படும். அது போலச் சார்ந்து வந்தவற்றது வேற்றுமைபற்றி வேறு பெயர் கொள்ளப்பட்டது என்பது.

குறிப்பு:- கிளவியாக்கம் 33ஆம் நூற்பாவில் இந்நூற்பா
உடம்பொடு புணர்தலுக்கு எடுத்துக்காட்டு.

**11. வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்**
**பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்**
**மயங்கல்[1] கூடா தம்மர பினவே.**

எ ..ன் வழுக்காத்தலை[2] நுதலிற்று. வழுக்காக்கு மிடத்து வழுவற்க என்று காத்தலும், வழீஇ யமைக என்று காத்தலு மென இரண்டு. அவற்றுள் இது வழுவற்க என்று காத்தது.

**"வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்"**
என்பது வினையிற்பாலறியப்படும் பொருளும் என்றவாறு. ஈண்டுப் பொருளைக் கிளவி என்றாரென உணர்க.

**"பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்"**
என்பது பெயரினாற்பாலறியப்படும் பொருளும் என்றவாறு.

**"மயங்கல் கூடா"**
என்பது அவை விராவுதல் பொருந்தா என்றவாறு.
**"தம் மரபினவே"**
என்பது தத்தம் இலக்கணத்தவே யாகும் என்றவாறு."

அவை தம்மரபினான் வருமாறு:- உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டார் அவர், உண்டது அது, உண்டன அவை என, இவை வினை நின்று பெயர்மேல் தத்தம் மரபினான் வந்தன.

இனிப் பெயரை முன் நிறீஇ, வினையைப் பின்னே கொணர்ந்து காட்டினும் அமையும்.

---

சு.வே: 1 மயக்கங்
2 வழுக் காத்தல்

இனி மயங்கல்[1] கூடா எனவே, மயக்கமும் உண்டு என்பது சொல்லப்பட்டதாகும். அம்மயக்கம் எழுவகைப்படும்; திணை மயக்கம், பால் மயக்கம், இட மயக்கம், கால மயக்கம், மரபு மயக்கம், செப்பு மயக்கம், வினா மயக்கம் என.

மயக்கம் எனினும், வழு எனினும் ஒக்கும்.

அவை வருமாறு:- அவன் வந்தன, அவன் வந்தது; அவள் வந்தன, அவள் வந்தது; அவர் வந்தன, அவர் வந்தது. இவை உயர்திணை அஃறிணை மேற்சென்று வழீஇயின.

இனி, அஃறிணை உயர்திணைமேற் சென்று வழீஇயின வருமாறு:-அது வந்தான், அது வந்தாள், அது வந்தார் எனவும் அவை வந்தான், அவை வந்தாள், அவை வந்தார் எனவும்; வரும். இவை பன்னிரண்டும் திணை வழூஉ[2]

**இனிப் பால் வழூஉ வருமாறு**: அவன் வந்தாள், அவன் வந்தார், அவள் வந்தான் அவள் வந்தார் என இவை உயர் திணைப் பால் வழூஉ.

அது வந்தன, அவை வந்தது என இவை அஃறிணைப் பால் வழூஉ

இவை யெல்லாம் பெயர் நின்று வினை மேல் வழீஇய

இவ்வாறு வினைநின்று பெயர்மேல் வழீஇயன வினை முன்னிறீஇப் பெயர்ப் பிற்றந்து கூட்டியுரைத்துக் கொள்க.

இச்சூத்திரப் பொருள் மேன் 'மயங்கற்க' என்றானாத லான், அவற்றுக்கட் கிடந்த எல்லாமயக்கமும் வேண்டினமை கூறினானாம் என்பது. அவை திணை பற்றியும் பால் பற்றியு மன்றி வருமாறில்லை.

---

சு.வே: 1 மயக்கம்

2 'வழூஉ' என்பது அளபெடைச் சொற்போலும்; இது வழு என்றும் வழங்கும்.

செப்பு வழூஉ, வினா வழூஉ முன்னர்ச் சொல்லுதும்; ஒழிந்தது ஈண்டுணர்த்துதும்.[1]

**இனி, இட வழூஉ வருமாறு**: உண்டேன் நீ, உண்டேன் அவன்; உண்டாய் யான், உண்டாய் அவன்; உண்டான் யான், உண்டான் நீ என இவை.

**இனிக் கால வழூஉ வருமாறு**: செத்தானைச் சாம் என்றலும், குளம் நீர் புகுந்து நிறையும் எனற்பாலதனை நிறைந்தது என்றலும் ஆம்.

**இனி மரபு வழூஉ வருமாறு**: இனி மேய்த்தல் ஒப்புமையான் யானை மேய்ப்பானை இடையன் என்றும், யாடு மேய்ப்பானைப் பாகன் என்றுஞ் சொல்லுதல்.

**12. ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி**
**ஆண்மை யறிசொற் காகிட னின்றே.**

எ...ன் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

"ஆண்மையிற் றிரிந்து பெண்மை நோக்கிநின்ற பெயர்ப் பொருள் ஆண்மகனை அறிவிக்கும் ஈற்றெழுத்தினாற் சொலற் பாட்டிற்கு ஏலா தென்றவாறு. ஒழிந்த இரண்டு[2] பெயர்க்கும் ஒக்கும் என்பதாம்.

'ஆகிட னின்றே' என்பதனாற் சிறுபான்மை பேடி வந்தான் என[3] ஆண்பாற்கும் ஏற்கும்.

**13. செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்.**

எ...ன் செப்பு வழுவும் வினாவழுவும் காத்தல் நுதலிற்று

**"செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்"**

என்பது – செப்பினையும் வினாவினையும் இழுக்குதலைப் போற்றுதல்[4] என்றவாறு".

---

பா.வே: 1 ஈண்டுக்காட்டுதும்
2 இரண்டும் (புலிசை)
3 எனவும் (கா.ந)
4 போற்றுக (கா.ந)

அவை வழுவாது வருமாறு:-நுந் நாடியாது?

என்றால் **தமிழ்நாடென்றல்.**

இனிச் செப்புத்தான்[1] ஆறுவகைப்படும்; வினாவெதிர் வினாதலும், ஏவுதலும், மறுத்தலும், உற்றதுரைத்தலும், உறுவது கூறலும், உடம்படுதலுமென.

அவற்றுண் மறுத்தலும் உடன்படலு[2] மென்பன

ஈண்டுச் செப்பிலக்கணமாவன. ஒழிந்தனவற்றை முன் அமைத்துக் கூறுக என்றவாறு.

வினா ஐந்து வகைப்படும்; அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐயமறுத்தல், அவனறிவு தான் கோடல், மெய்யவற்குக்[3] காட்டல் என.

அவை வழுவாமற் சொல்லுக எனவே, வழுவுதலும் உண்டென்பதாம். அவை வருமாறு:- கருவூர்க்கு வழியெதென் றார்க்குப்[4], பருநூல் பன்னிரு தொடியென்பது செப்பு வழூஉ. ஒருவிரற் காட்டி நெடிதோ குறிதோ என்பது வினா வழூஉ.

இதுவும் ஒரு சொற்றொகை[5] உணர்த்தியவாறு.

**குறிப்பு**:- 'வழாஅல்' என்ற சொற்கு இளம்பூரணர் 'இழுக்குதல்' என்று பொருள் காண்பர் ஏனைய உரையாசிரியரெல்லோரும் 'வழுவாமல்' என்று பொருள் காண்பர்.

---

| | | | |
|---|---|---|---|
| க:பே: | 1 | இச்செப்புத்தான் | (கா.ந) |
| | 2 | உடன்படலுமே | (துறைசை, கா.ந) |
| | 3 | மெய்யவனைக்காட்டல் | (ஏடு) |
| | 4 | யெதென்றாற்கு | (கா.ந) |
| | 5 | இதுவும் சொற்றொகை | (கா.ந) |

**14. வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே.**

எ...ன் வினாவும் இறையாகும் ஒரோவழி என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**"வினாவும் செப்பே வினா எதிர் வரினே"**
என்பது, வினாவும் இறையாகும் அதற்கு இறைபட வரின் என்றவாறு.

அது, வினாவெதிர் வினாதல் என்னும் குற்றப்படாது; அதன் கருத்து[1].

வ—று:- சாத்தா உண்ணாயோ என்று வினாயினாற்கு உடன்படுதல் மறுத்தல் என்று இரண்டினுள் ஒன்றே கூறற்பாலது[2]. உண்ணேனோ வென்று வினாவினான்; வினா உண்பலென்னும்[3] பொருள்பட்டமையின், வினாத்தானும் செப்பாயிற்று.

**15. செப்பே வழீஇயினும்[4] வரைநிலை யின்றே**
**அப்பொருள் புணர்ந்த[5] கிளவி யான.**

எ...ன் இதுவும் அவ்வழீஇ அமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**"செப்பே வழீஇயினும்[6] வரைநிலை யின்றே"**
என்பது-செப்புத்தான் வழீஇயின விடத்தும் வரைந்து மாற்றப்படாதென்றவாறு.

ஏகாரம் பிரிநிலை யேகாரம். வழீஇயினும் என்ற உம்மை சிறப்பும்மை. எனவே, வினா வழீஇயின விடத்து அமையாதென்பது.

---

க.வே: 1 'என்பது அதன் கருத்து' என்றிருந்தால் தெளிவாக விளங்கும்
2 ஏன்றேற்றற்பாலது (கா.ந)
3 உண்பதென்னும் (ஏடு)
4 வழியினும்
5 கிளந்த (துறைசை)
6 'வழிஇயினும்' என அளபெடுத்து வருவன வெல்லாம் ஏட்டில் 'வழியினும்' என்றே உள்ளது.

**"அப்பொருள் புணர்ந்த கிளவி யான"**
என்பது அப்பொருட்கு இயைபுபட வரின் என்றவாறு.

அவ்வாறு வழீஇயமையுஞ் செப்பாவன:–

உற்றதுரைத்தலும், உறுவது கூறலும், ஏவுதலும் என இவை.

அவற்றுள் உற்றதுரைத்தல் என்பது, சாத்தா உறையூர்க்குச் செல்லாயோ வெனின், கால் முள் குத்திற்று; தலை நோகின்றது என்பது.

இனி உறுவது கூறல் என்பது, சாத்தா உறையூர்க்குச் செல்லாயோ வெனின், கடமுடையார் வளைப்பார்; பகைவர் எறிவர் என்பது.

இனி ஏவுதல் என்பது, சாத்தா உறையூர்க்குச் செல்லாயோ வெனின், நீ செல் என்பது.

இவை மூன்றும் வழூஉ மன்; வழூஉவே எனினும்[1], அப்பொருள்பட வந்தமையின், அமைக என்றது. மற்றுள்ளனவும் மேலே அடங்கின[2].

**16. செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்**
**கப்பொரு ளாகு முறழ்துணைப் பொருளே.**

எ...ன் செப்புவானொடு வினாவுவா னிடைக்கட் கிடந்ததோ ரிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**"செப்பினும் வினாவினும்"**
என்பது செப்புமிடத்தும் வினாவுமிடத்தும் என்றவாறு.

**"சினைமுதற் கிளவிக்கு"**
என்பது சினைக் கிளவிக்கும் முதற்கிளவிக்கும் என்றவாறு.

**"அப்பொருளாகும் உறழ்துணை பொருளே"**
என்பது முதலொடு முதலே பொருஉக; சினையொடு சினையே பொருஉக என்றவாறு.

---

சு.வே: 1 வழீஇ யமைவன
2 அடங்கிற்று

வ-று[1]:-கொற்றன் மயிர்நல்லவோ, சாத்தன் மயிர்நல்லவோ என்று வினாயினான் அவ்விடத்துக்[2] கொற்றன் மயிரிற் சாத்தன் மயிர் நல்ல; சாத்தன் மயிரிற் கொற்றன் மயிர் நல்ல என்றிறுக்க. இது சினையொடு சினை பொரீஇயினவாறு.

இனிக் கொற்றன் நல்லனோ சாத்தன் நல்லனோ என்று கூறிய விடத்துக் கொற்றனிற் சாத்தன் நல்லன்;சாத்தனிற் கொற்றன் நல்லன் என்றிறுக்க. இது முதலொடு முதலே பொரீஇயின வாறு.

'அப்பொருளாகும், என்றானாதலான், அவ்வச்சினைக்கு அவ்வச்சினையே பொருஉக என்பது இது முதற்கும் ஒக்கும்.'

இனிச் சினை முதற்கூறிய முறையன்றிக்[3] கூற்றினான், முதலும் சினையும் உறழ்ந்து வருவனவு முள;குருமருங்கு பற்றி.

உ...ம் இம் மக்கள்[4] கண் நல்லவோ இக்கயல் நல்லவோ வென்பன. போல்வன.

இனி அப்பொருளாகும் உறழ்பொருள் எனஅமையும்;துணை யென்பது மிகையெனில், துணைக்கும் என்பது உவமித்தல்; அவ்வுமத்துக்கண்ணும் அவ்வினப் பொருளேயாக என்பது.

உவமம் நான்கு வகைப்படும்; வினை, பயம் மெய் யுரு வென

புலி பாய்ந்தாங்குப் பாய்ந்தான் என்பது வினை யுவமம். மழைபோலும் வண்கை என்பது பயவுவமம். துடி போலும் நடுவென்பது மெய்யுவமம். பொன் போலும் மேனி என்பது உருவுவமம்.

இன்னுந் துணை என்றதனான் எண்ணுமிடத்தும் இன மொத்தனவே எண்ணுக, முத்தும் மணியும் பொன்னும் என.

குறிப்பு: 'உறழ்துணைப் பொருள்' என்பதற்கு, "ஒப்புமை கருதாது மாறுபடக்கூறும் பொருளும், ஒப்புமை கூறப்படும் பொருளும் என்பர். (நச்).

---

சு.குறிப்பு: 1 சுவடியில் 'வறு' என்றே உள்ளது
2 வினாவினவிடத்து
சு.வே: 3 முறையே யன்றிக்
4 மகள்

**17. தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.**

எ...ன் இதுவும் வழீஇ யமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"தகுதிபற்றியும் வழக்குப்பற்றியும் பொருந்தி நடக்கும் இலக்கணத்திற் பக்கச் சொல் கடியப்படா என்றவாறு."

தகுதியென்பது மூன்று வகைப்படும்; மங்கல மரபினாற் கூறுதலும் இடக்கரடக்கிக் கூறுதலும் குழுவின் வந்த குறிநிலை வழக்குமென.

செத்தாரைத் துஞ்சினாரென்றலும், சுடுகாட்டை நன்கா டென்றலும் மங்கல மரபினாற் கூறுதல்.

இடக்கரடக்கிக் கூறுதல் வருமாறு:- கண்கழீஇ வருதும், கண் குறியரா யிருந்தார், பொறையுயிர்த்தார் எனவும் வரும்.

இனிக் குழுவின் வந்த குறிநிலை வழக்கு:-பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றும், வண்ணக்கர் காணத்தை நீலம் என் றும் எனவும் வரும்.

வழக்காறு இருவகைப்படும்: இலக்கண வழக்கும் இலக் கணத்தொடு பொருந்தின மரூஉ வழக்குமென.

இன்முன் என்பதனை முன்றில் என்று தலை தடுமாறச் சொல்லுதல் இலக்கணத்தொடு பொருந்தின மரூஉ வழக்கு.

இனிச் சோழனாடென்பதனைச் சோணாடு என்பதும் மரூஉ வழக்கு.

வழக்காறு இத்துணை யென்பதில்லை. சிதைந்தும் சிதை யாதும் பொருந்தி நடப்பன வெல்லாம் அவை எனப்படும் என் றலும் ஒன்று.

**18. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே.**

எ. ன் செய்யுட் காவ தோர் முடிவு கூறுதல் நுதலிற்று.

"தமக்கு இனம் சுட்டா வாகிய[1] புண்புகொண்டு நின்ற பெயர்ச் சொற்களவை, வழக்கினது நெறியல்லன; செய்யுட்கு நெறி என்றவாறு".

உ . ம்:

"மாக்கடல் நிவந்தெழுதரு[2]
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ" எனவும்
(புறநா-4)

"வெண்கோட் டியானை சேனை படியும்" (குறுந்-75)
எனவும் வரும்.

'வழக்காறல்ல' என்ற விதப்பினான், "வடவேங்கடந் தென்குமரி" என்பன கொள்க. **இதுவும் ஒரு சாராசரின் உரை**

இனி, **ஒருவன் சொல்லுவது**: - 'வழக்காறல்ல' என்பதனைவழக்காற்றின் அல்ல எனஐந்தாமுருபு விரித்து,அல்ல என்பதனைப் பெயர்ப்படுத்துக் கூறும். கூறவே, வழக்கிற்கும் இனனில்[3] பண்பு கொள்பெயர்கள் உள என்றது போந்ததாம்.

உ ..ம்:- பெருங்கொற்றன், பெருங்கூத்தன் என்பன போல் வன, வழக்கிடைப் பண்புப் பெயர் வருங்கால் குணமின்றி விழுமிதாகச் சொல்லுதற்கு வந்து நிற்கும்.

**நேமிநாதம்** இந்நூற்பாக் கருத்தினை,

"இனமின்றிப் பண்புண்டாம் செய்யுள், வழக்கேல்
இனமுண்டாய்ப் பண்புவுந் தெய்தும்" (சொல்-14)

என்று கூறும்.

---

சு.வே: 1 இனஞ் சுட்டா வாகிப்
2 நிவந்தெழுதரும்
3 இனமில்

**நன்னூல்** மாறுபட்டு,

> "பொருண்முத லாறாம் அடைசேர் மொழி, இனம்
> உள்ளவும் இல்லவும் ஆம்இரு வழக்கினும்" (400)

என்று கூறும்.

**இனி ஒருவன் சொல்லுவது** என்றதன் விளக்கம்:

'வழக்காறல்ல' என்பதனை ஐந்தாம் உருபு வைத்து விரித்து வழக்காற்றின் நீங்கிய பெயரல்லன' என்று உரைத்து 'வழக்கிற்கும் இனமில் பண்புகொள் பெயர்கள் உள' என்று கொண்டு, வழக்கிடைக் குணமின்றி விழுமிதாகச் சொல்லுதற்குப் 'பெரும்' என்னும் அடையடுத்துப் பெருங்கொற்றன் பெருஞ்சாத்தன் என்பன வரும் என்று கொள்ள வேண்டும் என்பதாம்.

**செய்யுள் விகாரம்.**

மற்று, எச்சவியலில் 'அந்நாற் சொல்லும்' (7) என்னும் நூற்பா, நான்கு வகைச் சொல்லானும் செய்யுள் செய்யுமிடத்து வலிக்கும்வழி வலித்தல் முதலிய ஆறு விகாரங்களைப் பெற்று வரும் என்று கூறுகின்றது.

இந்நூற்பா உரையுள் இளம்பூரணர் 'பத்துவகை விகாரத்துள் அறுவகை விகாரம் ஈண்டுக் கூறினார். இனம் இல்லதனை இனமுள்ளது போலச் சொல்லுதலும், இனம் உள்ளதனை இனமில்லது போலச் சொல்லுதலும், "இனச்சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்க்கொடை" (கிளவி–18) என்பதனுட் சொல்லிப் போந்தாம். இனி இடைச்சொல் போக்கல், புடைச்சொல் புகுத்தல் என இரண்டும் "நிரனிறை சுண்ணம் அடிமறி மொழி மாற்று, (எச்சவியல்–8) எனப்பட்டு அடங்கும்" என்பர். அவர் கருத்தின்படி "இனச் சுட்டில்லா" (கிளவி–18) என்னும் இந்நூற்பா, பத்துவகை விகாரத்துள் இரண்டுவகை விகாரத்தைக் கூறவந்ததாம். மற்று, இளம்பூரணர் "எடுத்தமொழியினம்" (கிளவி–61) என்னும் நூற்பாவை இந்நூற்பாவிற்குப் புறநடை என்பர்.

### 19. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்

எ...ன் உலகத்துப் பொருளெல்லாம் இருவகைப்படும்; இயற்கைப் பொருளுஞ் செயற்கைப் பொருளுமென. அவற்றுள் இயற்கைப் பொருண்மேற் சொல் நிகழ்தற்பாலவாமாறு[1] உணர்த்துதல் நுதலிற்று.

"உலகத்து இயல்பாகி வாராநின்ற பொருளைச் சொல்லுமிடத்து, இத்தன்மையது[2] என்று சொல்லுக என்றவாறு."

உ...ம்:- நிலம் வலிது, நீர் தண்ணிது என வரும்.

### 20. செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்.

எ ..ன் செயற்கைப் பொருண்மேற்சொல் நிகழ்தற் பாலவாமாறு[3] உணர்த்துதல் நுதலிற்று.

"செயற்கையி னாகிய பொருள்களை யெல்லாம் ஆக்கங் கொடுத்துச் சொல்லுக என்றவாறு".

உ...ம்:- மயிர் நல்ல வாயின,
பயிர் நல்ல வாயின என வரும்.

ஆயின என்பது ஆக்கம்.

### 21. ஆக்கந் தானே காரண முதற்றே.

எ ..ன் மேலதற்கே[4] புறநடை[5] உணர்த்துதல் நுதலிற்று.

"அவ்வாக்கந் தன்னைச் சொல்லுமிடத்துக் காரணம் முன் வைத்துச் சொல்லுக என்றவாறு."

உ...ம்: கடுவுங் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல வாயின என வரும்.

---

சு.வே: 1 நிகழற்பாலவாமாறு
2 இத்தன்மைய
3 நிகழற் பாலவாமாறு
4 மேலதற்கோர்
5 புறனடை

**22. ஆக்கக் கிளவி காரண மின்றியும்**
**போக்கின் றென்ப வழக்கி னுள்ளே**

எ...ன் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

"ஆக்கக் கிளவி காரணமின்றியுஞ் சொல்லப்படும் வழக்கி னுள் என்றவாறு."

போக்கு என்பது குற்றம்.
உ...ம்:- மயிர் நல்ல வாயின.
உம்மை எதிர்மறை.

மற்று, வாளாது ஓதுஞ் சூத்திரமெல்லாம் வழக்கே நோக்கும். செய்யுட் காயிற் கிளந்தே யோதும். அதனால், வழக்கினுள், என வேண்டா; அம் மிகுதியான், ஆக்கமுங் காரணமு மின்றி வருதலும், காரணங் கொடுத்து ஆக்கமின்றி வருதலு மென இரண்டுங் கொள்ளப்படும்.

உ...ம்:- பைங்கூழ் நல்ல எனவும், எருப்பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்தமையாற் பைங்கூழ் நல்ல எனவும் வரும்.

**குறிப்பு**: காரணம் இன்றியும் போக்கு இன்று –காரணம் இன்றி வரினும் குற்றம் இன்று. (போக்கு-குற்றம்) நச்.

**நூற்பாக் குறிப்பு**: நன்னூலாசிரியர், "ஆக்கந்தானே காரண முதற்றே" என்னும் நூற்பா விதியைக் "காரண முதலா வாக்கம் பெற்றும்" என்றும், "ஆக்கக் கிளவி காரண மின்றியும்" என்பதைக் "காரண மின்றியாக்கம் பெற்றும்" என்றும், இளம்பூரணர் உரையிற் கூறிய இரண்டு விதிகளை "இருமையும் இன்றியும் என்றும், ஆக்க மின்றிக் காரண மடுத்தும்" என்றும் நூற்பா செய்துள்ளார் (நன்–404).

**23. பான்மயக் குற்ற வையக் கிளவி**
**தானறி பொருள்வயிற் பன்மை கூறல்.**

எ . ன் உயர்திணைப் பாலையத்துக்கட் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"திணை அறிந்து பால் ஐயந் தோன்றிய வதனை அத் திணைப் பன்மைமேல் வைத்துச் சொல்லுக என்றவாறு".

உ...ம்:-ஒருவன் கொல்லோ ஒருத்திகொல்லோ தோன்றா நின்றார் என வரும்.

இதனை உயர்திணைப் பாலைய மென்பதோர் ஒப்பிற் கொள்க.

**நூற்பாக் குறிப்பு**:- 'தான் அறிபொருள்' என்றது தான் அறிந்த திணையாகிய பொருள் என்று பொருள் தருதலால், திணை என்னும் சொல்லிற்குப் பொருள் என்று பொருளிருத் தலை உணர்க. எனவே, உயர்திணை என்னும் சொற்கு "உயர் என்பது மிகுதி; **திணை என்பது பொருள்**" என்று மயிலை நாதர் கூறும் உரைப் பொருளைக் கருதியுணர்க. (நன்-260)

**24. உருவென[1] மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்**
**இருவீற்று முரித்தே சுட்டுங் காலை.**

எ...ன் இது, திணை ஐயத்துக்கண்ணும் அஃறிணைப் பாலையத்துக் கண்ணும் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"திணை ஐயந் தோன்றின வழி ஒரு வடிவு சொல்லக் கருதினும், அஃறிணையை ஒன்று பல வென்று பிரித்துச் சொல் லினும் மேல் அடுத்த போலப் பொதுவினானே சொல்லுக என்றவாறு.

உ...ம்:-குற்றி கொல்லோ மகன் கொல்லோ தோன்று கின்ற உரு எனவரும் இது திணை ஐயம்.

ஒன்று கொல்லோ பல கொல்லோ செய் புக்க பெற்றம் எனவரும் இஃது அஃறிணைப்பால் ஐயம்.

உருவெனவே திணை ஐயம் என்பதோர் ஒப்பிற்பெற்றாம் பால் ஐயமாயின் தத்தம் பகுதியொடு முடியும் என்பது.

**நூற்பாக் குறிப்பு**:-இந்நூற்பாவிற்கு **நச்சினார்க்கினியர்** "உருவினும் என்னாது உருவென மொழியினும் என்றதனான்

---

சு. வே: 1 உருபென (சேனா.பா.)

உருவின் பொருளவாகிய வடிவு, பிழம்பு, பிண்டம் என்னும் தொடக்கத்தனவும் கொள்க எனவும்.

"உருபு எனப் பகர உகரமாகப் பாடம் ஓதில், (ஓதுபுவர் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும்) அது வேற்றுமை உருபிற்கும் உவம உருபிற்கும் பெயராய் வடிவை உணர்த்தாது என்றுணர்க. அதுவென் னுருபு கெட எனவும், 'உருபினும் பொருளினும் மெய்தடுமாறி' எனவும், 'உருபு தொடர்ந் தடுக்கிய' எனவும், 'உருபு தொகவருதலும்' எனவும், 'மெய்யுருபு தொகா' எனவும், 'யாதன் உருபின்' எனவும், பிறாண்டும் வேற்றுமைக்கு 'உருபு' என்றே சூத்திரம் செய்தவாறு காண்க. உவம உருபென்றல் அவ்வோத்திற் கூறிய உரைகளான் உணர்க.

அன்றியும் சான்றோர் செய்யுட்களிலும் "உருவுகிளர் ஒளிவினை" எனவும், "ஞாயிற் றுருவு கிளர் வண்ணம் கொண்ட" (பதிற்–52: 29,30) எனவும், "உருவக் குதிரை' (அகம்–1–2) எனவும், "வேண்டுருவங் கொண்டதோர் கூற்றம் கொல்" (கலி–56–9) எனவும், பிறாண்டும் கூறுமாற்றான் உணர்க" எனவும், இந்நூற்பாவின் பாடத்தை ஆராய்ந்து எழுதுகிறார்

**25. தன்மை சுட்டலு முரித்தென மொழிப**
**அன்மைக் கிளவி வேறிடத் தான.**

எ...ன் ஐயப்பட்ட அப்பொருளைத் துணிந்தவழிச் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"அன்மைத் தன்மையைச் சொல்லுதலும் உரித்து; ஐயத்திற்கு வேறாய்த் துணிபொருளிடத்து என்றவாறு".

ஒருத்தி யெனத் துணிந்த வழி 'ஒருவன் அல்லள் ஒருத்தி' எனவரும்.

ஒருவன் எனத் துணிந்தவழி 'ஒருத்தி அல்லன் ஒருவன், எனவரும்.

இஃது உயர்திணைப் பாலையத்துக்கண் துணிபு தோன்றின வழிச் சொல் நிகழுமாறு.

மற்றயனவும் அன்ன.

இனியொருவன்:-வேறிடம் என்பதனைத் துணியப்படும் பொருட்டு வேறாகி நிற்கும் பொருள் என்னும்.

அவன் உதாரணம் காட்டுமாறு:- குற்றி கொல்மோ மகன் கொல்லோ வென ஐயமுற்றான்; மகன் என்று துணியின், குற்றி யன்று மகன் எனவும்; குற்றி என்று துணியின், மகனல்லன் குற்றி எனவும் வரும் என்னும்.

இனி, அல்லாத தன்மையையுடையது துணியப்படும் பொருளன்றே; அதனான், அதன்கண்ணே அன்மையை வைத்துச் சொல்லுப என்ப, முன்னை உதாரணம் காட்டுவார்.

குற்றியல்லன் மகன் என்புழிக் குற்றியின் அல்லன் என்று ஐந்தன் உருபு விரித்து உரைக்க.

**26. அடைசினை முதலென முறை மூன்று மயங்காமை நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.**

எ...ன் இதுவும் ஒரு சொல்லுதல் வன்மை. உணர்த்துதல் நுதலிற்று.

"அடை சினை முதலெனப்பட்ட மூன்றும் முறை மயங்காது வருவன வண்ணச் சினைச்சொல் என்றவாறு."

அடை என்பது ஒரு பொருளது குணம்
சினை என்பது உறுப்பு
முதல் என்பது அவ்வுறுப்பினை உடையது.

உ...ம்:-பெருந்தலைச் சாத்தன்
செங்கால் நாரை எனவரும்.

'அடைசினை முதலென வரும் மூன்றும்'[2] என்னாது 'முறை'[3] என்றதனான், இருகுணம் அடுக்கி முதலொடு வருதலும், இருகுணம் அடுக்கிச் சினையொடு வருதலும் கொள்க.

---

சு.வே: 1 வண்ணம், வண்மை
2 வருஉ மூன்றும்
3 முறைமை

'முதலொடு குணமிரண் டடுக்குதல் வழக்கியன்
சினையொ டடுக்கல் செய்யு ளாறே''

என்பது **புறச் சூத்திரம்.**

உ ..ம்:- இளம் பெருங் கூத்தன் எனவரும் வழக்கினுள்.

''சிறுபைந் தூவிச் செங்காற் பேடை'' (அகநா-57)
என வரும் செய்யுட்கண்.

'இளம் பெருங்கூத்தன் என்றக்கால், இளமை பெருமையை நோக்கி நின்றதன்று: கூத்தன் என்னும் பெயரையே நோக்கி நின்றதென உணர்க. நடைபெற்றியலு மெனல் வேண்டா வெனின், நடை என்பது வழக்கு: வழக்கினுள் மயங்காது வருக வெனவே செய்யுளுள் மயங்க வருமென்பதாம்.

உ ..ம்: – ''பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்கட் பேதை'' என வரும்.

**27. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**வழக்கி னாகிய வுயர்சொற் கிள்வி**
**இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.**

எ ன் வழீஇ அமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

''உயர்திணை ஒருவரைப் பன்மையாற் சொல்லுதலும், அஃறிணை ஒன்றனைப் பன்மையாற் சொல்லுதலும், வழக்கினகத்து உயர்த்துச் சொல்லப்படும். இலக்கண முறைமையாற் சொல்லுமிடத்து நெறியல்ல என்றவாறு''.

ஒருவனையுந் தாம் வந்தார் என்ப.
ஒன்றனையுந் தாம் வந்தார்[1] என்ப.

---

சு.வே: 1 வந்தனர், வந்தார்

மற்று, இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல[1] என, வேண்டா கூறலான், உயர்திணையை அஃறிணை போலச் சொல்லுதலும், அஃறிணையை உயர்திணை போலச் சொல்லுதலும்[1] கொள்க.

உ...ம்:- என் பாவை வந்தது, போயிற்று என ஒருத்தியை யும் கூறுப.

இனி, ஓர் ஆவினையும் எம் அன்னை வந்தாள், போயினாள்[2] என்ப. காதன் மிகுதியால் இவ்வாறு கூறுப எனக் கொள்க.

இனி 'வழக்கனாகிய' என்றதனான், 'கன்னி எயில் 'கன்னி ஞாழல்' என்பன கொள்க.

**28. செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்**
**நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லும்**
**தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்**
**அம்மூ விடத்து முரிய வென்ப.**

எ . ன் இட வழுக்காத்தல் நுதலிற்று.

"செல்லும், வரும், தரும், கொடுக்கும் என நிலைபெற் றுப் புலப்படுகின்ற[3] இந்நான்கு சொல்லும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடத்திற்கும்[4] உரிய என்ற வாறு".

அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும்.

**குறிப்பு:- இறையனார் களவியல் 7-ஆம்** நூற்பாவுரை:

"ஆயின், இருவரும் உள்வழி அவன் வரவு என்றாகாது, அவன் செலவென்பதன்றி; என்னை,

---

சு.வே: 1 "இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல எனல் வேண்டாவாம். அங்ஙனம் வேண்டாது கூறியதனால் உயர்திணையை அஃறி ணையை உயர்திணை போலச் சொல்லுதலும்"

2 என் அன்னை வந்தாள், போயினாள் என ஓர் ஆவினையும்

3 புலப்பட்டு நின்ற

4 மூன்றிடத்திற்கும்

"ஒருசொல் ... ஆயீரிடத்த" (கிளவி-29)
"ஏனை ...ஏனையிடத்த" (கிளவி-30)

என்றாராகலின்; அஃது அறியாது சொன்னாய், "செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்" என்னும் சூத்திரத்துள் இலேசினால் முடியமாகலினன்றே, "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது, என்று சொல்லினர் சான்றோரென்பது".

என்று கூறுவதை நோக்கினால் **தொல்காப்பியத்திற்குப் பழைய உரை** இருந்தமை புலப்படும்.

**29. அவற்றுள்**
**தருசொல் வருசொல் லாயிரு கிளவியும்**
**தன்மை முன்னிலை யாயீ ரிடத்த**

எ...ன் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

"தரும் வரும் என்னுஞ் சொல் தன்மைக்கும் முன்னிலைக்கும் உரியவாம்; படர்க்கைக்கு ஆகா என்றவாறு".

உ...ம்:- எனக்குத் தருங் காணம்; எனக்கு வருங்காணம்.

நினக்குத் தருங்காணம்; நினக்கு வருங்காணம் என வரும்.

**30. ஏனை யிரண்டும் ஏனை யிடத்த.**

எ.. ன் இதற்கும் மேல் எய்தியது விலக்கொக்கும்[1]

"செல்லும் கொடுக்கும் என ஒழிந்துநின்ற இரண்டும் படர்க்கைக்காம்; தன்மைக்கும் முன்னிலைக்கும் ஆகா என்றவாறு".

உ...ம்:- அவற்குச் செல்லுங் காணம்,
அவற்குக் கொடுக்குங் காணம் என வரும்.

---

சு.வே: 1 இதற்த மேல் எய்தியது விலக்குதல் நுதலிற்று (கா. ந)

இனிச் செலவும் கொடையும் தரவும் வரவும் என்று சூத்திரஞ் செய்யற் பாலான்; எற்றுக்குச் செல்லுங் காணம்?, கொடுக்குங் காணம்?என்பனவிரண்டும் படர்க்கைக்குரிய; தரும், வரும் என்பன இரண்டும் தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய வாகலான், அவ்வாறு கூறாது மயங்கக் கூறிய வதனான்[1], செல்லும் என்னுஞ் சொல்லாற் சொல்லப்படுவதனை வரும் என்னும் சொல்லானும் சொல்லுப; கொடுக்கும் என்னுஞ் சொல்லாற் சொல்லப்படுவதனைத் தரும் என்னுஞ் சொல்லி னானும் சொல்லுப[2].

உ.. ம்:- ''தூண்டிலை[3] வேட்டுவன் வாங்க வாராது'' (அகநா-36) எனவும், ''புன்றரு பசுங்காய் தின்றதன் தப்பல் (குறு-292) எனவும் வரும்.

இனி இச்சூத்திரம் கொடுத்தல் கோடற்பொருண்மை மூன் றிடத்துஞ் சொல் நிகழுமாறு கூறியது என்பாரும் உளர்.

**31. யாதெவ னென்னு மாயிரு கிளவியும்**
**அறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்.**

எ...ன் அறியாத பொருளை அறியுங்கால் சொலற்பால வாறு இது என்ப துணர்த்துதல் நுதலிற்று.

''யாது எவன் என்ற இரண்டு சொல்லும் தன்னால் அறியப் படாத பொருட்கண் வினாவாய்த் தோன்றும் என்றவாறு.''

உ...ம்:- நுந்நாடி யாது? இப்பண்டி யுள்ளது எவன்? என வரும்.

''செறிய, என்பது யாப்புறுத்தல்.

இஃது யாப்புறத் தோன்றும் எனப் பிற யாப்புறாமற் றோன்றுவனவும் உள என்பதாம்.

---

பா.வே: 1 மயக்கம் (கா.ந)
2 சொல்லுப என்றலைக் குறிக்கும் என்க (கா.ந)
3 தூண்டில் (கா.ந)

(அவை) யாவன், யாவள், யாவர், யாது, யாவை என்பன.

ஐந்துபாலும் அறியலுற்று வாரா; வினாவு மாத்திரத் திற்கு வந்த சூத்திரம் (இது).

**குறிப்பு:–** அறியாப் பொருள்வயின் யாப்புறத் தோன்று வன யாது, எவன் என்னும் இரண்டுமே. யாவன் முதலியவை யாப்புறாமல் தோன்றுவனவாம். இவற்றைப் பெயரியலில் உயர் திணைப் பெயரை உணர்த்துமிடத்து. "யாவன், யாவள்' யாவர்" (பெய–8) என்றும், அஃறிணைப் பெயரை உணர்த்து மிடத்து "யாது யா யாவை" (பெய–13) என்றும் **தொல் காப்பியர்** கூறுவர்.

இந்நூற்பாவாற் குறிப்பிட்ட யாதும், எவனும் பெய ராகாமல், வினைக்குறிப்பு முற்றாதல் வேண்டும். வினையியல் 21ஆம் நூற்பா

"அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினாவே".

என்று கூறும். யாது என்பதும் அதனைப் போன்றதே.

**திவாகரம்**

"யாதும் எவனும் கொல்லும் என்னையும்
ஆகு மென்ப ஐயுற்ற கிளவி" என்று கூறும்.

**32. அவற்றுள்**
**யாதென வரூஉம் வினாவின் கிளவி**
**அறிந்த பொருள்வயின் ஐயந்தீர் தற்குத்**
**தெரிந்த கிளவி யாதலு முரித்தே.**

எ...ன், இறந்தது காத்தல் நுதலிற்று.

"அவற்றுள் யாது என்பது தன்னான் அறியப்பட்ட பொருட்கண் ஐயப்பட்டதனைத் தெளிதற்குச் சொல்லவும் பெறும் என்வறாறு."

உ...ம்:- நம் எருத்துள்[1] யாது கெட்டது என வரும். உம்மை, எதிர்மறை.

மற்று, இதுவும் அறியாப் பொருளாதல் ஒக்கும் பிறவெனின், முன்: யாதும் உணராததன்கட் சொல்லினார்[2]. அது முற் சூத்திரத் தொடிதனிடை வேற்றுமை; முன்னர்ச் சூத்திரம், எவன் யாதென்று கூறற் பாலர்[3]; எற்றுக்கு யாது எவன் என்க் கூறினாரெனின்[4], யாது என்பதனைப் பின்னரும் இங்குக் கொணர்ந்து ஆராய்ந்தாராகலின்; இவ்வாறு[5] கூறாது குறிப்புக் கொண்டதனான், நமருள் யாவர் போயினார்; அவற்றுள் எவ் வெருது கெட்டது என்பனவுங் கொள்க.

33. இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு[6]
வினைப்படு தொகையி[7] னும்மை வேண்டும்.

எ...ன் வரையறைப் பொருட்கண் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று. மரபு வழுக்காத்த தெனினும் அமை யும்.

"இத்துணையென்று வரையறுக்கப்பட்ட சினைக் கிளவிக்கும் முதற் கிளவிக்கும் வினைப்படுத்துச் சொல்லுமிடத்து இறுதி உம்மை கொடுத்துச் சொல்லுக என்றவாறு".

உ..ம்:-நம்பி கண்ணிரண்டும் நொந்தன.

நங்கை முலையிரண்டும் வீங்கின என வரும்.

சினைக்கிளவி உம்மை கொடாவிடிற் பிறவுங் கண்ணும்[8]

---

சு.வே. 1 நம் எருது ஐந்தனுள்
2 சொல்லினான்
3 கூறற் பாலன்
4 கூறினா னெனின்
5 அவ்வாறு
பா.வே. 6 சினை முதற் கிளவி ஏடு)
7 தொகுதி (சேனா)
சு.வே 8 பிறக்கண்ணும்

முலையும் உளவாவான் செல்லுமாகலான்[1] உம்மையின்றிக் கூறுதன் மரபன்று.

இனி முதற் கிளவி வருமாறு:- தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் என வரும்.

"இருதிணை மருங்கின் ஐம்பாலும் அறிய" (கிளவி-10) என்னாது "இருதிணை மருங்கில் ஐம்பால் அறிய" (கிளவி-10) என்று சூத்திரஞ் செய்தானால் ஆசிரியன் என்னும்[2]; செய்யுட் கண் உம்மையின்றி வருதற்கு **உடம்பொடு புணர்த்தான்** என்ற லும் ஒன்று.

இனிச் சூத்திரத்திற் சினை முதற் கூறிய முறையன்றிக் கூற்றினான், உம்மை இன்றி வருவனவும் உள என்பது[3].

**உம்மையைத் தொகுத்துக் கூறினார் என்பாரும் உளர்.**

**நூற்பாப் பாட ஆய்வு:** புலிசை ஏட்டில் 'சினை முதற் கிள விக்கு' என்று பாடம் இல்லை. 'சினை முதற் கிளவி' என்றே பாடம் உள்ளது. **தெய்வச் சிலையார்** 'சினை முதற் கிளவி' என்று பாடம் தந்து 'சினைக் கிளவியும் முதற்கிளவியும் என்று உரை கூறியுள்ளார். **நன்னூலாசிரியரும்** 'இனைத்தென்றறி பொருள்' என்றே நூற்பா செய்துள்ளார். அதனால் 'சினை முதற் கிளவி' என்ற பாடமே நன்றாயிருக்கும். அடுத்த நூற்பா மன்னாப் பொருளும்' என்றே பாடம் உள்ளது.

**குறிப்பு:-** உம்மையைத் தொகுத்துக் கூறினார் என்பவர் **களவியல் உரையாசிரியர்**

களவியல் 7-ஆம் நூற்பா உரையுள்

---

சு.வே: 1 சொல்லுமாகலான்

2 ஆசிரிய னேனும்

3 கூற்றினுள் உம்மையின்றி வருவனவும் உள என்பதுபற்றி

அம்மூன்றென்ப தோழிக்குணர்ச்சி என்றதென்னை, மூன்றுமே என்று துணிந்தானாயின் உம்மை கொடுத்துச் சொல்ல வேண்டும்; என்னை! 'இனைத்தென... .. உம்மை வேண்டும்' (இளவி-33) என்றாராகலின். "அஃதே; உம்மை ஈண்டுத் தொகுத்துக் கூறினார்; அஃது அங்ஙனம் தொகுத்தற்கு இலக்கணம் உண்மையான்" என்று கூறுதலைக் காண்க.

**34. மன்னாப் பொருளும் அன்ன வியற்றே.**

எ ... ன் இதுவும் மரபு வழுக் காத்தது.

'மன்னாப் பொருள் என்பது இல்லாப் பொருள் என்பது[1]; அதனையுஞ் சொல்லுமிடத்து உம்மை கொடுத்துச் சொல்லுக என்றவாறு'.

உ ... ம்:- பவழக் கோட்டு[2] நீல யானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை என வரும்.

உம்மை பெறுதலொப்புமை நோக்கியே முதற் சூத்திரத் தொடு மாட்டெறிந்த தெனக் கொள்க.

**35. எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனின்**
**அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்.**

எ ... ன் மறித்துச் சொற்பல்கா்மைத் தொகுத்திறுக்கும் இலக்கணம் இஃதென்பது உணர்த்துதல் நுதலிற்று.

எவ்வகைப்பட்ட பொருளாயினும் தன்னுழை உள்ளதல்ல தனை, இல்லை எனலுறுமேயெனின், அவன் கூறிய பொருளல்லாப்[3] பிறிது பொருள் கூறி, இல்லை என்க என்றவாறு.

தன்னுழை உள்ள **தன் உண்மை**[4] கூறி, இல்லை என்க என்பது கருத்து.

---

பா. வே: 1 என்ப

2 பவளக் கோட்டு

3 பொருளல்லாற் (துரைசை)

4 உள்ளது உண்மை கூறி

உ...ம்:- பயறுளவோ வணிகீர் என்றால் உழுந்தல்ல தில்லை என்க, தன்னுழை அவை உளவாயின்.

இதன் கருத்து: அவன் வினாவப்பட்ட பொருட்கு இன மாய பிறிது பொருளே கூறுக என்ப[1].

இச் சூத்திரம் "செப்பும் வினாவும்" (கிளவி–13) என்பத னுள் அடங்காதாயிற்று; அவன் வினாவிற்குச் செவ்வனிறை யாக வன்றிப் பிறிதும் ஒன்று கொணர்ந்திறுத்தமையின்.

**36. அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்.**

எ...ன் இதுவும் ஓர் இறுத்தல் வகைமை உணர்த்துதல் நுதலிற்று. மேலதற்கோர் புறனடையும்[2] என்பது.

"அவன் வினாயின அப்பொருளையே சொல்லுறுமே எனிவி சுட்டிக் கூறுக என்றவாறு".

உ...ம்:- இவை யல்லது பயறில்லை.
இப்பயறல்லதில்லை என வரும்.

**37. பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்[4]**
**பொருள்வேறு படாஅ தொன்றா[5] கும்மே.**

எ...ன் இதுவும் ஒரு சொல்லுதல் வகைமை உணர்த்துதல் நுதலிற்று. மேலதற்கே புறனடை[6] எனவுமாம்.

"பொருளோடு புணராது நின்ற சுட்டுப் பெயராமே யெனி னும், அப்பொருட்கு இயைபுபட வருமே யெனின் அமையு என்றவாறு.

சு.வே: 1 இனமாய்ப்பிறிது பொருளே கூறுக என்பது
2 புறனடையும்
3 சொல்லலுறுமே யெனிற்
4 சுட்டுப்பே ராயினும்
5 படா தொன்றா
6 மேலதற்கோர் புறனடை

உ...ம்:- இவை யல்லது பயறில்லை என்புழிப் பயறு என்னுஞ் சொல்லாற் பயறு உணரப்பட்டது[1]. அல்ல தென்னுஞ் சொல்லே எதிர் மறுத்து நின்றது. இல்லை என்னுஞ் சொல்லான் இன்மை உணரப்பட்டது.

இனி, இவை யென்னுஞ் சொற் பொருளின்றால், அஃது என் செயும் என்றார்க்கு, அதுவும் பயற்றினையே சுட்டிற்றாகலான் அமைக என்பது கருத்து.

இஃது ஒருபொருண்மேல் இருபெயர் வழுக்காத்தவாறு.

**38. இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்**
**வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றின்**
**சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக், கிளவார்**
**இயற்பெயர் வழிய வென்மனார் புலவர்.**

எ...ன் இதுவும் ஒரு பொருண்மேல் இருபெயர் வழுக்காத்தல் நுதலிற்று.

"இயற்பெய ரென்பன இரண்டு திணைக்குமுரிய பெயர்; சுட்டுப் பெயர் மூன்று சுட்டும் முதலாக வரும் பெயர்; அவ்விரண்டும் வினைக்கண் ஒருங்கு நடப்பதோர் காலந் தோன்றுமே யெனின், இயற்பெயர் முன்கூறிச் சுட்டுப் பெயரதனைப் பின்னர் வைத்துக் கூறுக என்றவாறு"

உ...ம்:- கொற்றன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க என வரும்.

மற்றுச் "சுட்டுப் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" எனவே, இயற்பெயர் வழியே கிளப்ப என்பது முடிந்தது. பின்னை இயற்பெயர் வழியென[2] வேண்டா வதனால், உயர்திணைப் பெயர் வழியும் அஃறிணைப் பெயர் வழியும் வைத்துக் கூறுக அச்சுட்டுப் பெயர்களை என்றதாம்.

---

சு.வே: 1 பயன்உணரப் பட்டது
2 இயர்பெயற் வழிய எனல் '(ஏடு)'

உ...ம்:—நம்பி வந்தான் அவற்குச் சோறு கொடுக்க[1]

என வரும். எருது வந்தது அதற்குப் புல்லுக் கொடுக்க என வரும்.

இனி 'வினைக்கியலுங் காலந்தோன்றின்' என அமையும். 'ஒருங்கு' என்ற மிகையதனான், அகர இகரச் சுட்டே கொள்க.

இனி, 'வினைக்கு ஒருங்கியலுஞ் சுட்டே கிளக்க[2]' எனப் பெயர்க்கு யாது முன் கூறினும் அமைக என்பதாம்.

உ ...ம்:— சாத்தன் அவன்; அவன் சாத்தன் எனவரும்.

இனி ஒருவன், 'இயற்பெயர்' எனவே, உலகத்தியன்று வரும் பெயரெல்லாம் அடங்கும் என்னும்[3].

**39. முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்தே.**

எ...ன் இஃது எய்தியது விலக்குதல் நுதலிற்று.

''செய்யுளகத் தாமே யெனிற் சுட்டுப்பெயர் முன் சொல்லி இயற்பெயர் பின் வைத்துக் கூறினும் அமையும் என்றவாறு'

உ ...ம்:—

'அவனணங்கு நோய் செய்தான்? ஆயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர்[4] வாழ்த்தி—முகனமர்ந்
தன்னை யலர்கடப்பந் தாரணியி லென்னைகொல்?
பின்னை யதன்கண் விளைவு.'

எனவரும். இதனுள் அவன் என்பது சுட்டு; சேந்தன் என்பது இயற்பெயர்.

**40. சுட்டுமுத லாகிய காரணக் கிளவியுஞ்
சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும்.**

---

பா.வே; 1. சோறிடுக (கா.ந)

2. வினைக்கொடுங்கியலுஞ் சுட்டே கிளக்க என்பதனான் (ஏடு)

3. என்ப

4. விறன்மிகு சேந்தன்பேர் (ஏடு)

எ. .ன், இதுவும் ஒரு பொருண்மேல் இருபெயர் வழுக் காத்தல் நுதலிற்று.

"மேற் சுட்டுப்பெயர் இயற்பெயரின் வழியே கிளக்க வெனப்பட்டது போலச் சுட்டு முதலாகிய காரணம் பெயரை யும் இயற்பெயர்க்கு வழியே வைத்துச் சொல்லுக என்றவாறு.'

உ...ம் : சாத்தன் கையெழுதுமாறு வல்லன்;
அதனால் தன் ஆசிரியன்[1] உவக்கும்; தந்தை உவக்கும் என வரும்.

அதிகாரத்தான் வழிக்கிளத்தல் 'வினைக்கொருங்கியலும் வழிக்' (கிளவி-38) கொள்க.

எழுதுமாறு என்பது வினை.

முதற் சூத்திரம் பொருள் வழி[2] வந்தது: இது பொருளது குணத்து வழி[3] வந்தது.

41. **சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்**
**இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.**

எ. .ன் இதுவும் ஒரு பொருண்மேல் இருபெயர் வழுக் காத்தல் நுதலிற்று.

"சிறப்புப் பெயரும் இயற்பெயரும் ஒருவற்கு உளவாயின், அவ்விடத்து அவனைப் பெயர்க் கொடுக்குங்கால், அவன் சிறப்புப் பெயரை முன் கூறி, இயற்பெயரைப் பின் கூறுக என்ற வாறு"

உ ..ம்:- ஏனாதி நல்லுதடன்,
சோழன் நலங்கிள்ளி எனவரும்.

உம்மையாற் பிறப்பினாகிய பெயர்க்குத் தொழிலினாகிய

சு. வே: 1 தம் ஆசிரியன் (ஏடு)
2 வழீஇ (ஏடு)
3 இல்ல குணத்து வழீஇ (ஏடு)

பெயர்க்குங் கல்வியினானாகிய[1] பெயர்க்கும் இயற்பெயர்களை வழியே வைத்துச் சொல்லுக என்றவாறு.

உ...ம்:- பார்ப்பான் கண்ணன் எனவும்,
வண்ணான் சாத்தன் எனவும் வரும்.

கல்வியினானாகிய காரணம் வந்தவழிக் கண்டு கொள்க. சிறப்புப் பெயர் என்பன சிறப்புடை[2] மன்னராற் பெறுவன.

**42. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி**
**தொழில்வேறு கிளப்பி னொன்றிட னிலவே.**

எ.. ன் இஃது ஒரு பொருண்மேற் பல பெயர் வழூஉக் காத்தல் நுதலிற்று. மரபு வழூஉக் காத்தலுமாம்[3].

"ஒரு பொருளைக் கருதி வேறுவேறு பெயர் வருமெனின் அப்பெயர் வேறுவேறு தொழில்கோடற்கு வரும் பெயரெல்லாஞ் சொல்லிய பின்னைத் தொழில் கொடுக்க; அங்ஙனம் கொடுக்க[4], வந்த பெயரெல்லாம் அதற்கொன்றும்; அல்லாக்கால் அதற்கொன்றிடனில என்றவாறு".

உ..ம்:- ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியனிளங்கண்ணன் சாத்தன் வந்தான் என வரும்.

மற்று, எந்தை வருக; எம்பெருமான் வருக; மைந்தன் வருக எனவும் ஒரு பொருட்கு ஒன்றுமாலெனின், அதனை **ஞாபகங் கூறல்** என்னும் உத்திவகையான் உணர்க.

என்னை, 'தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடனிலவே, என்றார்; அத் தொழில் வேறு கிளத்தல்தான் இருவகைப்படும்;

---

சு.வே: 1 கல்வியினாகிய
2 சிறப்புடைய
3 காத்ததூஉ மாம்
4 கொடுப்ப

பெயர்தொறும் ஒரு தொழில் கிளத்தலும், வேறு கிளத்தலும்[1] என.

பெயர்தொறும் வேறாய்த் தொழில் கிளத்தலும் வேறு கிளத்தலாம். அதனான் இச்சூத்திரத்துப் பெயர் தொறும் வேறாய்த் தொழில் கிளத்தலைத் தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடனில என்றது.

அங்ஙனம் ஞாபகத்தாற் கொள்வதனையும் ஒரு பொருட் கொன்றுமென்று. மற்று, வரும் பெயரெல்லாஞ் சொல்லிப் பின்னைத் தொழில் கிளப்பதனை எடுத்தோத்தினாற் கூறி, அவ்வப் பெயர்தோறும் ஒரு தொழில் கிளப்பதனை உத்தி வகையாற் கொண்ட தென்னையெனின், எந்தை வருக, எம் பெருமான், வருக மைந்தன் வருக என்றவிடத்து ஒரு பொருண் மேலும் நிற்கும்; மற்றைய தாயின் ஒரு பொருட்கே திரிபுபடாது ஒன்றும். அதனால் அதனை எடுத்தோத்தினானும், இதனை உத்திவகையானும் கொண்டான் என்பது.

**குறிப்பு**:-இந்நூற்பாப் பொருளை **நேமிநாதம்**

"ஒரு பொருண்மேல் பல்பெயருண் டானால் அவற்றிற் கொருவினையே சொல்லுக வோர்ந்து" (சொல்.12) என்று கூறுகின்றது.

43. **தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவியென்**
**றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.**

எ. .ன் இது திணை வழுவாமை உணர்த்துதல் நுதலிற்று.

"தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் அவை எண்ணுமிடத்து, விராஅய் வரப்பெறுமெனக் கொள்க என்ற வாறு".

தன்மைச் சொல் என[2], உயர்திணைச் சொல் எனப்பெறும்.

---

சு.வே: 1 வேறு கிளத்தலுமாம்
2 எனவே (கா.ந)

உ...ம்:-

''யானுமென் னெஃகமுஞ் சாறும் (அவனுடைய

யானைக்குஞ் சேனைக்கு நேர்)'' என வரும்.

'மருங்கு' என்ற மிகையால் ''நீயும் நின் படைக்கலமும் சாறீர்'' ''அவனுந்தன் படைக்கலமுஞ் சாறும்'' எனவும் வருதல் கொள்க[1]:

**உரைக்குறிப்பு**:- இந்நூற்பாவின் பொருளையும், உரையுள் மருங்கு' என்ற மிகையாற் கொள்ளும் பொருளையும் உட் கொண்டு, **நேமிநாத உரை** (சொல்.9).

''தன்மையொ டியைந்தன தன்மை யாகும்
முன்னிலை மொழியொடு படர்க்கையு மற்றே''

என்ற நூற்பாவை எடுத்துக்காட்டி முன்னிலைக்கும், படர்க் கைக்கும் நீயும்நின் படைக்கலமும் சாரீர்; அவனுந்தன் களிறும் சாரும் என்ற எடுத்துக்காட்டினைக் கூறுகின்றது.

**44. ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது.**

எ...ன் மரபு வழுக் காத்தல்[2] நுதலிற்று.

''ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல் என்பது-ஓர் எண்ணாய் இரண்டு பாற்கும் பொதுவாய் ஒருவன் ஒருத்தி யெனப் பிரிந்து நின்று பால் வேறுபடுவதாயிற்று; அஃது யாதோவெனின், ஒருவர் என்பது அஃது இருபாற்கும் பொது வாய் நிற்பினும், ஒருவர் இருவர் என்று எண்ணும் பொழு தாயின் ஒருபாற்கே உரித்தாகி நிற்கும்[3];

இனி எண்ணுதல் களைந்து ஒருவர் என்றக்கால் இரு பாலையுந் தழீஇ நிற்கும்[4]. **''இதுவும் ஒருசார் ஆசிரியர் உரைப்ப''.**

---

சு.வே· 1 சாறும் எனவும் கொள்க (ஏடு)

2 காத்தது

3 உரித்தாம்

4 இப்பகுதி ஏட்டில் உள்ளவாறு கொள்ளப்பட்டது. அச்சுப் புத்தகத்தில் முன்பின்னாக மாறுபட்டுள்ளது.

இனி, ஒருமை எண்ணின் பொது வென்ப ஒருவரென்பது; அப்பொதுமையிற் பிரிந்த பாற் சொல் ஒருவன் ஒருத்தி என் பது. அவை தத்தம் ஒருமை விளங்கி நிற்குந் துணையல்லது, அப்பால் மேல் எண்ணுமுறையோடா என்பது.

**குறிப்பு:—**

'ஒருவன் ஒருத்திப் பெயர்மேல் எண்ணில' நன். (287)

"பொதுப்பிரிபால் எண்ணொருமைக் கண்ணன்றிப்
போகா"
(நேமி. சொல். 12)

**45. வியங்கோ ளெண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்.**

எ...ன், இதுவும் திணை வழூக் காத்தல் நுதலிற்று.

"வியங்கோளுடைய எண்ணுப் பெயர் திணை விரவுதல் கடியப்படா என்றவாறு".

உ...ம்:- ஆவும் ஆயனும் செல்க எனவரும்.

இஃது இனமல்லதனொடு எண்ணினமையின் வழூஉ வாயிற்று[1].

இனி, 'ஆவும் ஆயனும் செல்க' என்றவிடத்துச் 'செல்க' என்னும் வியங்கோள் வினை இருதிணைக்கும் முடிபேற்றமை யிற் திணை வழூஉ வமைதியாம் ஆயிற்றும் என்ப[2].

மற்று, இன்ன எண் என்பது சூத்திரத்துப் பெற்றிலாமை யின், **உய்த்துணர வைத்தல்** என்னும் உத்திவகையான், உம்மை எண்ணும், என வென்னெண்ணு மெனக் கொள்க.

என்னை, அவ்விரண்டெண்ணும் தொகைபெற்றும் பெறா தும் முடியும். மற்றை யெண்ணுக்களெல்லாந் தொகை பெற்றே முடியும்.

---

சு. வே: 1 வழுவாயிற்று

2 திணை வழுவமைதியாம் ஆயிற்றென்க

ஈண்டுத் தொகைபெறும் எண்ணினாற் கூறிற்றிலர் திணை வழூஉம் ஆகலான் என்பது.

**குறிப்பு:–**

"உம்மை யெண்ணும் எனவென் னெண்ணும்
தம்வயின் தொகுதி கடப்பா டிலவே" (இடை. 39)

**46. வேறுவினைப் பொதுச்சொல் லொருவினை[1] கிளவார்.**

எ ... ன், இதுவும் மரபு வழுக் காத்தல் நுதலிற்று.

"வேறுவேறு வினையுடையவாய்[2] நின்ற சொற்கள் ஒரு வினையாற் சொல்லற்க என்பது.

எனவே, பொதுவினையாற் கிளக்க என்பதாம்."

இனி, 'ஒருவும் வினை என்பது, ஒரூஉ வினை என்றா யிற்று என்றலும் ஒன்று. ஒரூஉதல் என்பது நீங்குதல்.

அவை; அடிசில், அணிகலம், இயமரம் என்பன.

அவற்றைப் பொதுவினையாற் கூறுமாறு:- அடிசில் அயின் றார்; அணிகலம் அணிந்தார்; இயமரம் இயம்பினார் என்னுந் தொடக்கத்தன கொள்க.

மற்று, "ஊன்றுவை, கறிசோ றுண்டு வருந்து" என வந்த தால் எனின், **அது பாடமறிந்து திருத்திக் கொள்க.**

**உரைக்குறிப்பு:–** 'உண்டு, என்பது பொதுவினையன்றேனும், கறியொழிந்த வற்றிற்கெல்லாம் சேறலின் பன்மை பற்றி அமைத்துக் கொள்ளப்படும்.

ஊன், துவை, கறியொடு கூடிய சோற்றை உண்டென உரைப்பினும் அமையும் (புறநா.உரையாசிரியர் 14).

---

சு.வே: 1 ஒரூஉவினை
2 வினையை யுடையவாய்

**47. எண்ணுங் காலு[1] மதுவதன் மரபே.**

எ.. ன் இதுவும் மரபு வழுக் காத்தல்[2] நுதலிற்று

"வேறு வேறு வினையை யுடைய சொற்களை எண்ணுங் காலும் பொதுவினையாற் சொல்லுப என்றவாறு".

உ.. ம்:- யாழும் குழலும் பறையும் இயம்பினார் என வரும்.

**48. இரட்டைக் கிளவி யிரட்டுப்பிரிங்[3] திசையா.**

எ...ன் இதுவும் மரபுவழுக் காத்தல் நுதலிற்று.

"இரட்டித்துச் சொல்லுஞ் சொற்கள் அவ்விரட்டுதலிற் பிரித்துச் சொல்லப்படா என்றவாறு"

உ...ம்:-சுருசுருத்தது; சுறு சுறுத்தது; சுறு கறுத்தது என. இசையும் குறிப்பும் பண்பும் பற்றி வரும்.

**49. ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொரு ளொழியத்[4]
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்.**

எ.. ன், இதுவும் மரபு வழுக் காத்தல் நுதலிற்று.

"ஒரு பெயர்ப்பட நின்ற[5] பொதுச் சொற்களைச் சொல்லுங் கால் ஆண்டுள்ள பொருளெல்லாம் எடுத்துச் சொல்லாது, தெரிபு வேறு கிளந்து தலைமையானும் பன்மையானும் கூறுக இருதிணைக் கண்ணும் என்றவாறு".

உ...ம்:- சேரி என்பது பலரும் இருப்பதுமன்; ஆயினும், ஆண்டுச் சில பார்ப்பனக்குடி உளவேல் அதனைப் பார்ப்பனச் சேரி என்பது. இஃது உயர்திணைக்கட்டலைமை பற்றி வந்தது.

---

சு. வே: 1 காலை
2 காத்தலை
3 இரட்டிற் (சேனா-பா)

பா.வே: 4 உளபொருள் (நேமி-உரை)
5 நின்று (ஒடு)

அத்திணைக்கண் பன்மை பற்றி வருமாறு: எயினநாடு, குற்றிளை நாடு என வரும்.

இனி, அஃறிணைக்கட்டலைமை பற்றி வருமாறு:- கமுகந் தோட்டம் என வரும்; மற்றைய பொருள் பயின்று கமுகு ஒன்றிரண்டுண்மை நோக்கிச்[1] சொன்னாரேல் தலைமை யாம். இனிக் கமுகு ஆண்டு நெருங்கி, மற்றைய சிலவாதல் கண்டு சொன்னாரேல் அதுவே பன்மையாற் பெற்ற பெயரு மாம்[2].

ஒடுவங்காடு, காரைக்காடு என்பன[3] பன்மையாற் பெற்ற பெயர்.

**50. பெயரினுந் தொழிலினும் பிரிபவை யெல்லாம்**
**மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.**

எ...ன் இதுவும்[4] மரபு வழுக் காத்தல் நுதலிற்று.

"மேல் நின்ற அதிகாரத்தால் உயர்திணைக்கண்ணும் அஃறிணைக் கண்ணும் பெயரினானுந் தொழிலினானும் பிரிந்து வருபவை யெல்லாம் மயங்குதற்குச் செல்லா வழக்கு வழிப் பட்டன ஆகலான் என்பது."

அவைதாம் பெண்மொழி மிகுசொல்லும், ஆண்மொழி மிகு சொல்லுமென இருவகைப்படும்.

உயர்திணைக்கட் பெயரிற் பிரிந்த பெண்மொழி மிகு சொல் வருமாறு:- வடுகரசர் ஆயிரவர் மக்களையுடையர் என வரும்.

அத் திணைக்கண்[5] பெயரிற் பிரிந்த ஆண்மொழி மிகுசொல் வருமாறு:

---

சு.பே: 1 மற்றைப் பொருள் பயின்று கமுகு ஒன்றிரண்டும் பற்றிச் (ஏடு)

2 பெயர் (கா.த)

3 என்பது (ஏடு)

4 இது (ஏடு)

5 இத்திணைக்கண் (ஏடு)

பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கண் நால்வர் மக்கள் உளர் எனவரும்.

இனி அத்திணைக்கண் தொழிலிற் பிரிந்த பெண்மொழி மிகுசொல் வருமாறு: அரசர் ஆயிர மக்களொடு தாவடி போயினார்[1] எனவரும்.

அத்திணைக்கண் தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகுசொல் வருமாறு: இன்று இவ்வூரெல்லாம் தைநீர் ஆடுப என வரும்.

இனி, அஃறிணைக்கண் வருமாறு:-

நம் அரசன் ஆயிரம் யானையுடையன் என வரும். இஃது அத்திணையிற் பெயரிற் பிரிந்த பெண்மொழி மிகு சொல்.

நம்பி நூறு எருமையை[2] யுடையன் என வரும். இஃது அத்திணையிற் பெயரிற் பிரிந்த ஆணொழி மிகு சொல்.

இனி, அத்திணைக்கண் தொழிலிற் பிரிந்து வருமாறு

இன்று இவ்வூர்ப் பெற்றமெல்லாம் உழவொழிந்தன என வரும்.

இஃது அத்திணைக்கண் தொழிற் பிரிந்த பெண்மொழி மிகு சொல்.

இன்று இவ்வூர்ப் பெற்றமெல்லாம் அறங்கறக்கும்[3] என வரும்;

இஃது அத்திணைக்கண் தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகு சொல்.

இனி 'எல்லாம்' என்றதனான் ஆணொழி மிகு சொல்லும் பெண்மொழி மிகு சொல்லுமன்றிச் சிறப்புப் பற்றி நிற்பனவும், பொதுவாய் நிற்பனவும், மிகுதி வகையான் நிற்பனவுங் கொள்க. அவை வருமாறு:-

---

சுவே: 1 போனார் (ஏடு)

2 எருமை (கா. ந)

3 பெற்றமெல்லாம் கறக்கும் (ஏடு)

அரசர் பெருந்தெரு என்பது சிறப்புப்பற்றி வந்தது.

ஆதீண்டு குற்றி, ஆனதர்[1] என்பன பொதுவாய் நிற்பன. இனி மிகுதிவகையாற் சொல்லுவன வருமாறு:-

இவர் பெரிதும் கால் கொண்டாடும்[2]. இவர் பெரிதுஞ் சோறுண்ப என வருமுயர்திணைக்கண்.

இனி அஃறிணைக்கண் இவ்வெருது புற்றின்னும் என வரும். இவையெல்லாம் மிகுதிவகையான் விளக்கினவாறு.

**குறிப்பு:-**

"பெண்ஆண் ஒழிந்த பெயர்தொழி லாகியசொல்
உண்மை இருதிணைமேல் உய்த்தறிக" (நேமி.சொல்.11)

**51. பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்**
**அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.**

எ...ன் இது திணை வழு அமையுமாறு கூறுதல் நுதலிற்று.

"பலவிடத்தினானும் உயர்திணையும் அஃறிணையும் விரவி எண்ணப்படும் பொருள் அஃறிணை முடிபினவாஞ் செய்யுளகத்து என்றவாறு".

உ...ம்:-

"வடுக ரருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்
குறுகா ரறிவுடை யார்"

என வரும்.

இனிப் "பலவயி னானும் அஃறிணை முடிபின செய்யுளுள்" எனவே, சிலவயினான் அஃறிணை விரவாது உயர்திணையா யெண்ணி[3], அஃறிணை முடிபிற்றாகலும் உண்டு செய்யுளகத்து என்றவாறாம்.

---

சு.வே: 1 ஆனதரம் (ஏடு)
2 கால் கொண்டோடுப (கா.ந)
3 உயர்திணையானெண்ணி (கா.ந)

அது வருமாறு:-

“பாணன் பறையன் றுடியன் கடம்பனென்
றந்நான் கல்லது குடியு மில்லை”[1] (புறநா.335)

என வரும்.

**52. வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொலென்
றாயிரு வகைய பலபொரு ளொருசொல்.**

“எ...ன் இச்சூத்திரத்திற்கு உரையில்லை; இலக்கமுமில்லை. மேலவற்றுள் வினைவேறு படூஉம் பலபொருளொருசொல் என்னுஞ் சூத்திரமுமில்லை. அதற்குப் பதவுரை எழுதியிருக்கிறது,” என்று இந்நூற்பாவின் கீழ் எழுதப்பட்டுள்ளது **புலிசை ஏட்டில்.**

**அச்சுப்புத்தகத்திற் கண்ட உரை கீழ் வருமாறு காண்க:**

இச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், பல பொருள் ஒரு சொல்லின் வகைமை உணர்த்துதல் நுதலிற்று.

“வினையான் வேறுபடும் பலபொருள் ஒரு சொல்லும், வினையான் வேறுபடாத பல பொருள் ஒரு சொல்லுமென அவ்விரண்டு வகைப்படும் பலபொருள் ஒரு சொல் என்றவாறு” இவ்வுரை துறைசை ஏட்டிலும் உள்ளது

**மற்றொரு பிரதியிற் கண்ட உரை**

இச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், ஒருசொல்லான் வரும் பல்பொருள் வகை கூறுதல் நுதலிற்று.

“பல்பொருள் குறிக்கும் ஒரு சொல், வினைவேறுபடுகின்ற பல்பொருள் ஒரு சொல்லென, வினைவேறு படாஅப் பல் பொருள் ஒரு சொல்லென இருவகைப்படும் என்றவாறு”.

---

பா.வே 1 “துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியுமில்லை” (புறநா. 335பா-ம்)

பலபொருள் குறிக்கும் ஒரு சொல்லினையும் பிறவகைப் படுத்திப் பகுத்தல் ஒல்லுமெனினும் வேறுபடுத்திக் கோடற்கண் வினையே சிறப்புடைமையின் இங்ஙனம் வகுத்தோதினார்.

**உரைக்குறிப்பு:-**

இந்நூற்பாவிற்கு உரை இல்லை என்று புலிசை ஏடு கூறுகிறது. அச்சுப் பிரதியில் இரண்டு உரைகள் உள்ளன. அவற்றுள் முதல் உரை **நச்சினார்க்கினியர்** உரையாகவே உள்ளது. இரண்டாவது உரை சேனாவரையர் உரையுடன் ஒருவாறு ஒத்து உள்ளது.

**சேனாவரையர்** இந்நூற்பா உரையுள்

''இலக்கணச் சூத்திரங்களே அமையும் இச்சூத்திரம் வேண்டா பிறவெனின்'' என்னும் வினாவை எழுப்பிக் கொண்டு, ''இருவகைய என்னும் வரையறை அவற்றாற் பெறப்படாமையானும், வகுத்துப் பின்னும் இலக்கணங் கூறியவழிப் பொருள் இனிது விளங்குநலானும் இச்சூத்திரம் வேண்டுமென்பது'' என்று எழுதுகிறார்.

இவர், இவ்வாறு எழுதுவதை நோக்கினால் இந்நூற்பா வேண்டா நூற்பாவாகக் கருதப்பட்டு வந்ததென்ற உண்மை புலனாகிறது. அதனால், **இந்நூற்பா தொல்காப்பியர் இயற்றிய நூற்பா அன்று போலும்**.

53. **வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்**
**வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்**
**தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே.**

உரை பா-வே: ஏனைய உரையாசிரியர் 'அவற்றுள்' என்று தொடங்குவர். துறைசை ஏடும் அவ்வாறே பாடம் ஓதும். (ஏட்டிற் கண்டவாறு) வினை வேறுபடூஉம் பல பொருளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"வினை வேறுபடூஉம் பலபொருள் ஒரு சொல்லை அறியுமிடத்து[1], வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்[2] அறியப்படும் என்றவாறு".

வேறுபடுவினையான் அறிய வருமாறு:

மா தளிர்த்தது, மா பூத்தது, காய்த்தது என வரும்.

இவ்வினை மரமாவிற் கல்லது ஏலாது[3]. பிறவுமன்ன. மாவும் மருதும் ஓங்கின என்பது, இனத்தான் மாமரம் என விளங்கும்.

மாவும் மரையும் புலம்படர்ந்தன வென்றால், விலங்குமா என்பது அறியப்படும்.

இனிச் சார்பினால் அறிய வருமாறு:-

விற்பற்றி நின்று 'கோல் தா' என்றால் கணைக்கோலின்மேல் நிற்கும், அதற்குச் சார்பு அதுவாகலான்.

குதிரைமேல் இருந்து 'கோல்தா' என்றால் மத்திகைக் கோலாமாகலானும், சுள்ளற் கோலாமாகலானுஞ் செல்லும்[4]; அதற்குச் சார்பு அதுவாகலான். பிறவுமன்ன.

**பல பொருள் ஒரு சொல்:**

**யாப்பருங்கலம்** "ஆதி யெழுத்தே அடிதொறும் வரினடி, மோனைத் தொடையென மொழிமனார் புலவர்" (35)என்னும் நூற்பா உரையில் **அதன் உரையாசிரியர்,** 'ஆதியெழுத்தே அடிதொறும் ஆதிக்கண்வரின் என, ஆதி என்னும் சொல்லைப் பின்னுங் கூட்டிப் பொருள் உரைக்க வேண்டும் என்பதற்கு மேற்கோளாக,"வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினுந் தேறத் தோன்றும் பொருள்தெரிநிலையே" (கிளவி-53)என்னும் நூற்பாவினை இரண்டடியுடையதாக எடுத்துக்காட்டுகிறார், அவர் கருத்தின்படி வேறுபடு என்ற அடைசொல்லை வினை.

---

1 முற்படப் பகுத்தோதியவற்றுள் என்று அச்சுப்புத்தக உரை தொடங்குகின்றது.

2 வேறுபடுவினையினாலும் இனத்தினாலும் சார்பினானும் (துறைசை)

3 வாராது (கா.ந) 4 சொல்லும் (ஏடு)

இனம், சார்பு, என்னும் மூன்றனுடனும் கூட்டிப் பொருள் உரைக்க வேண்டும் என்க. அவர் கருத்தின்படி இந்நூற்பா விற்கு **"வினை முதலானவற்றால்** பொருள் வேறுபடும் பல பொருள் ஒரு சொல்லைப் பொருளறியுமிடத்து வேறுபடு வினையினானும் வேறுபடு இனத்தினானும் வேறுபடு சார் பினானும் அறியப்படும்." என்று பொருள் கூறல் வேண்டும் என்க.

**நன்னூல் ஆசிரியர்** இப்பல்பொருள் ஒரு சொல்லை வினை, சார்பு, இனம், இடம் மேவிப் பொருள் விளங்கும் பல பொருள் ஒரு சொல்லென்றும், அவற்றை மேவி விளங்காப் பலபொருள் ஒருசொல்லென்றும் (நன்னூல்–389) இருவகையாகப் பிரிப்பர்.

**நேமிநாதம்**

"ஒப்பிகந்த பல்பொருண்மேற் சொல்லும் ஒருசொல்லைத்

தப்பா வினையினஞ் சார்பினாற் – செப்புக" (சொல்.13)

என்று கூறும்.

**54. ஒன்று வினை மருங்கி னொன்றித் தோன்றும்.**

எ...ன் அம் மூவகையான்[1] உணர்ந்தவாறு போலாது உணராமை நிற்குமாறுடைத்து இச்சொல் என்பது உணர்த்து தல் நுதலிற்று.

"ஒன்று வினை என்பது பொதுவினை; பொதுவினை யாயிற் பகுதியுணராமற் றோன்றும் என்றவாறு".

அது வருமாறு: மா[2] வீழ்ந்தது என்றவிடத்து இன்ன மா[3] என்பது உணர்த்தலாகாது பொதுவாய் நிற்கும்.

---

சு.வே: 1 அம் மூன்று வகையான் (கா.ந)
2 மரம் (ஏடு)
3 மரம் (ஏடு)

**55. வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.**

என், வினை வேறு படாஅப் பல பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"வினை வேறுபாடஅப் பல பொருள் ஒரு சொல்லை ஆராயு மிடத்து இன்னதென்றறியக் கிளந்தே சொல்லுக என்றவாறு"

உ...ம்:- ஆன் கன்று நீருட்டுக என வரும்.

'நினைதல்' என்பது ஆராய்தல்

ஆராயுமிடத்துக் கிளந்து கூறுக என[1], ஆராய்ச்சி இல்லாத இடத்தாயிற் 'கிளவாதே கூற அமையும் என்பதமையும்[2]. ஆராய்ச்சியுடைய நிலம் என்பது வருநிலம்[3] யாதோ வெனின்? கன்று நீருட்டுக என்ற விடத்து ஆன் கன்றும், எருமைக் கன்றும் பூங்கன்று மெனப் பலவும் ஆங்கு உளவாயின் அவன் சொன்ன கன்று நிற்பப் பிறிதொரு கன்று நீருட்டல் வழுவாம். அதனால் இன்னுழி இன்ன கன்று என்று கிளந்து சொல்லுக. அல்லக்கால் இன்னகன்று என்று கிளவாதே சொல்ல அமையும். மேற் சூத்திரத்தின் துணிபும் இதுவே.

வேறுபடு வினையும் இனமும் சார்பும் வேண்டாமை உணர்புழி யாயின் அவை இன்றியும் அமையும் என்பது.

**56. குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி.**

என், இதுவும் மரபு வழுக் காத்தல் நுதலிற்று.

"தான் ஒருபொருளைச் சொல்லக் கருதுமேல், அதனை இற்றென்று தெரித்துச் சொல்லுக என்றவாறு".

உலறற்[4] றிறமின்றிப் பயின்றாரொரு சான்றார் மயிர் நீட்டி உலறி நின்றாரைக் கண்டு, ஒருவன், 'எம்பெருமான் உலறி நின்றீரால்' என்றக்கால், 'வாளாதே உலறினேன்,

---

சு.வே: 1 எனவே (கா.ந) 3 எருநிலம் (கா.ந)
2 என்பதே அமையும் (கா.ந) 4 உலற்றற் (கா.ந)

என்னற்க; இது காரணத்தால் உலறினேன் என்க. (இது) தனக் குற்றதுரைத்தது பிறவு மன்ன.

இது செப்பு வழுவற்க என்று காத்தவாறு என்ப ஒரு திறத்தார்.

இனித் **தெரித்துச் சொல்லாக்கால் வழுவே யாயினும் அமைக** எனக் காத்தவாறு.

**இனி ஒரு கருத்து:** உலகினில் ஒப்பமுடிந்த பொருளை ஒருவன் ஒவ்வாமை சொல்லுமே யெனின், இது காரணத்தின் ஒவ்வாமை நோக்கிச் சொல்லினேன் என்று தெரித்துச் சொல் லுக என்றவாறு

> ''பல்லார்[1] தோள்தோய்ந்து வருதலாற் பூம்பொய்கை
> நல்வய லூரநின் தார்புலாஅல்—புல்லெருக்கம்
> மாசின் மணிப்பூணெம் மைந்தன் மலைந்தமையாற்
> காதற்றாய் நாறு மெமக்கு''

என வரும்.

**உரைக்குறிப்பு**;- ''உலற்ற மின்றிப் பயின்றார் ஒரு சான் றார் மயிர் ஈட்டி உலறி நின்றாரைக்கண்டு ஒருவன், எம் பெருமான் உலறி நின்றீரால் என்றக்கால் வாளாதே உலறி நின்றேன் என்னற்க. தனக்கு உற்றதுரைத்து இது காரணத் தால் உலறினேன் என்க.'' **நேமி**.சொல்.10

**57. குடிமை யாண்மை யிளமை மூப்பே**
**அடிமை வன்மை விருந்தே குழுவே**
**பெண்மை யரசே மகவே குழவி**
**தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி**
**காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்**
**றாவறு மூன்று முளப்படத் தொகைஇ**
**யன்ன பிறவு மவற்றொடு சிவணி**
**முன்னத்தி னுணருங் கிளவி யெல்லாம்**

---

சு.வே: 1 பல்லோர் (கா.ந)

**உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்**
**அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்.**

எ...ன், திணை வழூஉக் காத்தல் நுதலிற்று.

"குடிமை ஆண்மைத் தொடக்கத்தனவும், பிறவும் இந்நிகரன வெல்லாம் உயர்திணையல்லவும், உயர்திணைப் பொருளைச் சார்ந்து நிகழுங்குணங்களும், உயர்திணைப் பொருளைப் பற்றுக்கோடாக நிகழ்தலின் உயர்திணைப் பொருளைப் போல வழங்கல் வேண்டுமே எனினும் அஃறிணையைச் சொல்லியாங்குச் சொல்லுக என்றவாறு.

உ.. ம்:-

1. அவர்க்குக் **குடிமை** நன்று.
2. அவர்க்கு **ஆண்மை** நன்று.
3. அவர்க்கு **இளமை** நன்று.
4. அவர்க்கு **மூப்பு** நன்று.
5. அவர்க்கு **அடிமை** நன்று.
6. அரசன் **வன்மை** நன்று.
7. **விருந்து** வந்தது.
8. அக் **குழு** நன்று.
9. **பெண்மை** அடங்கிற்று.
10. **அரசு** வந்தது[1].
11. மக நன்று[2].
12. **குழவி** அழுதது.
13. **அலி** வந்தது; இது தன்மை திரி பெயர்.
14. **குருடு** வந்தது; இஃது உறுப்பின் கிளவி.
15. என் **காதல்** வந்தது[3].

---

ஏட்டில் உள்ளவாறு பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

சு.வே: 1 நிலைத்தது (கா.ந)

2 நலிந்தது(கா.ந)

3 பொலிவாயிற்று(கா.ந)

16. என் **யானை** வந்தது; சிறப்பு.

17. கெழீஇயிலி வந்தது; இது செறற்சொல்.

18. **பெருவிறல்** வந்தது. விறற்சொல்.

என வரும்.

பேடி வந்தது, குரிசில் வந்தது என்னும் தொடக்கத்தன கொள்க[1].

**இதுவும் ஒருசார் ஆசிரியர் உரைப்பது**

இனிக் குடிமை ஆண்மை என்றித் தொடக்கத்தன ஒருவன், ஒருத்தி, பலர் என்னும் மூன்று பாற்கும் பொதுவாய்ப் பின் முடியுங்கால் அஃறிணை முடிபிற்றாக என்பது.

வன்மை என்பது மூன்று பாற்கும் பொதுவாய் நிற்பது யாண்டுப் பெறுதுமோ[2] வெனின் வழக்குப் பெற்றுழிக் கொள்க.

**58. காலம் உலகம் உயிரே உடம்பே**
**பால்வரை தெய்வம் வினையே பூதம்**
**ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்**
**ஆயீ ரைந்தொடு பிறவு மன்ன**
**ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்**
**பால்பிரிந் திசையா வுயர்திணை மேன.**

எ...ன் இது உயர்திணையான் முடியாது அஃறிணையான் முடியும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

''காலம் உலகம் என்றித் தொடக்கத்தனவும் உயர்திணை எனினும், உயர்திணைப்பால் பிரிந்திசையா; அஃறிணையான் இசைக்கும் என்றவாறு''.

உ...ம்:-

1. இவற்குக் காலம் ஆயிற்று.

2. உலகு[3] பசித்தது.

---

சு.வே: 1 தொடக்கத்தனவும் அறிந்து கொள்க (கா.ந)
2 பெறுமோ(ஏடு)
3 உலகம் (கா.ந)

3. உயிர் போயிற்று.
4. உடம்பு நன்று.
5. இவற்குத் தெய்வம் ஆயிற்று.
6. இவற்குப் பால் ஆயிற்று.
7. இவற்கு வினை நன்று[1].
8. இவனைப் பூதம் புடைத்தது.
9. ஞாயிறு எழுந்தது.
10. திங்கள் எழுந்தது.
11. சொல் நன்று.

என வரும். பிறவும் என்றதனான் ‘வெள்ளி எழுந்தது, செவ்வாய் எழுந்தது’ என்பன கொள்க.

இச்சூத்திரம் தெய்வம் சுட்டிய பொருள் அஃறிணையான் முடிபேற்றல்[2] கூறினாரென்ப ஒருதிறத்தார். அற்றன்று, ஈண்டுத் தெய்வமும் உள[3]; மக்களும் உளர்.

இனி, மேற் சூத்திரம் முன்னத்தால் உணரப்படும்[4] என்ற வாறு கூறினார். இச்சூத்திரம் உயர்திணைப் பொருளே அஃறிணை முடிவு ஏற்பனவற்றிற்குக் கூறினார் என்பது.

உலகம் என்பது உலகத்தார் மேற்று; உடம்பு என்பது உடம்புடையார் மேற்று என்பது.

**குறிப்பு:- தெய்வம் சுட்டிய பொருள்**

தொல்காப்பியர் இந்நூற்பாவுள் (கிளவி.58) காலம் முத லான பத்துப்பொருள்களை எடுத்துக்கூறி, இவையெல்லாம்

---

சு.வே: 1 இவ்வினை நன்று (கா.ந)
2 முடிபேற்றன (ஏடு)
3 உள (ஏடு)
4 முன்னர்த்தா னுணரப்படும் (ஏடு)

உயர்திணையாய் முடியாமல் அஃறிணையால் முடியும் என்பர். இதன் உரையில் இளம்பூரணர் "இச்சூத்திரம் தெய்வஞ்சுட்டிய பொருள் அஃறிணையான் முடிபேற்றல் கூறினார் என்ப ஒரு திறத்தார்" என்பர்.

இவ்வொரு திறத்தார் என்பது தொல்காப்பிய உரையாசிரியர் பலருள் ஒரு பகுதியாரை உணர்த்தும். அவ்வொருதிறத்துக் கொள்கையுடையாருள் அடங்குபவர் **திவாகரர், பிங்கலர் திருவள்ளுவர்** முதலியோராவார்.

**திவாகரர்** தெய்வப் பெயர்த்தொகுதியுள் கூறுவனவெல்லாம் "இக் காலம் உலகம்" என்னும் நூற்பாவிற்குரிய பொருள்களே ஆகும்.

பால்வரை தெய்வமாகிய சிவன் முதலிய தெய்வங்களையும் பூதமாகிய பூதகணம் முதலியவற்றையும், ஞாயிறு திங்களாகிய சூரியன் முதலிய கோள்களையும், சொல்லாகிய கலைமகளையும், 'காலமாகிய நாள், யாண்டு, சிறுபொழுது பெரும்பொழுது, பக்கம், யுகம், நாழிகை, மாத்திரை முதலியவற்றையும் கூறுகிறார். **ஏனையவற்றையும் கூறும் நூற்பா திவாகரத்துள் இருந்து சிதைந்திருத்தல் வேண்டும்.**

திவாகரத்தைப் பின்பற்றிய பிங்கலர் தம் நிகண்டுள் தெய்வம் பற்றிய பெயர்த் தொகுதியுள் திவாகரர் கூறியுள்ளவற்றுடன் உலகமாகிய இராசி, திசை, வீதி முதலியவற்றையும் உயிராகிய ஆன்மாவையும் கூறுகிறார். உடம்பும் வினையும் கூறப்பட்டிருத்தல் வேண்டும். திருவள்ளுவர் வினையைத் தெய்வம் (ஊழ்) என்றே கூறுகிறார்.

**இவற்றால் காலம் முதலியவற்றைத் தெய்வக் கூறாகக் கருதிக் கூறல் தொல்காப்பியர், திருவள்ளுவர், திவாகரர், பிங்கலர் முதலியோர் தம் கொள்கையாதல் புலப்படும்.**

**மேற்காட்டியவற்றால், திவாகரம் முதலிய நிகண்டுகளின் தெய்வப் பெயர்த்தொகுதிக்கு இக் 'காலம் உலகம்' என்னும் நூற்பா அடி என்க.**

அமரகோசம், திவாகரம் முதலியவற்றிற் கூறும் தெய்வத் தொகுதிப் பெயர்களை வெவ்வேறு வர்க்கத்தே கூறுமென்க.

**நச்சினார்க்கினியர்** "ஆசிரியர் 'காலம் உலகம்' என்றும் பிறாண்டும் சூத்திரஞ் செய்தலின், அது வடமொழியன்று" என்பர். (சிந்தா. செய். 1.உரை).

**59. நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே.**

எ⋯ன் "குடிமை யாண்மை" (58)
என்பதற்குப் புறனடை[1] கூறுதல் நுதலிற்று.

"இச் சொல்லப்பட்டவையிற்றுக்கு நின்றாங்கிசைத்தல் இயல்பின்று என்பது.

(எனவே) மேற் சூத்திரத்திற் சொல்லப்பட்டனவற்றிற்கு[2] நின்றாங் கிசைத்தல் இயல்புமாம் என்பது".

உ...ம் :- குடிமை நல்லன்: வேந்து செங்கோலன் எனவரும்.

**குறிப்பு**:- "வையத்து வாழ்வாங்கு" (50) என்னும் குறளில் "நின்றாங் கிசைத்தல்" என்பது போல 'ஆங்கு' இயல்பின் பொருட்டு என்பர் **திருக்குறள் நுண்பொருள் மாலையார்.**

**60. இசைத்தலு முரிய வேறிடத் தான.**

எ.ன், இது "கால முலகம்" (கிள. 58) என்பதற்குப் புறனடை[3] உணர்த்துதல் நுதலிற்று.

"வேறிடம் என்பது வேறு வாய்பாடு; வேறு வாய்பாட்டாற் சொல்ல இசைக்கும்; ஓதிய வாய்பாட்டாற் சொல்ல இசையாதென்பது".

உ...ம்:- காலன் கொண்டான்: உலகத்தார் பசித்தார் எனவரும்.

**61. எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே.**

"எ...ன், இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை (கிள. 18) என்னுஞ் சூத்திரத்திற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

---

சு.வே: 1 புறனடை (கா.ந)
2 சொல்லப்பட்டனவற்றுக்கு (கா.ந)
3 புறனடை (கா.ந)

"மேற் பண்பு கொள் பெயர்க்கொடை" (கிள. 18)

வழக்கினுள் இனம் பெற்றே நிற்க வென்றான்; இனி, இன மின்றியும் நிற்கும் வழக்கினுள் என்றவாறு.

உ...ம்:- பெருங்கொற்றன்; பெருஞ்சாத்தன் எனவரும்.

அற்றன்று, அவையும் ஆண்டே அடங்கும்; மற்று என்னை கருதியதெனின்? இஃது அருத்தாபத்தி பெற்று[1] "விதந்த *மொழி யினம் வேறுஞ் செப்பும்" என்பது. **பரிமாண சூத்திரம்**; இதுவும் அப்பொருட்டு.

உ..ம்:- மேற்சேரிக்[2] கோழி அலைத்ததெனக், கீழ்ச்சேரிக்[3] கோழி அலைப்புண்டமை, சொல்லாமையே முடிந்ததாம். குடங் கெண்டான் வீழ்ந்தானெனக் குடம் வீழ்ந்தமை, சொல்லாமையே முடிந்ததாம். இந்நிகரான இனஞ்செப்பின.

செப்பலும்[4] உரித்து எனவே, இனஞ்செப்பாதன ஆ வாழ்க; அந்தணர் வாழ்க எனவரும். ஒழிந்தனவும் ஒழிந்தாரும் சாக என்றவாறன்று.

**குறிப்பு:** "அடைமொழி யினமல் லதுந்தரும் ஆண்டுறின்" (நன்.401) உரையையும் பார்க்க.

* 'விதந்த' என்னும் நூற்பாவை மயிலை நாதரும் பரிணாம சூத்திரம் என்பர். (நன். 401)

**62. கண்ணுந் தோளு முலையும் பிறவும்**
**பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி**
**பன்மை கூறுங் கடப்பா டிலவே**
**தம்வினைக் கியலு மெழுத்தலங் கடையே[5]**

எ...ன் திணை வழூஉக் காத்தல் நுதலிற்று.

---

சு.வே: 1 பெற்றது என்க (கா.ந)
2 மேலைச்சேரி (கா.ந)
3 கீழைச்சேரி (கா.ந)
4 செப்புதலும் (ஏடு)
5 எழுத்தல் . கடையே (துறைசை)

"கண்ணும் தோளும் முலையும் பிறவும் பன்மைப் பாலாற் கூறுதல் கடப்பாடில; தம் வினைக்கு இயலும் எழுத்து அல்லாத விடத்து என்றவாறு".

உ...ம்:- கண் நல்லன்; தோள் நல்லன்[1]; முலை நல்லள் எனவரும்.

"'பிறவும்' என்றதனால் புருவம் நல்லன்; காது நல்லன் என்பன போல்வன கொள்க.

இனி 'ஒருமை சுட்டிய சினைநிலைக் கிளவி[2] ஒருமை கூறும் கடப்பாடில[3]" என்றவற்றுக்கு[4] ஒத்தென்னை பிறவெனின், மேல் "கால முலகம்" (கிள. 58) என்று திணை வழுக்காத்து வாராநின்ற அதிகாரத்தினிடையே "எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே" (கிள. 61) என்னும் சூத்திரத்தை இடனன்றி வைத்தார். அது நிலமாகத் தந்துரைத்து அவற்றையுங் கொள்க என்பது.

உ..ம்:- மூக்கு நல்லன்; கொப்பூழ் நல்லன்[5] என வரும்

**கிளவியாக்கம் முற்றிற்று.**

---

பாவே: 1 கண் நல்லள், தோள் நல்லள் (கா.ந)
2 சினைக்கிளவி (கா.ந)
3 கடப்பாடில்லன (கா.ந)
4 அவற்றிற்கு (கா.ந)
5 மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் (கா.ந)

## 2. வேற்றுமையியல்
## (வேற்றுமை யோத்து)

63. **வேற்றுமை தாமே யேழென மொழிப.**

எ...ன் இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், வேற்றுமை யெனப்பட்ட சில பொருள் உணர்த்தினமையின் **வேற்றுமை யோத்து**[1] என்னும் பெயர்த்து.

மேல் ஓத்தினுள் நால்வகைப்பட்ட சொற்களையும் பொருள்கண் மேலாமாறு கூறிப்போந்தான்[2]. அவற்றுள் முதலது பெயர்ச்சொல். அதனது இலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டான்[3]. இது மேலோத்தினோடு இயைபு. எங்ஙனம் உணர்த்தினானோ வெனின், பயனிலை செப்பலும், உருபேற்றலும், காலந்தோன்றாமையும் பெயரது இலக்கணம் என உணர்த்தினான் என்பது.

மற்றுத் தலைச்சூத்திரம்[4] என் நுதலிற்றோவெனின் **தன்னால் உணர்த்தப்படும் பொருளை இனைத்தென்று வரையறுத்தல் நுதலிற்று.**

''வேற்றுமை யென்று சொல்லப்படுவன எழுவகைய என்றவாறு''.

இவ்வேற்றுமைகள், பொருள்களை வேற்றுமை செய்யுமாறு, அவற்றவற்றுச் சிறப்புச் சூத்திரத்தான் அறிக.

**குறிப்பு:**– தொல்காப்பியர் வேற்றுமைக்குப் பலபல விதிவிலக்கு வருதல் நோக்கி ஓரியல் கொள்ளாது மூவியல் கொண்டனர் என்பர் (இல.கொத்.64 உரை).

---

சு.வே: 1 வேற்றுமை யியல் (கா.ந)
2 கூறிப் போந்தார் (ஏடு)
3 எடுத்துக் கொண்டார் (ஏடு)
4 இத்தலைச் சூத்திரம் (கா.ந)

**குறிப்பு:-** பெயரது இலக்கணத்தை **நேமிநாதம்**

"பெயரெழுவாய் வேற்றுமையாம் பின்பதுதான் ஆறு
பயனிலையும் ஏற்கப் படுதல்-கயல்விழியாய்
ஈற்றின் உருபாறும் ஏற்றன்முக் காலமும்
தோற்றாமை நிற்றல் துணிபு." (சொல்.16) எனத்

தொகுத்துக் கூறும்.

**64. விளிகொள் வதன்கண் விளியொ[1] டெட்டே.**

எ...ன், ஒழிந்த வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

"விளிகொள் வதன்கண் விளியொடு[2] எட்டு வகைப்படும் வேற்றுமை; விளிகொள்வ தென்பது பெயரதன்கண் விளி என்றவாறு".

விளித்தல் என்பது கூவுதல்[3] (அழைத்தல்).

இதுவும், மேலவற்றொடு[4] ஒத்த சிறப்பின்றாகலான் வேறு போந்து கூறினார் என்ப[5]. என்னை ஒவ்வாவாறெனின், இதனை ஏற்கும் பெயரும் ஏலாப்பெயரும் உள; அஃதாமாறு விளிமரபினுட்[6] கூறுதும்.

**பாட ஆய்வு:- விளித்தல் என்பது கூவுதல்**

கூவுதல், கூறுதல் என்று இரண்டுபாடங்கள் உள்ளன. அவ்விரண்டில் 'கூவுதல்' என்பதே தக்கது. விளிமரபு 10,14ஆம் நூற்பாக்கட்கு "அணியாரைக் கூவுமிடத்து" என்று உரை எழுதப்பட்டிருத்தலானும், "கூவுங்கால் சேய்மைக்கு அளவிறப்ப நீளுமவை"(சொல்.28) என்று **நேமிநாதம்** கூறுதலானும் அறியலாம்.

---

சு.வே: 1 விளியோ (கா.ந)
2 விளியோடு (கா.ந)
3 கூறுதல் (கா.ந)
4 மேலவற்றோடு (கா.ந)
5 என்பது (கா.ந)
6 விளிமரபினில் (கா.ந)

**65. அவைதாம்,**
**பெயரே,**
**ஐயொடு குஇன் அதுகண் விளியீற்ற.**

எ...ன் வேற்றுமைகளைப்[1] பெயரும் முறையும் உணர்த்து தல் நுதலிற்று.

"அப்பெயர் பெயர்; அம்முறை முறை[2]; ஈற்ற என்பது இவ்விளிவேற்றுமை ஈறாக உடைய என்றவாறு. அவைதாம் என்பது மேற்சொல்லப்பட்டன என்றவாறு.

**பாடக்குறிப்பு:-**

புலிசை ஏட்டிலும், துறைசை ஏட்டிலும் மேற்கண்டவாறு நூற்பா அமைப்பும் பாடமும் உள்ளன. சேனாவரையர் நச்சினார்க்கினியர் தெய்வச்சிலையார் கல்லாடனார் உரைப் பதிப்புக்களில்

"அவைதாம்
பெயர் ஐ ஒடுகு
இன்அது கண்விளி யென்னு மீற்ற"

என்ற அமைப்பும், பாடமும் உள்ளன. **இளம்பூரணர்** 'என்னும்' என்கின்ற சொல்லை வைத்து உரை எழுதவில்லை.

**சேனாவரையர்** அச்சொல்லை வைத்து உரை எழுதுகிறார்.

**நன்னூலாசிரியரும்** ஏட்டிலுள்ள பாடம் போல், 'பெயரே' என்று எழுவாய் வேற்றுமையை ஏகாரம் கொடுத்துப் பிரித்தே கூறுகிறார். சேனாவரையர் நூற்பாப் பாடம் போலவே இளம் பூரணர் உரையுள் நூற்பாப் பாடத்தை எழுதுவோர் திருத்தி விட்டனர்.

**66. அவற்றுள்,**
**எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.**

எ...ன், நிறுத்த முறை யானே முதற்கண் என்ற

---

சு.வே: 1 வேற்றுமைகளின் (கா.ந)

2 அப்பெயரே பெயர் அம்முறையே முறை (கா.ந)

பெயர் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

"முதல் வேற்றுமை பெயர் என்றவாறு. இனித் 'தோன்று நிலை' என்றதனான், மேற்சூத்திரத்துக் கூறப்படும் அறுவகைப் பயனிலையும் தோன்ற நிற்கும் பெயர் எழுவாய் வேற்றுமை யாவது என்றவாறு".

என்னை[1] ஆயன்சாத்தன் வந்தான் என்புழி,

ஆயன் என்பதூஉம், பெயர். சாத்தன் என்பதூஉம் பெயர். ஆயினும், இரண்டிற்கும் இரண்டு பயனிலை தோன்ற நில்லாமை யாற் சாத்தன் என்பதூஉம், வந்தான் என்பதூஉம் ஆயன் என்பதற்கே பயனிலை: அதனால்[2] சாத்தன் என்பது ஆண்டு எழுவாய் வேற்றுமையாயிற்று.

பெயரை[3] எழுவாய் வேற்றுமை என்றும் (பின்), விளி வேற்றுமை[4] என்றும் உரைத்தீரால், இரண்டிற்கும் தம்முள் வேற்றுமை என்னெனில், ஈறு திரியாது உருபேற்றல் எழுவாய் வேற்றுமையது இலக்கணம். ஈறு திரிந்துருபேற்றல் விளி வேற்று மைய திலக்கணம் என்பது[5].

**67. பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்**
**வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்**
**பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்**
**றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.**

---

சு.வே: 1 இப்பகுதி இவ்வாறே புலிசை ஏட்டிலும் உள்ளது. இதன் பொருள் தெளிவாக இல்லை.

2 அதனால் என்பதற்கு, "சாத்தன் என்பது ஆயன் என்ப தற்கே பயனிலையாகி ஒன்றுபட்டுநின்ற அதனால், சாத்தன் என்பது ஆண்டு எழுவாய் வேற்றுமையயாயிற்று" என்று பொருள் கொள்ள முடியுமேற்கொள்க.

3 இனிப்பெயரை (கா . ந)

4 விளிவேற்றுமை என்றீரால் (ஏடு)

5 என்பது அறிக (கா . ந)

எ...ன் மேற் சொல்லப்பட்ட எழுவாய் வேற்றுமை என்பது இவ்வறுவகைப்பட்ட பயனிலையும் ஏற்பது என உணர்த்துதல் நுதலிற்று.

"பொருண்மை சுட்டல்[1], 'ஆ உண்டு' என்பது.
வியங்கொளவருதல், 'ஆ செல்க' என்பது.
வினைநிலை யுரைத்தல், ஆ கிடந்தது' என்பது.
வினாவிற் கேற்றல், 'ஆ எவன்' என்பது.
பண்பு கொளவருதல், 'ஆ கரிது' என்பது.
பெயர் கொள வருதல், 'ஆ பல' என்பது.

இவையெல்லாம் பெயர் வேற்றுமைப் பொருள் என்பது.

'அன்றி யனைத்தும், என்பது, அத்துணைப் பொருள் எல்லாம் என்றவாறு".

**68. பெயரி னாகிய தொகையுமா ருளவே
அவ்வு முரிய வப்பா லான.**

எ...ன், **தொகைச் சொல்லும் பயனிலை ஏற்கும்** என்பது உணர்த்துதல் நுதலிற்று.

"அறுவகைத் தொகைச்சொல்லும் எழுவாய் வேற்றுமைப் பயனிலைப்பாடு பிழையாது வரும் என்றவாறு".

உ...ம்:- யானைக்கோடு[2] உண்டு; செல்க, வீழ்ந்தது, யாது வெளிது, பத்து என வரும். பிறவு மன்ன.

இனியொரு கருத்து:- 'பெயரி னாகிய தொகையுமாருளவே. என்பது, பெயரும் பெயரும் தொக்க தொகையும் என்றவாறு,

---

சு.வே: 1 அச்சுப் பிரதியில் "ஆ உண்டு என்பது பொருண்மை சுட்டல்" என எல்லாம் மாற்றி எழுதப்பட்டுள்ளன.
புலிசை ஏட்டின்படி மேலே பாடம் தரப்பட்டுள்ளது.

2 யானைக்கோடு, என்னும் தொகைச் சொல் எழுவாய் ஆகும். அது, செல்க முதலியவற்றுக் கெல்லாம் தனித்தனி கொடுக்கப்பட்டுள்ளது - அச்சுப் பிரதியில்.

உம்மையான் வினையும் பெயருந் தொக்க தொகையும் எழுவாய் வேற்றுமைப் பயனிலைப்பாடு பிழையாது வரும் என்று கொள்க.

அது 'கொல் யானை' என்பது.

**மேற்கோள்:-**

தெய்வச் சிலையாரும், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் 'ஆர்' அசையாய் வந்ததற்கு, "பெயரினாகிய தொகையும் ஆர் உளவே" என்பதை எடுத்துக்காட்டுவர்.

(தொல். இடை. 23)

**69. எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி[1]**
**அவ்விய னிலையல் செவ்வி தென்ப.**

எ...ன், **இன்னும்[2] எழுவாய் வேற்றுமைக் காவதோர்திறம்** உணர்த்துதல் நுதலிற்று.

"எல்லாப் பெயரும் பயனிலைப்பட நிற்றற்றன்மையில் திரியாமை[3] அதற்குச் செவ்விய[4] வென்ப; பிறிது அதற்குச் செவ்விய வாகாமையுமுடைய தென்பது[5].

யாதோவெனின், உருபேற்றலும்; பெயரதிலக்கணம்; அவ்வுருபேற்றலை உடையதாகாது[6] எனலுமாம் ஒரொரு பெயர்[7] என்றவாறு.

என்னை, நீயிர் என்பது பெயர்; பெயராயினும் நீயிரையென உருபேலாது. பிறவு மன்ன

---

பாடே.வ; 1 தோன்றிய (நேமி.உரை சொல்.157)

2 இதுவும் (கா.ந)

3 திரியா (ஏடு)

4 செவ்விய (ஏடு)

5 பிரித்தற்குச் செவ்விய வாகாமையும் உடைய வென்பது (ஏடு)

6 உடையவாகாதெனவுமாம் (ஏடு)

7 ஒரோபெயரென்பது (கா.ந)

அ. **சேனாவரையர்** இந்நூற்பாவுரையில் "எவ்வயிற் பெயரும் பயனிலை கோடல் செவ்விது என, உருபேற்றல் செவ்விதன்றாம் என உரைத்து, அவ்வாய், நீயிர் என்பன உருபேலாவென்று காட்டினாரரால் உரையாசிரியர் எனின்'' என்று கூறுவதை நோக்கினால், நீயிருடன் 'அவ்வாய்' என்பதையும் சேர்த்து உருபேலாதென்று உரையாசிரியர் கூறுவது புலனாம்' ஆனால் புலிசை இளம்பூரண ஏட்டிலும் அச்சிட்டவற்றிலும் 'அவ்வாய்' என்னுஞ் சொல் இல்லை.

**நன்னூலார்** "நீயிர், நீவிர், நான் என்னும் இம் மூன்று பெயரும் யெழுவாய் உருபினை யொழிய ஏனையுருபுகளை ஏலா'' என்பர் (மயிலை.293)

**நேமிநாத உரையாசிரியர்** "தோற்றும், என்று மிகுத்துச் சொல்லியவதனால் வேற்றுமைகளை ஏலாத பெயரும் திரிந்தேற்கும்'' என்று கூறி, 'எவ்வயிற்பெயரும்' (தொல்.சொல்.69) என்ற நூற்பாவை எடுத்துக் காட்டுவர். (நேமி.சொல்.15)

**70. கூறிய முறையி னுருபுநிலை திரியா**
**ஈறுபெயர்க் காகு மியற்கைய வென்ப.**

எ...ன், உருபேற்றலும் பெயரதிலக்கணம்[1] (என) உணர்த்துதல் நுதலிற்று.

"மேல் அவைதாம், பெயர் ஐ ஒடு கு இன் அது கண் என்றோதிய முறையாற் கிடந்த வுருபு முறைமையிற் றிரியாதே பெயர தீற்றுக்கண் வந்து **நிற்றல்** இயல்பென்றவாறு[2].''

உ...ம்:- சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும்.

'நிலை திரியாது' என்றது இவை இடைச்சொல்லாகலால் 'தம்மீறு திரிதல்' (தொல். சொல். இடை 3) என்னும் இலக்கணம் உடைய கொல்லோ வெனின், அவை இல என்றற்குக் கூறினான் என்பது.

அன்றியும், முன்னர் வேற்றுமை மயங்கியலுள்

---

சு.வே: 1 பெயரதிலக்கணமும் (கா.ந).
2 நிற்கும் இயல்பினையுடைய என்றவாறு (கா.ந)

"குஐ ஆனென வருஉ மிறுதி, அவ்வொடு[1] சிவணும்."(25 என்று செய்யுட்கண் திரிபு கூறுப வாகலானும் அது சொல்லி னார் என்பது.

ஆறு உருபும் ஏற்றலுக்கு இந்நூற்பா மேற்கோள் (நேமி. சொல். 16)

சேனாவரையர் உருபு, பெயர் சார்ந்து வருமெனவே, உரு பேற்றலாகிய பெயரிலக்கணமும் பெறப்பட்ட தென்பர்.

கல்லாடனார் உருபேற்றலும் பெயர்க்கிலக்கணம் என்பது உணர்த்துதல் நுதலிற்று என்பர்.

**71. பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா**
**தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே.**

எ..ன் இதுவும் அது. பெயர்க்கண்ணே கிடந்ததோர் இலக் கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்பு[2]: "பெயர்ச் சொற் காலந் தோன்றா; தொழிற் பெயராயிற் காலந் தோன்றும் என்றவாறு".

உ...ம்:- சாத்தன் என்பது காலந் தோன்றாது.
உண்டான் என்பது காலந் தோன்றிற்று.

மற்றுத் தொழிற்பெயரெல்லாங் காலந் தோன்றும்[3] பிற என்னை, அற்றன்று பெயர்ச்சொற் காலந் தோன்றா[4] வெனத் தொழிற்பெயர் காலந்தோன்றுதலுந் தோன்றாமையுமுடைய வென்பதாம்.

இனி, யொருகருத்து: தொழினிலைப் பெயர்ச்சொற் காலந் தோன்றா காலமொட்டுந் தொழிற்பெய ரல்லாதவிடத்து என்றவாறு.

காலந் தோன்றாதன உண்டல், தின்றல் என்பன. இவை அத்தொழின்மேல் நின்ற பெயர்.

---

சு.வே: 1 அ ஒடு (எடு)
2 இதன் பொழிப்பு என்பது அச்சுப்பிரதியில் இல்லை
3 காலந் தோன்றும். அன்றன்று (கா.ந)
4 காலந் தோன்றா வெனவே (கா.ந).

இனிக் காலமொட்டுந் தொழிற்பெயராவன உண்டான், தின்றான் என்பன. இவை, அத்தொழில் செய்வான் மேல் நின்ற பெயர்.

**குறிப்பு:** **நன்னூலாசிரியர்** 'தொழிலல காலந் தோற்றா (274) என்பர்.

**72. இரண்டா குவதே**
**ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்**
**பவ்விரு முதலிற் றோன்று மதுவே**
**காப்பின் ஒப்பின்[1] ஊர்தியின் இழையின்**
**ஒப்பிற்[2] புகழிற் பழிப்பி[3] னென்றா**
**பெறலின் இழவிற் காதலின் வெகுளியிற்**
**செறலின் உவத்தலின் கற்பின் என்றா**
**அறுத்தலிற் குறைத்தலிற் றொகுத்தலிற் பிரித்தலின்**
**நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா**
**ஆக்கலிற் சார்தலிற் செலவிற் கன்றலின்**
**நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா**
**அன்ன பிறவும் அம்முதற் பொருள**
**என்ன கிளவியும் அதன்பால என்மனார்[4].**

(**நூ-வேறுபாடு:** இந்நூற்பாவில் ஏனைய உரையாசிரிய ரெல்லோரும் முன்னுள்ள நான்கு அடிகளை ஒரு நூற்பாவாக வும், காப்பின் என்ற தொடக்கத்திலிருந்து எல்லா அடிகளையும் மற்றொரு நூற்பாவாகவும் கொள்வர். இளம்பூரணர் ஒரு நூற்பாவாகக் கொள்வர்.)

எ...ன் இஃது இரண்டாம் வேற்றுமை யாமாறு உணர்த்து தல் நுதலிற்று.

"இரண்டாம் எண்ணு முறைமைக்கண்ணது 'ஐ' என்னும்

---

பா.வே: 1 ஒப்பின் (ஏடு)
2 ஓப்பின் (ஏடு)
3 பழியின் (கா.ந)
4 என்ப (ஏடு)

பெயரையுடைய வேற்றுமைச் சொல். அஃதியாண்டு[1] வரினும் வினையும் வினைக்குறிப்புமென அவ்விரண்டையுந் தனக்குத் தோற்று நிலமாகவுடைத்தென்றவாறு''.

அவ்விரண்டு நிமித்தமாகத் தோன்றுமெனினும் அமையும். மரத்தைக் குறைத்தானென்பது வினைபற்றி வந்தது.

குழையை யுடையர்[2] என்ன வினைக் குறிப்புப் பற்றி வந்தது.

'அதுவே' என்பது அவ்விரண்டாம் வேற்றுமைதானே என்று தெரித்தவாறு.

இனி, அவ்வினையும் வினைக்குறிப்பும் பற்றி அது வருமாற்றுக்கு உதாரணப் பகுதி காட்டுதும்.

காப்பின் என்பது முதல்:- ஊனைக்[3] காக்கும்; கிளியை ஓப்பும்; யானையை ஊரும்; எயிலை இழைக்கும்; தாயை ஒக்கும்; ஊரைப் புகழும்; நாட்டைப் பழிக்கும். என்றா என்பது எண்ணிடைச் சொல்.

ஊரைப் பெறும்; ஊரை யிழக்கும்; மனைவியைக் காதலிக்கும்[4]; படையை வெகுளும்; ஊரைச் செறும்; தாயை உவக்கும்; நூலைக் கற்கும் என்றா என்பது எண்ணிடைச் சொல்.

ஞாணை அறுக்கும்; மரத்தைக் குறைக்கும்; நெல்லைத் தொகுக்கும்; வேலியைப் பிரிக்கும்; பொன்னை நிறுக்கும்[5]; அரிசியை அளக்கும்; அடைக்காயை எண்ணும்; ஊரை ஆக்கும்; வாய்க்காலைச் சாரும்; நெறியைச் செல்லும்; சூதினைக் கன்றும்; செய்யை நோக்கும்; கள்ளரை யஞ்சும்; நாட்டைச் சிதைக்கும் என வரும்.

ஈண்டு நின்ற இன்களெல்லாஞ் சாரியை ஆயின.

---

பா.வே: 1 அது (கா.ந)
2 குழையையுடையன் (கா.ந)
3 ஊரைக் காக்கும் (கா.ந)
4 தாயைக் காதலன் (ஏடு)
5 தூணை நிறுக்கும் (கா.ந)

'பிறவும்' என்றது இவையல்ல பிறவும் வினையும் வினைத் குறிப்பும் பற்றிய வருவன வெல்லாம் இரண்டாம் வேற்றுமைப் பொருள; அவை விரலை முடக்கும், நாவினை வளைக்கும் என்பன போல்வன வினை; ஊரை யின்புடையன் என்பன[1] போல்வன வினைக் குறிப்பு.

"அம்முதற் பொருள என்ன கிளவியும் அதன் பால என் மனார்"[2] என்பது, அவ்வினையும் வினைக்குறிப்பும் பற்றி வருவன வெல்லாம் முதலாய் வரூஉம் எவ்வகைப்பட்ட சொல்லும் இவ்விரண்டாம் வேற்றுமைக் கூற்றன என்ப என்றவாறு.

**73. மூன்றாகுவதே,**
**ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;**
**வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே;**
**அதனி னியறல்[3] அதற்றகு கிளவி**
**அதன்வினைப் படுதல் அதனி னாதல்**
**அதனிற் கோடல் அதனொடு மயங்கல்**
**அதனொ டியைந்த வொரு[4] வினைக் கிளவி**
**அதனொ டியைந்த வேறு[5] வினைக் கிளவி**
**அதனொ டியைந்த வொப்ப[6] லொப்புரை**
**இன்னா னேது வீங்கென[7] வரூஉம்**
**அன்ன பிறவு மதன்பால வென்மனார்.**

**குறிப்பு:** சேனாவரையர் முதலியோர் இதனை இரண்டு நூற்பாவாகக் கொள்வர்.

எ...ன், முறையானே மூன்றாம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

---

சு.வே: 1 ஊரை இன்புறும் என்பன (ஏடு)
2 என்ப (ஏடு)
3 அதனி னியலல் (ஏடு)
4 அதனோ டியைந்த வொரு (கா.ந)
5 அதனோ டியைந்த வேறு (கா.ந)
6 அதனோ டியைந்த வொப்பல் (கா.ந)
7 ஈங்ஙனம் (சேனா) உரை

"மூன்றாம் எண்ணு முறைமைக் கண்ணது ஒடு வென்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல்; அது வினை முதலும் கருவியுமென இரண்டினையுந் தனக்குப் பொருளாக உடையது என்றவாறு".

'நாயாற் கோட்பட்டான்' என்பது வினைமுதல் பற்றி வந்தது.

'வேலா லெறிந்தான்' என்பது கருவிபற்றி வந்தது.

இனி அவ்வினைமுதலும் கருவியும் பற்றி வருமாற்றை விரிக்கின்றார்.

அதனின் இயறல்[1]: 'தச்சன் செய்த சிறுமாவையம்' (குறுந். 61) இது தச்சனாற் செய்யப்பட்டதென்பதாம்.

அதற்றகு கிளவி; வாயாற்றக்கது வாய்ச்சி[2] என்பது.

அதன் வினைப்படுதல்; நாயாற் கோட்பட்டார்[3] என்பது.

அதனினாதல்; வாணிகத்தா னாயினான் என்பது.

அதனிற் கோடல் காணத்தாற் கொண்ட வரிசி என்பது.

இனி, அதனொடு மயங்கல்; எள்ளொடு விராய அரிசி என்பது.

அதனொடியைந்த ஒரு வினைக் கிளவி: சாத்தனொடு வந்தான் கொற்றன் என்பது.

அதனொ டியைந்த வேறுவினைக் கிளவி: "மலையொடு பொருத மால்யானை" என்பது.

அதனொ டியைந்த ஒப்பல் ஒப்புரை: "முத்தொடும் உறழக் கோத்து"[4] என்பது. (பவழத்தை முத்தொடும் உறழக் கோத் தென்பது பொருள்) ஒவ்வாததனை[5] ஒப்பித்தல் ஒப்பல் ஒப்புரை.

இன்னான் என்புழியும், ஏதுவின் கண்ணும்[6] வரும் மூன்றாம் வேற்றுமை.

---

சு.வே 1 அதனி னியலல் (ஏடு)

2 வாச்சி (ஏடு)

3 கோட்பட்டான் (கா.ந)

4 முத்தொடு முழாக் கோத்து (கா.ந)

5 ஒவ்வாத்தானை (ஏடு)

6 ஏது வினைக் கண் ணும் (ஏடு).

(அவ்விரண்டுள்) இன்னான் என்பது, கண்ணாற் கொத்தை யவன்[1] என்பது. ஏது முயற்சியாற் பிறத்தலான் சொல்லு நிலை யாது என்பது.

'அன்ன பிறவும்' என்றதனாற் பிறவும் வருவனவெல்லாம் கொள்க.

**இன்னான் ஏது ஈங்கு**

**குறிப்பு:- திரு-வேங்கடராயலு ரெட்டியாரவர்கள்** நுண் பொருள் விளக்க ஆராய்ச்சிக்கட்டுரை 1—இல், பாணினீய சூத் திரத்தில் "யோநாங்க விகார: (2.3.20) என்பது போன்றது 'இன் னான்' (கண்ணாற் கொத்தை) என்றும், "ஹே தௌ" (2.3.23) என்பது போன்றது 'ஏது' (முயற்சியிற் பிறத்தலான் சொல்லு நிலையாது) என்றும். 'இத்தம் பூதலட்சணே' (2.3.21) என்பது போன்றது, 'ஈங்கு அல்லது ஈங்ஙனம்' (சடைகளால் தபசி) என்றும் கூறுவர். இளம்பூரணரில் வேறுபட்டுச் சேனாவரை யரும் நச்சினார்க்கினியரும், கல்லாடனாரும், தெய்வச் சிலை யாரும் உரைப்பர்.

**குறிப்பு:- இறையனார் களவியல் நூற்பா—1—இல்** அதன் உரை யாசிரியர் "அன்பினான் ஆய ஒழுக்கத்தை அன்பின் வேறென்று கொள்வன், தச்சனானாய மாடம் தச்சனின் வேறாயது போல என்றார்க்கு, அதுவன்று; பொன்னினாய குடம் பொன்னின் வேறல்லது போலக் கொள்க என்பது. மூன்றாம் வேற்றுமை காரண காரியத்தை வேறுணரவும் நிற்கும். வேறன்றி யுணர வும் நிற்கும். வேறன்றி யுணர நிற்கும் பகுதி கொள்க" என்று கூறுவதால் மூன்றாம் வேற்றுமை இயல்புணர்க

**74. நான்கா குவதே**
**குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**எப்பொரு ளாயினுங் கொள்ளு மதுவே**
**அதற்குவினை யுடைமையின் அதற்குடம் படுதலின்**
**அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்**
**அதற்கியாப் புடைமையின் அதற்பொருட் டாதலின்**

---

சு.வே: 1 கண்ணாற் கொத்தை, காலான் முடவன்(கா.ந)

**நட்பிற் பகையிற் காதலிற் சிறப்பினென்**
**றன்ன பிறவும்[1] அதன்பால என்மனார்.**

இந்நூற்பாவில் முதன் மூன்று அடிகளை ஒரு நூற்பாவாக வும், ஏனைய அடிகளை மற்றொரு நூற்பாவாகவும் கொள்வர் பிற உரையாசிரியர்.

எ...ன் முறையானே நான்காம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

"நான்காம் எண்ணுமுறைமைக்கண்ணது. கு என்னும் பெயரையுடைய வேற்றுமைக் கிளவி; ஈவதோர் பொருளை ஏற்கநிற்கும் அதுவே[2] என்பது.'

உ...ம்:- சாத்தற்குச் சோறு என வரும்.

எப்பொருளாயினும் என்றார் மூன்றிடத்துப் பன்மை நோக்கி.

அதற்கு வினையுடைமை; கரும்பிற்கு வேலி என்பது.

அதற்குடம்படுதல்: சாத்தற்கு மகளுடம்பட்டார்[3] சான் றோர் என்பது.

அதற்குப் படுபொருள்: சாத்தற்குப் படுபொருள் கொற் றன் என்பது.

அதுவாகு கிளவி: கடிசூத்திரத்திற்குப்[4] பொன் என்பது.

அதற்கியாப்புடைமை: கைக்கியாப்புடையது கடகம் என்பது.

அதற் பொருட்டாதல்: கூழுக்குக் குற்றேவல் செய்யு மென்பது

நட்பு: நாய்க்கு நட்புடையன் என்பது.

பகை: மக்கட்குப் பகை பாம்பென்பது.

---

சு.வே: 1 அப்பொருட் கிளவியும்
2 ஏற்கிற்கும் அது (ஏடு)
3 மக்கள் உடம்பட்டார் (ஏடு)
4 கடிசூத்திரத்திற்கு (கா.ந)

காதல்: தாய்க்குத் காதலன்[1] என்பது.

சிறப்பு: வடுகரசர்க்குச் சிறந்தார் சோழிய வரசர் என்பது இன்னெல்லாம் சாரியை.

"அன்னபிறவும்" என்பது[2] ஈண்டு ஏற்ற பொருளல்லனவும் வேற்றுமைக்கு உரிமை காட்டுவான் சொல்லினான் என்பது.

ஏற்ற பொருண்மை விதந்து கூறினாரென்பது சிறப்பு நோக்கி.

பிறவும் அதன்பால[3]: பண்ணுக்குத் தக்கது பாடல், பூவிற்குத் தக்கது வண்டு என்பன போல்வன.

**75. ஐந்தா குவதே**
**இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**இதனின் இற்றிது வென்னு மதுவே**
**வண்ணம் வடிவே யளவே சுவையே**
**தண்மை வெம்மை யச்ச மென்றா,**
**நன்மை தீமை சிறுமை பெருமை**
**வன்மை மென்மை கடுமை யென்றா,**
**முதுமை யிளமை சிறத்தல் இழிதல்[4]**
**புதுமை பழமை யாக்க மென்றா,**
**இன்மை யுடைமை நாற்றந் தீர்தல்**
**பன்மை சின்மை பற்று விடுதலென்**
**றன்ன பிறவு மதன்பால வென்மனார்.**

இந்நூற்பாவில் முதல் மூன்று அடிகளை ஒரு நூற்பா வாகவும், ஏனைய அடிகளை மற்றொரு நூற்பாவாகவும் கொள்வார்பிற உரையாசிரியர்.

எ...ன் முறையானே ஐந்தாம் வேற்றுமை உணர்த்தல் நுதலிற்று.

---

சு.வே: 1 காதல் (ஏடு)
2 அப்பொருட்கிளவி என்பது (கா.ந)
3 அதன் பாலன ஆவன (ஏடு)
4 இழித்தல் (கா.ந)

''ஐந்தாம் எண்ணு முறைமைக்கண்ணது 'இன்' என்னும் பெயரையுடைய வேற்றுமைக்கிளவி; 'இப்பொருளின் இத் தன்மைத்து இப்பொருள்' என்பதனைப் பயப்ப வரும் அது என்றவாறு.''

உ...ம்:- 'காக்கையிற் கரிது களாம்பழம்'[1] என வரும்.

இதனின் என்பது காக்கையின் என்பது; இற்று என்பது கரிது என்பது; இது என்பது களாம்பழம் என்பது.

எனவே, பொரூஉப் பொருளைத் தனக்குப் பொருளாக உடைத்து என்றவாறு.

ஐந்தாம் வேற்றுமை நான்கு பொருள் உடைத்து;

பொரூஉப் பொருளும், நீக்கமும், எல்லையும் ஏதுவுமென.

அவற்றுள், பொரூஉப் பொருளை எடுத்துக் கூறினார் சிறப்புடைமையின்; ஒழிந்தனவற்றைப் போக்கிச் சொல்லுதும்.

வண்ணம் - காக்கையிற் கரிது காளாம்பழம் என்பது.
வடிவு - இதனின் வட்டம் இது என்பது.
அளவு - இதனின் நெடிது இது என்பது.
சுவை - இதனிற் றீவிது இது என்பது.
தண்மை - இதனின் தண்ணிது இது என்பது.
வெம்மை - இதனின் வெய்யது இது என்பது.
அச்சம் - கள்ளரின் அஞ்சும்[2] என்பது.

என்றா என்பது எண்ணிடைச் சொல்.

நன்மை - இதனின் நன்று இது என்பது.
தீமை - இதனிற் றீது இது என்பது.

---

சு.வே: 1 அச்சுப் பிரதியில் 'களம்பழம்' என்று காட்டப்பட்ட எடுத்துக் காட்டெல்லாம் ஏட்டில் 'களாம் பழம்' என்றே உள்ளன. களா இயல்பான சொல்.

2 கள்ளின் அஞ்சும்

சிறுமை – இதனிற் சிறிது இது என்பது.

பெருமை – இதனிற் பெரிது இது என்பது.

வன்மை – இதனின் வலிது இது என்பது.

மென்மை – இதனின் மெலிது இது என்பது.

கடுமை – இதனிற் கடிது இது என்பது.

என்றா என்பது எண்ணிடைச் சொல்.

முதுமை – இவனின் மூத்தான் இவன் என்பது.

இளமை – இவனின் இளையான் இவன் என்பது.

சிறத்தல் – இவனிற் சிறந்தான் இவன் என்பது.

இழிதல்[1] – இவனின் இழிந்தான் இவன் என்பது.

புதுமை – இவனிற் புதியன் இவன் என்பது.

பழமை – இவனிற் பழையன் இவன் என்பது.

ஆக்கம் – இவனின் ஆயினான் இவன் என்பது.

என்றா என்பது எண்ணிடைச் சொல்.

இன்மை – இவனின் இலன் இவன் என்பது.

உடைமை – இவனின் உடையன் இவன் என்பது.

நாற்றம் – இதனின் நாறும் இது என்பது.

இவை யெல்லாம் பொரூஉப் பொருள்.

தீர்தல் – ஊரிற் றீர்ந்தான் என்பது.

இது நீக்கம்

பன்மை – இவரிற் பலர் இவர் என்பது.

சின்மை – இவரிற் சிலர் இவர் என்பது.

இவையும் பொரூஉப் பொருள்.

பற்றுவிடுதல் - ஊரிற் பற்று விட்டான்.

இதுவும் நீக்கம் என்பது.

---

சுவ.வே: 1 இழித்தல்

'அன்ன பிறவும்' என்றதனால் எல்லைப் பொருளும், ஏதுவும் கொள்க.

எல்லை – 'கருவூரின் கிழக்கு மருவூரின் மேற்கு' என்பன.
ஏது – முயற்சியாற் பிறத்தலின் இசைநிலையாது[1].

ஏட்டில் கீழ் வருமாறு உள்ளன.

வண்ணம் – காக்கையிற் கரிது களாம்பழம் என்பது
வட்டம் – இதனின் இது வட்டம் என்பது
அளவு – இதனின் நெடிதென்பது
சுவை – இதனிற் றீவிது என்பது.
தண்மை – இதனிற் றண்ணிது என்பது.
வெம்மை – இதனின் வெய்ய தென்பது.
அச்சம் – கள்ளரின் அஞ்சும் என்பது.

என்றா எண்ணிடைச் சொல்.

நன்மை – இதனின் நன்றென்பது.
தீமை – இதனிற் றீதென்பது.
சிறுமை – இதனிற் சிறிதென்பது.
பெருமை – இதனிற் பெரிதென்பது.
வன்மை – இதனில் வலிதென்பது.
மென்மை – இதனின் மெலிதென்பது.
கடுமை – இதனிற் கடிதென்பது.

என்றா எண்ணிடைச் சொல்.

முதுமை – இவனின் மூத்தானிவன்.
இளமை – அவனின் இளையன் என்பது.
சிறத்தல் – அவனிற் சிறந்தான் என்பது
இழித்தல் – அவனின் இழிந்தான் என்பது.

---

சு.வே : 1 முயற்சியிற் பிறத்தலின் ஒலி நிலையாது

புதுமை – அவனிற் புதியன் என்பது.

பழமை – அவனிற் பழையன் என்பது.

ஆக்கம் – இவனின் ஆயினான் என்பது.

என்றா எண்ணிடைச் சொல்.

இன்மை – இவனின் இலன் என்பது.

உடைமை– இவனின் உடையன் என்பது.

நாற்றம் – இதனின் நாறும் என்பது.

இவையெல்லாம் பொருஉப் பொருள்.

தீர்தல் – ஊரிற் தீர்ந்தான்.

இது நீக்கம்.

பன்மை – அவரிற் பலர் என்பது.

சின்மை – அவரிற் சிலர் என்பது.

இவையும் பொருஉப் பொருள்

பற்றுவிடுதல் – ஊரிற் பற்று விட்டான்.

இதுவும் நீக்கம் என்பது.

**76. ஆறா குவதே**
**அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**தன்னினும் பிறிதினும் இதன திதுவெனும்**
**அன்ன கிளவிக் கிழமைத் ததுவே**
**இற்கையின் உடைமையின் முறைமையிற் கிழமையிற்**
**செயற்கையின் முதுமையின் வினையி னென்றா**
**கருவியிற் றுணையிற் கலத்தின் முதலின்**
**ஒருவழி யுறுப்பிற் குழூஉவி[1] னென்றா**
**தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியிற்**
**றிரிந்து வேறுபடூஉம் பிறவு மன்ன**
**கூறிய மருங்கிற் றோன்றுங் கிளவி**
**ஆறன் பால வென்மனார் புலவர்.**

---

சு.வே: 1 குழுவின் (ஏடு)

இந்நூற்பாவில் முன்னைய நான்கு அடிகளை ஒரு நூற்பா வாகவும், ஏனைய அடிகளை மற்றொரு நூற்பாவாகவும் பிற வுரையாசிரியர் கொள்வர்.

எ...ன், நிறுத்த முறையானே ஆறாம் வேற்றுமை உணர்த்து தல் நுதலிற்று.

"ஆறாம் எண்ணுமுறைமைக்கண்ணது அது என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல்; தன்னொடு தொடர்ந்த தோர் பொருளையும், தன்னின் வேறாகியதோர் பொருளை யும் இதனதிதுவென்று கிழமை செப்பி நிற்றல் ஆறாம் வேற்றுமைய திலக்கணம் என்றவாறு".

'அதுவே என்பது, அப்பொருளை விரிப்பான் றெரித்தவாறு

இதனது இது என்னும் கிளவிக் கிழமைத் தொன்னாது அன்ன (கிளவிக் கிழமைத்து) என்றதனான், இதற்குப் பிறிது மொரு பொருள் உண்டு; அஃதியாதோவெனின்,

'அவன, அவள என்னும் ஈற்றகரம் (பன்மைப் பொருள். தோன்றவரும் என்பது)

தன்னினும் என்புழித் தற்கிழமை ஐந்து வகைப்படும் (அவை) ஒன்றுபல குழீஇய தற்கிழமையும், வேறுபல குழீஇய தற்கிழமையும், ஒன்றியற் கிழமையும், உறுப்பின் கிழமையும் மெய்திரிந்தாய கிழமையும் என்பன[1],

| | |
|---|---|
| ஒன்று பல குழீஇயது | – எட் குப்பை[2]. |
| வேறுபல குழீஇயது | – படையது குழாம். |
| ஒன்றியற் கிழமை | – நிலத்தின தகலம். |

---

சு.வே: 1 என (கா.ந)

2 ஒவ்வொரு எடுத்துக்காட்டிலும் 'எட்குப்பை என்பது' என்றாற்போல, ஈற்றில் 'என்பது' என்னுஞ் சொல் அச்சுப் பிரதியில் சேர்க்கப்பட்டுள்ளது. எனக்குக் கிடைத்த சுவடி யில் அது இல்லை.

உறுப்பின் கிழமை - யானையது கோடு.

மெய்திரிந்தாகிய கிழமை - எள்ளினது சாந்து.

பிறிதின் கிழமை இது போலப் பகுதிப் படாது.

இனி, அவ்விரண்டு கிழமையும் ஒட்டுமாறு காட்டுதும்.

இயற்கை - சாத்தன தியற்கை.

உடைமை[1] - சாத்தன துடைமை.

முறைமை - ஆவினது கன்று.

கிழமை - சாத்தனது கிழமை.

செயற்கை - அவனது[2] செயற்கை.

முதுமை - அவனது முதுமை.

வினை - அவனது வினை.

கருவி - சாத்தனது வாள்.

துணை - அவனது துணை.

கலம் - சாத்தனது கலம். கலம்[3] என்றது ஒற்றிக் கலத்தை

முதல் - சாத்தனது முதல்.

ஒருவழியுறுப்பு - யானையது கோடு.

குழூஉ - படையது குழாம்[4].

தெரிந்து மொழிச் செய்தி - கபிலரது பாட்டு.

நிலை - சாத்தனது நிலை.

வாழ்ச்சி - சாத்தனது வாழ்ச்சி.

திரிந்து வேறுபட்டது - எள்ளினது சாந்து; சாத்தனது சொல் என்பதும் அது.

'பிறவும்' என்றது புறனடை[5]

---

சு.வே: 1 உடமை (ஏடு)
2 சாத்தனது செயற்கை (கா.ந)
3 கலம் என்பது (கா.ந)
4 குழூஉ (கா.ந)
5 புறனடை (கா.ந)

"கூறிய மருங்கிற் றோன்றுங் கிளவி ஆறன் பால" என்பது இரு கிழமையும் பற்றி வருவனவும், பிறவும் அதன் பால என்ற வாறு.

**குறிப்பு:-**

(அ) "அஃது யாதோவெனின், அவன அவள என்னும். ஈற்றகரம்" என்னும் பகுதி சுவடியிலும், நமச்சிவாயமுதலியார் கழகப் பதிப்புக்களிலும் மேற்காட்டியவாறே உள்ளன.

**சேனாவரையர்** "இதன இவை' என்னும் பன்மை உருபுத் தொடரும் அடங்குதற்கு 'அன்ன கிளவி' என்றார்" என்றும்,

**நச்சினார்க்கினியர்:** "அன்ன என்றார்; இதன இவை என்னும் பன்மை உருபும் ... ... ... அடங்குதற்கு" என்றும், எழுதுவதை நோக்கினால் 'அதன அவை' என்று பாடம் இருத்தலே பொருந்தும்.

(ஆ) **தற்கிழமை**

**நன்னூலார்** தற்கிழமை ஐந்திணைப்பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் என்பர்

(நன். 299)

77. ஏழாகுவதே,
**கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**வினைசெய் யிடத்தின் நிலத்திற் காலத்தின்**
**அனைவகைக் குறிப்பிற் றோன்று மதுவே**
**கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்**
**பின்சார்[1] அயல்புடை தேவகை[2] யெனாஅ**
**முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ**
**அன்ன பிறவு மதன்பால வென்மனார்.**

---

சு.வே: 1 பின் சார்பயல் (சார்பு)

2 'தேம்வகை', நன்னூலுள் தேவகை என்பது இல்லை. 'தேம்' என்றே உள்ளது. இளம்பூரணர் உரையுள் 'அன்ன பிறவும்' என்றதனால் 'கிழவோள் தேஎத்து' எனத் தேம் காட்டப்பட்டுள்ளது.

**குறிப்பு:**- (இந்நூற்பாவில் முன்னைய நான்கு அடிகளை யும் ஒரு நூற்பாவாகவும், ஏனைய அடிகளை மற்றொரு நூற் பாவாகவும் பிற உரையாசிரியரெல்லோரும் கொள்கின்றனர். நேமிநாத உரை ஒரு நூற்பாவாகவே கொள்ளுகின்றது.) (நேமி.சொல்.19)

எ. . ன் நிறுத்த முறையானே[1] ஏழாம் வேற்றுமை உணர்த்து தல் நுதலிற்று. "ஏழாம்[2] எண்ணுமுறைமைக் கண்ணது 'கண்' என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல். வினை செய் யிடமும், நிலமும், காலமும் என்பன[3] மூன்று பொருட்கண்ணும் வரும் அது என்றவாறு."

வினை செய்யிடம்- தட்டுப்புடைக்கண்[4] வந்தான் என்பது.
நிலம் - மாடத்துக்கண்ணிருந்தான் என்பது.
காலம் - மாரியுள் வந்தான் என்பது.

இனி, அவ்வேற்றுமை யுருபு பலவாகலின் அவற்றை விரிக் கின்றார். (அவை வருமாறு[5]):

ஊர்க் கண்ணிருந்தான்.
ஊர்க்காலிருந்தான்.
ஊர்ப்புறத்திருந்தான்.
ஊரகத்திருந்தான்.
ஊருளிருந்தான்.
சான்றாருழைச்[6] சென்றான்.
மாடத்தின் கீழிருந்தான்.
மாடத்தின் மேலிருந்தான்.
ஏர்ப்பின் சென்றான்.
காட்டுச் சாரோடும்.

சு.வே: 1 முறையானே (கா.ந)
2 ஏழாம் முறை (ஏடு)
3 என்ற (கா.ந)
4 தட்டுப்புடையுள் (ஏடு)
5 சுவடியில் இல்லை
6 சான்றோருழை (கா.ந)

ஊரயலிருந்தான்.

ஊர்ப்புடையிருந்தான்.

'தேவகை' என்பது திசைக் கூற்று (கூறு); அது, வடக்கண் வேங்கடம், தெற்கட் குமரி என வரும். 'எனாஅ' என்பது இடைச்சொல்.

தேர் முன் சென்றான்.

சான்றாரிடை யிருந்தான்.

கோயிற்கடைச் சென்றான்.

தந்தைத் தலைச் சென்றான்.

கைவலத்துள்ளது கொடுக்கும்.

கையிடத்திருந்தான் என வரும்.

'அன்ன பிறவும்' என்றதனான் ''கிழவோள் தேஎத்து'' (இறை.கள.8) என்னும் தொடக்கத்தன கொள்க.

**குறிப்பு:-**

**(அ) தேஎத்து**

''கிழவோள் தேஎத்தும்'' (தொல்.அகத்திணை 39) என்றும்

''இருவர் தேஎத்தும்'' (தொல்.களவியல் 37) என்றும் வருமிடங்களில்

'மாட்டு' என்ற பொருளிலும் ''மறையோர் தேஎத்து மன்றல்'' (தொல்.களவியல் 1)

என்ற இடத்தில் 'இடத்து' என்ற பொருளிலும்,

''இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்'' (தொல்.பொருளியல் 52)

என்ற இடத்தில் 'உலகம்' என்ற பொருளிலும் தேஎத்து வருகின்றன.

கண் கால் முதலியவற்றைச் சேனாவரையர் ஏழாவதன் திறத்தன என்பர்.

பரிமேலழகரும் இயல்புளிக்கோலோச்சும் (545) என்ற குறட்பாவுரையில் 'உளி' என்பதை மூன்றாம் வேற்றுமை என்று கூறாது மூன்றாவதன் பொருள் படுவதோர் இடைச் சொல் என்பர்.

இளம்பூரணர் கண் முதலாயின வற்றை யெல்லாம் வேற்றுமை உருபென்று கருதி "இனி அவ்வேற்றுமையுருபு பலவாக லின் அவற்றை விரிக்கின்றார்" என்பர்.

சேனாவரையர் கண் முதலாயின வெல்லாம் ஏழாம் வேற்றுமை உருபல்ல என்று தம் உரையுள் மறுத்துள்ளார்.

**இறை.களவியல் 1. உரையாசிரியர்** 'ஐந்திணை–களவு என்னும் சொல் எப்படி வந்ததென்று வினாவிக் கொண்டு, தொகைநிலையால் வந்தது; வேற்றுமைத் தொகையால் வந்தது; ஏழாம் வேற்றுமைத் தொகையால் வந்தது; ஏழாம் வேற்றுமை உருபுதாம் பல. அவற்றுள் யாது தொக்கது எனின் 'உள் என்பது தொக்கது'' என்று எழுதுவதை நோக்கினால் இலக்கண ஆசிரியருள் ஒரு சாரார் உருபென்றே கருதினமை புலனாம்.

**நன்னூலார்** ஏழன் உருபு கண்ணாதியாகும் என்பர். நச்சி னார்க்கினியர் கண் கால் முதலியவற்றை உருபின் பாகுபாடு என்று கூறி, கண் சிறந்த உருபென்றும் ஏனைய சிறப்பில்லாம் உருபென்றும் கூறுவர்.

**78. வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை**
**ஈற்றுநின் றியலும் தொகைவயிற் பிரிந்தே.**

எ..ன் வேற்றுமைக்கெல்லாம் கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"அக் கூறிய வேற்றுமைகள் தொக்கு முடியவும் வேண்டும்; அத் தொக்க வேற்றுமை உருபு விரியுங்கால் யாண்டு நின்று புலப்படுமோ வெனின், மொழியீற்றுக்கண்ணே புலப்படும் என்றவாறு."

மற்று, "ஈறு பெயர்க்காகும்" (தொல்.சொல்.வேற். 8) என்புழி விளங்காதோ வெனின், விளங்காது; ஆண்டது உருபு

பெயரதிறுதி வந்து நிற்குமென்றார்; அங்ஙனம் நின்றவுருபு தொகும்; தொகுத்த லென்பது புலப்படாமையன்றே; மற்றது பின்பு புலப்படுங்கால்[1] தான் நின்ற ஈற்றே புலப்படும் என்பது சொல்ல வேண்டும் என்பது.

**குறிப்பு:**– இந்நூற்பாவினையும் அடுத்த நூற்பாவினையும் சேர்த்து 'பிரிந்து' என்று பாடம் ஓதி, ஒரே நூற்பாவாகக் கொள்வர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் தெய்வச் சிலையாரும். இளம்பூரணரும் கல்லாடனாரும் 'பிரிந்தே' எனப் பாடம் ஓதித் தனித்தனி நூற்பாவாகக் கொள்வர்.

**79. பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கும்**
**எல்லாச் சொல்லும் உரிய என்ப.**

எ..ன் இதுவும் வேற்றுமைக்கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"உருபு தொக்கும் விரிந்தும்[2] நிற்குமென்றார். அவ்வுருபேயு மன்று ஆண்டுப் பிற சொற்களும் உள அவ்வுருபே போல வந்து ஒட்டநிற்பன; அவையெல்லாம் அவ்வுருபே போல ஆண்டே தொகுத்தலும் விரித்தலும் உடையன என்றவாறு"

குதிரைத்தேர் என்பது, குதிரையாற் பூட்டப்பட்டதேர் குதிரைத்தேர்[3]; ஆன் என்பது ஆண்டு உருபு; பூட்டப்பட்ட தென ஆண்டுருபல்லது, ஆண்டு உருபு தொக்குநின்றாங்கே நிற்கவுமமையும் விரித்துக் காட்டவுமமையும்[4] என்பது.

"பல்லாறாகப் பொருள்புணர்ந் திசைக்கும்" என்பது, பலவாற்றானும்[5] பொருள் ஏற்ப ஒட்டுவன என்றவாறு.

**வேற்றுமையியல் முற்றும்.**

---

சு.வே: 1 புலப்படுக்குங்கால் (ஏடு)
2 தொக்கு விரிந்து (ஏடு)
3 இச்சொற்றொடர் அச்சுப்பிரதியில் இல்லை.
4 அமையும் படும் (ஏடு)
5 பலவற்றானும் (ஏடு)

## 3. வேற்றுமை மயங்கியல்

**80. கரும மல்லாச் சார்பென் கிளவிக்[1]**
**குரிமையு முடைத்தே[2] கண்ணென் வேற்றுமை.**

எ.. ன், இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், வேற்றுமை தம்மின் மயங்கினமை உணர்த்தினமையின் 'வேற்றுமை மயங்கியல்' என்னும் பெயர்த்து.

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், இரண்டாவதனொடு ஏழாவது மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

''இரண்டாவது கருமச் சார்பும் கருமமல்லாச் சார்பும் என இருபொருள் உடைத்து; தூணைச் சார்ந்தான் என்பது கருமச் சார்பாவது; அதனை உறச் சாருமாதலால். இனி, அரசரைச் சார்ந்தான் என்பது கருமமில் சார்பு. அக் கருமமில் சார்ச்சிப் பொருண்மைக்கண் ஏழாவது வருதல் உரிமையுடைத்து என்பது''.

உ ..ம்:-அரசரைச் சார்ந்தான் என்புழி, அரசர்கட் சார்ந்தான் என்பதும் ஆக என்பது.

**81. சினைநிலைக் கிளவிக் கையும் கண்ணும்**
**வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர்.**

எ...ன், இதுவும் இரண்டாவதனொடு ஏழாவதன் மயக்கமே கூறுதல் நுதலிற்று.

''சினைப்பொருட்டு இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் ஒத்த கிழமையவாம் என்றவாறு''.

---

பா.வே: 1 சார்வென் கிளவிக்கு (புலிசை)
2 உரிமையுரித்தே (புலிசை)
உரிமையு முரித்தே (துறைசை)

உ...ம்:-கண்ணைக் குத்தினார், கண்ணுட் குத்தினார் எனவரும்.

**82. கன்றலுஞ் செலவும் ஒன்றுமார் வினையே.**

எ...ன், இன்னும் அவை[1] இரண்டன்[2] மயக்கமே உணர்த்துதல் நுதலிற்று.

"கன்றல், செலவு என்னும் பொருட்டு இரண்டாவதும் ஏழாவதும் தொழிலான் ஒக்கும் என்றவாறு".

உ.. ம்:- சூதினைக் கன்றினான், சூதின்கட் கன்றினான் நெறியைச் சென்றான், நெறிக்கட் சென்றான் என வரும்.

**83. முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை**
**முதற்கண் வரினே சினைக்கை வருமே.**

எ...ன், இது, "சினைநிலைக் கிளவிக்கு ஐயுங் கண்ணும்" (இவ்வியல்–2) என்னும் சூத்திரத்திற்குப் புறனடை.

"முதலும் சினையும் தொடருங்கால், முதற்பொருட்கண் ஆறாவது வருமேயெனின், சினைப்பொருட்கு இரண்டாவது வருக என்றவாறு".

உ...ம்:-யானையது கோட்டைக் குறைத்தான் என வரும்.

**84. முதன்முன் ஐவரிற் கண்ணென் வேற்றுமை**
**சினைமுன்[3] வருதல் தெள்ளி தென்ப.**

எ...ன்,இதுவும் அதற்கேபுறனடை உணர்த்துதல் நுதலிற்று.

"முதற்பொருட்கு இரண்டாவது வருமேயெனின், சினைப் பொருட்கண் ஏழாவது வருதல் தெளிவுடைத்து என்றவாறு".

உ...ம்:-யானையைக் கோட்டுக்கட் குறைத்தான் எனவரும்

---

பா.வே: 1 இதுவும் அவை (கா.ந), இதுவும் அவ் (கழகம்)
2 இரண்டான் (துறைசை)
3 சினை முதல் (புலிசை)

'தெள்ளிது' என்றதனால், யானையைக் கோட்டைக் குறைத்தான் எனலுமாம்[1]

**குறிப்பு:-** தொல்காப்பியர் இங்கு 4,5 நூற்பாக்களால் கூறிய இரண்டு கருத்தினை **நன்னூலார்** முன்பின்னாக மாற்றி,

> ''முதலை ஐயுறிற் சினையைக் கண்ணுறும்
> அதுமுதற் காயிற் சினைக்கை யாகும்.'' (314)

என்று நூற்பா செய்துள்ளார்.

**85. முதலுஞ் சினையும் பொருள்வேறு படாஅ[2]**
**நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே.**

எ...ன், ஐயம் அறுத்தல் நுதலிற்று.

''இதுதான், சொல்லுவான் குறிப்பொடு படுத்த விடத்துச் சினைதான் முதலுமாம் என்றவாறு''.

உ...ம்:- கோட்டது நுனியைக் குறைத்தான், கோட்டை நுனிக்கட் குறைத்தான், கோட்டை நுனியைக் குறைத்தான் எனச் சொல்லுவான் குறிப்பொடு படுத்தவிடத்துச் சினைதான் முதலுமாயிற்று.

முதல் சினையாவது வந்த வழிக் கண்டுகொள்க.

**ஒத்த நூற்பா:-**

> ''முதலிவை சினையிவை யெனவே றுளவில
> உரைப்போர் குறிப்பின'' (நன். 315)

**86. பிண்டப் பெயரும் ஆயியல் திரியா**
**பண்டியன் மருங்கின் மரீஇய[3] மரபே.**

எ...ன், இதுவும் ஐயமறுத்தல் நுதலிற்று.

---

**கு.வே:** 1 என்றுமாம் (துறைசை)
2 படா (ஏடு)
3 மரீய (ஏடு)

"பிண்டப் பெயரும் அதுவே; தெரியில், அப்பொருளின் வேறு பிண்டம் ஒன்றில்லை என, விலக்கப்பட்டுக் கிடந்தது. வழங்குமாற்றால் உண்டு போலுமாம் என்பது பிண்டப்பெயர் என்றவாறு".

உறுப்பின் கிழமை ஒழித்து ஒழிந்த தற்கிழமையி னாயிற்று.

உ...ம்:-எட்குப்பை, நெற்குப்பை என்றால் எள்ளின் வேறு குப்பை, நெல்லின் வேறு குப்பை என்ப தொன்றில்லை.

எட்சாந்து, கோட்டுநூறு என்பனவும் அவை.

**87. ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே.**

எ...ன், இது, மூன்றாம் வேற்றுமைப் பொருட்கண் ஓர் சொல்வன்மை உணர்த்துதல் நுதலிற்று.

மூன்றாம் வேற்றுமைப் பொருள் விதப்புழி[1],

"அதனொடியைந்த ஒருவினைக் கிளவி"[2] (வேற்றுமை. 11) என்றான். அஃதாவது ஒரு வினையினுழை ஒடுக்கொடுத்துச் சொல்லுக என்றவாறு. ஆகலான் இவ்வாறு இச்சொல்லினான் இயைபுடைத்தாய் ஒருவினை கொண்டு வருங்கால், அவ்வொடு உயர்வு பற்றி வரும் என்றவாறு.

உ...ம்:-அரசனொடு வந்தார் சேவகர் என வரும்.

மற்று, 'நாயொடு வந்தான் நம்பி, என இழிவு பற்றி வருமால் எனின், உயர்வுதாம் பல; குலத்தால் உயர்தலும், தவத்தால் உயர்தலும், நிலையால்[3] உயர்தலும், பகாரத்தால் உயர்தலுமென, அவ்விழிந்த வழி ஒடு வைத்துச் சொல்லியது, அந்நிலைக்கண் இது சிறப்புடைத்தாகலின் என்பது.

---

சு.வே: 1 விரிப்புழி (கா.ந)

2 அதனொடியைந்த ஒருவினைக் கிளவி யென்றதுவதல்ல தொடுவினை யின்னுழைகொடுத்துச் சொல்லுக என்றவாறு (துறைசை)

3 நிலைமையால் (துறைசை)

**குறிப்பு**:-நாயொடு வந்தான் நம்பி என இது உபகார உயர்ச்சிபற்றி வந்தது என்பர் **நேமிநாத உரையாசிரியர்** (சொல். 20).

**88. மூன்றனும் ஐந்தனுந் தோன்றக் கூறிய**
**ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி**
**நோக்கோ ரனைய என்மனார் புலவர்.**

எ...ன், மூன்றாவதும் ஐந்தாவதும் ஏதுப்பொருட்கு ஒத்த கிழமைய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

''மூன்றாம் வேற்றுமையானும், ஐந்தாம் வேற்றுமை யானும் எடுத்தோதப்பட்ட ஆக்கமொடு புணர்ந்த ஏதுப் பொருண்மை ஆராயுங்கால் ஒரு தன்மைய என்றவாறு''

உ...ம்:- வாணிகத்தான் ஆயினான்,
வாணிகத்தின் ஆயினான் என வரும்.

**குறிப்பு**:-மூன்றாம் வேற்றுமையைக் கூறும்(வேற்றுமை. 11) நூற்பாவுள் ''அதனின் ஆதல்'' என்றது மூன்றனாற் கூறிய ஏதுக்கிளவியாம். இதற்கு **இளம்பூரணர்** ஆண்டு 'வாணிகத்தா னாயினான்' என்பதையே எடுத்துக் காட்டியுள்ளார்.

ஐந்தாம் வேற்றுமையைக் கூறும் (வேற்றுமை. 13) நூற் பாவுள் ''ஆக்கம்'' என்றது ஐந்தனாற் கூறிய ஏதுக்கிளவியாம். இதற்கு இளம்பூரணர் 'இவனின் ஆயினான்' என்பதை எடுத் துக் காட்டியுள்ளார். ஆனால், **சேனாவரையர்** வாணிகத்தின் ஆயினான் என்பதையே காட்டுகிறார்.

**89. இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கமவ்**
**விரண்டன் மருங்கின் ஏதுவு மாகும்.**

எ...ன், இதுவும் 'மேற்சூத்திரத்திற்குரிய முடிவே சார்ந்த தென்றவாறு' உணர்த்துதல் நுதலிற்று.

''இரண்டாம் வேற்றுமை நோக்கிய நோக்கமும், நோக்கல் நோக்கமுமென இரண்டு பொருளும் உடைத்து. மேற்றான்

''நோக்கலின்'' (வேற்றுமை. 10) என்றான். என்புழி நோக்கலின் எனவே, அவ்விரண்டு நோக்கமும் அடங்கின. 'நோக்கிய நோக்கம்' என்பது பொறியான் நோக்குதல். அது பூணை[1] நோக்கினான் என வரும். 'நோக்கல் நோக்கம்' என்பது, ''வான் நோக்கி வாழும்'' (குறள் 542) என்பது. இது கண்ணான் நோக்கிய தன்மையின் நோக்கு அல் நோக்கம் ஆயிற்று. அப்பொருண்மைக்கண்ணாயின், முன்னர்ச் சொல்லிய இரண்டு வேற்றுமைப் பொருளும் ஆம் என்றவாறு''.

உ...ம்:- ''வான் நோக்கி வாழும்'' (குறள் 542) என்றக்கால், வானை நோக்கி வாழும் என்பது (இரண்டு). இனி வானானாய உபகாரம் நோக்கி வாழும் (மூன்று). வானினாய உபகாரம் நோக்கி வாழும் (ஐந்து) என்பதூஉமாம் என்பது.

**90. அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்**
**அதுவென் உருபுகெடக் குகரம் வருமே.**

எ ... ன், ஆறாவது நான்காவதனொடு மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

''மேல், இயற்கையின் உடைமையின் முறைமையின் (வேற்றுமை. 14) என ஆறாவது வருவதனை[2] முறைமைப் பொருட்குரித்தென்று ஓதினான்: அம் முறைமைப் பொருள் உயர்திணைக்காயின், அதுவென்னுருபு கெடக் குகரம் வரும் என்றவாறு''.

உ ... ம்:- நம்பிக்கு மகன் என வரும்.

நம்பியது மகன் என்புழி இழுக்குள்ளது கண்டு, அது காத்தவாறு.

**குறிப்பு:- நன்னூலார்** ''ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும், பன்மைக் கவ்வும்'' என்று ஆறாம் வேற்றுமை உருபுகளை அஃறிணை ஒருமை, பன்மைக்கு உரியதாக ஓதினாற் போலத் தொல்காப்பியர் ஓதிற்றிலர்.

---

சு. வே: 1 அரசனை (புலிசை)
2 ஆறாவதனை (கா.ந)

**சேனாவரையர்** "உயர்திணைத் தொகைவயின் அதுவென்னுருபு கெடக் குகரம் வரும்" என்றதனான், ஆறனுருபு அஃறிணைப்பால் தோன்ற நிற்றல் பெற்றாம் என்று உரைப்பர்.

**உயர்திணைத் தொகை:**

நச்சினார்க்கினியர் 'உயர்திணைத்தொகை' என்பதற்கு உயர்திணைப்பொருள் இரண்டு சேர்ந்தவிடத்து என்று உரை கூறுவர்.

**91. தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்**
**கடிவரை யிலவே பொருள்வயி னான.**

எ ... ன், இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டாம் வேற்றுமைப் பொருளும்[1], மூன்றாம் வேற்றுமைப் பொருளும் ஒக்கும் என்றவாறு".

உ ... ம்:- புலிகொல் யானை.

அது விரிப்புழிப் புலியைக் கொன்ற யானை புலிகொல் யானை என. புலியாற் கொல்லப்பட்ட யானை புலிகொல் யானை என இரண்டிற்கும் ஒக்கும்.

தடுமாறுதல் என்பது இரண்டிற் குரித்தாய்ச் சென்று வருதல், கோறல் தொழில் இரண்டிற்கும் ஒக்கும்.

**தடுமாறுதல்**

**குறிப்பு:- தொல்காப்பியர்** உவமையில் தடுமாறுவரலும் உண்டு என்ற கருத்தால் "தடுமாறு வரலுங் கடிவரை யின்றே" (உவமயியல் 37) என்றார். அங்கே தடுமாற்றம் –ஐயம்.

**இலக்கணக் கொத்தாசிரியர்**, வேற்றுமையில் எழுவாய் வேற்றுமை "ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப" எனத் தடுமாற்றம் பெற்று வரும். தடுமாற்றமாவது ஓர் பொருளே

---

சு. வே: 1 இரண்டாமது வேற்றுமைப் பொருளும் (ஏடு)

ஒருகால் வினைமுதலாயும், ஒருகால் செயப்படுபொருளாயும் நிற்றல் என்பர் (நூற். 24)

மற்றுத் "தடுமா றுருபுகள் தாஞ்சில வுளவே" (61) என்று கூறி, உதாரணம் "அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்ய வள், தவ்வையைக் காட்டி விடும்" என்புழி ஒவ்வொரு நிலைக் களத்து ஐயும் குவ்வும் பொருந்தும் என்பர்.

**92. ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்**
**வேற்றுமை தெரிப வுணரு மோரே.**

எ...ன், மேல் எடுத்தோதப்பட்ட தடுமாறு தொழிற் பெயரை உணருமாறிது வென்பது உணர்த்துதல் நுதலிற்று.

"புலிகொல் யானை என்பது, அத்தொகைக்கு யானை என்பது ஈற்றது; இவ் வீற்றுப்[1] பெயர் முன்னர்ப் பொருளறிய வருஞ்சொல் 'மெய்யறிபவனுல், என்பதனான் அவ்விரண்டன் வேற்றுமையும் தெரியப்படும் என்றவாறு".

உ. .ம்:- 'புலிகொல்யானைக் கோடு வந்தன[2]எனின், புலியால் கொல்லப்பட்டது யானை என விளங்கும்.

இனிப் 'புலிகொல் யானை ஓடுகின்றது எனின், புலியைக் கொன்றது யானை என விளங்கும்.

இனி, 'ஈற்றுப்பெயர் முன்னர்ப் பொருளறிய வந்த சொல் லான் வேற்றுமை தெரிப' எனவே[3] பொருளறிய வாராத சொல் லான் அவ் வேற்றுமை தெரியலாகா என்பது.

உ...ம் :- புலி கொல் யானை கிடந்தது; தோன்றும் என்பது.

---

பா.வே: 1 அவ்வீற்றுப் (கா.ந)
2 வந்தது (கா.ந)
3 என்பது (ஏடு)

**93. ஓம்படைக் கிளவிக் கையும் ஆனுந்
தாம்பிரி விலவே தொகைவரு காலை.**

எ...ன், இன்னும்[1] அவற்றுக்கண்ணே யாவதோர் முறைமை உணர்த்துதல் நுதலிற்று.

"ஓம்படைப் பொருட்கு ஐயும். ஆனும் ஒத்த கிழமைய என்றவாறு".

'ஓம்படுத்தல்' என்பது போற்றுதல்.

'தொகை வரு காலை' என்பது, தொகையின் நிலைக் கண்ணே இம்மயக்கம் ஆவது என்றவாறு.

உ..ம்:– 'புலி போற்றிவா வாழி ஐய' என்புழிப் புலியைப் போற்றிவா என்றும், புலியினான் ஆய ஏதம் போற்றிவா என்றும் (ஐயும் ஆனும்) ஆக என்பது.

'தொகை வரு காலை' என்பதனை யாண்டும்[2] ஒட்டிக் கொள்க' என்பது.

**94. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்
கேழும் ஆகும் உறைநிலத் தான.**

எ..ன், ஆறாவதனொடு ஏழாவதன் மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

"ஆறாவதனொடு எடுத்தோதப்பட்ட வாழ்ச்சிப் பொருட்கு ஏழாவதும் ஆம்; உறையும் நிலம் ஆகலான் என்பது.

உ...ம்:- காட்டது யானை என்பது, காட்டுள் யானைக்கு என்றும் ஆகவென்பது[3].

---

பா.வே: 1 இதுவும் (கா.ந)
2 ஆண்டும் (புலிசை)
3 காட்டுள் யானை என்றுமாக என்பது (கா.ந)

**95. குத்தொக வரூஉங் கொடையெதிர் கிளவி
அப்பொருள் ஆறற் குறித்தும் ஆகும்.**

எ...ன், நான்காவதன் பொருள், ஆறுவதற்குச் செல்லு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

"நான்காம் வேற்றுமை தொக்குக் கொடை எதிர்ந்து நின்ற வழி, ஆறுவது சொல்லவும் அமையும் என்றவாறு".

உ...ம்:- நாகர் பலி என்பது, ஆண்டு நாகர்க்குப்பலி என நான்காவது தொக்கு நின்றது; அந்நிலைக்கண் நாகரது பலியென ஆறாவதும் ஆக என்றவாறு.

'கொடை யெதிர்தல்' என்பது, விழுப்பமுடையாரை நுத லியக்கால் கொண்டுவைத்து விரும்பிக் கொடுத்தல்.[1]

'நாகர்பலி' என்பது அவர்க்குத் திரிபில்லாமையினான் நாக ரது பலியென உடைமைக் கிழமை செப்பலாயிற்று[2] என்பது கருத்து.

குறிப்பு:- 'கொடை எதிர் கிளவி' என்பது சொல்லினைப் பொருளுக்கு வேறாகக் கொள்வோனாகக் கூறியதென்பர். (இல. கொத். பாயி. 6. உரை).

**96. அச்சக் கிளவிக் கைந்தும் இரண்டும்
எச்ச மிலவே பொருள்வயி னான.**

எ...ன், ஐந்தாவதனொடு இரண்டாவதன் மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

"அச்சப் பொருண்மைக்கு ஐந்தாம் வேற்றுமையும், இரண் டாம் வேற்றுமையும் ஒத்த கிழமைய என்றவாறு".

உ...ம்:- புலியின் அஞ்சும், புலியை அஞ்சும் என வரும்.

---

சு.வே: 1 நுதலி நாகராற் கொண்டு வைத்துவிரும்பிக் கொடுத்தல் (ஏடு)
2 செயலாயிற்று (புலிசை)

புலியை அஞ்சும் என்புழிப் புலிகாரணமாக அஞ்சும் எனு மாறு கொள்க.[1]

**குறிப்பு:-** "ஐந்தாகுவதே...தண்மை வெம்மை அச்சம் என்றா" (வேற்றுமை. 75) என்றும், "இரண்டாகுவதே... நோக்கலின் அஞ்சலின்" (வேற்றுமை. 72) என்றும், ஐந்தாம் வேற்றுமைக்கும், இரண்டாம் வேற்றுமைக்கும் அச்சப்பொருள் மேலே கூறப்பட்டுள்ளன.

**சேனாவரையர்** "அஃதேல், ஒருபொருட்கண் வரினன்றே மயக்கமாவது; இவை ஏதுவும் செயப்படுபொருளுமாகிய வேறு பாடுடைய வாகலின் மயக்கமாமாறு என்னை யெனின், ஈண்டு ஏதுவாதலே அஞ்சப்படுதலாய் வேறின்றி நிற்றலின், ஒரு பொருட்கண் வந்தனவே யாம்; அதனான் மயக்கமா மென் பது" என உரைத்தலைக் காண்க.

**97. அன்ன பிறவுந் தொன்னறி பிழையாது
உருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயின் நிலையும் வேற்றுமை யெல்லாம்
திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே.**

எ...ன், சொல்லப்பட்ட மயக்கத்துக்குப் புறனடை உணர்த் துதல் நுதலிற்று.

"அவை போல்வன[2] பிறவும் மேற்கொண்டு அடிப்பட வழங்கும் வழக்கொடு மலையாது, உருபும் பொருளும் தம்முள் ஒன்றடொன்று[3] தடுமாறி, அவ்விரண்டிடத்து நிலைபெற்ற வேறுபாடு, வழுவென்று களையப்படா ஆராயுமிடத்து என்ற வாறு".

'உருபினும் பொருளினும் மெய்தடுமாறி' என்பது, யாண்டு உருபு சென்றது, ஆண்டுப் பொருள் சென்றது எனப்படும்;

---

சு.வே: 1 என மாறு கொள்க (கா.ந)

2 போல்வனவும் (கா.ந)

3 ஒன்றனோடொன்று (கா.ந)

யாண்டு பொருள் சென்றது ஆண்டு உருபு சென்றது எனப் படும் என்பது.

'பிறவும்' என்றதனால், "முறைக்குத்துக்குத்தினார்" என் புழி, முறையிற் குத்தினார் என்றும், முறையாற்குத்தினார் என்றும்; "கடலொடு காட்டு ஒட்டலில்[1]" (பழமொழி.372) என்புழிக் கடலைக் காட்டு ஒட்டாது என்றும் வருவன கொள்க.

**98. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி ஒருசொன் னடைய பொருள்சென் மருங்கே.**

எ...ன், பல உருபு தொடர்ந்து அடுக்கிநின்றவழிப் படுவ தோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"பல உருபு தொடர்ந்தடுக்கிநின்ற விடத்து, இறுதி உருபு முடிந்த முடிபே, ஒழிந்தனவற்றிற்கும் முடிபாக என்றவாறு".

உ...ம்:- யானையது கோட்டை நுனிக்கண் குறைத்தான் என வரும்.

இரண்டாம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் குறைத் தான் என்னும் ஒருவினையானே முடிந்த வாறறிக.

தினையிற் கிளியைக் கடியும் என்பதும் அது.

**குறிப்பு:- நன்னூலாசிரியர்** உருபு அடுக்குதலைத் தனியே கூறாமல் வினை அடுக்குதலையும் கூட்டிக்கொண்டு,

"உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுறமுடியும்" (354)

என்று கூறுவர். **மயிலை நாதர்** 'உருபு பல அடுக்கினும்' என்ப தற்கு "உருபு ஒன்றே அடுக்கியும், பல மயங்கி அடுக்கியும் தம் முடிபை இறுதியிலே பெறும்" என்று உரைப்பர்.

---

சு.வே: 1 காடொட்டாது (கா.ந)

**99. இறுதியும் இடையும் எல்லா வுருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்.**

எ...ன், உருபு நிற்கும் இடவேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(உரை இல்லை)

உ...ம்:- இறுதி: கடந்தான் நிலத்தை; வந்தான் சாத்தனொடு; கொடுத்தான் சாத்தற்கு; வலியான் சாத்தனின்; ஆடை சாத்தனது; இருந்தான் குன்றத்துக்கண்;

இனி, இடை வருமாறு; நிலத்தைக் கடந்தான்; சாத்தனொடு வந்தான்; சாத்தற்குக் கொடுக்கும்; சாத்தனின் வலியன்; சாத்தனதாடை; குன்றத்துக்கண்ணிருந்தான் என வரும்.

இனி, நெறிபடுத்துதல் என்பது வழக்குப்படுத்தல். வழக்குப்படுவழியே அவை நிலையுடைத்தாவது; அல்லாதவழி நிலவா[1] என்பது.

அவ்வழிக் கொண்டான் என்புழி,அவ் வழிக்கட் கொண்டான் என வேண்டுவதன்று[2] என்றவாறு. பிறவுமன்ன.

**100. பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக[3] வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.**

எ...ன், இதுவும் அவ்வேற்றுமை மயக்கத்துட் புறத்துப்படுவ தோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"ஓர் உருபு ஓர் உருபினை ஏற்றலும், உருபுகள் புலப் படாது நிற்றலும் இலக்கணத்துப் பட்டன என்றவாறு".

---

சு.வே: 1 அல்லாத வழி அவை நில்லா (கா.ந)

2 என வேண்டுவது (கா.ந)

3 உருபுதொகை (புலிசை, துறைசை)

'பிறிதுபிறிதேற்றல்' என்பது, ஆறாம் வேற்றுமை உருபு தான் அல்லாத உருபுகளை ஏற்பது.

வருமாறு: சாத்தனதனை, சாத்தனதனொடு, என ஆறாவது ஒழித்து, ஏழாவதன்காறும் ஒட்டுக.

இனி, உருபு தொக வருதல்; நிலத்தைக் கடந்தான் என் புழி, வேற்றுமை உருபு தொக்கு, நிலங்கடந்தான் என வரும்.

இறுதிக்கண் கடந்தான் நிலத்தை என்புழிக் கடந்தான் நிலம் என வரும்.

மற்றையனவும் அவ்வாறே தொகும் என்பது.

**குறிப்பு:-** பிறிது பிறிதேற்றலை **நேமிநாதம்** ''ஒன்றின் ஒன்றேற்றல்'' (சொல். 20) என்று கூறும். அதன் உரை ஆறாம் வேற்றுமையானது தன்னையொழியப் பிறிதினை ஏற்கும் என்று உரைக்கும். **நன்னூல்** ''ஆறன் உருபும் ஏற்குமவ் வுருபே'' (292) என்று கூறும். (மயிலைநாதர் உரையைப் பார்க்க.).

**இளம்பூரணர்** முதலியோர் மேற்கூறிய கருத்தினை உட் கொண்டே உரை வகுத்துள்ளனர்.

**தெய்வச்சிலையாரும் சிவஞான முனிவரும்** வேறுபடுவர். அவர் கருத்தை அவர் உரையுட் காண்க.

**101. ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின்**
**மெய்யுருபு தொகா விறுதி யான.**

எ...ன், மேல் உருபுகள் தொக வருவன என்றார். அத்தொக வருவனவற்றது நிலைமை ஒவ்வாதது கண்டு அஃது உணர்த்துதல் நுதலிற்று.

''இரண்டாம் வேற்றுமைப் பொருளும், ஏழாம்வேற்றுமைப் பொருளுமல்லாத வழி இறுதிக்கட்டொக வாரா என்பது[1]

---

சு.வே: 1 என்றவாறு (கா.ா)

அது சொல்[1], மற்றைய உருபெல்லாம் இறுதிக்கண் விரிந்தே வருகுவ என்பதாம்[2].

உ...ம்:- கடந்தான் நிலம், கடந்தான் நிலத்தை; இருந்தான் குன்றத்து, இருந்தான் குன்றத்துக்கண்; எனத் தொக்கும் விரிந்தும் வந்தவாறு.

'வந்தான் சாத்தனொடு' என்பது, வந்தான் சாத்தன், என 'ஒடு' தொகுநிலைமைப் படுங்கொலோவெனிற்,படாதென்பது,

மற்றையனவும் அன்ன.

**102. யாத னுருபிற் கூறிற் றாயினும்**
**பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.**

எ...ன், உருபுகள் ஒருவழித் தத்தம் பொருண்மை இன்றியும் மயங்குதலுடைய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

"யாதானும் ஓர் உருபிற் கூறப்பட்டதே ஒருசொல் எனினும், கூறிய அவ்வுருபின் பொருள் படுங்கொலோ வெனின், படாது; அக் கூறப்படாத பிற உருபு உளவன்றே; அவற்றதுமாகும். அச் சொல் அவற்றுப் பொருள்படச் சொல்லின் என்பது".

உ...ம்:-

"கிளையரி நாணற் கிழங்குமணற் கீன்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்"

(அகநா. 212)

என்னும் பாட்டினுள் 'மணற்கு ஈன்ற' என நான்காவதன் உருபு வந்த தேனும்' 'மணலுள் ஈன்ற' என ஏழாவதன் உருபே கொள்க. அதற்கேற்ற பொருட்டாகலின் எனக் கொள்க.

இது, வழக்கினுள் ஒன்றன் பொருண்மைக்கட் பிறிதோர் உருபு பொருளொடு படாதுசென்று நிற்ப வழங்குதலும்உண்மை கண்டு, அது காத்தவாறு.

---

சு.வே: 1 அது சொல்லவே (கா. ந)
2. வருவதென்பதாம் (ஏடு)

**குறிப்பு:-** இந்நூற்பா நன்னூலில் 316-ஆம் நூற்பாவாக எடுத்து அமைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மயிலைநாதர் 'உருபுகள் ஒருவழித் தம்பொருண்மேலன்றி, மயங்கிவருதலும் உடையவென வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று'' என்று நுதலியதுரைத்து இதனை உருபு மயக்கம் என்பர்.

**மேற்கோள்:-** ''உலகிற்கு அவன் குலத்தோடு(சிலப்.11) என்ற அடிக்கு, உலகிற்கு-உலகின்கண். உருபு மயக்கம்; ''யாத... சாரும்'' என்பதனான் முடிந்தது என்பர் அடியார்க்கு நல்லார்.

**103. எதிர்மறுத்து மொழியினுத் தத்தம் மரபிற்
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே.**

எ ..ன், வேற்றுமை யுருபுகள் தம்பொருண்மாறுபட நின்றுழியும் தம் பொருள என்பது உணர்த்துதல் நுதலிற்று.

''எதிர்மறுத்துச் சொல்லிற்றுழியும் தம் பொருண்மை மரபு திரியா என்றவாறு''.

உ...ம்:- 'மரத்தைக் குறையான்' என்புழி, இரண்டாவதன் பின் அப்பொருள் இல்லை மன்; இல்லை எனினும் அப்பொருட்டாக என்பது.

பிற வேற்றுமைப் பொருள்களையும் அவ்வாறு எதிர்மறுத்து ஒட்டிக் கொள்க.

**குறிப்பு:- நேமிநாதம்** மேற்கூறியதனை ''ஏற்ற பொருண் மாறினும் தான் நிற்றல்'' (சொல்.20) என்று கூறும். அவ்வுரை ''அறத்தை நோக்கும் என்புழி, அறத்தை நோக்கான் என்றும்; கோலால் அளக்கும் என்புழி, கோலால் அளவான் என்றும்; சாத்தற்குக் கொடுக்கும் என்புழிச், சாத்தற்குக் கொடான் என்றும்; கள்ளரின் அஞ்சும் என்புழிக் கள்ளரின் அஞ்சான் என்றும்; கொற்றனது வேலாம் என்புழிக் கொற்றனது வேல் அன்று என்றும்; மன்னர்கட் செல்லும் என்புழி மன்னர்கட் செல்லான் என்றும், வேற்றுமைப் பொருளை எதிர்மறுத்துச் சொன்ன விடத்தும் வேற்றுமை அழியாது ஏற்றவாறு அடைவே கண்டு கொள்க'' என ஆறு வேற்றுமை உருபிற்கும் காட்டும்,

**நன்னூலார்** உருபொடு வினையையுங் கூட்டி,
'உருபும் வினையும் எதிர்மறுத்துரைப்பினும்
திரியா தத்தமீற் றுருபி னென்ப'' (353) என்பர்.

ஆண்டு **மயிலைநாதர்** எட்டுவேற்றுமைக்கும் உதாரணம் காட்டுவர்.

**104. குஐ ஆனென வரூஉம் இறுதி**
**அவ்வொடுஞ்[1] சிவணும் செய்யு ளுள்ளே.**

எ...ன், அவ்வுருபுகளுள்[2] ஒரு சார் செய்யுளுள் திரிபுபட நிற்றல் கண்டு அஃது உணர்த்துதல் நுதலிற்று.

''கு, ஐ, ஆன் என வரூஉம் மூன்றுருபின் இறுதியும் செய்யுளுள் அகர ஈறாகி நிற்கும் என்றவாறு''.

உதாரணம் முன்னர்ச் சூத்திரத்துட் காட்டுதும்[3].

**105. அவற்றுள்,**
**அஎனப் பிறத்தல் அஃறிணை மருங்கிற்**
**குவ்வும் ஐயும் இல்லென மொழிப.**

எ...ன், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

''அவற்றுள், குவ்வும் ஐயும் அஃறிணைக்கண் அகர ஈறாகல் எய்தா என்றவாறு''.

மற்றை, ஆன் உருபாயின் அஃறிணைக்கண்ணும் உயர் திணைக் கண்ணும் எய்தும் என்பது.

இனி, உயர்திணைக்கண் குவ்வும் ஐயும் வருமாறு:
''கடிநிலை யின்றே யாசிரி யற்கு'' எனற் பாலது,
'ஆசிரியற்க[4]' (தொல்.புள்ளிமயங்.94) என்றாயிற்று.

சு.வே: 1 அ ஒடுஞ் (ஏடு)
2 அவ்வுருபுகள் (கா.ந)
3 காட்டும் (ஏடு)
4 ஆசிரியர்க்க (கா.ந)

"காவ லோனைக் களிறஞ் சும்மே" எனற்பாலது,
'காவலோனக் களிறஞ் சும்மே' என்றாயிற்று.

இனி, ஆன் இருதிணைக்கண்ணும் வருமாறு:
புள்ளினான புலவரான' என இருவழியுங் கண்டு கொள்க.

106. இதன திதுவிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமும்
காலத்தி னறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்து மொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்க னுருபிற்
றொன்னெறி மரபின தோன்ற லாறே.

எ...ன், நான்காம் வேற்றுமை ஏனைய வேற்றுமைக் கணெல்லாஞ் சென்று மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"இதனது இது விற்று" (வேற்.14) என்பது, யானையது கோடு கூரிது என்புழி, ஆண்டு நான்காவது சென்று, யானைக் குக் கோடு கூரிது என்றாக என்பது.

"அதனைக் கொள்ளும் பொருள்" (வேற்.10) என்பது இவனைக் கொள்ளும் இவ்வணி என்புழி, இவட்குக் கொள் ளும் இவ்வணி என்றாக என்பது,

"அதனாற் செயற்படற்கு ஒத்த கிளவி" (வேற்.11) என்பது வாயால் தக்கது வாய்ச்சி[1] என்புழி, வாய்க்குத் தக்கது வாய்ச்சி என்றாக என்பது.

"முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவி" (வேற்.14) என்பது, ஆவினது கன்று என்புழி, ஆவிற்குக் கன்று என்றாக என்பது.

---

சு.வே: 1 வாச்சி (ஏடு)

"பால்வரை கிளவி" (வேற்.13) என்பது, கருவூரின் கிழக்கு என்புழிக் கருவூர்க்குக் கிழக்கு என்றாக என்பது.

"பண்பின் ஆக்கம்" (வேற்.13) என்பது, சாத்தனின் நெடியன் என்புழிச் சாத்தற்கு நெடியன் என்றாக என்பது.

"காலத்தின் அறியுங் கிளவி" (வேற்.15) என்பது, மாரியுள், வந்தான் என்புழி, மாரிக்கு வந்தான் என்றாக என்பது.

"பற்று விடு கிளவி" (வேற்.13) என்பது, ஊரிற் பற்றுவிட்டான் என்புழி, ஊர்க்குப் பற்றுவிட்டான் என்றாக என்பது.

"தீர்ந்து மொழிக் கிளவி" (வேற்.13) என்பது, ஊரிற்றீர்ந்தான் என்புழி, ஊர்க்குத் தீர்ந்தான் என்றாக என்பது.

'அன்ன பிறவும், என்றதனால் ஊரிற் சேயன் (வேற்.13 தீர்தல்) என்பது, ஊர்க்குச் சேயன் என்றதாக என்பதும், உறையூரிற் பெரிது கருவூர் (வேற்.13) என்புழி, உறையூர்க்குப் பெரிது கருவூர் என்றாக என்பதும் பிறவும் இவ்வாறாக வருவன கொள்க.

இவையெல்லாம் நான்கன் உருபிற் றோன்றுதன் மேற் கொண்டு அடிப்பட்டுவந்த வழக்கு என்றவாறு.

**107. ஏனை யுருபும் அன்ன மரபின**
**மான மிலவே சொன்முறை யான.**

எ...ன், இதுவும் மயக்கமே உணர்த்துதல் நுதலிற்று.

"நான்காம் வேற்றுமை உருபல்லன பிறவும் ஒன்றன் பொருண்மைக்கண் அது சென்றாங்குச் செல்வன உளவேல் குற்றமில்லை என்றவாறு".

உ...ம்:– வழக்குப் பெற்றவழிக் கண்டு கொள்க.

**108. வினையே செய்வது செயப்படு பொருளே**
**நிலனே காலங் கருவி யென்றா**

**இன்னதற் கிது பயனாக[1] வென்னும்**
**அன்ன மரபின் இரண்டொடுங்[2] தொகைஇ**
**ஆயெட் டென்ப தொழின்முத னிலையே.**

*எ...ன், வினைச்சொல் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.*

*"இவ்வெட்டொடும் தோன்ற நிற்கும் வினைச்சொல் என்றவாறு"*

*உ...ம்:- வனைந்தான், என்ற சொல்லாலே அவ்வெட்டும் பெறும் என்பது.*

*பெறுமாறு:- 'வனைந்தான், என்ற வினை விளங்கிற்று; அதனால் வனைதற்றொழின்மை விளங்கும்.*

*'செய்வது' என்பது, செய்தான் ஒருவன் என்பது விளங்கும்.*

*'செயப்படு பொருள்' என்பது, குடந்தொடக்கத்த தென்று விளங்கும்.*

*'நிலம்' என்பது ஓரிடத்திருந்ததென்பது விளங்கும்.*

*'காலம்' என்பது இரவானும் பகலானும் என்று விளங்கும்.*

*'கருவி' என்பது கோலும் திரிகையுமென இத்தொடக்கத்தன விளங்கும்.*

*'இன்னதற்' கென்பது ஒருவற்கு என்பது விளங்கும்.*

*'இது பயன்' என்பது அறமானும் பொருளானும் ஒரோவொன்று பயக்கும் என்பது விளங்கும்.*

*இஃது அவ்வெட்டிலக்கணமும் தோன்ற நிற்குமாறு பிறவும் அன்ன.*

**குறிப்பு**:- *அவருள் மூலவினை உண்டென்பார் கருத்தே பற்றி "வினையே செய்வது" (29) என்னுஞ் சூத்திரத்துள் 'வனைந்தான்' என்புழிச் செய்தற்கு வனைதல் செயப்படு*

---

சு.வே. 1 பயமாக (துறைசை)

2 இரண்டொடு (ஏடு)

பொருணீர்மைத்தாய்த் தொழின் முதனிலையாமெனக் கொண்டார் தொல்காப்பியருமென்க.

அங்ஙனமல்லாக்கால் வனைதற்றொழில் தொழின் முதனிலையாமாறு யாண்டைய தென்பது. (சி.போ.சூ.உ.அதி.உ).

**109. அவைதாம்**
**வழங்கியன[1] மருங்கிற் குன்றுப[2] குன்றும்.**

எ...ன், மேற் சொல்லப்பட்ட வினைத்திறம் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"மேற் சொல்லப்பட்ட எட்டும் உடன் விளங்காது குறைய நிற்பனவும் உள வழக்கினுள் வினைச்சொற்கள் என்றவாறு".

உ ம்:- 'கொடி ஆடிற்று' என்புழிச் செயப்படுபொருளும், இன்னார்க்கு என்பதும், இன்னது பயக்கும் என்பதும் இல்லை.

பிறவும் அன்ன.

**110. முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்**
**சினையிற் கூறும் முதலறி கிளவியும்**
**பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்**
**இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்**
**வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ**
**அனையமர பினவே[3] ஆகுபெயர்க் கிளவி.**

எ..ன், ஆகுபெயர் உணர்த்துதல் நுதலிற்று.

"முதலிற் கூறுஞ் சினையறி கிளவித் தொடக்கத்தன ஏழ் கூறியபின்னை, 'அனைய மரபினவே'[4] என்றார், அவ்விலக்கணத்தான[5] அவை என்றாறு".

---

சு.வே: 1 வழக்கியன் (கா.ந) 4 அனை மரபினவே (கா.ந)
2 குன்றுவ (கா.ந) 5 அவ்விலக்கணத்தன (கா.ந)
3 அனைமரபினவே (கா.ந)
அனையமரபினவே (புலிசை, துறைசை)

'முதலிற் கூறுஞ் சினையறி கிளவி' என்பது, முதலாற் சினையைச் சொல்லுதல்.

உ...ம்:- தெங்கு தின்றான், கடுத்தின்றான் என வரும்.

'சினையின் கூறும் முதலறி கிளவி' என்பது சினையின் பெயர் கூற முதல் விளங்குவது.

உ...ம்:- இலை நட்டு வாழும், பூ நட்டு வாழும் என வரும்.

'பிறந்தவழிக்கூறல்' என்பது, ஓரிடங்கூற அவ்விடத்தாயின பொருண்மையின் நிற்றல்.

உ...ம்:- குழிப்பாடி என வரும்.

'பண்பு கொள் பெயர்' என்பது, ஒரு குணங்கூற அக் குண மடைந்த பொருள் விளங்கி நிற்றல்.

அது வருமாறு: நீலம் என்பதோர் பண்பு; அப்பண்பு சொல்ல, அப்பண்பினையடைந்த ஆடையானும் பிறவானும்[1] விளங்கும் என்பது.

'இயன்றது மொழிதல்' என்பது, இயன்றதென்பது செய்கை அச் செய்கை சொல்ல, அச்செய்கை நிகழ்ச்சியினாய வேறுபாடும் அப்பெயர்த்தாய் விளங்கும்.

அது வருமாறு: ஏறு, குத்து என, எறியவும் குத்தவு மாயின அத்தொடக்கத்தன விளங்கி நிற்கும் என்பது.

'இருபெயரொட்டும்' என்பது, இரண்டு பெயர் ஒட்டி நிற்பது. அது சொல்லப் பிறிது பொருள் விளங்கும்.

அது வருமாறு: பொற்றொடி என்பது இருபெயர்[2] நின்று ஒட்டிற்று; அது சொல்லப் பொற்றொடி தொட்டாளை விளக் கும் என்பது.

---

சு.வே: 1 பிறவாற்றானும் (கா.ந)
2 இருபெயரை (ஏடு)

'வினை முதல் உரைக்குங் கிளவி' என்பது,

வினை செய்தான் பெயர் சொல்ல, அவன் செய்பொருளை அறிய நிற்றல்.

அது, தொல்காப்பியம், கபிலம் என்பன.

ஆகுபெயர், என்ற[1] பொருண்மை என்னை எனின், ஒன்றன் பெயர் ஒன்றற்காய் நிற்றல் என்றவாறு.

**குறிப்பு:-**

**(அ)** பிறந்தவழிக் கூறல்.

''முல்லை முதலாச் சொல்லிய'' என்பது பிறந்தவழிக் கூறல்' (சொல்.வே.மய.31) என்னும் ஆகுபெயரான் அந்நிலத்தின் மக்களைநோக்கிற்று, என்பர் (தொல்.அக.30) **இளம்பூரணர்.**

**(ஆ) இருபெயரொட்டு:** சேனாவரையர், பொற்றொடி வந்தாள் என இருபெயரொட்டு அன்மொழிப் பொருள்மேல் ஆகுபெயராய் வரும் என்பர்.

**நேமிநாத உரையாசிரியர்** சென்று என்று மிகுத்துச் சொல்லியவதனால் இருபெயரொட்டாய்வரும் ஆகுபெயரும் உள. அவை பொற்றொடி, வெள்ளாடை, கனங்குழை என்பன: அன்மொழித் தொகையாய்க் காட்டப்பட்டன வாயினும், **ஆகு பெயர்**த்தன்மைக்கு ஈங்குப்பெறும் (சொல்.22) என்பர்.

**கல்லாடனார்** படுத்தலோசை பட்ட வழி அன்மொழித் தொகையாம். எடுத்தலோசை பட்ட வழி ஆகுபெயராம் என்பர்

**(இ) ஆகுபெயர்**

ஆக்க ஆகும் பெயர் 'ஆகுபெயர்' என்பதாயிற்று.

ஆகவே, இயற்பெயரும் ஆகுபெயருமென எல்லாப் பெயரும் இரு கூற்றவாம் என்பதூஉம் ஆயிற்று என்பர் மயிலைநாதர் (நன்.289).

---

சு. வே: 1 எனற் (ஏடு)

**111. அவைதாம்,**
**தத்தம் பொருண்மையிற்[1] றம்மொடு சிவணலும்**
**ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்**
**அப்பண் பினவே நுவலுங் காலை.**

*எ..ன், இதுவும் ஆகுபெயர்க்கண்ணேஆவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.*

*அவ்வாகுபெயர்கள் முதற்கண் ஆங்காலம், அம்முதற்கு வேறன்றிய அம்முதலொடு தொடர்ந்த பொருண்மையின் நிற்றலும், முதற்கே எவ்வியையபு மில்லாதனமேல் நிற்றலுமென இரண்டிலக்கணமுடைய என்றவாறு''.*

**தத்தம் பொருண்மையிற் றம்மொடு சிவணலும்[2]**

*தெங்கு, கடு என்னுந் தொடக்கத்தன. தெங்கு என்றவிடத்துத் தெங்கின் வேறன்று தெங்கின்காய்[3] கடுவும் அன்னதே.*

**ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்[4]**

*நீலம் என்றது நீலமுண்ட ஆடை எனின், அவ்விடத்தின், நீலத்திற்கு எவ்வியையபும் இன்றி நின்றது ஆடை. பிறவும் அன்ன.*

*இங்ஙனம், தத்தம் பொருட்கு, இயைந்தனவற்று மேலன வும், இயையாதவற்று மேலனவுமென இருவகையவாய் நிற்கும் அவ் ஆகுபெயர்கள் என்றவாறு.*

**பாட ஆய்வு:** இளம்பூரணர் ''அம்முதற்கு வேறன்றிய அம்முதலொடு தொடர்ந்த பொருண்மையின்'' என்று உரைத்த லால் 'தத்தம் பொருண்மையில்' என்று பாடங் கொண்டவரா வார். இப்பாடமே புலிசை, துறைசை ஏடுகளில் உள்ளது. சேனா. நச். உரைவேறு; பாடமும் வேறு.

---

பா.வே: 1 பொருள்வயின் (சேனா)
2 சிவணல் (கா.ந), சிவணின (துறைசை)
3 தெங்கு என்றவிடத்துத் தெங்கின்காய் எனக்கொள்க (கா.ந)
4 சுட்டல் (கா.ந)

## 112. வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

எ...ன், இதுவும் ஆகுபெயர்க்கண்ணே கிடந்ததோர் பகுதி உணர்த்துதல் நுதலிற்று.

''ஆகுபெயர்க்கு ஆவதோர் வேறுபாடு[1] தெரிந்துணர்க''.

ஆவதோர் வேறுபாடு[1] என்னெனின்?

**தொல்காப்பியனாற் சொல்லப்பட்டது தொல்காப்பியம்** என ஈறு திரிந்தது.

அன்றியும், 'வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்' என்றல் ''அவ்வாகுபெயரெல்லாம் வேற்றுமையொடு தொடர்ந்த மருங்கினைப் போற்றி அறிக என்றவாறு''. யாதோவெனின்? 'தெங்கினது காய் தெங்கு' என, ஆறாவது தொடர்ந்தது. 'நீலத்தையுடைய ஆடை நீலம்' என, இரண்டாவது தொடர்ந்தது. பிறவும் இவ்வாறே தொடர்ந்தவாறு போற்றியறிக என்றவாறு.

இனி அல்லதூஉம் ஆகுபெயர்கள் ''தத்தம் பொருண்மையிற் றம்மொடு சிவணின'' என்றும் ''ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டின'' என்றும் போற்றி உணர்க என்றவாறு.

**குறிப்பு:**- இளம்பூரணர் இந்நூற்பாவிற்கு மூன்று பொருள் கூறுகின்றார்.

1. ஆகுபெயர்களொடு வேறுபாடு தெரிந்துணர்க என்று கூறித் தொல்காப்பியம் என ஈறுதிரிந்ததென்பது.

2. ஆகுபெயரெல்லாம் வேற்றுமையொடு தொடர்ந்து வருதலைப் போற்றியறிக என்று கூறித் தெங்கினது காய் தெங்கு என ஆறாவது தொடர்ந்தது என்பது.

3. ஆகுபெயர்கள் தம்மொடு சிவணியும் பிறிது பொருள் சுட்டியும் வரும் என்பது.

''வேற்றுமை மருங்கின்'' என்னும் இந்நூற்பாவினை

---

சு.வே: 1 ஆகுபெயர்களொடு வேறுபாடு (ஏடு)

**இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும்** தனி நூற்பாவாகக் கொண்டனர்.

அவர்கள் எழுதும் உரைக்கு அவ்வாறு கொள்ளுதலே தகும்.

**சேனாவரையரும் தெய்வச்சிலையாரும்** 'வேற்றுமை மருங்கின்' என்னும் இந்நூற்பாவினை முன்னுள்ள நூற்பாவுடன்' இணைத்து ஒரே நூற்பாவாகக் கொண்டு வேறு உரை எழுதுகின்றனர். இவர்கள் எழுதும் உரைக்கு இவ்வாறு கொள்ளுதல் தகும்.

இளம்பூரணர் கூறும் மூன்று உரையுள் இரண்டாவது உரையினை மட்டும் **நச்சினார்க்கினியர்** கொண்டுள்ளனர். ஈற்றில் உள்ள உரையை மட்டும் **சேனாவரையர்** இந்நூற்பாவிற்குப் பொருளாக எழுதி, "அஃதேல், இதனைப் பிரித்து ஒரு சூத்திரமாக உரைத்தாரால் எனின், அங்ஙனம் பிரிப்பின் தம்மொடு சிவணலும் பிறிது பொருள் சுட்டலுமாகிய இவற்றது வேறுபாட்டின்கண் என்பது இனிது பெறப்படாமையானும் எழுத்தோத்தினுள்

"புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
... ... ... ... ... ... ...
அம்முறை யிரண்டும் உரியவை உளவே
**வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்"** (157)

என்னும் சூத்திரத்து இந்நிகர்ப் பாதுகாவலைப் பிரியாது ஒன்றாகவே உரைத்தலானும், அவர்க்கது கருத்தன்றென்க" என்பர்.

**113. அளவும் குறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே.**

எ...ன், அளவும், நிறையும் ஆகுபெயராவன உள என்பது உணர்த்துதல் நுதலிற்று.

"அளவும், நிறையும் ஆகுபெயராயின அளவு மேற்கூறிய போல என்றவாறு".

உ...ம்:- நாழி, உழக்கு, என்ப அளக்கப்படும் பொருளையும்; தொடி, துலாம், என்ப நிறுக்கப்படும் பொருளையும் என்பது. பிறவும் அன்ன.

**குறிப்பு**:- 'ஆகுபெயராயின அளவு' ஒருசொல்.

**114. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்[1]**
**கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.**

எ...ன், இஃது ஆகுபெயர்க்குப் புறனடை கூறுதல் நுதலிற்று.

"மேற்சொல்லப்பட்டன வன்றி வரும் ஆகுபெயரும் உள; அவற்றையுஞ் சொல்லப்பட்ட இலக்கணத்தான் உணர்ந்து கொள்க என்றவாறு".

அவை வருமாறு: யாழ் கேட்டான், குழல் கேட்டான் என்பன[2] அவற்றினாகிய ஓசை கேட்டாரை.

பசுப் போல்வானைப்[3] பசு என்ப, பாவை போல்வாளைப் பாவை என்ப.

இனி, எண்ணிற்கேதுவான இடங்களையும் ஒன்று பத்து நூறு என்ப.

இனி 'எழுத்து' (தொல். நூன்மரபு 1) என்பதூஉம் அது பிறவும் அன்ன.

இனிக் 'கிளந்தவல்ல பிற' என்றது, வேறு என்றவதனான், ஆகுபெயர்கள் ஈறுதிரியும் என்பது காட்டுக.

**குறிப்பு**:- இடையியல் ஈற்றில் உள்ள நூற்பாவும், இவ் வேற்றுமை மயங்கியல் ஈற்றிலுள்ள நூற்பாவும் ஒரே வடிவின. **இறையனார் களவியல்** 59ஆம் நூற்பாவின் பின்இரண்டடிகளும் ஒத்துள்ளன. துறைசை ஏட்டில் ஈற்றில் 'குமரகுருபரன் துணை என்று எழுதப்பட்டுள்ளது.

**வேற்றுமை மயங்கியல் முற்றும்**

---

சு.வே: 1 வேறு பிறிதொன்றினும்(துறைசை)
பா.வே: 2 என்ப (கா.ந)
3 போல்வாளை (துறைசை)

## 4. விளி மரபு

**115. விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு**
**தெளியத் தோன்றும் இயற்கைய வென்ப.**

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், விளிவேற்றுமை யது இலக்கணம் உணர்த்தினமையின் **விளிமரபு** என்னும் பெயர்த்து.

இனி, இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், விளி வேற்றுமையதிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

''விளியென்பன தம்மை ஏற்கும் பொருளொடு[1] யாப்புறத் தோன்றும் தன்மைய என்றவாறு''.

'தன்மைய' (இயற்கைய) என்றான். விளி, பெயரொடு கொள்ளும் என்பதூஉம், கொள்ளுங்கால் ஏற்கும் என்பதூஉம் சொல்லப்பட்டதாம்.

'தெளியத் தோன்றும், என்றது[2] விளியை வேற்றுமையன் றென்பாரும் உளர்; அது மறுத்து, வேற்றுமையே என்றற் கென்பது.[3]

'எனப்படுப, என்று பன்மை கூறினார்; ஈறுதிரிதல், ஈற்றயல் நீடல், பிறிது வந்தடைதல், இயல்பாதல் என நான்கு பகுதிய வாகலான் என்பது.

**குறிப்பு:-** **நேமிநாதம்** இளம்பூரணர் கூறியவாறே

''ஈறு திரிதலும் ஈற்றயல் நீடலும்
வேறு வருதலும் மெய்யியல்பும்'' (சொல்.23)

என்று கூறும். இவற்றையே உருபென்பர் **நன்னூலார் (302).** அன்றியும் விளியுருபு தொல்காப்பிய விளிமரபினுட் காண்க என்பர் (**இல. கொத்.** 24 உரை).

---

சு.வே: 1 விளியென்பதேற்கும் பொருளொடு (துறைசை)
2 என்றதால் (புலிசை, துறைசை)
3 எனற்கென்பது (கா.ந)

**116. அவ்வே**
**இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப.**

எ...ன், மேற்சொல்லப்பட்டவற்றை இனிச் சொல்லுப என்றார். அது வழக்கு. (மெய்)

"அவை இவையென அறிதற்கு வழக்குப் பெறச் சொல்லப் படும் என்றவாறு".

**117. அவைதாம்**
**இஉ ஐஓ என்னும் இறுதி**
**அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்**
**மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.**

எ...ன், விளி ஏற்பனதாம்[1] இவை என்பது உணர்த்துதல், நுதலிற்று.

"உயிரெழுத்தினுள் உயர்திணைப் பெயர்க்கு விளி ஏற்கும் எழுத்தாவன (இ, உ, ஐ, ஓ என்னும் இறுதியான) இவை என்றவாறு.

'உயர்திணை மருங்கின் மெய்ப்பொருள் சுட்டிய, என மற்றைத்[2] திணைக்கண்ணும் உள சிறுவரவின எனக் கொள்க,

உ...ம்:- அவை குறையறப் பூத்த கொடிமுல்லாய் என்புழி, முல்லை முல்லாய் எனவும், செங்கால் நாரை செங்கால் நாராய் எனவும்[3] வரும்.

பிறவும் அன்ன.

**118. அவற்றுள்**
**இஈ யாகும் ஐஆய் ஆகும்.**

எ...ன், இகர, ஐகாரங்கள் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

பா.வே: 1 விளி என்பனதாம் (கா.ந)
2 மற்றத் (புலிசை)
3 செங்கால் நாராய் என்புழிச், செங்கால் நாரை செங்கால் நாராய் எனவும் (கா.ந)

"நம்பி, நம்பீ என இ, ஈயாய் விளியேற்றது. நங்கை, நங்காய் என ஐ, ஆயாய் விளியேற்றது"

இங்ஙனம் ஆதல் ஈறுதிரிதல்.

**குறிப்பு:-** **நேமிநாதம்** "இகரம் ஈகாரமாம் ஐ ஆயாம்" (சொல். 24) என்று கூறும்.

**119. ஓவும் உவ்வும் ஏவொடு சிவணும்.**

எ...ன், ஓகார ஈறும் உகர ஈறும் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(உரை இல்லை)

உ...ம்:- கோ, கோவே என, ஓகாரவீறு ஏகாரமொடு சிவணிற்று. வேந்து, வேந்தேயென, உகரம் ஏயொடு சிவணிற்று.

இம் முடிபு பிறிதுவந்தடைதலாம்.

**குறிப்பு:-** **நேமிநாதம்** "ஏயாம் உகர ஓகார உயிர்கள்" (சொல். 24) என்று கூறும்.

**120. உகரந் தானே குற்றிய லுகரம்.**

எ...ன், ஐயம் அறுத்தல் நுதலிற்று. மேலதற்கோர் புறனடை எனினும் அமையும்.

கூறப்பட்ட நான்கினுள், உகரம் குற்றியலுகரமென்பது அறியாது நின்ற வழி, முற்றுகர மன்று, குற்றுகர மென்பது கருத்து.

**121. ஏனை உயிரே உயர்திணை மருங்கின்**
**தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்.**

எ...ன், எய்தாதது எய்துவித்தது[1], ஐயம் அறுத்ததெனவும் அமையும்.[2]

---

பா.வே: 1 எய்துவித்தல் நுதலிற்று (கா.ந)
2 ஐயமறுத்தது எனினும் அமையும் (கா.ந)

''சொல்லப்பட்ட நான்கு உயிரெழுத்து மல்லான் மற்றை யன உயர்திணைக்கண் விளி ஏலா என்றவாறு''.

மற்றுக் கொள்வன இவை எனவே, ஒழிந்தன கொள்ளா என்பது, யானே உணரேனோ? இது சொல்ல வேண்டிய தென்னையெனின், ஏனை உயிர் உயர்திணைக்கண் விளி கொள்ளா வென' இன்னும் மேற் சொல்லப்பட்டன மேல் ஓதிய வாறன்றிப் பிறவாறும்[1] விளியேற்கும் என்றற்குச் சொல்லப் பட்டது என்றவாறு,

உ...ம்:- கணி, கணியே என, இகரவீறு ஈகாரப் பேறன்றி[2] (விளி.4) ஏகாரமும் பெற்று விளி ஏற்கும் என்பது.

**122. அளபெடை மிகூஉம் இகர விறுபெயர்**
**இயற்கைய வாகுஞ் செயற்கைய[3] வென்ப.**

எ...ன், எய்தியது விலக்கிற்று.[4]

''அளபெடை இகரம் ஈறாயின், இயல்பாயே விளி ஏற்கும் என்றவாறு.''

உ...ம்:- தொழீஇ (கலி.102) (சிறுபஞ்.38) எனவரும்.

பெயர்நிலையும் விளிநிலையும் அதுவே நிற்குமாறு.

இனிச் 'செயற்கைய' என்றதனால், இரண்டு மூன்று மாத்திரைபெற எழுதுவாரும், ஐந்து மாத்திரை பெற எழுது வாரும் என இருதிறத்தார் ஆசிரியர் என உணர்க.

**குறிப்பு**:-**நேமிநாதம்** இந்நூற்பா 10-ஆம் நூற்பா இரண்ட னையும் சேர்த்து,

''அண்மை யிடத்தும் அளபெடைப் பேர்க்கண்ணும்
உண்மை யியல்பா யுறும்' (சொல்.24) என்று கூறும்.

---

பா.வே; 1 பிறவாற்றானும் (கா.ந)
2 ஈகாரப் பேறின்றி (கா.ந)
3 செய்கைய (சேனா, ஏடு)
4 விலக்கல் நுதலிற்று (கா.ந)

"இவை நான்கும் அணியாரைக் கூவுமிடத்து இயல்பாய் விளி ஏற்கும்; உயிரீற்று அளபெடைப் பெயரும் அவ்வளபெடுத்த படியே விளி ஏற்கும்" என்பது அதன் உரை.

**123. முறைப் பெயர் மருங்கின் ஐயென் னிறுதி**
**ஆவொடு வருதற் குரியவும் உளவே.**

எ...ன், இஃது இறந்தது காத்தது.

"மேல், 'ஐஆய் ஆகும்' (விளி.4) என்றார்;

இனி, முறைப்பெயர்க்கண்ணாயின் ஐயீறு, ஆவொடு வருவன வும் உள என்றவாறு.

உ...ம்:- அன்னை, அன்னாவென்றும், அத்தை, அத்தா வென்றும் ஆக என்பது.

**124. அண்மைச் சொல்லே இயற்கை யாகும்.**

எ...ன் இதுவும் இறந்தது காத்தது.

"அணியாரைக் கூவுமிடத்து, அவை இயல்பேயாய் விளி யேற்கும் என்றவாறு.

உ...ம்:- நம்பி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி என வரும். (ஓ காரத்திற்குக் கோவாழி. சேனா, நச், தெய், கல்.)

**125. ணரலள வென்னும் அந்நான் கென்ப**
**புள்ளி யிறுதி விளிகொள் பெயரே.**

எ...ன், உயர்திணைக்கட் புள்ளியீறு விளியேற்பன இவை என உணர்த்துதல் நுதலிற்று.

(உரை இல்லை)

முன்னர்க் காட்டுதும்.

**126. ஏனைப் புள்ளி ஈறுவிளி கொள்ளா.**

எ...ன், எய்தாதது எய்துவித்தது. ஐயம் அறுத்ததெனவும் அமையும்.

"மேற் சொல்லப்பட்ட நான்கல்லாப் புள்ளியீறு, விளியேலா உயர்திணைக்கண் என்றவாறு".

மற்று, ஆவன கூற அமையாதோவெனின், 'ஏனைப் புள்ளி ஈறுவிளிகொள்ளா' என, இன்னும் மேற்கூறிய புள்ளியீறு அவ் வாறன்றிப் பிறவாறு விளியேற்றலுடைய என்றற்குக் கூறினார் என்பது.

உ...ம்:- பெண்டிர்[1] (விளி.21) பெண்டிரே எனவும், தம்முன் (விளி.14) தம்முனே எனவும் வரும்.

பிறவும் அன்ன.

ஏனைப் புள்ளியும் ஆவதுண்டு.

உ..ம்:- "விளங்குமணிப் பசும்பூண்[2] ஆய்" (புறநா.130) என்பது.

பிறவும் இவ்வாறு வருவன கொள்க.

**குறிப்பு**:-இந்நூற்பா விளிமரபு 'ஏனை உயிரே' (7) என்னும் நூற்பாப் போன்றது. இங்கு 'மற்று' என்று தொடங்கிக் கூறும் உரையும், அங்கு 'மற்று' என்று தொடங்கிக் கூறும் உரை போன்றதே.

**127. அவற்றுள்**
**அன்னென் னிறுதி ஆவா கும்மே.**

எ...ன், நிறுத்த முறையானே னகரவீறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"அன் என்னும் பெயர் இறுதி, ஆவாய் விளி ஏற்கும் என்றவாறு".

உ...ம்:-சோழன், சோழா; சேர்ப்பன், சேர்ப்பா என வரும்.

---

பா.வே: 1 பெண்டீர், பெண்டீரே (ஏடு)
2 கொடும் பூண் (கா. ந)

**குறிப்பு:**-நேமிநாதம் "அன்னிறுதி ஆவாகும்" (சொல்.25) என்னும்.

**128. அண்மைச் சொல்லிற் ககரமு மாகும்.**[1]

எ...ன், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

"அணியாரைக் கூவுமிடத்து அன் ஈறு திரிந்து அகரமாயும்[2] விளி ஏற்கும் என்றவாறு".

உ...ம்:- ஊரன், ஊர; சேர்ப்பன், சேர்ப்ப என வரும்.

**குறிப்பு:**- நூற்பாவிற்கு 'அகரமாகும்' என்ற பாடமும் உரையுள் 'அகரமாய்' என்ற பாடமும் ஏட்டில் உள்ளன. சேனாவரையர் முதலியோர் பாடமும் இதுவே. நேமிநாதமும் "அண்மைக் ககரமாம்" (சொல்.25) என்றே ஓதும்.

**நன்னூலார்** 'ஈறழிவு'(306) என்பர்.
**மயிலைநாதர்** "அண்மைக்கண் ஈறழிந்தன" என்பர்.

**129. ஆனென் இறுதி இயற்கை யாகும்.**

எ...ன், இதுவும்[3] னகரவீறு விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"ஆன் என் னகரவீறு இயல்பாய் விளி ஏற்கும் என்றவாறு"

உ.. ம்:- சேரமான், மலையமான் என இருநிலைமைக் கண்ணும் அதுவே நிற்குமாறு.

**130. தொழிலிற் கூறும் ஆனென் னிறுதி**
**ஆயா கும்மே விளிவயி னான.**

எ...ன், எய்தியது ஒரு மருங்கு மறுத்தது.[4]

---

சு.வே: 1 அகரமாகும் (புலிசை)
2 அகர மாய்(புலிசை)
3 இது (புலிசை)
பா.வே: 4 மறுத்தல் நுதலிற்று. (கா.ந)

"ஆன் என்னிறுதி தொழிற் பெயராயின் ஆயாய் விளி ஏற்கும் என்றவாறு"

உ...ம்:- உண்டான், உண்டாய் என வரும்.

இனி, 'விளிவயினான'என்றதனான் வாயிலான் வாயிலாய்: பூயிலான், பூயிலாய் எனப் பெயரினாகிய[1] பெயருமாய்[2] விளி ஏற்கும் என்பாரும் உளர்.

**131. பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.**

எ...ன், இதுவும் எய்தியது ஒரு மருங்கு மறுத்தது.[3]

"அவ் ஆன் இறுதி பண்புகொள் பெயராயின், ஆயாய் விளி ஏற்கும் என்றவாறு"

உ...ம்:- கரியான், கரியாய்; செய்யான், செய்யாய் என வரும்.

பிறவும் வரும்.

**குறிப்பு:- நேமிநாதம்** (சொல். 25) தொல். விளிமரபு 16, 17ஆம் நூற்பாக் கருத்துக்களை ஒன்றாக்கி,

"ஆன்ஈற்றுப் பண்புதொழின் மான்விழி ஆயாய் வரும்" என்று கூறும்.

**132. அளபெடைப் பெயரே அளபெடை யியல.**

எ...ன், னகர யீற்று அளபெடைப் பெயர்க்குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

---

பா.வே: 1 பெயரியனாகிய (துறைசை)
2 பெயரும் ஆயாய் (கா.ந)

சு.வே: 3 மறுத்தல் நுதலிற்று (கா.ந)

"னகர விறுதி அளபெடைப் பெயரும் மேல் இகரயீற்று அளபெடை விளி ஏற்றவாறு[1] (விளி.8) ஏற்க என்றவாறு"

உ...ம்:- அழாஅன், புழாஅன் என வரும்.

**குறிப்பு**:- புலிசை, துறைசை ஏட்டில் நுதலிய தில்லை.

**நேமிநாதம்**, தொல்-விளிமரபு 15, 18 நூற்பாக்களுக்குரிய கருத்துக்களை ஒன்று சேர்த்து "முன் இயற்பாம் ஆறும் அள பெடையும்" (சொல்.25) என்று கூறும்.

**133. முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே.**

எ...ன், இறந்தது காத்தல் நுதலிற்று.

"னகார வீற்று முறைப்பெயராமே எனின், ஏகாரம். பெற்று விளி ஏற்க என்றவாறு".

உ...ம்:- மகன், மகனே; மருமகன், மருமகனே என வரும்

மற்று, இவை இருதிணைக்கும் உரியவாம் பிறவெனின் உரியவாயினும், முன்னர் "விளம்பிய நெறியின[2] விளிக்குங் காலை" (விளி.33) என்னும் மாட்டேறு செல்லாமையான், னகர வீற்று ஒற்றுமை பற்றி வைத்துணர்த்தினார் என்பது.

**குறிப்பு**:- ஏட்டில் இந்நூற்பாவிற்கு நுதலியதில்லை. (புலிசை, துறைசை) ஆனால், கா.ந பதிப்பில் 'இறந்தது காத் தல் நுதலிற்று' என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால், நச்சினார்க் கினியர் இந்நூற்பாவிற்கு 'எய்தாதது எய்துவித்தல்' என் பதை நுதலியதாகக் கூறுவர்.

---

சு.வே: 1 அளபெடை ஏற்றவாறு (கழகம்)

பா.வே: 2 நெறிய (கா.ந)

**134 தானென் பெயருஞ் சுட்டுமுதற் பெயரும்**
**யானென் பெயரும் வினாவின் பெயரும்**
**அன்றி யனைத்தும் விளிகோ ளிலவே.**

எ...ன், னகர ஈற்றுள் விளி ஏலாதன இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

"அவைதாம் தான், அவன், இவன், உவன், யான், யாவன் என்பன இவ் ஆறுபெயரும் மேல் எவ்விளியும் ஏலா என்றவாறு".

**குறிப்பு:-** **நேமிநாதம்** (சொல்.26) விளியேலாத பெயர்களைப் பற்றி

"...விளியேலா எவ்வீற்றுப் பேரும்
புயல்போலுங் கூந்தலாய் போற்று." என்று கூறும் அதன் உரை "தான் அவன் இவன் உவன் யான் எவன் யாவன் எனவும்; அவர் இவர் உவர் எவர் யாவர் எனவும்; அவள் இவள் உவள் எவள் யாவள் எனவும்; நீ நீர் எனவும் இவை விளியேலாத பெயர்கள்" என்று கூறும்.

**135. ஆரும் அறிவும் ஈரொடு சிவணும்.**

எ...ன், நிறுத்த முறையானே, ரகர[1] ஈறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"ஆர் என்னும் ஈறும், அர் என்னும் ஈறும் திரிந்து, ஈர் ஆகும் என்றவாறு".

உ...ம்:- பார்ப்பார், பார்ப்பீர்;
கூத்தர், கூத்தீர் எனவரும்.

**136. தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்**
**வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே.**

எ...ன், எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

---

சு.வே: 1 ரகார (துறைசை)

"ரகார வீறு தொழிற்பெயராமேயெனின், மேல் எய்திய ஈறேயன்றி, அதனொடு ஏகாரம் பற்றி விளி ஏற்க[1] என்றவாறு'

உ...ம்-: உண்டார், ஊண்டீரே; சென்றார்[2], சென்றீரே என வரும்.

'வழுக்கின்று' என்பதனால், நம்பியார், நம்பியீரே[3] கணியார், கணியீரே என்பன போல்வன கொள்க.

**குறிப்பு:-** **சேனாவரையர்** அர் ஈற்றுத் தொழிற்பெயர் வந்தவழிக்கண்டு கொள்க என்பர்.

**நச்சினார்க்கினியரும்** அவ்வாறே கூறுவர்.

ஆனால், **தெய்வச்சிலையார்** வந்தார், வந்தவர் என்பன வந்தீர் என வருதலேயன்றி வந்தாரே, வந்தவரே என வரும் என்பர்.

**137. பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.**

எ...ன், இதுவும், எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

"பண்பு கொளள வந்த அர்ஆர் ஈறொடு[4] ஏகாரம் பெற்று விளியேற்கும் என்றவாறு".

உ...ம்:- செய்யர், செய்யீரே; செய்யார் செய்யீரே என வரும்'

**138. அளபெடைப் பெயரே அளபெடை யியல.**

எ...ன், ரகர வீற்று அளபெடைப் பெயருக்குரிய[5] இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

---

பா.வே: 1 ஏகாரம் பற்றியேற்க (கா.ந)
2 'சான்றார்-சான்றீரே' பிழையான பாடம் (துறைசை, கா.ந)
3 நம்பீரே (ஏடு)
4 பண்புகொள வந்த ஆர் ஈற்றொடு (கா.ந)
5 அளபெடைக்குரிய (கா.ந)

"ரகர வீற்று அளபெடைப் பெயர், இகரவீற்று அள பெடைப் பெயர்போல (விளி.8), விளியேற்கும் இயல்பாய் என்றவாறு".

உ...ம்:- மகாஅர், சிறாஅர் என வரும்.

**குறிப்பு:-** சேனாவரையர் கூறும் வேறு உரையை ஆண்டுக் காண்க.

**நேமிநாத உரையாசிரியர்** "மகாஅர், சிறாஅர் என்பன அள பெடுத்தபடியே இயல்பாய் விளி ஏற்றன" என்பர் (சொல்.26).

**139. சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன.**

எ...ன், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

"மேல் னகர வீற்றுச் சுட்டுப்பெயரை[1] விளி ஏலாவென் றான் (விளி.20). அவையே போல ரகர வீற்றுச் சுட்டுப் பெய ரும் விளி ஏலாவென மாட்டெறிந்தவாறு".

அவையாவன:- அவர், இவர், உவர் என்பன.

**140. நும்மின் றிரிபெயர் வினாவின் பெயரென்**
**றம்முறை யிரண்டும் அவற்றியல் பியலும்.**

எ...ன், இதுவும் மேல் எய்தியது விலக்கல் நுதலிற்று.

"நும்மின் திரிபெயர் - நீஇர் என்பது. வினாவின் திரிபெயர் யாவர் என்பது (ஏட்டிற் கண்ட பாடம் வினாவின் திரிபெயர் ஏவர் என்பது.) இவை இரண்டு பெயரும் விளி ஏலா என்றவாறு".

மற்று, 'இர், ஈறு, விளியேற்கும் என்றதின்மையின் நும் மின் திரிபெயர் விளி ஏலாது என்று விலக்கிய தென்னை எனின், அற்றன்று. பெண்டிர், பெண்டீரே என 'இர், ஈறும் விளியேற்கும் என்று மேல் இலேசினான் (விளி.12) எய்துவித்துப் போந்தா ராகலின்[2] விலக்க வேண்டும் என்பது.

சு.வே: 1 சுட்டுப்பெயர் (கா.ந)
2 போந்தமாகாலின் (கா.ந)

**குறிப்பு:-** மேல் நூற்பாவில் வினாவின் பெயர் என்பதற்குச் சேனாவரையர் முதலியோர் வினாவின் பெயராகிய 'யாவரும்' என்றே பொருள் எழுதியுள்ளனர். 'தானென் பெயரும்' (விளி.20) என்னும் நூற்பாப் போல ஒரே நூற்பாவாக ஓதாமல், 'சுட்டுமுதற் பெயரே' (விளி.25) என்பதைத் தனி நூற்பாவாகவும் 'நும்மின் திரி பெயர்' (விளி.26) என்பதைத் தனி நூற்பாவாகவும் ஓதிய காரணத்தால் நும்மின் திரிபெயரைப் போல வினாவின் திரிபெயரும் உண்டு என்று கருதினார் போலும். ஏட்டில், வினாவின் திரிபெயராகிய 'ஏவர்' என்று எழுதப்பட்டுள்ளது. தொல்காப்பியர் தொகைமரபில் பலர்றிசொன்முன் யாவர் என்னும் பெயரிடை வகரம் கெடுதல் (30) என யாவருக்குத் திரிபோதுவர். அத்திரிசொல் யார் என்பது.

**141. எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே**
**நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும்.**

எ...ன், மேல், நிறுத்த முறையானே ஒழிந்த இரண்டு புள்ளியீறும் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"ஒழிந்து நின்ற புள்ளிகளை (ல்,ள்) ஈறாகவுடைய தம் இறுதியெழுத்தின்அயலெழுத்து நீண்டு விளியேற்க என்றவாறு".

உ...ம்:- குரிசில், குரிசீல்; தோன்றல், தோன்றால்; மக்கள், மக்காள் என வரும்.

**142. அயல்நெடி தாயின் இயற்கை யாகும்.**

எ...ன், எய்தாதது எய்துவித்தது.

"அவ்விரண்டீறும், ஈற்றெழுத்தின் அயலெழுத்து நீண்டு நிற்பின், இயற்கையாய் விளியேற்கும் என்றவாறு".

உ...ம்:- பெண்பால், ஆண்பால்; எம்மாள்; கோமாள்; கடியாள்; பெரியாள் என வரும்.

**143. வினையினும் பண்பினும்**
**நினையத் தோன்றும் ஆளென் இறுதி**
**ஆயா கும்மே விளிவயி னான.**

எ...ன், எய்தியது ஒருமருங்கு மறுத்தது.,

"ஆள் என்னிறுதி, வினைப்பெயரும் பண்புப்பெயரும் ஆயின், ஆயாய் விளி ஏற்கும் என்றவாறு".

உ...ம்:- உண்டாள், உண்டாய் எனவும், கரியாள், கரியாய் எனவும் வரும்.

**144. முறைப்பெயர்க் கிளவி முறைப்பெய ரியல.**

எ...ன், இதுவும் மேல் எய்தியது ஒருமருங்கு மறுத்தது.

"மேல் னகர வீற்று முறைப்பெயர் ஏகாரம் பெற்று விளி ஏற்றது (விளி. 19) இதுவும் ஏகாரம் பெற்று விளி ஏற்க என்றவாறு".

உ...ம்:- மகள், மகளே; மருமகள், மருமகளே என வரும்.

மற்று, இவை இருதிணைக்கும் உரிய பெயர் பிறவெனின், முன்னர் (விளி. 19) விடுத்தாங்கே விடுக்க.

**145. சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.**

எ...ன், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

"மேல் னகரவீற்றுச் சுட்டுப்பெயரும், வினாவின் பெயரும் விளி ஏலா என்றார் (விளி.20); அவை போல இவையும் விளி ஏலா என்றவாறு".

அவையாவன:- அவள், இவள், உவள், யாவள் என்பன.

**146. அளபெடைப் பெயரே அளபெடை யியல.**

எ...ன்[1], லகர ளகர வீற்று அளபெடைப் பெயர்க்கு உரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"மாட்டேற்று வகையான், உயர்திணை னகர வீற்று அளபெடைப் பெயர் விளியேற்ற அற்றே[2] இவையும் விளிபெறுதல் என்பது உணர்த்தியவாறு".

---

சு. வே: 1 ஏட்டில் நுதலியதில்லை
2 அளபெடை விளியேற்றவாறே (கா.ந)

உ...ம்:-

"மாஅல் நின்னிறம்போல் மழையிருளிற் பட்டதே"

"கோஒள் குளக்கோடு கொண்டு"

மாஅல், கோஒள் என விளிநிலைக்கண்ணும் நின்றாங்கே நிற்கும் என்பது (குளக்கோடு-பூராடம்)

**147. கிளந்த விறுதி யஃறிணை விரவுப்பெயர்**
**விளம்பிய நெறிய[1] விளிக்குங் காலை.**

எ...ன், அஃறிணை விரவுப்பெயர்க்குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"கிளந்த இறுதியாவன உயிரீறு நான்கும் புள்ளியீறு நான்குமாயவற்றை இறுதியாகவுடைய அஃறிணைக்கண் வரும் விரவுப்பெயர் மேற்கூறிய நெறியான் விளி ஏற்கும் என்றவாறு."

உ...ம்:- சாத்தி, சாத்தீ; பூண்டு, பூண்டே; தந்தை, தந்தாய் எனவும், சாத்தன், சாத்தா; கூந்தல், கூந்தால்; மகள், மகளே எனவும் வரும்.

ஓகார ஈறும் ரகார ஈறுமாய் வருவன விரவுப் பெயர் உளவேற்கண்டு கொள்க. பிறவும் அன்ன.

**குறிப்புரை**:- இந்நூற்பாவிற்கு ஏட்டில் நுதலியதில்லை.

**சேனாவரையர்** உயர்திணைப் பெயரும், உயர்திணை விரவுப் பெயரும் விளிகொள்ளுமாறுணர்த்தி, இனி அஃறிணை விரவுப் பெயர் விளிகொள்ளுமாறு உணர்த்துகின்றார் என்பர்.

**நச்சினார்க்கினியர்** விரவுப்பெயர் விளியேற்குமாறு கூறுகின்றது என நுதலியதுரைத்து, அஃறிணை விரவுப்பெயர் என்பதற்கு 'உயர்திணையொடு அஃறிணை விரவும் விரவுப் பெயர் என்பர்.

---

சு.வே: 1 நெறியின. (புலிசை)

**148. புள்ளியும் உயிரும் இறுதி யாகிய**
**அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்**
**விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்**
**தெளிநிலை யுடைய ஏகாரம் வரலே.**

எ...ன்,[1] புள்ளியீறும் உயிரீறு மாகிய அஃறிணைப் பெயர்க்கு உரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"புள்ளி ஈறும் உயிர் ஈறும் ஆகிய அஃறிணைப் பெயரெல்லாம் விளிகொள்ளுங் காலந் தோன்றின் ஏகாரம் பெறுதலைத் தெற்றென வுடைய என்றவாறு".

உ...ம்:- மரம், மரமே; அணில், அணிலே; நரி, நரியே; புலி, புலியே என வரும்.

'தெளிநிலையுடைய' என விதந்து ஓதினமையான், ஏகாரம் ஒழியச் சிறுபான்மை இயல்பாய் (பிறவாய்) விளியேற்பனவும் உள[2].

உ...ம்:- "வருந்தினை வாழியென்[3] நெஞ்சம்" எனவும் 'கருங்கால் வெண்குருகு" எனவும், "நெடுவெண்மதி" எனவும்;

"காட்டுச்சாரோடுங் குறுமுயால்" எனவும் "ஒண்டூவி நாராய்" எனவும் வரும்.

**149. உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்**
**அளவிறந் தனவே[4] விளிக்குங் காலைச்**
**சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான.**

எ...ன், (நுதலியதில்லை).

"உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் விளி ஏற்பனவாகச் சொல்லப்பட்டன எல்லாப் பெயரும் விளிக்கு

---

பா.வே: 1 ஏட்டில் நுதலியதில்லை.
2 சிறுபான்மை பிறவாற்றான் விளியேற்பனவுமுள (சேனா)
3 வாழிய (ஏடு)
4 அளபிறந்தனவே (கா. ந)

மிடத்துத் தத்தம் மாத்திரையின் இறந்து இசைத்தனவாம். சேய்மைக்கண் ஒலிக்கும் வழக்கத்தின்கண் என்றவாறு''.

உ...ம்:- நம்பீ, சாத்தா என வரும்.

''அளபெடை மிகூஉம்'' (விளி.8) என்றமையின், அளபெடைப் பெயர் ஒழித்துக்கொள்க.

**குறிப்பு**:- புலிசை, துறைசை ஏடுகளில் இந்நூற்பா,
'அளவிறந்தனவே' என்ற பாடம்.
'அளபிறந்தனவே' கா.ந.

**150. அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே.**

எ...ன், (நுதலியதில்லை).

''அம்ம என்னும் அசைச் சொல்லினது நீட்டம் விளி கொள்ளும் பெயரொடு தோன்றாது இடைச்சொல்லொடு தோன்றிற்றாயினும் விளியாகக் கொள்வர் தெளிவோர் என்றவாறு.

உ...ம்:- அம்மா சாத்தா என்பது.

(சாத்தா என்பதே)[1] எதிர்முகமாக்குமாயினும், அம்மா என்பதும் அவ் எதிர்முகமே குறித்து நிற்றலின் விளியாகக் கொள்ளப்படும் என்பார் 'விளியொடு கொள்ப' என்றார்.

**குறிப்பு**:- தொல்.சொல்.இடைச்சொல்லியல் 28 ஆம் நூற்பாக் குறிப்பினை நோக்குக

**151. தநநு எயென அவைமுத லாகித்
தன்மை குறித்த னளரவென் இறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொளலே.**

---

1 சாத்தா என்பதே என்னும் தொடர் (புலிசை, துறைசை) ஏட்டில் இல்லை.

எ.. ன், (நுதலியதில்லை).

"த,ந,நு என்னும் உயிர்மெய்யையும் எ என்னும் உயிரையும் முதலாகவுடையவாய், ஒருவனது கிளைமைப் பொருண்மையைக் குறித்து நின்ற ன,ள,ர என்னும் மூன்று புள்ளியையும் இறுதியாகவுடைய சொல்லும், அவைபோல்வன பிறவும் ஆகிய பெயர்ச்சொல்லும் வருமாயின் விளியொடு பொருந்துதல் இல என்றவாறு".

உ...ம்:- தமன், தமள், தமர், நமன், நமள், நமர், நுமன் நுமள், நுமர், எமன், எமள், எமர், தம்மான், தம்மாள், தம்மார், நம்மான், நம்மாள், நம்மார்; நும்மான். நும்மாள், நும்மார், எம்மான், எம்மாள் எம்மார் என வரும்.

'அன்ன பிறவும்' என்றதனால் மற்றையான், மற்றையாள் மறறையார் எனவும் வருவன கொள்க.

**விளிமரபு முற்றும்.**

**குறிப்பு**:- 'தன்மை குறித்த' என்பதற்குச் **சேனாவரையம்** அச்சுப்படிகளில் ஒருவனது கிழமைப் பொருண்மையைக் குறித்து நின்ற' என்று பொருள் எழுதப்பட்டுள்ளது. நச்சினார்க்கினியமும் அவ்வாறே கூறுகிறது. ஆனால், என்னிடம் உள்ள சேனாவரையம் ஓலைச்சுவடியில் 'கிளைமைப் பொருண்மை' என்றே உள்ளது. எச்சவியலில்,

"தநநு எஎனும் அவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும்" (37) என்ற

நூற்பாவை நோக்கினால் 'கிளைமைப் பொருண்மை' என்று உரை கூறுதலே தக்கதாம்.

துறைசை ஏட்டில் விளிமரபு முடிவில், 'குமரகுருபரன் துணை' என்று எழுதப்பட்டுள்ளது.

## 5. பெயரியல்

**152. எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே**

என்பது சூத்திரம்.

எ...ன், இவ் வோத்து என்ன பெயர்த்தோவெனின் பெயர்ச்சொல் உணர்த்துகின்றாராகலான், இது[1] பெயரியல் என்னும் பெயர்த்தாயிற்று.

''பெயர்ச் சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லுமாகிய எல்லாச் சொல்லும்[2] பொருள் குறித் தனவே; பொருள் குறியாது நில்லா என்றவாறு''[3].

இந்நூற்பா உரையில் ஒத்து நுதலியது மட்டும் உள்ளது நூற்பா நுதலியது பெயரியலில் பெரும்பாலும் இல்லை. பெயரியல் நூற்பா 30, 40 இவற்றிற்கு மட்டும் நூற்பா நுதலியது உள்ளன. நூற்பா நுதலியதை முன்னே கூறி, உரை எழுதுவது **இளம்பூரணர்** வழக்கமாகும்.

**சேனாவரையர்** அவ்வாறு எழுதுவதில்லை. **ஏனைய உரையாசிரியரெல்லோரும்** நூற்பா நுதலியதை முன்னர் எழுதிப் பின்னர் உரை எழுதுவர்.

இளம்பூரணரின் வழக்கத்திற்கு மாறாகப் பெயரியல் உரை அமைந்துள்ளது. பெயரியல் நூற்பா, 30, 40 என்னும் இரண்டனை நீக்கி எல்லா நூற்பாக்களிலும் நூற்பா நுதலியதில்லை. பெரும்பாலும் சில சிறப்புரைகள் நீங்கலாக இளம்பூரணர் உரையும் சேனாவரையர் உரையும் ஒத்துள்ளன. **சேனாவரையர் உரையாகவும் உள்ளது.**

இவற்றைக் கருதினால், பெயரியற்கு இளம்பூரணர் உரை சிதைந்து விட்டது; அதற்குப் பதிலாகச் சேனாவரையர்

---

சு.வே: 1 இதற்கு (புலிசை)
2 தொடக்கத்தில் 'எல்லாச் சொல்லும்' என்பது ஏட்டில் இல்லை
3 சேனாவரையர் உரை இவ்வாறே உள்ளது
தடித்துள்ள பகுதி அவ்வுரை

உரையை அறிஞர் சேர்த்து விட்டனர் என்றும், சேனாவரை யரே இளம்பூரணரின் உரையை அப்படியே எடுத்தமைத்துக் கொண்டு சில சிறப்புரைகளை மட்டும் எழுதிச் சேர்த்திருக்க லாம் என்றும் ஐயமாகக் கருதவேண்டியுள்ளன.

**குறிப்பு**:- இந்நூற்பாவிற்கு "இச்சூத்திரம் நால்வகைச் சொற்கும் பொதுவிலக்கணம் கூறுகின்றதென்பது" நுதலி யது. (நச்)

**153. பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ் சொல்லி னாகு மென்மனார் புலவர்.**

"எ..ன், தன்னின்[1] வேறாகிய பொருள் தெரியப்படுதலும், பொருள் அறியப்படாது சொற்றன்னை அறியப்படுதலும்,[2] இரண்டும் சொல்லினா[3] மென்று சொல்லுவர் புலவர் என்றவாறு".

**வரலாறு**:- சாத்தன் வந்தான்; பண்டு காடு மன்; உறுகால் (நற். 300) என்பனவற்றால் பொருள் உணர்த்தப்பட்டவாறு[4].

'நீயென்கிளவி, (தொல். சொல். பெய. 30), 'செய்தெ னெச்சம், (தொல். சொல். வினை. 42) 'தஞ்சக் கிளவி'(தொல். சொல். இடை 18) 'கடியென் கிளவி' (தொல். சொல். உரி. 85) என்பவற்றால்[5] பொருளுணரப்படாது அச்சொற்றாமே உணரப்பட்டவாறு[6] கண்டு கொள்க.

**குறிப்பு**:- **இலக்கணக்கொத்தாசிரியர்** "பொருண்மை-என் மனார் புலவர்" சொல் பொருளிற்கு வேறாய்க் கருவியாகவும் கூறப்பட்டுள்ளதென்பர் (பாயி. 6. உரை)

---

1 பெரும்பாலும் சேனாவரையர் உரை போன்றது
2 பொருள் அறியப்படுதலும் (சேனா)
3 சொல்லான்ாம் (சேனா)
4 பொருள் உணரப்பட்டவாறும் (சேனா)
5 என்பனவற்றால் (சேனா) இள-அச்சுப்பிரதி
6 உணரப்பட்டவாறும் (சேனா)

பொருண்மை, சொன்மை என்பனவற்றை 'மை' விகுதி நோக்கிப் பகுபதமாகக் கொள்ளாது பொருள், சொல் எனப் பகாப் பதமாகவே பொருள்கொள்வர் என்பர். (இல.கொத்.நூ.117 உரை)

**154. தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே.**

எ..ன்[1], மேற்கூறப்பட்ட பொருண்மை தெரிதல் சொன் மாத்திரத்தால் விளங்கி வேறு நிற்றலும்,[2] சொன் மாத்திரத் தாற் றோன்றாது, சொல்லொடு கூடிய குறிப்பாற் றோன் றுத[3] லுமென இரண்டு கூற்றையுடைய[4] என்றவாறு.

அவன், இவன், உவன்; வந்தான், சென்றான் என்ற வழிப் பொருட்டெரிபு வேறு நின்றன.

ஒருவர் வந்தார் என்புழி ஆண்பால் பெண்பால் என்பதூஉம், உண்ணா நின்றான், கற்கறித்து "நன்கட்டாய்" என்ற வழித் "தீங்கட்டாய்" என்பதூஉம் குறிப்பிற் றோன்றின. பிறவும் அன்ன.

1. ஒத்தநூற்பா

**குறிப்புரை:-** "சொல்லாற் றெரிதல் குறிப்பினாற் றோன்றுத லென்
றெல்லாப் பொருளும் இரண்டாகும்."
(நேமி.சொல்.68)

"வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே"
(நன்.258)

---

1 பெரும்பாலும் சேனாவரையர் உரை போன்றது

2 விளங்கி நிற்றலும் (கா.ந)

3 சொல்லொடு கூறிக் குறிப்பாற்றோன்றலும் (கா.ந)

4 இரண்டு கூற்றையுடைத்து (சேனா)
இரண்டு கூற்றையுடையது (கா.ந)

## 2. பாடம்

பின், "முன்னம் சேர்த்தி" (39) என்ற நூற்பாப் பகுதிக்குச் சொல்லுவான் குறிப்பொடுங்கூட்டி என்று உரை வரைந் துள்ளதால், இந்நூற்பாவில் "சொல்லொடு கூடிய குறிப்பாற் றோன்றலும்" என்று உரைப்பாடம் ஓதுதலே நன்று. முன்னம்-சொல்லுவான் குறிப்பு.

**155. சொல்லெனப் படுப பெயரே வினையென்**
**றாயிரண்[1] டென்ப அறிந்திசி னோரே.[2]**

"எ...ன்[3], சொல்லாவன பெயர்ச்சொல்லும் வினைச் சொல் லுமென இரண்டென்று சொல்லுவார் அறிவோர்[4] என்ற வாறு".

பெயர்ச்சொற்கு இலக்கணம் வேற்றுமை யோத்தினுட் கூறி னார்; வினைச்சொற்கு இலக்கணம் வினையியலுட் கூறுப. பிற சொல்லும் உளவாயினும், இவற்றின்[5] சிறப்பு நோக்கிப் "பெயரே வினையென் றாயிரண்டு" என்றார்.

**156. இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப.**

"எ...ன்[6], இடைச் சொல்லும் உரிச் சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும் என்றவாறு".

'சார்ந்து தோன்றும்' எனவே அவற்றது சிறப்பின்மை பெறப்படும். வழக்குப் பயிற்சி நோக்கி இடைச்சொல் முற் கூறினார்.

---

சு.வே: 1 வினையென் னாயிரண் (துறைசை)
2 அறிந்து சினோரே (துறைசை)
3 பெரும்பாலும் சேனாவரையர் உரைபோன்றது
4 அறிந்தோர் (சேனா)
5 இவற்றது (கா.ந)
6 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது.

**157. அவற்றுள்,**
**பெயரெனப் படுபவை தெரியுங் காலை**
**உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்**
**அம்மூ வுருவின[1] தோன்றே லாறே.**

"எ...ன்[2], மேற் கூறப்பட்ட நான்கனுள் பெயரென்று சொல்லப்படுவன உயர்திணைக்குரிமையவாய்[3] வருவனவும், அஃறிணைக் குரிமையவாய்[4] வருவனவும், இரண்டு திணைக்கும் ஒத்தவுரிமையவாய் வருவனவுமென மூன்று வேறு வாய் பாட்டன[5] வகுத்துத் தோன்று நெறிக்கண் என்றவாறு".

**158. இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கும்**
**உரியவை உரிய பெயர்வயி னான.**

"எ...ன்[6], இருதிணைப்பிரிந்த ஐம்பாற்கிளவி யாதற்கும் பெயருள் உரியன உரியவாம் என்றவாறு".

உ..ம் :- அவன், பெண்மகன், சாத்தன் என னகர வீறு ஆடூஉவிற்கும், மகடூஉவிற்கும், அஃறிணை ஆண்பாற்கும் உரித்தாய் வருதலானும், அவள், மக்கள், மகள் என ளகார வீறு மகடூஉவிற்கும். பல்லோர்க்கும், அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும், பெண்டாட்டி, நம்பி எனவும், ஆடூஉ, மகடூஉ எனவும் இகார வீறும் உகார வீறும்[7] இருபாற்கும் உரியவாய் வருதலானும், வினைச் சொற்போல இன்ன ஈறு இன்ன பாற்கு உரித்தெனப் பெயர்ச்சொல்லினீறு பற்றி உணர்த்த

---

பா.வே: 1 அம்மூவுருபின (சேனா)

சு.வே: 2 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது

3 உயர்திணைக் குரியவாய் (புலிசை)

4 அஃறிணைக் குரியவாய் (புலிசை)

5 மூன்று வேறுபாட்டனவாம் (சேனா)
மூன்று வேறுபாட்டான் (கா.ந)

6 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது.

7 பெண்டாட்டி, நம்பி எனவும்; ஆடு, மகடு எனவும் இகரவீறும் ஊகார வீறும் (சேனா);

*லாகாமையின், 'பெயர்வயின் உரியவை உரிய'[1] என்றார், பிறவும் அன்ன.*

**159.** அவ்வழி
அவனிவ னுவனென வரூஉம் பெயரும்
அவளிவ ளுவளென வரூஉம் பெயரும்
அவரிவ ருவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த வுயர்திணைப் பெயரே.

*"எ...ன்[2], மூவீற்றதாக[3] மேற்சொல்லப்பட்ட பெயருள் அவன் என்பது முதலாக யாவர் என்பதீறாகச் சொல்லப்பட்ட பதினைந்தும் பால் விளங்க நிற்கும் உயர்திணைப் பெயர் என்றவாறு."*

**160.** ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த இகர விறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகர வைகாரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ வாயிரு பெயரும்[4]
சுட்டுமுத லாகிய அன்னும் ஆனும்
அவைமுத லாகிய பெண்டென் கிளவியும்[5]
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்து மவற்றோ ரன்ன.

*"எ...ன்[6], இப்பெயர் பதினைந்தும் மேற்கூறப்பட்டன போலப் பாலறிய வந்த உயர்திணைப் பெயராம் என்றவாறு"*

---

சு.வே: 1 உரியவை உரிய (சேனா, கா.ந)
2 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது
3 மூவகையாக (சேனா) மூ+வீறு; வீறு-வகை
4 கிளவியும் (கா.ந)
5 பெண்டன் கிளவி (சேனா)
6 சேனாவரையர் உரையை ஒத்துள்ளது

ஆண்மகன் எனவும்[1], பெண்மகள் எனவும், பெண்டாட்டி எனவும், நம்பி எனவும், நங்கை எனவும், முறைமைப் பெயரல்லாத மகனும் மகளும் எனவும், மாந்தர் மக்கள் எனவும், ஆடூஉ மகடூஉ எனவும், சுட்டு முதலாகிய அன், ஆன்: அவ்வாளன்[2] இவ்வாளன், உவ்வாளன் எனவும், அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான் எனவும், சுட்டு முதலாகிய பெண்டு: அப்பெண்டு[3] இப்பெண்டு உப்பெண்டு எனவும், உவமக்கிளவி: பொன்னன்னான், பொன்னன்னாள், பொன்னன்னார் எனவும் வருவன உயர்திணைப் பெயராம்.

**161. எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்**
**எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்**
**பெண்மை யடுத்த மகனென் கிளவியும்**
**அன்ன வியல வென்மனார் புலவர்.**

''எ...ன்[4], எல்லாரும் எனவும், எல்லீரும் எனவும், பெண் மகன் எனவும் வரூஉம் மூன்றும் மேற்கூறப்பட்டன போலப் பாலறிந்த[5] உயர்திணைப் பெயராம் என்றவாறு''.

புறத்துப்போய் விளையாடும் பேதைப்பருவத்துப் பெண்பாலாரைப் பெண்மகன் என்று வழங்குப. பிறவும் அன்ன[6].

**குறிப்பு:-** தொல்காப்பியர் பெண்மை அடுத்த மகன் என் கிளவியைப் பின்னர் (பெய.40) 'மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி' என்பர்.

**162. நிலப்பெயர் குடிப்பெயர் குழூவின் பெயரே.**
**வினைப்பெய ருடைப்பெயர் பண்புகொள் பெயரே**

---

சு.வே: 1 ஏட்டில் எனவும், என்ற சொல்லே உள்ளது
அச்சுப்பிரதியில் என்பதும், என்பனவும் உள்ளன
2 சுட்டுமுதலாகிய அவ்வாளன் (கா.ந)
3 சுட்டுமுதலாகிய அப்பெண்டு (கா.ந)
4 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது
5 பாலறி வந்த (சேனா), பாலறிய வந்த(கா.ந)
6 பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகன் என்றுவழங்குப (சேனா)

**பல்லோர் குறித்த[1] முறைநிலைப் பெயரே**
**பல்லோர் குறித்த சினைநிலைப் பெயரே**
**பல்லோர் குறித்த திணைநிலைப் பெயரே**
**கூடிவரு வழக்கி னாடியற் பெயரே**
**இன்றிவ ரென்னு மெண்ணியற் பெயரோ**
**டன்றி யனைத்து மவற்றியல் பினவே.**

*''எ...ன், நிலப்பெயர் முதலாகச் சொல்லப்பட்டனவும் மேலனபோலப் பாலறிய வந்த உயர்திணைப் பெயராம் என்றவாறு''.*

*நிலப்பெயர்: அருவாளன், சோழியன் என்பன.*

*குடிப்பெயர்: மலையமான், சேரமான் என்பன.*

*குழுவின்பெயர்: அவையத்தார் அத்திகோசத்தார் என்பன.*

*வினைப்பெயர்: தச்சன், கொல்லன் என்பன.*

*உடைப்பெயர்: அம்பர் கிழான், பேரூர் கிழான் என்பன. வெற்பன், சேர்ப்பன் என்பனவும் அவை.*

*பண்புகொள்பெயர்: கரியான், செய்யான்,*

*பல்லோர் குறித்த முறைநிலைப்பெயர்: தந்தையர், தாயர் என்பன.*

*பல்லோர் குறித்த சினை நிலைப்பெயர்: பெருங்காலர். பெருந்தோளர் என்பன.*

*பல்லோர் குறித்த திணைநிலைப்பெயர்: பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர் என்பன.*

*'பல்லோர் குறித்த' என்று விசேடித்தலான் இம்மூவகைப் பெயருள் (முறை, சினை, திணை) ஒருமைப்பெயர் இரண்டு திணைக்கும் உரியவாம்.*

---

பா.வே: 1 பல்லோர்க் குறித்த (எல்லாப் பதிப்பும்.) ஆனால், ஏட்டில் 'பல்லோர் குறித்த' என்றே உள்ளது. பல்லோர் படர்க்கை (தொல்.வினை 30) என்றதை நோக்குக. ஆவியரமுன் வன்மை மிகா (நன்.158)

கூடிவரு வழக்கினாடியற் பெயர்: பட்டி புத்திரர், சங்கிறாமத்தார்.[1]

இன்றிவரென்னும் எண்ணியற் பெயர்: ஒருவர், இருவர், மூவர், முப்பத்து மூவர் என்பன.

இன்றிவர் என்பது இத்துணையர் என்னும் பொருட்டுப் போலும்.

**குறிப்பு:-**

**1. பல்லோர் குறித்த திணை நிலைப்பெயர்.**

**நம்பிஅகப்பொருள்** மறையோர், மன்னர், வணிகர், வேளாளர் என்பவருள் தலைவரையும், ஐந்நிலத்துறை இழிந்தோர் தம்முள் உயர்ந்தோரையும், திணைநிலை மக்களாகக் கூறும். (நம்பி அக. 30, 31).

**இளம்பூரணர்** கூறும் உதாரணம் நம்பி கூறுவனவற்றுடன் ஒத்துள்ளது.

**2. கூடிவருவழக்கினாடியற்பெயர்.**

இப்பெயரை **நேமிநாதம்** 'கூடியற்பேர்' என்று கூறும். அதன் உரையாசிரியர் அவையகத்தார், அத்திகோசத்தார், மணிக்கிராமத்தார் என இவை கூடியற்பேர் என்று கூறுவர். ஆனால், மேல் குழுவின் பெயர் (பெய. 11) என்பதொன்று கூறப்படுகின்றது. அதற்கும் அத்திகோசத்தார் முதலிய பெயரை இளம்பூரணர் காட்டுவர். சேனாவரையர், சிறுவர் விளையாட்டுள் வருவதென்பர். இது நன்கு ஆராயப்பட வேண்டும்.

**3. இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர்.**

**இளம்பூரணர்** மேற்கண்ட தொடருக்கு, 'இன்றிவர்' என்பது இத்துணையார் என்னும் பொருட்டுப் போலும் என்று ஐயமாக விளக்கம் எழுதுகின்றார். பின், (பெயரியல். 14) ''இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக் குறிப்பெயரும்'' என்று ஆசிரியர் கூறுவதால் ஐயம் வேண்டுவதன்று.

---

1. கங்கை மாத்திரர் (சேனா)

**163. அன்ன பிறவு முயர்திணை மருங்கிற்**
**பன்மையு மொருமையும் பாலறி வந்த**
**என்ன பெயரு மத்திணை யவ்வே.**

*எ...ன்[1], மேற் சொல்லப்பட்ட பெயர் போல்வன பிறவும் உயர்திணைக்கட் பன்மையும் ஒருமையு மாகிய பாலறி வந்த எல்லாப் பெயரும் உயர்திணைப் பெயராம் என்றவாறு".*

*அன்ன பிறவுமாவன: ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என்னுந் தொடக்கத்தன.*

**164. அதுவிது வுதுவென வரூஉம் பெயரும்**
**அவைமுத லாகிய வாய்தப் பெயரும்**
**அவையிவை யுவையென வரூஉம் பெயரும்**
**அவைமுத லாகிய வகரப் பெயரும்**
**யாதுயா யாவை யென்னும் பெயரும்**
**ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்**
**பாலறி வந்த வஃறிணைப் பெயரே.**

*எ...ன்[2], நிறுத்த முறையானே உயர்திணைப்பெயர் உணர்த்தி அஃறிணைப்பெயர் உணர்த்துகின்றார்.*

*"அது இது உது என வரூஉஞ் சுட்டுமுதற் பெயரும், அச் சுட்டுப் பெயர்க்கு முதலாகிய சுட்டு முதலாக ஆய்தத்தொடு கூடி அஃது இஃது உஃது என வரூஉம் பெயரும்,*

*அவை இவை உவையென வரூஉம் பெயரும், சுட்டு முதலாக அவ், இவ், உவ் என வரூஉம் வகர வீற்றுப் பெயரும்*

*யாது, யா, யாவை என்னும் வினாப் பெயரும் என, அப் பதினைந்தும் பால் விளங்க வரும் அஃறிணைப் பெயராம் என்றவாறு".*

---

1 சேனாவரையர் உரை போன்றே உள்ளது.
2 பெரிதும் சேனாவரையர்உரையை ஒத்துள்ளது. சிறிது வேறுபட்டுள்ளது.

சுட்டு முதலாகிய ஆய்தப் பெயரும், அவைமுதலாகிய வகர வீற்றுப் பெயரும் அவையல்லதின்மையின் இவ்வாறு கூறினார்

**165. பல்ல பலசில வென்னும் பெயரும்
உள்ள வில்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பி னாகிய பெயர்நிலை யுளப்பட[1]
அப்பா லொன்பது மவற்றோ ரன்ன.**

''எ..ன்[2], பல்ல என்பது முதலாகக் கூறப்பட்ட ஒன்பது பெயரும் மேற்கூறிய அஃறிணைப் பெயர் போலப் பாலுணர்த்தி நிற்கும் என்றவாறு''.

பல்ல, பல, சில, உள்ள, இல்ல என்னும் ஐந்தும் தம்மை யுணர்த்தி நின்றன.[3]

வினைப்பெயர்க் கிளவியாவன வருவ, செல்வ என்பன.

பண்புகொள் பெயர்: கரியது, கரிய என்பன

எண்ணுக்குறிப்பெயர்: ஒன்று, பத்து என்பன[4]

ஒப்பினாகிய பெயர் பொன்னன்னது, பொன்னன்ன என்பன.

**166. கள்ளொடு சிவணு மவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே.**

எ..ன்[5], 'கள்' என்னும் ஈற்றொடு பொருந்தும் அஃறிணை

சு. வே: 1 உட்பட (புலிசை, துறைசை)

2 சேனாவரையர் உரையொடு முற்பகுதி ஒத்தும் பிற்பகுதி சிறிது வேறுபட்டும் உள்ளன

3 ஐந்தும் தம்மை யுணர்த்தி நின்றன; அல்லன பொருளு ணர்த்தி நின்றன (சேனா)

4 இனைத்தெனக்கிளக்கும் எண்ணுக்குறிப்பெயர் ஒன்று, பத்து, நூறு என எண் பற்றி எண்ணப்படும் பொருள் மேல் நின்றன (சேனா)

5 சேனாவரையர் உரையுடன் பெரும்பாலும் ஒத்துள்ளது

இயற்பெயராவன:- ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு, பலா, மலை, கடல் என்னுந் தொடக்கத்துச்[1] சாதிப் பெயர்[2].

ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலின் இயற்பெயரென்றார்.

இவை 'கள்' என்னும் ஈற்றவாய் ஆக்கள் குதிரைகள் என நின்றவழிப் பன்மை விளக்கலிற் பலவறி சொல்லாயினவாறு கண்டு கொள்க.

**167. அன்ன பிறவு மஃறிணை மருங்கிற்**
**பன்மையு மொருமையும் பாலறி வந்த**
**என்ன பெயரு மத்திணை யவ்வே.**

"எ..ன்[3], மேற்கூறப்பட்ட பெயர் போல்வன பிறவும் அஃறிணைக்கண் பன்மையும் ஒருமையு மாகிய பால் விளங்க வந்தவை யெல்லாப் பெயரும்[4] அத்திணைக்கு உரிய என்றவாறு".

'அன்ன பிறவும்' என்றதனாற் பெறுவன[5]:-

பிறிது, பிற, மற்றையது, மற்றையவை, பல்லவை, சில்லவை. உள்ளது, இல்லது, உள்ளன, இல்லன என்னுந் தொடக்கத்தன,

**குறிப்பு**:- நூற்பாவில் 'வந்த' என்பதைப் பெயரெச்சமாகவும், வினையாலணையும் பெயராகவும் கருதுமாறு எல்லோரும் உரை எழுதியுள்ளனர். துறைசை ஏடு 'பாலவறிவந்த யெல்லாப் பெயரும்' என்று கூறுகிறது. **புலிசை ஏடு மட்டும்** "பால் விளங்க **வந்தவை யெல்லாப்** பெயரும்" என்று கூறுகிறது, உயர்திணைப் பெயர்க்குப் புறனடை கூறும் நூற்பா, "பாலறி வந்த என்ன பெயரும்" (12) என்று இந்நூற்பாப்பாடம் போலவே உள்ளது.

1 தொடக்கத்தன (கா.ந)
2 இச்சாதிப்பெயர் (கா.ந)
3 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது.
4 பாலறிவந்த யெல்லாப் பெயரும் (துறைசை)
5 கொள்ளப்படுவன (சேனா)

**168. தெரிநிலை யுடைய வஃறிணை யியற்பெயர்**
**ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே.**

"எ..ன்[1], கள்ளொடு சிவணாத அஃறிணை இயற்பெயர் ஒருமையும் பன்மையும் விளங்குநிலை யுடைய, அதற்கேற்ற வினையொடு தொடர்ந்த வழி என்றவாறு".

ஆ வந்தது, ஆ வந்தன; குதிரை வந்தது, குதிரை வந்தன என ஏற்ற வினையாற் பால் விளங்கியவாறு கண்டு கொள்க.

**குறிப்பு**:- மேல் நூற்பாவை ஒத்த கருத்துடையவை:-

1. "பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய" (நன். 280)
2. "பாங்கார் பெயர்வினை கொண்டன்றிப் பாறோன்றா
   ... ... ... அஃறிணைப்பேர்"
   (நேமி.சொல்.36)

தொல்காப்பிய நூற்பா அஃறிணை இயற்பெயர் வினையொடு வரின் பால் தெரிய நிற்கும் என்று கூறுகின்றது. ஆனால் **நேமிநாதம்** பெயர்வினை கொண்டாற் பால் தோன்றும் என்று கூறுகிறது. அதன் **உரையாசிரியர்** "பசு என்றால் பால் தோன்றாது; அதனை வினைதலைப் பெய வந்தது, வந்தன என ஒருமை பன்மை அறிக'. இனி, ஒன்று, பல என்று பெயர் தலைப்பெய்தும் அறிக. என்னை,

"திணையும் பாலும் தெரியா நின்றுழி
வினையும் பெயரும் வேற்றுமை விளக்கும்".

என்றதாகலின்" என்பர்.

**169 இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமையின்**
**திரிவு[2] வேறு படூஉம் எல்லாப் பெயரும்**
**வினையுங் காலைத் தத்த மரபின்**
**வினையொ டல்லது[3] பாற்றெரி பிலவே.**

---

1 சேனாவரையர் உரையை முற்றிலும் ஒத்துள்ளது
2 திரிபு (கா.ந)
3 வினையோடல்லது (கா.ந), வினையொட்டல்லது (ஏடு)

"எ...ன்[1] இருதிணைச் சொல்லாதற்கும் ஒத்தஉரிமைய வாகலின் உயர்திணைக்கட் சென்றுழி[2] உயர்திணைப் பெயராயும் அஃறிணைப் பெயராயும் வேறுபடு பெயரெல்லாம்[3] ஆராயுங் கால்தத்தம் மரபின் வினையொ டியைந்தல்லது திணை விளங்கி நில்லா என்றவாறு".

உ..ம்:- சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது; முடவன் வந்தான், முடவன் வந்தது எனக் கொள்க.

**170. நிகழூஉ நின்ற[4] பால்வரை கிளவியின்[5]**
**உயர்திணை யொருமை தோன்றலு முரித்தே**
**அன்ன மரபின் வினைவயி னான.**

"எ...ன்,[6] நிகழ்காலம் பற்றி வரும் பால்வரை கிளவியால்[7] உயர்திணை ஒருமைப்பால் தோன்றுதலும் உரித்து, அவ்வொருமைப்பால் தோன்றுதற்கேற்ற வினையிடத்து என்றவாறு".

'பால்வரை கிளவி' என்பது[8] செய்யும் என்னும் முற்றுச் சொல்லை.

சாத்தன் யாழ் எழூஉம்[9]; சாத்தி சாந்தரைக்கும் என்றவழி யாழ் எழூஉதலும்[10] சாந்தரைத்தலும் அஃறிணைக்கேலாது, ஒருவற்கும் ஒருத்திக்கும் ஏற்றலின் உயர்திணை ஒருமைப் பால் விளங்கியவாறு கண்டு கொள்க.

---

1 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது
2 உயர்திணைக்கட் சென்று (சு.வே)
3 வேறுபடும் விரவுப்பெயரெல்லாம் (சேனா)
4 நிகழுநின்ற (சு.வே)
பா.வே: 5 பலர்வரை கிளவியின் (சேனா, கல், தெய்.)
பால்வரை கிளவி (இளம், நச், தெய்-உரை.)
6 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது
7 பலர்வரை கிளவியான் (சேனா)
8 பலர்வரை கிளவி யென்றது (சேனா)
9 எழூஉதும்
10 எழூதலும்

'நிகழூஉ நின்ற' என்றது[1] நிகழா நின்ற என்றவாறு.

**குறிப்பு:** –''ஏய்ந்தநிகழ் காலத்தியல் வினையால் – வாய்ந்த;
உயர்திணைப் பாலொருமை தோன்றும் விரவுப்பேர்;
இயலும் வழக்கி னிடத்து'' என்னும் (சொல்.37)

**நேமிநாத வெண்பாவினை மேல் நூற்பாவுடன்** ஒப்பிடுக.

**யாழ் எழூஉதல்:-**

யாழ் வாசித்தல் பண்டு ஆண்கள் தொழில்: யாழ் வாசித்தலை எழூஉதல் என்பர். வினையெச்சப் பொருளில் 'எழீஇ' என்றுவரும் (இறை.கள.உரை)

**171. இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே**
**முறைப்பெயர்க் கிளவி தாமே தானே**
**எல்லாம் நீஇர்[2] நீ யெனக் கிளந்து**
**சொல்லிய வல்ல பிறவு மாஅங்**
**கன்னவை தோன்றி னவற்றொடுங் கொளலே.**

எ ..ன்[3], விரவுப்பெயர்[4] பால் தெரிய நிற்குமாறுணர்த்தி இனி அவைதம்மை உணர்த்துவான் எடுத்துக்கொண்டார்.

''இயற்பெயர் முதலாக நீ யென்ப தீறாக எடுத்துச் சொல்லப்பட்ட வல்லாத அன்ன பிறவும்[5] ஆண்டு வருமாயிற் சொல்லப்பட்டவற்றொடு[6] கூட்டுக என்றவாறு''.

இயற்பெயராவன: சாத்தன், கொற்றன் என்னுமிரண்டு பெயர்.

---

1 என்பது

பா.வே: 2 நியிர் (கா.ந)

3 சேனாவரையர் உரையை ஒத்துள்ளன

4 இதுகாறும் விரவுப்பெயர் என்ற பாடம் ஏட்டிலில்லை. அச்சுப் பிரதியில் உள்ளது

5 சொல்லப்பட்டன (சேனா), சொல்லப்பட்டனவும் அன்னபிறவும் என்பது (கா.ந), நூற்பாவில், ஏட்டின்படி பாடம் தரப்பட்டது

6 சொல்லப்பட்டவற்றொடும் (சேனா)

சினைப்பெயராவன: பெருங்காலன், முடவன் என்பன.

சினைமுதற் பெயராவன: சீத்தலைச் சாத்தன் கொடும்புற மருதி எனச் சினைப்பெயரொடு தொடர்ந்து வரும் முதற்பெயர்.

முறைப்பெயராவன: தந்தை, தாய் என, முறைபற்றி முறையுடைய பொருண்மேல் வருவன.

அல்லன வைந்தும் தம்மை யுணர்த்தி நின்றனவாதலின் தாம் என்பது முதலாகிய சொல்லேயாம்.

'அன்ன பிறவும்' என்றதனால் மக, குழவி என்பனவுங் கொள்க.

> ''குழவியு மகவு மாயிரண் டல்லன[1]
> கிழவ வல்லமக்கட் கண்'' (தொல். மரபி. 23)

என்று உயர்திணைக்கும் எய்துவித்தார்.

**172. அவற்றுள்**
**நான்கே யியற்பெயர் நான்கே சினைப்பெயர்**
**நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே**
**முறைப்பெயர்க் கிளவி யிரண்டா கும்மே[2]**
**ஏனைப் பெயரே தத்தம் மரபின.**

எ...ன்[3], மேற்கூறிய விரவுப்பெயருள் இயற்பெயருஞ் சினைப் பெயருஞ் சினைமுதற்பெயரும் ஓரோவொன்று நான்காம்;[4] முறைப்பெயர் இரண்டாம்; ஒழிந்த[5] வைந்து பெயருந் தத்தம் இலக்கணத்தவாம்[6] என்றவாறு''.

'தத்தம் (மரபின) இலக்கணம்[7] என்றது, அவை ஒரோன் றாகி நிற்கும் என்றவாறாம்.

---

பா.வே: 1 ஆயிரண்டல்லவை

சு. வே: 2 இரண்டாக்கும்மே

3 முற்பகுதி சேனாவரையர் உரையுடன் பெரிதும் ஒத்துள்ளது. பிற்பகுதி வேறு சொற்றொடர்களுக்கிடையே வந்துள்ளது.

4 நந்நான்காம். (சேனா)

5 ஒழிந்தன. (சேனா)

6 இலக்கணத்தனவாம். (சேனா)

7 இலக்கணத்தன. (சேனா)

தனிப்பெயர் ஐந்தும், விரவுப்பெயர்[1] பதினான்கும் ஆக விரவுப்பெயர் பத்தொன்பது என்றவாறாம்.

**173.** அவைதாம்
பெண்மை யியற்பெயர் ஆண்மை யியற்பெயர்
பன்மை யியற்பெயர் ஒருமையியற் பெயரென்
றந்நான் கென்ப இயற்பெயர் நிலையே.

**174.** பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச்சினைப் பெயரென்
றந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே.

**175.** பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற்பெயரென்
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே.

**176.** பெண்மை முறைப்பெய ராண்மைமுறைப் பெயரென்
றாயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே.

''எ...ன்[2], இயற்பெயர்[3] முதலாகிய[4] நான்கன் விரிவாகிய பதினான்கும்[5] இதுவென [6]உணர்த்தியவாறு.

இவற்றுக்கு உதாரணம் முன்னர்க் காட்டுதும் (22. உரு)

**177.** பெண்மை சுட்டிய வெல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே.

''எ...ன்[7] மேற்கூறிய பதினான்கு பெயரும்[8] இருதிணையும்

---

1 விரிப்பெயர் (சேனா) இப்பாடம் நன்று.

2 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது

3 இவை இயற்பெயர் (கா.ந)

4 முதலிய (சேனா)

5 விரிபதினான்கும் (கா.ந)மேற்கண்ட பாடம் ஏட்டின்படி

6 இவையென (சேனா)

7 சேனாவரையர் உரையுடன் பெரும்பாலும், ஒத்தும், சிறுபான்மை ஒவ்வாதும் வந்துள்ளன

8 பதினான்கு பெயரையும் (ஏடு)

பற்றிப் பால் உணர்த்துமாறு உணர்த்திய எடுத்துக் கொண்டார்[1]. அவை பெண்மைப் பெயர் நான்கும், ஆண்மைப் பெயர் நான்கும், பன்மைப்பெயர் மூன்றும், ஒருமைப்பெயர் மூன்றும் ஆம்.

பெண்மை பற்றி வரும் நான்கு பெயரும், அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் உரிய என்றவாறு''.

அந்நான்குமாவன: பெண்மையியற் பெயரும், பெண்மைச் சினைப்பெயரும், பெண்மைச் சினைமுதற்பெயரும் பெண்மை முறைப்பெயருமென்பன.[2]

உ . ம்:- சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் எனவும்;
முடத்தி வந்தது, முடத்தி வந்தாள் எனவும்;
முடக்கொற்றி வந்தது, முடக்கொற்றி வந்தாள் எனவும்;

தாய் வந்தது. தாய் வந்தாள் எனவும்;

அவ்வம் முறையானே[3] அஃறிணைப் பெண்ணொன்றற்கும் உயர்திணைப் பெயர் ஒருத்திக்கும்[4] வந்தவாறு கண்டு கொள்க. பிறவும் அன்ன.

**குறிப்பு:- நேமிநாதஉரை** ''பெண்மைப் பெயர் வந்தாள் என்றும் வந்தது என்றுமாம்'' என்று உயர்திணைப் பெயரை முன் கூறுகிறது. ஆனால், மேல் நூற்பா ''ஒன்றற்கும் ஒருத்திக்கும்'' என்று உள்ளது.

**178. ஆண்மை சுட்டிய வெல்லாப் பெயரும்**
**ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே.**

எ...ன், இதுவும் மேற்சூத்திரத்தொடு இயைபு.

---

1 பால் உணர்த்திய எடுத்துக்கொண்டார் (சேனா)

2 முறைப்பெயருமேயாம் (ஏடு)

3 அவை முறையானே (சேனா)

4 உயர்திணைப் பெண் ஒருத்திக்கும் (கா.ந)

''ஆண்மை[1] பற்றிவரும் நான்கு பெயரும், அஃறிணை ஆண் ஒன்றற்கும் உயர்திணை ஒருவனுக்கும் உரிய என்றவாறு''.

ஆண்மை பற்றிவரும் நான்கு பெயராவன:[2]

ஆண்மை யியற்பெயரும், ஆண்மைச் சினைப்பெயரும் ஆண்மைச் சினைமுதற் பெயரும்,ஆண்மை முறைப்பெயரும் என்பன.

உ..ம்:- சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான் எனவும்;

முடவன் வந்தது, முடவன் வந்தான் எனவும்;

முடக்கொற்றன் வந்தது, முடக்கொற்றன் வந்தான் எனவும்;

தந்தை வந்தது, தந்தை வந்தான் எனவும்;

அவை முறையானே அஃறிணை ஆண் ஒன்றற்கும் உயர்திணை ஆண் பாற்கும் உரியவாய் வந்தவாறு கண்டு கொள்க.

பிறவும் அன்ன.

179. **பன்மை சுட்டிய வெல்லாப் பெயரும்**
**ஒன்றே பலவே ஒருவரென்னும்**
**ஒன்றிப் பாற்கும்[3] ஓரன் னவ்வே.**

''எ...ன்[4]. பன்மை சுட்டிய மூன்று பெயரும்[5] அஃறிணை யொருமையும் அத்திணைப் பன்மையும், உயர்திணை யொருமையுமெனச் சொல்லப்பட்ட மூன்று பாற்கும் உரிய என்றவாறு''.

அவையாவன[6]: பன்மை யியற்பெயர், பன்மைச் சினைப்பெயர், பன்மைச் சினைமுதற்பெயர் என்பன.

---

பா.வே: 1 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது
2 அந்நான்குமாவன (சேனா)
3 என்றிப்பாற்கும் (கா.ந, சேனா முதலியோர்)
4 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது
5 பன்மை சுட்டிவரும் மூன்று பெயரும். (சேனா)
6 அம் மூன்றுமாவன (சேனா)

உ...ம்:- யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் எனவும்[1],

நெடுங்கழுத்தல் வந்தது, நெடுங்கழுத்தல் வந்தன, நெடுங்கழுத்தல் வந்தான், நெடுங்கழுத்தல் வந்தாள் எனவும்.

பெருங்கால் யானை வந்தது, பெருங்கால் யானை வந்தன, பெருங்கால் யானை வந்தான், பெருங்கால் யானை வந்தாள் எனவும் முறையானே அஃறிணை யொருமைக்கும், அத்திணைப் பன்மைக்கும் உயர்திணை ஒருமைக்கும் உரியவாய் வந்தவாறு கண்டுகொள்க.

**180. ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்**
**ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே.**

''எ..ன்[2], ஒருமை சுட்டி வரும் மூன்று பெயரும் அஃறிணை யொருமைக்கும் உணர்திணை ஒருமைக்கும் உரிய என்றவாறு''.

அம்மூன்றுமாவன:- ஒருமையியற்பெயர், ஒருமைச் சினைப் பெயர் ஒருமைச் சினைமுதற்பெயருமாம்.

உ...ம்:- கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள் எனவும்,

செவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள் எனவும், கொடும்புற மருதி வந்தது, கொடும்புற மருதி வந்தான், கொடும்புற மருதி வந்தாள் எனவும்,

முறையானே[3] அஃறிணை யொருமைக்கும் உயர்திணை யொருமைக்கும் உரியவாய் வந்தவாறு கண்டுகொள்க.

---

1 சேனாவரைய ஏட்டில் ''யானை வந்தது, வந்தன, வந்தான்-வந்தாள்'' என உதாரணம் காட்டப்பட்டுள்ளன.

2 சேனாவரையர் உரையுடன் பெரும்பாலும் ஒத்துள்ளது.

3 அவை முறையானே (சேனா), முறையே (கா.ந)

**181. தாமென் கிளவி பன்மைக் குரித்தே.**

எ...ன்[1], "தத்தம் மரபின" (தொல்.சொல்.பெய.21) என்னப்பட்ட[2] பெயர் இருபாற்கும் உரியவாய் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"தாம் என்னும் பெயர் இருதிணைப்[3] பன்மைப் பாற்கு உரித்து என்றவாறு".

உ...ம்:- தாம் வந்தார், தாம் வந்தன என வரும்.

**182. தானென் கிளவி யொருமைக் குரித்தே.**

"எ...ன்[4], தான் என்னும் பெயர் இருதிணைக் கண்ணும் ஒருமைப்பாற்கு உரித்து என்றவாறு".

உ..ம்:- தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது என வரும்.

**183. எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி**
**பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே.**

எ..ன்[5], எல்லாம் என்னும் பெயர் இரண்டு திணைக்கண்ணும் பன்மை குறித்து வரும் என்றவாறு.

வழி என்பது இடம்[6]

---

1 பெரும்பாலும் சேனாவரையர் உரையுடன் ஒத்துள்ளது. தொடக்கத்தில் நுதலிய துரைத்தல் உள்ளது. இந்நுதலிய துரைத்தலையே சேனாவரையர் சிறிது மாற்றி எழுதியுள்ளார்.

2 எனப்பட்ட (சேனா, கா.ந)

3 இருதிணைக்கண்ணும் (சேனா)
இருதிணைக்கும் (கா.ந)

4 முற்றிலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது.

5 பெரும்பாலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது.

6 வழி என்றது இடம். பொருள் சொன்னிகழ்தற்கு இடமாகலிற் பல்பொருளைப் பல்வழி என்றார் (சேனா)

உ..ம்:- எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார், எல்லாம் வந்தன[1] என வரும்.

**184. தன்னு ளுறுத்த பன்மைக் கல்லது**
**உயர்திணை மருங்கின் ஆக்க மில்லை.**

எ..ன்[2], எல்லாம் என்னுஞ் சொல் உயர்திணைக்காங்கால் தன்மைப் பன்மைக்கல்லது முன்னிலைப்பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் ஆகாதென்றவாறு[3].

ஆக்கமில்லை எனவே சிறுபான்மை வரப்பெறும்.

**185. நீஇர்[4] நீயென வருஉங் கிளவி**
**பால்தெரி பிலவே உடன்மொழிப் பொருள.**

''எ..ன்[5], நீஇர் நீ என்னும் இரண்டு பெயர்ச்சொல்லும் திணைப்பகுதி தெரிய நில்லா; இருதிணையும் உடன்றோன்றும் பொருள என்றவாறு''.

---

1 சேனாவரைய ஏட்டில் ''எல்லாம் வந்தேம், வந்தீர், வந்தன எனவரும்'' என்றே உள்ளது. வந்தார் என்பது இல்லை தெய்வச்சிலையார் எல்லாம் வந்தார் என உயர்திணைப் படர்க்கையில் வாராதென்பர். இளம்பூரணர் வரும் என்னும் கருத்துடையர்.

2 சேனாவரையர் உரையை முழுதும் ஒத்துள்ளது.

3 இளம்பூரணர் உரை, ''எல்லாம் என்னும் சொல் தன்னுள் ளுறுத்த பன்மைக்கு ஆங்கால் உயர்திணை மருங்கின் அல்லது அஃறிணைக்கு ஆகாது'' என்றிருக்கலாம் என்பது சேனாவரையர் மறுப்பால் தெரிகிறது.

பா.வே: 4 நீயிர் (கா.ந)

5 சேனாவரையர் உரையை முற்றிலும் ஒத்துள்ளது.

நீஇர்[1] வந்தீர், நீ வந்தாய் என இருதிணைக்கும் பொது வாய் நின்றவாறு கண்டுகொள்க.

**குறிப்பு**:- 1: 'பால் தெரிபு இலவே உடன்மொழிப்பொருள' என்ற தொடரில் 'பால்' என்பதற்குத் 'திணைப்பகுதி' என்று உரை கூறுகின்றனர் இளம்பூரணர் முதலியோர். திணையின் உட்பிரிவு பால் ஆதலால், அவ்வாறு உரை கொண்டனர் போலும். எனவே, நீஇர் என்பது உயர்திணை அஃறிணைப் பகுதியாகிய பலர் பால் பலவின்பாலும்; நீ என்பது அத்திணை களின் பகுதியாகிய ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் ஒருமைப் பாலும் உடன்தோன்றும் பொருளை உடையன என்றுகொள்ள வேண்டும். **நன்னூலார்** இவற்றை முறையே "இருதிணைப் பன்மைப்பால்" என்றும், இருதிணை ஒருமை முப்பால் என்றும் கூறுவர்.

**186.** அவற்றுள்,
**நீயென் கிளவி யொருமைக் குரித்தே.**

"எ...ன்[2], மேற் சொல்லப்பட்ட இரண்டு பெயருள், நீ என் னும் பெயர் ஒருமைக் குரித்து என்றவாறு".

ஒருமையாவது: ஒருவன் ஒருத்தி ஒன்று என்பனவற்றிற் கெல்லாம் பொதுவாகிய ஒருமை.

நீ வந்தாய் எனக் கண்டு கொள்க.[3]

---

1 தொல்-எழுத்து "அல்லதன் மருங்கின்" (327) என்னும் நூற்பா நும் என்பது 'நீஇர்' எனத்திரிந்ததென்று தெளிவாகக் கூறுகின்றது. நீஇர் என்னும் பழைய வடி வத்தை மறந்த பிற்காலத்தார் இச்சொல்லிலுள்ள இக ரத்தை நீக்கி நீர் என்றும், இகரத்திற்கு யகரவகர உடம் படு மெய்யைக் கொடுத்துநீயிர், நீவிர் என்றும் பிழைபட வழங்கலாயினர். கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் பதிப்பித்த தொல்.சொல் தெய்வச்சிலையார் உரையில் நீஇர்என்றே பதிப்பிக்கப்பட்டுள்ளது (நூற்பா-152)

2 சேனாவரையர் உரையை ஒத்துள்ளது

3 என வந்தவாறு கண்டு கொள்க (சேனா)

**குறிப்பு:-** 'முக்கூறொருமை', 'முப்பாலொருமை' (330, 334) என்பர் **நன்னூலார்.**

**187. ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே.**

எ...ன்[1], "நீஇர்[2] என்னும் பெயர் பன்மைக்கு உரித்து என்றவாறு". பன்மையாவது: பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை. நீஇர் வந்தீர் எனக் கண்டுகொள்க[3].

**188. ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி**
**இருபாற்கு முரித்தே தெரியுங் காலை.**

"எ...ன்[4], ஒருவர் என்னும் பெயர்ச்சொல்[5] உயர்திணைப் பாலுள்[6] ஒருபால் விளக்கா;[7] ஒருவன் ஒருத்தி யென்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும் என்றவாறு".

ஒருவர் வந்தார் என்பது[8] பொதுவாய் நின்றவாறு கண்டுகொள்க.

"இருபாற்கும் உரித்து" என்னும் உம்மை முற்றும்மை[9].

**189. தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்.**

எ...ன்[10], "ஒருவர் என்னும் பெயரதியல்பு கருதின் அஃது

1 சேனாவரையர் உரையுடன் முழுவதும் ஒத்துள்ளது
2 நீயிர் (கா.ந)
3 என வந்தவாறு கண்டு கொள்க (சேனா)
4 பெரும்பாலும் சேனாவரையர் உரையுடன் ஒத்தும், சிறுபான்மை வேறுபட்டும் உள்ளது
5 மேல் இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர் என்றோதப் பட்டவற்றுள் ஒருவர் என்னும் பெயர்ச்சொல் (சேனா)
6 உயர்திணை முப்பாலுள் (சேனா)
7 விளக்காது (சேனா)
8 ஒருவர் வந்தார் எனப் (சேனா)
9 உயர்திணை ஒருமைப்பால் இரண்டென்றறியப்பட்டமையான் இருபாற்கும் உரித்தென்னும் உம்மை முற்றும்மை (சேனா)
10 சேனாவரையர் உரையுடன் முற்றிலும் ஒத்துள்ளது

ஒருமைப்பெயராயினும் பல்லோரறியுஞ் சொல்லொடு தொடர்தற் கேற்கும் என்றவாறு''.

ஒருவர் வந்தார், ஒருவர் அவர் என வரும்.

**குறிப்பு:-** இவ்வியல் 37, 38 என்னும் இரண்டு நூற்பாக் கருத்தினை உட்கொண்ட **நன்னூலாசிரியர்,**

''ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப''. (258)

என்று ஒரு நூற்பாவிலே உரைப்பர்.

**190. இன்ன பெயரே யிவையெனல் வேண்டின்
முன்னஞ் சேர்த்தி முறையி னுணர்தல்.**

''எ...ன்[1], நீயிர், நீ, ஒருவர் என்பனவற்றை இன்னபாற் பெயரென் றறியலுறின் சொல்லுவான் குறிப்பொடுங் கூட்டி முறையால் உணர்க என்றவாறு''.

ஒரு சாத்தன், ஒருவனானும் ஒருத்தியானும் பலரானும் ஒன்றானும் பலவானும் தன்னுழைச் சென்றவழி, நீ வந்தாய், நீஇர் வந்தீர் என்னுமன்றே; நீஇர், ஆண்டது கேட்டான் இவன் இன்னபால் கருதிக் கூறினான் என்பதுணரும்.

இனி ''ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றின்'' (நாலடி.309) இச் சொல்லுவான் ஆடூஉ ஒருமை குறித்தான் என்பது விளங்கும்[3].

---

1 முதற்பகுதி சேனாவரையர் உரையுடன் முற்றிலும் ஒத்துள்ளது. இரண்டாவது பகுதி சிறிது மாறுபட்டுள்ளது. மூன்றாவது பகுதி முற்றிலும் ஒத்துள்ளது

2 குறிப்பொடு கூட்டி (சேனா)

3 இனி ''ஒருவ...சார்ந்தொழுகலாற்றின்'' என்றவழிச் சொல்லுவானொடு கேட்டான் இவன் ஒருமை குறித்தானென விளங்கும். பிறவுமன்ன. இனி, இடமுங்காலமும் பற்றிப்பால் விளங்கும் வழியும் அறிந்து கொள்க (சேனா)

ஏகாரம் தேற்றேகாரம். 'முறையினுணர்தல்' என்பது பாதுகாவல்.

**191. மகடூஉ[1] மருங்கிற் பால்திரி கிளவி**
**மகடூஉ இயற்கைத் தொழில்வயி னான.**

எ...ன்[2], இனி, ஒருசார் உயர்திணைப் பெயர்க்கும் விரவுப் பெயர்க்கும் எஞ்சிநின்ற இலக்கணம் கூறுகின்றார்.

மகடூஉப் பொருண்மைக்கண் பால் திரிந்து வரும் பெண் மகன் என்னும் பெயர் வினைகொள்ளுமிடத்து மகடூஉவிற்குரிய வினை கொள்ளும் என்றவாறு.

உ...ம்:- பெண்மகன் வந்தாள் என வரும்.

பொருண்மை பற்றி மகடூஉவினைக் கொள்ளுமோ ஈறு பற்றி ஆடூஉவினைக் கொள்ளுமோ என்று ஐயுற்றார்க்கு ஐய மகற்றியது.

**192. ஆவோ வாகும் பெயருமா ருளவே**
**ஆயிட னறிதல் செய்யு ளுள்ளே.**

"எ...ன்[3], ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயரும் உள அத்திரியுமிடம் அறிக செய்யுளுள் என்றவாறு".

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொல் அளியர் தாமே" (குறுந்.7)

என வரும்.

**193. இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுள் கிளக்கும்**
**இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா**
**நிலத்துவழி மருங்கிற் றோன்ற லான.**

---

சு.வே: 1 மகடு (புலிசை)

2 முற்றிலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது. 10-ஆம் நூற்பாக் குறிப்பினைப் பார்க்க.

3 முற்றிலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது.

எ...ன்[1], "செய்யுளுள் கருப்பொருண்மேற் கிளக்கப்படும் இருதிணைக்கு முரிய விரவுப் பெயர் உயர்திணை உணர்த்தாது[2]; அவ்வந்[3] நிலத்துவழி அஃறிணைப் பொருளாய் வழங்கப் பட்டு வருதலால் என்றவாறு".

"கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை வந்த வன்பறழ்க் குமரி"

என்புழிக் கடுவன், முதுமகன்[4], குமரி என அஃறிணைப்பொருள வாயல்லது நிலத்துவழி மருங்கின் தோன்றாமையின் உயர் திணை சுட்டாதவாறு கண்டு கொள்க.

நிலமாவன: முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பன.

**194. திணையொடு பழகிய பெயரலங் கடையே.**

"எ...ன்[5], கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் உயர் திணை சுட்டாது, அஃறிணை சுட்டுவது, அவ்வத் திணைக்குரிய வாய் வழங்கப்பட்டு வரும்[6] பெயர் அல்லாத விடத்து என்ற வாறு".

எனவே, திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயர் இருதிணையுஞ் சுட்டி வரும் என்பதாம்.

உ...ம்:- காளை, விடலை என[7] உயர்திணையினும் வரும். ஓர் எருத்தையும் காளை, விடலையென அஃறிணையினும் வருமாதலின், விரவுப்பெயராயிற்று.

பிறவும் அன்ன.

**பெயரியல் முற்றும்**

---

1 சேனாவரையர் உரையைப் பெரிதும் ஒத்துள்ளது.

2 உணர்த்தா (சேனா)

3 அவ்வவ (ஏடு)

4 மூலன் (சேனா)

5 முற்றிலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது

6 விளங்கப்பட்டுவரும் (ஏடு)

7 காளை, விடலை என்பன, உயர்திணையினும் அஃறிணையினும் வருமாதலின் விரவுப்பெயராயிற்று (கா.ந)

# 6. வினையியல்

**195. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**
**வினையுங் காலைக் காலமொடு தோன்றும்.**

எ...ன்[1], நிறுத்தமுறையானே வினைச்சொல்லாமாறு உணர்த்திய எடுத்துக்கொண்டார். அதனால், இவ்வோத்து வினையியல் என்னும் பெயர்த்தாயிற்று.

"வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது. ஆராயிற், காலத்தொடு புலப்படும் என்றவாறு".

ஈண்டு வேற்றுமை என்பது[2] உருபை.

உ . ம்:- உண்டான்; கரியன் என, வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றியவாறு கண்டுகொள்க.

ஒத்த நூற்பா

"வழுவில் மூவகைக் காலமொடு சிவணித்
தொழிற்பட வருவது தொழிற்சொல் லாகும்." **வாய்ப்பியம்**
(யா.க.வி.கழ.578)

"காலம் அறிதொழில் கருத்தனோ டியையப்
பால்வகை தோறும் படுமொழி வேறே" **அவிநயம்**
(நன்.மயிலை.நூற். 319)

"இறப்பு நிகழ்வெதிர்வாங் காலங்க ளேற்றும்
குறிப்பும் உருபேற்றல் கூடாத் – திறத்தவுமாய்
முற்றெச்ச மென்றிரண்டாய் மூவகைத்தாய் மூன்றிடத்தும்
நிற்கும் வினைச்சொற்க ணேர்ந்து."
(**நேமி**.சொல்.68)

---

1 முற்றிலும் சேனாவரையர் உரையை ஒத்துள்ளது. இளம்பூரணர் உரையாயின், நூற்பா நுதலியது இருத்தல் வேண்டும். இங்கே ஒத்து நுதலியதே உள்ளது.

சு.வே: 2 என்றது (சேனா)

**196. காலந் தாமே மூன்றென மொழிப.**

எ...ன் (நுதலியதில்லை)

"மேல்[1] தோற்றுவாய் செய்யப்பட்ட காலம் மூன்று என்று சொல்லுவர் புலவர்".

**குறிப்பு:-காலம்**

**கிளவியாக்கத்துள்** (58) உயர்திணையாக ஓதப்பட்டு உயர் திணை யாயினும் அஃறிணையால் இசைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

**செய்யுளியலில்** செய்யுள் உறுப்பு இருபத்தாறுள் ஒன்றாக ஓதப்பட்டு,

"இறப்பே நிகழ்வே எதிரது என்னும்
திறத்தியல் மருங்கின் தெரிந்தனர் உணர
பொருள்நிகழ் வுரைப்பது கால மாகும்". (194)

என்று இலக்கணமும் ஓதப்படுகின்றது.

**197. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா**
**அம்முக் காலமும் குறிப்பொடும்[2] கொள்ளும்**
**மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.**

எ.. ன்[3] (நுதலியதில்லை)

"இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படும் மூன்று காலமுங்[4] குறிப்பு வினையொடும் பொருந்தும் மெய்ந்நிலை யுடைய[5] வினைச் சொல் லானவை தோன்று நெறிக்கண் என்றவாறு.

---

1 சேனாவரையர் உரையில் எ...ன் என்பது இல்லை. மற்றுள்ள பொழிப்புரை சேனாவரையர் உரையொடு பொருந்தி உள்ளது.

சு.வே: 2 குறிப்பொடு (ஏடு)

பா.வே: 3 சேனாவரையர் உரையை ஒத்துள்ளது.

4 அம்மூன்று காலமும் (சேனா)

5 மெய்ந்நிலைமையை (சேனா)

எனவே, காலம் மூன்றாவன இறப்பம் நிகழ்வும் எதிர்வும் என்பதூஉம் வெளிப்படக் காலம் விளங்காதன குறிப்பு வினை என்பதூஉம் பெற்றாம்.

உண்டான், உண்ணாநின்றான், உண்பான் என வரும். இறப்பாவது தொழிலது கழிவு.

நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை.

எதிர்வாவது தொழில் பிறவாமை.

**198. குறிப்பினும் வினையினும் நெறிப்பட்த் தோன்றி**
**காலமொடு வருஉம் வினைச்சொல் லெல்லாம்**
**உயர்திணைக் குரியவும்[1] அஃறிணைக் குரியவும்[2]**
**ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரியவும்[3]**
**அம்மூ வுருவின[4] தோன்ற லாறே.**

எ...ன் நுதலியதில்லை.

"குறிப்புப் பொருண்மைக் கண்ணும், தொழிற் பொருண்மைக் கண்ணும் தோன்றிக் காலத்தொடு வருஉம் எல்லாச் சொல்லும் உயர்திணைக் குரியனவும், அஃறிணைக்குரியனவும் இரண்டு திணைக்கும் ஒப்பவுரியனவும் என மூன்று கூற்றனவாம் தோன்று நெறிக்கண் என்றவாறு".

குறிப்பு:-1. சேனாவரையர் உரையுடன் ஒத்துள்ளது.

2. சேனாவரையர் உரைமுகப்பில், "பொதுவகையாற் கூறிய வினைச்சொல்லைச் சிறப்பு வகையான் உணர்த்திய எடுத்துக் கொண்டார்" என்று நுதலிய துரைப்பர்.

---

பா.வே: 1 உயர்திணைக் குரிமையும் (கா.ந)
2 அஃறிணைக் குரிமையும் (கா.ந)
3 ஆயிருதிணைக்கு மோரன்ன வுரிமையும் (கா.ந)
4 அம் மூவுருபின் (கா.ந)

3. **உரிமையும் உரியவும்**

பெயரியல் 6-ஆம் நூற்பா

"உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்"

என்ற பாடத்திலும்,

வினையியல் 4-ஆம் நூற்பா

"உயர்திணைக்குரியவும் அஃறிணைக் குரியவும்

ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரியவும்" என்ற பாடத்திலும் ஏட்டில் உள்ளன. பெயராயிருத்தலால் உரிமையும் என்றும், வினையாயிருத்தலால் உரியவும் என்று ஓதினார் போலும். உரை 'உரியனவும், என்றே உள்ளது.

**199. அவைதாம்**
**அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்**
**உம்மொடு வரூஉங் கடதற வென்னும்**
**அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்**
**பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே.**

எ...ன்[1], நிறுத்த முறையானே உயர்திணை[2] வினை உணர்த்துகின்றார்; அவைதாம் இருவகைய. தன்மை வினையும் படர்க்கை வினையுமென. தன்மை வினையும் இருவகைத்து. பன்மைத் தன்மையும் ஒருமைத் தன்மையுமென[3]. இச்சூத்திரத்தாற் பன்மைத் தன்மை உணர்த்துகின்றார்.

"மேல் மூன்றுவகை யெனப்பட்ட வினைச்சொற்றாம், அம், ஆம், எம், ஏம் என்னும் ஈற்றவாகிய சொல்லும், உம்மொடு வரூஉம் கடதற வாகிய கும்மும், டும்மும், தும்மும், றும்மும் என்னும் ஈற்றவாகிய சொல்லும் என அவ்வெட்டும் பன்மை உணர்த்தும் தன்மைச் சொல்லாம் என்றவாறு".

அம், ஆம் என்பன முன்னின்றாரை உளப்படுக்கும், தமராயவழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம், ஏம் என்பன

1 சேனாவரையர் உரையொடு ஒத்துள்ளது.

பா.வே: 2 உயர்திணை வினையாமாறு (சேனா)

3 தனித்தன்மையும் உளப்பாட்டுத் தன்மையுமெனினும் அமையும் (சேனா).

படர்க்கையாரை உளப்படுக்கும். உம்மொடு வரூஉங் கடதற அவ்விருவரையும் ஒருங்கு உளப்படுத்தலும், தனித்து[1] உளப் படுத்தலும் உரிய.

அம், ஆம், எம், ஏம் என்பன மூன்று காலமும் பற்றி வரும். உம்மொடு வரூஉங் கடதற எதிர்காலம் பற்றி வரும்.

அம்-உண்டனம் உண்ணாநின்றனம், உண்குவம் எனவும்
ஆம்-உண்டாம், உண்ணாநின்றாம், உண்பாம் எனவும்
எம்-உண்டனெம், உண்ணாநின்றனெம், உண்குவெம் எனவும்
ஏம்-உண்டேம், உண்ணாநின்றோம், உண்பேம் எனவும் வரும்.

உம்மொடு வரூஉம் கடதற-உண்கும், உண்டும், வருதும். சேறும் எனவும், உரிஞுதும், திருமுதும் எனவும் ஏற்றவழி உகரம் பெற்று வரும். இவை நான்கும் எதிர்காலம் பற்றி வரும்[2],

உம்மை அடைந்து வந்த கடதறக்கள் "உம்மொடு வரூஉங் கடதற" ஆயின.

இக் காட்டிய எட்டு வினைச் சொல்லும் உயர்திணைப் பன்மை வினைச்சொல்லை உணர்த்தும் தன்மைச் சொல் என்றவாறு.

இவை, தன்னொடு முன்னின்றானை உளப்படுக்கும், படர்க்கை யானை உளப்படுக்கும், இவ்விருவரையும் உளப்படுக்கும் என் பது, "அவற்றுள் பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி" (வினை.12) என்னுஞ் சூத்திரத்துட் சொல்லுதும்.

**குறிப்பு:- நேமிநாதமும்** தொல்காப்பியத்தைப் பின்பற்றி உளப்பாட்டுத்தன்மையை முன்னும் தனித்தன்மையைப் பின் னும் கூறுகின்றது.

"அம்ஆம்எம் ஏமும் கடதறமேல் ஆங்கணைந்த
உம்மும் உளப்பாட்டுத் தன்மையாம் – தம்மொடு
புல்லுங் குடுதுறுவும் என்ஏனும் பொற்றொடியாய்
அல்லும் தனித்தன்மை யாம்" (சொல்.39)

என்பது அந்நூற்பா.

---

பா.வே: 1 தனித்தனி (சேனா)
2 இப்பகுதி சேனாவரையத்தில் இல்லை.

**மேற்கோள்:-** "திங்களைப் போற்றுதும்" 'போற்றுதும்' தன்மைப் பன்மை "அம்மாம்" என்னுஞ் சூத்திரத்துக் 'கடதற வால்' முடிந்தது என்பர்,

(சிலப்.மங்.1) **அடியார்க்கு நல்லார்.**

**200.** **கடதற வென்றும்**
**அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொடு[1]**
**என்ஏன் அல்லென வரூஉம் ஏழும்**
**தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே.**

எ ..ன், மேல் உளப்பாட்டுத் தன்மை கூறினார்; இது தனித் தன்மை வினைச்சொல் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

"கடதற என்னும் அந்நான் கூர்ந்த குற்றியலுகரம் என்றான்; அவையிற்றின் ஈறுபற்றி. அவை வருமாறு:-உண்கு, உண்டு, வருது, சேறு என வரும். என், ஏன் என்பது மூன்று காலமும் பற்றி வரும். அவை உண்டெனென், உண்ணாநின்றனென், உண்குவென் எனவும், உண்டேன், உண்ணா நின்றேன், உண்குவேன் எனவும் வரும். அள்-உண்பல் தின்பல் என எதிர் காலம் பற்றி வரும். இப்பொழுது அதனை உண்பன், தின்பன் என அன்னீறாக வழங்குப என்ப".

**மேல்** **உள்ள** உரை ஏட்டிலும், கா.ந பதிப்பிலும் உள்ளது. **சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்,**

"கடதற ஊர்ந்த குன்றிய லுகரமாகிய கு, டு, து, று என்னும் நான்கு ஈற்றவாகிய சொல்லும், என், ஏன் அல் என்னும் ஈற்றவாகிய சொல்லுமென, அவ்வேழும் ஒருமை யுணர்த்தும் சொல்லாம்" என்பதை உரையாக எழுதிச் சேர்த்துள்ளனர். **இவ்வுரைப் பகுதி முன்னைய பதிப்புகளில் இல்லையேனும் இருந்து விடுபட்டிருக்க வேண்டும் என்று தெரிதலின் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டது** என்று குறிப்பும் எழுதியுள்ளனர். ஆனால், இப்பகுதி எங்கேயிருந்து கிடைத்ததென்பதைப்

---

பா.வே: 1 குற்றிய லுகரமொடு(கவ)

**பதிப்பாளர்** எழுதவில்லை. சேனாவரையர் உரையைச் சிறிது மாற்றி எழுதிக்கொண்டதே இப்பகுதியாகும்.

**குறிப்பு:–'அல்' ஈற்றை அன்னீறாக வழங்குதல்.**

நேமிநாதம் (சொல்.39) உரை "உண்கு, உண்டு, வருது, சேறு எனவும்;உண்டனென், உண்ணாநின்றனென், உண்குவென் எனவும்; உண்டேன், உண்ணா நின்றேன், உண்பேன் எனவும்; உண்பல், தின்பல் எனவும் இவை தனித்தன்மை.

'கூறுவன்' என்று தனித்தன்மை சொன்னாரும் உளராலோ வெனின், இக்காலத்து அல்வினை, அன்னாய் நடக்கவும் பெறும் என்னை

**"அல்வினை அன்னாய்த் திரியவும் பெறுமே".**

உதாரணம் "பாவினங் கூறுவன்" (காரி.1) என்றார் **அமுத சாகரர்**" என்று கூறும்.

**201. அவற்றுட்**
**செய்கென் கிளவி வினையொடு முடியினும்**
**அவ்வியல் திரியா[1] வென்மனார் புலவர்.**

எ...ன், அவ்வேழனுள் 'செய்கு' என்னும் சொல் வினை கொண்டு முடியினும் அமையும் என்பது உணர்த்தியவா றென் பதாம்.

உ...ம்:– உண்கு வந்தேன் என வரும்.

செய்கு என் கிளவி வினையொடு முடியினும் அமைக; எனச்[2] செய்கும் என்னும் கிளவியும் வினையொடு முடியினும் அமைக என்பது போந்ததாம்.

உ...ம்:– உண்கும் வந்தேம் என வரும்.

இனி, அவை முடியினும் அமையும் எனப்[3] பெயர் கொண்டு முடிதலே வலியுடைத்தென்பதே[4] போந்ததாம்.

---

பா.வே: 1 திரியா தென்மனார் (சேனா.ந) (கா.ந)
2 எனவே
3 எனவே
4 என்பது (கா.ந)

அவை, உண்கு யான்; உண்கும் யாம் எனவரும்.

'அவ்வியல் திரியா' என்பது அவையும் ஒழிந்தன முற்றுச் சொல்லியல்பிற் றிரியா என்றவாறு[1].

பாட ஆய்வு:-ஏட்டில் (புலிசை, துறைசை) இந்நூற்பா 'அவ்வியல்திரியா' என்ற பாடத்துடன் உள்ளது. உரையிலும் 'அவ்வியல் திரியா' என்றே எடுத்தாளப் பட்டுள்ளது. சேனாவரையர் முதலியோர் 'அவ்வியல் திரியாது' எனப் பாடம் ஓதுவர்.

**202. அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும்**
**ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல்லே.**

எ...ன், உயர்திணைத் தன்மைச் சொல் உணர்த்தி அத்திணைப் படர்க்கை வினைச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

அன் என்பதனைத் தொடக்கமாக உடைய நான்கு ஈற்றுச் சொல்லும் உயர்திணைக்கண் ஒருமைப்பாலை உணர்த்தும் படர்க்கை வினைச்சொல் என்றவாறு''.

அவை வருமாறு:

அன்-உண்டனன், உண்ணாநின்றனன், உண்குவன் எனவரும்.

ஆன்-உண்டான், உண்ணாநின்றான், உண்பான் எனவரும்.

அள்-உண்டனள், உண்ணாநின்றனள், உண்குவள் எனவரும்.

ஆள்-உண்டாள் உண்ணாநின்றாள், உண்பாள் எனவரும்.

குறிப்பு:- சேனாவரையர் உரையுடன் ஒத்துள்ளது.

**203. அர்ஆர் பஎன வரூஉம் மூன்றும்**
**பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.**

எ...ன், உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைச் சொல் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

---

1 அவையும் முற்றுச் சொல்லியல்பிற் (கா.ந)

"அம் மூவகைச் சொல்லும் பலராய புறத்தாரை உணர்த்தும் சொல் என்றவாறு" (படர்க்கையார்-புறத்தார்)

உ...ம்:-

அர்-உண்டனர், உண்ணாநின்றனர், உண்குவர்.
ஆர்-உண்டார், உண்ணாநின்றார், உண்பார்.
ப -உண்ப, தின்ப என எதிர்காலங் கொண்டு வரும்.

**204. மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கைக்**
**காலக் கிளவியொடு முடியு மென்ப.**

எ...ன் (நுதலியதில்லை)

'மார் என்பதூஉம் உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைக்குரித்து. அது பின்னை முடியுங்காலை வினைச்சொல் லொடு முடிதலுடைத்து என்றவாறு".

உ...ம்:-ஆர்த்தா கொண்மார் வந்தார் எனவரும்[1]

இது முற்றுச்சொல்லாகலான், வினைச்சொல்லொடு முடிதல் வேற்றுமை கண்டு, அஃது உணர்த்தியவாறென்பது.

**205. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**அந்நா லைந்தும் மூன்றுதலை யிட்ட**
**முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே.**

எ...ன், மேல் விரித்தவற்றை யெல்லாம் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

"பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் தோன்ற நின்ற உயர் திணை மூன்றுபாற்கும் உரியவென வரையறுத்தவாறு"

அது, விரித்துத் தொகுத்தல் என்னும் நூற்புணர்ப்புப்பட வைத்தவாறு.

---

1. 'ஆர்த்தார் கொண்மார் வந்தார்' இது பிழைபட்டது. 'ஆர்த்து ஆ கொண்மார் வந்தார்' என்றிருத்தல் வேண்டும். சேனாவரையர் 'கொண்மார் வந்தார்' என்பதை மட்டும் எடுத்து உதாரணம் காட்டினார்.

**குறிப்பு**:- **நூற்புணர்ப்பு**

**இளம்பூரணர்** தொல்காப்பியப் பாயிர உரையில்
"ஈரைங் குற்றமு மின்றி நேரிதின்
எண்வகைப் புணர்ப்பின தென்மனார் புலவர்".

என்ற நூற்பாவை எடுத்துக் காட்டுவர். இந்நூற்பா, எண் வகைப் புணர்ப்பினது என்று குறிப்பிடுவது, நூற்புணர்ப்பின் தொகையைப் போலும். அவ்வெட்டுள் ஒன்று விரித்துத் தொகுத்தல் என்பது போலும். **சேனாவரையர்** கிளவியாக்கம் 11-ஆம் நூற்பாவுரையில் "இது யோக விபாகம் என்னும் நூற்புணர்ப்பு" என்பதுவும் அஃதாகலாம்.

**206. அவற்றுட்**
**பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி**
**எண்ணியன் மருங்கிற் றிரிபவை யுளவே.**

எ...ன், அத்தொகுக்கப்பட்டனவற்றுள், ஒரு சாரவற்றது வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

"பன்மைத் தன்மைச் சொற்கள் ஆராயுமிடத்து அவை திரிபுடைய என்றவாறு".

யாதோ திரிபெனின், அம் ஆம் என்னும் இரண்டும் தன்னொடு முன்னின்றானை உளப்படுக்கும்; எம் ஏம் என்பன இரண்டும் தன்னொடு படர்க்கையானை உளப்படுக்கும்; உம்மொடு வரூஉங் க ட த றக்கள் முன்னின்றானையும் படர்க்கையானையும் உளப்படுக்குமென்பது.

இவ்வுளப்படுதற்குத் திரியும் திரிபு, அவையுடைய வழுத் திரிபன்று ஈண்டுக் கருதிய தென்பது.

**குறிப்பு**:- வினையியல் 5-ஆம் நூற்பா உரையை நோக்குக. இந்நூற்பாவிற்கு, (206) **இளம்பூரணர்** உரையை ஒட்டிக் **கல்லாடரும்**, வேறுபட்டுச் **சேனாவரையர்** முதலியோரும் உரை கூறுவர்.

**சேனாவரையர்** உரைகளைத் தொல்.சொல்.கிளவியாக்கம் "தன்மைச் சொல்லே" (43) என்ற நூற்பாவிலும், வினையியல்

12–ஆம் நூற்பாவிலும் காண்க. 'எண்ணியல் மருங்கின்' என்பதற்குச் **சேனாவரையர்** என்னுதற்கண் என்று உரை கூறுவர்.

தன்மைப் பன்மை உளப்படுத்தி வருதலைக் குறித்து இளம்பூரணர் கூறும் செய்தியை **நன்னூலாசிரியர்,**

''அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்
உம்ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை'' என்பர்.

**நன்னூலார்** ஓம் ஈறு ஒன்றினைப் புதிதாகக் கூறுவர்.

**மயிலைநாதர்** ஓம் விகுதியையும் வழக்குண்மையிற் கொண்டார் என்பர்.

**சங்கரநமச்சிவாயர்** இதனைப் புதியன புகுதல் என்பர். **''வீரசோழியம்''** 'கிறோம், நின்றோம், (77) என வரும் என்று கூறும்.

'ஆம்' என்பது 'ஓம' என்று திரிந்ததாகவும் கொள்ளலாம்

**உளப்படுதல், உளப்படுத்தல்**

**நன்னூலார்** உளப்படுக்கும் என்பதைத் ''தன்னொடு படுக்கும்'' என்பர்.

**நேமிநாதம்** ''உளப்பாட்டுத் தன்மை'' (சொல்.39) என்று கூறும். அதன் உரையாசிரியர் உளப்படுக்கும் உளப்பாட்டுத் தன்மைச் சொல்லாம் என்று உரைப்பர்.

**சேனாவரையர்** (வினை.5) உளப்படுத்தல் என்பர். இந்நூற்பா (வினை.12) உரையில் **இளம்பூரணர்** 'உளப்படுதற்கு' என்று உரைப்பர். இவற்றின் வேறுபாடறிக.

**207. யாஅர் என்னும் வினாவின் கிளவி**
**அத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே.**

எ...ன், உயர்திணை மூன்று பாற்கும் பொதுவாகிய தோர் வினைக்குறிப்புச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

''யார் என்னும் வினாவின் பாற்றாய் வருகின்ற சொல் உயர்திணை மூன்று பாற்கும் உரித்து என்றவாறு''.

உ...ம்:-யார் அவன்; யார் அவள்; யார் அவர் என வரும்.

மற்றிது வினைக்குறிப்பே யெனின், முன்னர் ''அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்'' (வினை.16) என்று உயர் திணைக் குறிப்பு ஓதும் வழியே வைக்க எனின், உயர்திணை முப்பாற்கும் தன் ஈறு திரியாது, நிற்றற் சிறப்புநோக்கி, ஈண்டு வைத்துணர்த்தினார் என்பது.

**208. பாலறி மரபின் அம்மூ வீற்றும்
ஆஒ ஆகுஞ் செய்யு ளுள்ளே.**

எ...ன், உயர்திணைப் பாற்குப் படுவதோர் செய்யுள் முடிவு கூறுதல் நுதலிற்று.

''பாலறி மரபின் அம்மூவீற்றும் என்பன மேல் உணர்த்திப் போந்த னஃகான் ஒற்றும் (கிளவி.5) ளஃகான் ஒற்றும் (கிளவி.6) ரஃகான் ஒற்றும் (கிளவி.7) ஆயின அவை மூன்றீற்றுக்கண்ணும்; ஆஒ ஆகுஞ் செய்யுளுள்ளே என்பன—ஆகாரம் ஓகார மாகுஞ் செய்யுளுள் என்றவாறு''.

உ...ம்:- வினாவி[1] நிற்றந்தான் என்பது, நிற்றந்தோன் (அகநா.48) எனவும், நகூஉப் பெயர்ந்தாள்' என்பது 'நகூஉப் பெயர்ந்தோள், (அகநா.248) எனவும், 'சென்றாரன்பிலர்'[2] என்பது, 'சென்றோரன்பிலர்' (அகநா.31) எனவும் வரும்.

செய்யுளுள் எங்கும் ஆஓவாகக் கொள்க என்றவாறு.[3] ஆவாகக் கொள்ளாத விடத்தாயின் ஓவாகத் திரிவதல்லாக் கால் வேண்டா என்பது.

**209. ஆய்என் கிளவியும் அவற்றொடு கொள்ளும்.**

எ...ன், இதுவும் ஆ ஓவாகல் ஒப்புமை கண்டு விரவுவினைச் சொல்லீறு செய்யுளுள் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

சு.வே: 1 வினவி (கா.ந)
2 சென்றோரென்பிலர் (ஏடு)
3 ஆ ஓவாகாது (கா.ந) ஆஓவாக என்றவாறு (துறைசை)

"ஆய் என்னும் சொல்லின் ஆகாரமும், ஓ வாகும் செய் யுளுள் என்றவாறு"

உ...ம்:-

"வந்தாய் மன்ற தெண்கடற்[1] சேர்ப்ப' 'என்புழி[2] "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப" (அகநா.80) என்ற வாறு[3]

**குறிப்பு**:-ஆய் ஈறு, ஆஓவாகத் திரிந்தது போலத் தன்மைப் பன்மையில் ஆம் ஈறும் ஓவாகத் திரியும். ஆனால், **நன்னூ லாசிரியர்** (மயிலை. 331.) தன்மைப் பன்மைக்கு ஓம் என்று ஈற்றினைக் கொண்டுள்ளார்.

**210.** **அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்**
**கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்**
**ஒப்பி னானும் பண்பி னானுமென்**
**றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்**
**அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்**
**அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்**
**என்ன கிளவியுங் குறிப்பே காலம்**
**பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**அன்ன மரபின் குறிப்பொடு வருஉம்**
**காலக் கிளவி உயர்திணை மருங்கின்**
**மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.**

**குறிப்பு**:- (11 அடியும் புலிசை, துறைசை ஏடுகளில் ஒரே நூற்பா.)

எ...ன், நிறுத்த முறையானே உயர்திணைக்குரிய வினைக் குறிப்புச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

"இக்[4] கூறப்பட்ட எட்டுப் பொருண்மையும் பற்றித்

---

பா.வே: 1 தண்கடல் (க.ந.)
2 என்பது (க.ந.)
3 எனவரும் (க.ந)
4 இங்குக் (கா.ந)

தோன்றுங்கால் வினைக்குறிப்புச் சொல்லொடு தோன்றும் என்றவாறு''.

'அதுச்சொல் வேற்றுமை' என்பது, ஆறாம் வேற்றுமை. அதன் பொருள் பல; அவற்றுள் அவ்வுடைமைப் பொருள் பற்றி உயர்திணை வினைக் குறிப்புச் சொல் பிறக்கும் என்றவாறு.

உ...ம்:- உடையன், உடையள் உடையர் எனவரும்

கண்ணென் வேற்றுமை நிலத்தினானும் பற்றிப் பிறந்தன: நிலத்தன், நிலத்தள் நிலத்தர் என்பன.

உவமப் பொருள் பற்றிப் பிறந்தன: பொன்னன்னன், பொன்னன்னள், பொன்னன்னர் என்பன.

பண்பு பற்றி வந்தன (:-) கரியன், கரியள், கரியர் என்பன.

அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும் என்பது அக் கூறப்பட்ட சொல் குறிப்பாய்த் தோன்றும் என்றவாறு.

அன்மை பற்றிப் பிறந்தன: அல்லன், அல்லள், அல்லர் என்பன.

இன்மை : இல்லன், இல்லள், இல்லர் என்பன.

உண்மை: உளன், உளள், உளர் என்பன.

வன்மை : வல்லன், வல்லள், வல்லர் என்பன.

இனிப் பிறவும் என்றதனான்:- நல்லன், நல்லள், நல்லர் எனவும்; தீயன், தீயள், தீயர் எனவும்; மூவாட்டையான், நாலாட்டையான், ஏழாட்டையான் எனவும்[1] பிறவும் இவ்வாறு வருவன வெல்லாங் கொள்க.

ஈண்டுக் காட்டின வெல்லாம் படர்க்கை வினைக் குறிப்புச் சொல்லே.[2]

இனி, ஈண்டு எடுத்தோத்தினானும் கூறிய பொருளைப்

சு.வே: 1 என்பனவும் (கா.ந)
2 சொல் (கா.ந)

பற்றித் தன்மை வினைக்குறிப்புச் சொல் உடையேன், உடையாம்,உடையேம் என வரும்[1] பிறவு மன்ன.

**குறிப்பு**:- "அதுச்சொல் வேற்றுமை" என்று தொடங்கும் இந்நூற்பா, ஏட்டில் "பன்மையும் ஒருமையும்" என்ற நான்கடி நூற்பாவுடன் சேர்த்தெழுதப்பட்டுப் பதினொரு அடி நூற்பாவாக உள்ளது. பின்னர் அஃறிணைக் குறிப்புவினையைக் கூறும் 'இன்றிலவுடைய' என்னும் நூற்பாவும் "பன்மையும் ஒருமையும்" என்ற நான்கடி நூற்பாவுடன் சேர்த்தே எழுதப்பட்டுள்ளது. இந்த முறையைக் கருதினால் 'அதுச்சொல்வேற்றுமை' என்ற நூற்பாவில் 'பன்மையும் ஒருமையும்' என்ற நான்கடி நூற்பா ஏட்டில் சேர்த்தெழுதப்பட்டு ஒரு நூற்பாவாகக் கருதப்பட்டுள்ள முறை, பொருத்தமானதென்றே புலப்படுகின்றது.

ஆனால் ஏட்டிலும், கா.ந. பதிப்பிலும், கழகப்பதிப்பிலும் பன்மையும்......உயர்திணை மருங்கின்' (வினை.17) என்ற நூற்பா மீண்டும் எழுதப்பட்டு உரையும் எழுதப்பட்டுள்ளது. இவ்வுரைக்கு நுதலியதில்லை யாதலால் இளம்பூரணர் உரையா? என்ற ஐயம் எழுகின்றது. இதனை அடுத்த நூற்பாவிற் காண்க.

**211. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்**
**காலக் கிளவி உயர்திணை மருங்கின்**
**மேலக் கிளவியொடு[2] வேறுபா டிலவே.**

எ...ன் (நுதலியதில்லை)

"பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் ஆகிய பெண் ஆண் என்ற வேறுபாடு தோன்றவந்த வினைக் குறிப்புச் சொற்களெல்லாம் மேற்சொல்லிப் போந்த இருபத்து மூன்று வினைச்சொற்கு ஈறாய எழுத்துக்களினுள்ளனவே தமக்கும் ஈறாவன பிறிதில்லை என்றவாறு".

---

சு.வே: 1 தன்மை வினைக்குறிப்புச் சொல் வருமாறு ஒட்டிக்கொள்க (கா.ந)

பா.வே: 2 மேலைக் கிளவியொடு (கா.ந)

'அன்ன மரபின்' என்றதனான், ஈண்டு உயர்திணைக்கு ஓதிய பொருள் பற்றி அஃறிணை வினைக்குறிப்புந்[1] தோன்றும் என்று கொள்க.

உ.. ம்:- 'வடாது வேங்கடம்; தெனாது குமரி; என்புழி வடாது, தெனாது என்பன வினைக்குறிப்புப் பெயர்.[2] பிறவு மன்ன.

**212. அஆ வஎன வருஉம் இறுதி**
**அப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை.**

எ...ன், அஃறிணைப் பன்மைப்பாற்கு[3] உரிய வினைச்சொல்[4] உணர்த்துதல் நுதலிற்று.

அ-உண்டன, உண்ணா நின்றன, உண்பன என வரும்.

ஆ-உண்ணா, தின்னா என வரும்.

வ-உண்குவ, தின்குவ என வரும்.

"வருஉம் இறுதி அப்பான் மூன்று" என்பது - இறுதி இயை புடைய அப்பான் மூன்று என்றவாறு.

இவை மூன்றுமே அஃறிணைப்பன்மைப் படர்க்கை வினைச் சொற்கு ஈறாம் எழுத்துக்கள் என்றவாறு.

**213. ஒன்றன் படர்க்கை தடற[5] வூர்ந்த**
**குன்றிய லுகரத் திறுதி யாகும்.**

எ...ன், அஃறிணை ஒருமைப்பாற்கு உரிய வினைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று.

"ஒன்றனை அறியும் படர்க்கை வினைச் சொல்லாவன த ட றக்களை ஊர்ந்த குற்றியலுகர[6] வீற்றுச் சொல்' என்ற வாறு".

---

பா.வே: 1 அஃறிணை வினைக்குறிப்புத் (ஏடு)
2 இதுவினைக்குறிப்புப் பெயர் (கா.ந)
3 அஃறிணைப்பாற்கு (கா.ந)
4 வினைச்சொல் என்பது (ஏடு)
5 கிளவியாக்கம் தறட பா-ம் (நூற்.8)
சு.வே: 6 குன்றியலுகர (கா.ந)

உ...ம்:- உண்டது, உண்ணா நின்றது, உண்பது எனவும் கூயிற்று, தாயிற்று எனவும், குண்டுகட்டு, குறுந்தாட்டு எனவும் வரும்.

இனிக் கிளவியாக்கத்துப் பால் உணர்த்தும் எழுத்துக் களைப் படர்க்கை வினைச்சொல் லீற்றவாகக்காட்டியது, இவ் வோத்தினுட் கூறப்பட்ட இலக்கணம் வலித்தாயிற் றென்பது,

**214. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**அம்மூ விரண்டும் அஃறிணை யவ்வே.**

எ...,ன், விரிந்தது தொகுத்தவாறு.

"பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் அறிய வந்த அவ் ஆறு ஈற்றுச் சொற்களும் அஃறிணைக்குரிய வினைச்சொல் என்ற வாறு".

**குறிப்பு:**- விரிந்தது தொகுப்பதை நூற்புணர்ப்பென்பர் (தொல்.சொல்.205)

**215. அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்**
**ஒக்கும் என்ப எவனென் வினாவே.**

எ...ன் (நுதலியதில்லை)

"அஃறிணை இருபாற்கும் பொதுவேயாகி நிற்கும், எவன் என்னும் வினாவினை யுணர நின்ற வினைக்குறிப்புச் சொல் என்றவாறு.

உ...ம்:-எவன் அது, எவன் அவை என வரும்.

பெயருமாம் படுத்துச் சொல்லின்.

**குறிப்பு:**- இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் கூறும் நுதலிய தில்லை. நச்சினார்க்கினியர் இஃது அஃறிணை இருபாற்கும் உரியதோர் வினைக்குறிப்புக் கூறுகின்றதென்பர்.

**எவன் என்னும் பெயர்.**

**தொல்காப்பியர்** வினாப்பெயராக உயர்திணையில் யாவன், யாவள், யாவர் என்னும் பெயர்களையும், அஃறிணையில்

யாது, யா, யாவை என்னும் பெயர்களையுமே கூறுகிறார். எவன், எவள், எவர், எது, எவை என்பனவற்றைக் கூற வில்லை. இவை பிற்காலத்தே பெயராக வழங்கப்படுகின்றன.

**நேமிநாத உரை**, விளியேலாப் பெயர்களைக் கூறும்பொழுது எவன், எவள், எவர் (சொல்.26) என்பனவற்றைக் குறிப்பிடு கிறது. பின்னர் பெயரியலில் உயர்திணைப் பெயரைக் கூறு மிடத்து எவன், எவள், எவர் (சொல்.30) என்பனவற்றையும், அஃறிணைப் பெயரைக் கூறுமிடத்து எது எவை என்பனவற்றை யும் கூறுகின்றது.

**நன்னூல் (66) மயிலைநாதர்** உரை எவன், எவள், எவர், எது, எவை என்பனவற்றையும், ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை என்பனவற்றையும் கூறுகின்றது.

**216. இன்றில வுடைய என்னுங் கிளவியும்**
**அன்றுடைத் தல்ல என்னுங் கிளவியும்**
**பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்**
**பண்பி னாகிய சினைமுதற் கிளவியும்**
**ஒப்பொடு வருஉங் கிளவியொடு தொகைஇ**
**அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்**
**பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**அன்ன மரபிற் குறிப்பொடு வருஉம்**
**காலக் கிளவி ய∴றிணை மருங்கின்**
**மேலக்[1] கிளவியொடு வேறுபா டிலவே.**

எ...ன், அஃறிணை வினைக்குறிப்பு உணர்த்துதல் நுத லிற்று.

"சொல்லப்பட்ட பத்துப் பொருண்மைக்கண்ணும் அஃறிணை வினைக்குறிப்புப் பிறக்கும் என்றவாறு".

இன்று என்பது - கோடின்று, செவியின்று எனவரும்.

இல என்பது - கோடில, செவியில எனவரும்.

---

பா.வே: 1. மேலைக் (கா.ந)

உடைய என்பது கோடுடைய, செவியுடைய என வரும்.

அன்று என்பது - நாயன்று, நரியன்று என வரும்.

உடைத்து என்பது - கோடுடைத்து, செவியுடைத்து என வரும்.

அல்ல என்பது - உழுந்தல்ல, பயறல்ல என வரும்.

பண்புகொள்கிளவி - கரியது, கரிய எனவரும்.

உளவென் கிளவி - உழுந்துள, பயறுள என வரும்.

பண்பினாகிய சினை முதற் கிளவி - குறுங்கோட்டது குறுங்கோட்டன என வரும்.

ஒப்பாடு வருஉங் கிளவி - பொன்னன்னது, பொன்னன்னன என வரும்.

இக் கூறப்பட்ட பத்துப் பொருண்மைக் கண்ணும் வினைக் குறிப்புச் சொற்கள் கொள்ளப்படும் என்றவாறு.

பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் தோன்றி நிற்கும் இலக் கணமுடைய வினைக்குறிப்புச் சொற்கள் மேற் கூறப்பட்ட அஃறிணை வினைச் சொற்கு ஈறாய் நின்று பாலுணர்த்தும் எழுத்துக்களின் உள்ளனவே தமக்கும் ஈறாவன; பிறிதில என்றவாறு''.

**217.** **முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி**
**இன்மை செப்பல் வேறென் கிளவி**
**செய்ம்மன செய்யுஞ் செய்த வென்னும்**
**அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்**
**பிரிவு[1] வேறுபடூஉஞ் செய்திய வாகி**
**இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமைய.**

எ...ன், இருதிணைக்கும் உரிய வினைச் சொற்களைப் பெயரும், முறையும், தொகையும், உணர்த்துதல் நுதலிற்று.

---

பா. வே: 1 பிரிபு வேறுபடூஉஞ் (கல், நச், ஏடு)
திரிபு வேறு படூஉம் (சேனா, தெய்)

"முன்னிலை என்பது முன்னின்றான் தொழின்மை கூறுவது. வியங்கோள் என்பது – ஏவ நிற்பது. வினையெஞ்சு கிளவி என்பது – வினைச் சொல்லை ஒழிபாகி நிற்பது. இன்மை செப்பல் என்பது – இல்லை என்பது. ஒழிந்தன அவ்வாய்பாடே. அவற்றுள் செய்ம்மன என்பது – இப்பொழுது வழக்கரிது. பிரிவு வேறுபடூஉஞ் செய்தியவாய் என்பது – உயர்திணைக்கண் வரின் உயர்திணைக்கே உரிய வென்றும் அஃறிணைக்கண் வரின் அஃறிணைக்கே உரியவென்றும் பிரித்துச் செய்யப்படும் என்றவாறு".

**218.** **அவற்றுள்**
**முன்னிலைக் கிளவி**
**இஐ ஆயென வரூஉ மூன்றும்**
**ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்.**

எ. .ன், முன்னிலை ஒருமைச் சொற்கள் இருதிணைக்கும்[1] உரியவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"முன்னிலைக் கிளவிகளில் இ ஐ ஆய் என்னும் மூன்று திறத்தனவும் இரண்டு திணை ஒருமைப்பால் மூன்றற்கும் ஒப்பவுரியவாம் என்றவாறு".

ஒருவர்க்கும் ஒன்றற்கும்[2] – உயர்திணை ஆண்பாற்கும், பெண்பாற்கும் அஃறிணை ஒருமைப்பாற்கும் என்பது.

உண்டி, தின்றி என இறந்தகாலத்திற்கே பொருத்தமுடைத்தாய் இகரம் வரும்.

இனி ஐ வருமாறு: உண்டனை, உண்ணாநின்றனை, உண்குவை என மூன்று காலமும் வரும்.

ஆய் – உண்டாய், உண்ணாநின்றாய், உண்டாய் என மூன்று காலமும் வரும்.

---

சு. வே: 1 திணைக்கு (ஏடு)
2 ஒருவர்க்கும் ஒன்றற்கும், அச்சுப்பதிப்பில் இல்லை புலிசை ஏட்டில் உள்ளது.

இனி, ஒரு காலத்திற்கே ஏற்கும் இகரம் முற்கூறினமையின் உண், தின், கிட, நட, வா, போ என்னுந் தொடக்கத்தன கொள்க.

**குறிப்பு:**- உண் முதலானவற்றை **நன்னூலார்** ''ஏவலின் வரூஉம் எல்லா வீற்றவும்'' (334) என்பர்.

**மேற்கோள்:**- (சிலப்.பதிகம்) 'விறலோய் கேட்டி' (38) என்பதன் உரையில் ''கேட்டி: இகரவீற்று முன்னிலையொருமை வினைத்திரிசொல், 'இஐ ஆய்' என்னும் சூத்திரத்தான் முடிக்க'' என்பர் **அடியார்க்கு நல்லார்.**

**219. இர்ஈர் மின்னென வரூஉம் மூன்றும்**
**பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்**
**சொல்லோ ரனைய என்மனார் புலவர்.**

எ...ன், முன்னிலைப் பன்மை வினைச்சொல் இவை என்று உணர்த்துதல் நுதலிற்று.

''இக் கூறப்பட்ட மூன்றும் பல்லோர்க்கும் பலவற்றிற்கும் ஒப்ப உரியவாஞ் சொல் என்றவாறு.''

இர்–உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்குவிர் எனவும், ஈர்–உண்டீர், உண்ணாநின்றீர், உண்பீர் எனவும் வரும். இவை மூன்று காலமும் பற்றி வரும்.

மின்–உண்மின், தின்மின் என எதிர்காலம் பற்றி வரும்.

**220. எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி**
**ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே**

எ...ன், ஒழிந்து நின்றவற்றைத் தொகுத்து உரியவாறு உணர்த்துதல் நுதலிற்று.

''அவற்றுள் முன்னிலைக்கு உரியவாகக் கூறப்பட்டன வற்றை ஒழித்து ஒழிந்த வெல்லாம் மூன்றிடத்தும் நின்று இருதிணை ஐம்பாற்கும் உரிய என்றவாறு.

**கழகப்பதிப்பு:-** "பல்லோர் படர்க்கை" (வினை. 28) என்னும் நூற்பாவின் கீழுள்ள 'அவை வருமாறு' என்று தொடங்கும் பகுதியை இந்நூற்பாவின் கீழ் எழுதி, இப்பகுதி முன்னைய பதிப்பில் 222–ஆம் நூற்பாவின் இறுதியில் இருந்தது. எனினும் ஈண்டிருத்தலே தக்கது ஆதலின் இங்குச் சேர்க்கப்பட்டுள்ளது என்று குறிப்பும் எழுதப்பட்டுள்ளது. **இவ்வாறு மாற்றி எழுதுவது ஆராய்வுக்கு நலம்தராது.**

ஆனால், ஏட்டில் இல்லை.

**221. அவற்றுள்**
**முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்**
**மன்னா தாகும் வியங்கோட் கிளவி.**

எ...ன் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

"முன்னிலை தன்மை இரண்டிடத்தும் செல்வனவாகிய வியங்கோள் வினைச்சொல் சிறுவரவின என்றவாறு".

உ...ம்:– நீர் செல்க, நீ செல்க, யான் செல்க எனவரும்.

இனி அவன் செல்க, அவள் செல்க அவர் செல்க; அது செல்க அவை செல்க என்பன பெருவரவினவாம்.

**குறிப்பு:– மன்னாது**

**இளம்பூரணர்** 'மன்னாது' என்பதற்குக் கருத்துப் பொருளாக 'சிறுவரவின' என்பர்.

**சேனாவரையர்** "ஆயீரிடத்தொடு கொள்ளாது, என்னாது, மன்னாதாகும், என்றதனால், அவ்விடத்தொடு சிறுபான்மை வருதல் கொள்க. மன்னுதல் பெரும்பான்மை நிகழ்தல்" என்பர்.

**ஒத்த நூற்பா:**

1. வியங்கோளும்–தேறும்; இடம் மூன்றோடெய்தி இருதிணை ஐம்பாலும்; உடனொன்றிச் சேறலும் உண்டு (நேமி. சொல்.44)
2. "கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
   இயலும் இடம்பால் எங்கும் என்ப"(நன். மயிலை. 337)

**222.** **பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை**
**அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்**
**செய்யும் என்னுங் கிளவியொடு கொள்ளா.**

எ...ன், இதுவும் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

''செய்யும் என்னும் சொல், உயர்திணைப் பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையும் கொண்டு முடிதல் இல்லை என்றவாறு.

என்வே[1], ஒருவன் படர்க்கை, ஒருத்தி படர்க்கை, ஒன்றன் படர்க்கை, பலவற்றுப் படர்க்கை என, நான்குமே அஃது உரித்தாவதென்றவாறு

உ...ம்:- அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும்.

இவ்வாறு விலக்கப்பட்ட வியங்கோட்சொல்லும் செய்யும் என்னும் முற்றுச் சொல்லும் ஒழித்து, ஒழிந்தன வெல்லாம் இருதிணை ஐம்பாற்கு மூன்றிடத்தும்[2] உரிய. வழக்கினகத்துக் கண்டு கொள்க.

அவை வருமாறு:-

இன்மை செப்பல்: யான் இல்லை, நீ இல்லை[3], அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை, அது இல்லை, அவை இல்லை என வரும்.

வேறு என் கிளவி: யான் வேறு, நீ வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு என வரும்.

செய்ம்மன: யான் செய்ம்மன, நீ செய்ம்மன, அவன் செய்ம்மன, அவள் செய்ம்மன, அவர் செய்ம்மன, அது செய்ம்மன, அவை, செய்ம்மன என வரும்.

---

சு.வே: 1 என (ஏடு)

2 இருதிணை ஐம்பாற்கும் மூன்றிடத்திற்கும் (கா.ந)

3 யாம் இல்லை; நீஇர் இல்லை வேண்டும். யாம் வேறு; நீஇர் வேறு கொள்க

**223. செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி.**

**224. பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
அன்ன மரபிற் காலங் கண்ணிய
என்ன கிளவியு மவற்றியல் பினவே.**

இவ்விரண்டு சூத்திரமும் உடன் எழுதப்பட்டது உரை இயைபு நோக்கி.

எ...ன், வினையெச்சங்களைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

"செய்து செய்யூ என்பது முதலாக ஒன்பதும், 'பின்முன் என்னுந் தொடக்கத்தன ஆறும், ஆக இவை பதினைந்தும் வினையெச்ச வினைச்சொல் என்றவாறு.

வினையை ஒழிபாக நிற்றலின் வினையெச்சம் எனப்பட்டன.[1]

இனி, என்ன கிளவியும் என்றதனான், உண்பான் வந்தான், உண்பாக்கு வந்தான் எனப் பிறவும் இவ்வாறு வருவன கொள்க.

'செய்து' என் எச்சம் முன் வைத்தார்; இறந்த காலத்ததாதலானும் பல விற்றதாகலானும் என்பது.

**குறிப்பு:-** பிற உரையாசிரியரெல்லோரும் மேல் நூற்பாவை இரண்டாகவே கொண்டு தனித்தனியாக உரை எழுதியுள்ளனர். **இளம்பூரணர்** இரண்டு நூற்பாவிற்கும் ஒன்றாகவே உரை எழுதுகின்றார். எண்ணும் இரண்டு நூற்பாவையும் ஒன்றாகக் கருதி 29 என்றே கொடுக்கப்பட்டுள்ளது ஏட்டில்.

**225. அவற்றுள்
முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின.**

எ...ன், முதற்கண் நின்ற மூன்று எச்சத்திற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

---

சு.வே: 1 எனப்பட்டது (கா.ந)

"அம் முதற்கண் நின்ற மூன்றும், அவ்வினை யாக்கிய அம்முதல் கொண்டு முடியும் என்றவாறு".

உ...ம்:- உழுது வந்தான்; உண்ணூ வந்தான்; நகுபு வந்தான் எனத் தத்தம் வினைமுதல் கொண்டு முடிந்தவாறு.

உண்ணூ வந்தான் என்பது, இப்பொழுது வழக்கினுள் உண்ணா வந்தான் என நடக்கும்.

**226. அம்முக் கிளவியுஞ் சினைவினை தோற்றிற்**
**சினையொடு முடியா முதலொடு முடியினும்**
**வினையோ ரனைய என்மனார் புலவர்.**

எ...ன், அம்மூன்றன் திறத்துப் படுவதோ ரிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"அவை மூன்றும் ஏற்ற வினைமுதலானே முடியும் எனப் பட்டன. சினைப் பொருளது வினையெச்சமாயக்கால் அச் சினைச்சொற்பொருள் நிற்ப[1], அச்சினைப் பொருளது முதல் கொண்டு முடியினும் அமையும் என்றவாறு".

கையிற்று வீழ்ந்தான், கையிறூ வீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான் என வரும்.

'முதலொடு முடியினும்' என்ற உம்மை சிறப்பும்மை. அத னால் சினையொடு முடிதலே வலியுடைத் தென்பதூஉமாம்.

அது கையிற்று வீழ்ந்தது, கையிறூ வீழ்ந்தது. கையிறுபு வீழ்ந்தது என வரும்.

**குறிப்பு**:- சிறப்பும்மை - இழிவு சிறப்பும்மை என்க.

**227. ஏனை யெச்சம் வினைமுத லானும்**
**ஆன்வந் தியையும் வினைநிலை யானும்**
**தாமியன் மருங்கின் முடியு மென்ப.**

---

1 அச்சினைப் பொருள்நிற்ப என்ற பாடம் நன்று

**எ...ன், ஒழிந்து நின்ற வினையெச்சத்திற்கு முடிபு உணர்த்து தல் நுதலிற்று.**

"அக் கூறப்பட்ட மூன்று மன்றி, ஒழிந்து நின்ற வினையெச்ச மாயின வெல்லாம், அம்மூன்று போலத் தத்தம் வினைமுதல் கொண்டு முடிதலும், அவ்விடத்தின் வந்து பொருந்திய பிற வினையான் முடிதலும் உடைய என்றவாறு".

இனி, அவை வினைமுதலானே முடியுமாறு:
மழை பெய்தென அறம் பெற்றது;[1] மழைபெய்யப் பயிர் எழுந் தது எனவரும். பிறவுமன்ன.

இனி, ஆன்வந்தியையும் வினைநிலையான் முடிவன வரு மாறு: மழைபெய்தென உலகம் ஆர்ந்தது, மரம் குழைத்தது என வரும். பிறவும் அன்ன.

இனித் தாமியன் மருங்கின் என்றதனால் உழுது வருதல், உழுது வந்தேன் என வினையெச்சம் தொழிற்பெயரொடு முடிதலும் முடிக்க[2].

மற்று, 'ஏனையெச்சம்' கொடாதே[3] ஈண்டு இலேசு காட்டுவ தெனின் (காட்டுவதென்னெனின்) 'தானியன் மருங்கின்', என் னாது தாமியன் மருங்கியன், என்றதனான் அது முதனிலை மூன் றெச்சங்களும் தொழிற்பெயரொடு முடிதலும் முடிக்க என்றற் குச் சொல்லப்பட்டது.

**குறிப்பு:- ஆன் வந்தியையும்**

**இளம்பூரணர்** 'ஆன்' என்பதற்கு 'அவ்விடம்' என்று பொருள் எழுதுகிறார்.

ஆன், ஈன் என்பன அவ்விடம் இவ்விடம் என்னும் பொருளின. தொல்காப்பியர் அவ்விரண்டினையும் தொல்-எழுத்து "மன்னுஞ் சின்னும் ஆனும் ஈனும்" (334) என்னும் நூற்பாவில் கூறியுள்ளார்.

---

சு. வே: 1 வளம் பெற்றது (க.ந)
புகழ்பெற்றது (சேனா)
2 முடிக என்று கொள்க (கா.ந)
3 கெடாதே (ஏடு)

**எடுத்தாளப்பட்ட இடம்**

"ஆன்வந்தியையும் வினைநிலையானும், (வினை.33) என்று **தொல்காப்பியரும்**, (ஈனோர் வடிவில்'(சிலப்.பதி.) என **இளங்கோ வடிகளும்** "ஈனோர்க்கெல்லாம் இடர்கெட வியன்றது" (மணி. 28. 132) எனச் **சாத்தனாரும்**, ஈனோர்க் குரைப்பாம் பதிகத்து ளியன்றவாறே" (சிந்தா.29) எனத் **திருத்தக்கதேவரும்** கூறுவர்.

பிரயோக விவேக (33) உரையுள் "ஆன் என்பது" அதுச் சொல் வேற்றுமை உடைமை யானும்; கண்ணென் வேற்றுமை நிலத்தினானும் எனப் பெயரின் பின்னின்று ஏழனுருபுமாய், "வினை முதலானும் ஆன்வந்தியையும் என ஏழாம் வேற்றுமை இடப் பொருளுணர்த்தும் இடைச் சொல்லுமாய் ஆங்கு என்னும் பொருளுணர்த்திநின்று, அவ்வியய தத்திதனாயிற்று" என்பர் அதன் உரையாசிரியர்.

**உதாரணத்துள்:**

மழை பெய்தென அறம் பெற்றது என்பது புலிசை, துறைசை இரண்டு ஏடுகளிலும் கண்ட பாடமாகும். இதற்கு மழை பெய்தென அம்மழை அறம் பெற்றது என்பது பொரு ளாகும்.

**சேனாவரையர்** முதலியோர் 'மழை பெய்தெனப் புகழ் பெற்றது' என்று உதாரணம் காட்டுவர். இவை வினையெச்சம் தத்தம் வினைமுதல் வினைகொண்டு முடிதற்குதாரணமாகும். கா.ந–பதிப்பில் 'மழைபெய்தென வளம் பெற்றது' என்ற உதாரணம் வினைமுதல் வினை கொண்டு முடிதற்குப் பொருந் தாது. 'மழை பெய்யப் பயிர் எழுந்தது' என்ற உதாரணத்தில் 'பயிர்' என்பது 'ஒலி' என்ற பொருளில் வந்துள்ளது.

"தாமியன் மருங்கின் என்றதனால்" என்ற சொற்றொடருக் குக் கீழே வந்துள்ள தொழிற்பெயர் என்ற சொல் 'வருதல்' என்ற தொழிற் பெயரையும், 'வந்தேன்' என்ற வினையாலணை யும் பெயரையும் குறிக்கும்.

**228. பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி**
**சொன்முறை முடியா தடுக்குந[1] வரினும்**
**முன்னது முடிய முடியுமன் பொருளே.**

சு.வே: 1 அடுக்குன (ஏடு)

எ..ன், 'இன்னும் அவ்வெச்சங்கள் திறத்தே படுவதொரு முடிபு கூறுதல் நுதலிற்று.

'பல எச்சம் உடனடுக்கிவந்து பின் இறுதிக்கண் ஒன்றற்கேற்ற முடிபு ஏற்றக்கால்' அதனால் அவ்வெச்சமெல்லாம் முடிந்த பொருளவாகி முடிபு கொள்ளும் என்றவாறு.

உ..ம்:- உழுது உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான் என வரும்.

இஃது ஓரினத்து எச்சம் பல அடுக்கி வந்தது. அவற்றுள் பாடி என்பது வந்தான் என்னும் முடிபுகொண்டு முடிந்தது. அம்முடிபே அவ்வடுக்கிநின்ற பிற எச்சங்கட்கும் முடிபாயிற்றென்பது.

எனவே, அது முடியாக்கால் ஒழிந்த எச்சங்கள் முடியா என்பதாம்.

இனிப் பல இனத்து எச்சம் அடுக்கிவருமாறு வழக்கினகத்துக் கண்டு கொள்க.

**குறிப்பு:**-வினையெச்சம் அடுக்குங்கால் ஓரினத்து எச்சமும் அடுக்கும்; பல இனத்து எச்சமும் அடுக்கும். உழுது, உண்டு தின்று, ஓடிப் பாடி என்னும் எச்சங்கள் எல்லாம் செய்து என்னு ஓர் வாய்பாட்டன ஆதலால் ஓரினத்து எச்சமாயின. உண்டு பருகூத் தின்குபு என வரின் வெவ்வேறு வாய்பாட்டன ஆதலால் பல இனத்து எச்சம் அடுக்கின. இவை வந்தான் என முடியும்.

**229.** **நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்**
**வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட**
**அவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய**
**செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே.**

எ..ன், செய்யும் செய்த எனப்பட்ட இரண்டு பெயரெச்சத்திற்கும் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

"சொல்லப்பட்ட ஆறு சொல்லொடு முடியும் அவ்விரண்டு எச்சமும்[1] என்பது".

---

1 அவ்விரண்டு எச்சம் (கா.ந)

அவற்றுட் செய்யும் என்பது, பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை யொழித்தொழிந்த நான்கு பாற்கண் வருமாறு ஈண்டுக் காட்டுதும்.

ஒழிந்தனவும் மேல் வருகின்ற சூத்திரத்தாற் பெறுதும்.

இல்லம் (நிலன்):- அவன் உண்ணும் இல்லம், அவள் உண்ணும் இல்லம், அது உண்ணும் இல்லம், அவை உண்ணும் இல்லம் என வரும்.

பொருள்:- அவன் செய்யும் பொருள், அவள் செய்யும் பொருள், அதுசெய்யும் பொருள், அவை செய்யும் பொருள் என வரும்.

காலை: அவன் ஓதும் காலை, அவள் ஓதுங்காலை, அது ஓதுங்காலை, அவை ஓதுங்காலை என வரும்.

கருவி: அவன் எறியுங்கல், அவள் எறியுங்கல், அது எறியுங்கல், அவை எறியுங்கல் என வரும்.

வினைமுதற்கிளவி: உண்ணும் அவன், உண்ணும் அவள், உண்ணும் அது, உண்ணும் அவை என வரும்.

வினை: இவன் உண்ணும் ஊண், அவள் உண்ணும் ஊண், அது உண்ணும் ஊண், அவை உண்ணும் ஊண் என வரும்.

இனிச் செய்த என்பது, மூன்றிடத்தொடுஞ் சிவணி ஐந்து பாற்கும் உரித்து. அது வருமாறு: அவன் உண்ட இல்லம், அவள் உண்ட இல்லம், அவர் உண்ட இல்லம், அது உண்ட இல்லம், அவை உண்ட இல்லம் என வரும்.

ஒழிந்த பொருளும் காலமும் கருவியும் வினைமுதற்கிளவியும் வினையும் இவ்வாறு ஒட்டிக் கொள்க.

மற்று, மேல் செய்த என்பது முடிபு கூறப்படாமையின் அதற்கே கூறுக; செய்யும் என்பதற்கு முடிபு ஈண்டுக் கூறியதென்னையெனின்? செய்யும் என்பது மேல் முற்றுச் சொல்லாய் நின்ற நிலைமை நோக்கிக் கூறினார். ஈண்டு, எச்சமாய் நின்ற நிலைமை நோக்கிக் கூறுகின்றாரென்பது.

மற்று, முற்றுச் சொல்லாய் நின்ற[1] நிலைமையும் எச்சமாய் நின்ற நிலைமையும் தம்முள் வேற்றுமை அறியுமாறு என்னை? இருநிலைமைக்கண்ணும் பெயர்கொண்டு முடிதல் ஒக்கும் பிற வெனின், செய்யும் என்பது,முற்றாய நிலைமைக்கண் பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை யொழித்து ஒழிந்த நான்கு பாலையும்[2] தன் ஈற்றகத்துக்கண் ஒருவாற்றாற் கொண்ட அப் பெயரானே அமைந்துமுடியுமாறும், அஃது எச்சமாய நிலைமைக் கண் முடிபாய் வரும்பெயர்க்கு அடையாய் நிற்கும். எனவே, எச்சமான நிலைமைக்கண் முடிபாக வரும் பெயர், பயனிலை செப்பலும், உருபேற்றலும் உடையவாயிற்று.

**குறிப்பு:- ஏச்சம் பெயர்க்கு அடை**

''எச்சம் என்று ஒன்றில்லை இவை அடை என்றும்'' (இல.கொத்.34) அட்ட சோறு, சொன்ன மொழி; உண்டு பசி தீர்ந்தான், உறங்கி விழித்தான் இவை அடையாய் நிற்றலே யன்றி, வேறு பயன்படும் பொருளின்றாகலான் எச்சம் என்று ஒன்றிலை அடைமொழியே என்பர்.

**230. அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி[3]**
**முதற்கண் வரைந்த மூவீற்றும்[4] உரித்தே.**

எ...ன், செய்யும் என நின்றதற்கு வேறோர் முடிபு தெரிந் துணர்த்துதல் நுதலிற்று.

''செய்யும் என்னும் சொல் மேற்சொல்லப்பட்ட நிலந் தொடக்கத்து ஆறனொடு வருவழி, மேல் வரைந்தோதப்பட்ட பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மைகளையும் கொண்டு முடியும் என்றவாறு''.

மேல், முற்றாய் நின்ற நிலை விளக்கினார் ஆண்டு;

---

1 நிலையும் (ஏடு)
2 ஒழிந்த தான பாலையும்(ஏடு)
பா.வே: 3 செய்யும் கிளவி (தெய்வ)
சு.வே: 4 ஈற்றும் (ஏடு)

ஈண்டு எச்சமாய் நின்ற நிலைமக்கண்ணாயின், அவ்விடங்கட்கு உரித்தென்றே எய்துவித்தார் என்பது.

**இல்லம் (நிலம்)**: யான் உண்ணும் இல்லம், யாம் உண்ணும் இல்லம்; நீ உண்ணும் இல்லம், நீஇர் உண்ணும் இல்லம்; அவர் உண்ணும் இல்லம் என வரும். ஒழிந்த பொருண் முதலான ஐந்தையும் இவ்வாறே ஒட்டிக் கொள்க.

**231. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்**
**எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா.**

எ ..ன், எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று

பெயரெச்சம் வினையெச்சம் என்று கூறப்பட்ட இருதிறத்தவும் எதிர்மறுத்துச் சொல்லினும் தம் பொருணிலைமையிற் றிரியா என்றவாறு''.

உ...ம்:- உண்ணுஞ் சாத்தான் என்பது, உண்ணாச் சாத்தன் என்பதற்கும் அதுவே; பிறிதில்லை.

இனி, வினையெச்சம்: உண்டு வந்தான் என்பது, உண்ணாது வந்தான் என வரும்.

பிறவும், இவ்வாறே எதிர்மறுப்பன[1] ஒட்டிக் கொள்க.

மற்று, முற்றுச்சொல் உண்டான்[2] சாத்தன் என்புழி, உண்ணான் சாத்தன் என எதிர்மறுப்பினும், முற்றுச் சொல்லியல்பிற் றிரியா தாகலின், அதற்குக் கூறுக வெனின், அற்றன்று; முற்றுச் சொற்களையெல்லாம் ஈறுபற்றி ஓதினாராகலின், எதிர்மறையும் ஆண்டே அடங்கும்.

பெயரெச்ச வினையெச்சங்களையாயின் 'செய்து செய்பு' (வினை.29) எனவும், 'செய்யும் செய்த' (வினை.35) எனவும், அவைதம்மை எடுத்தோதினார். அவற்று மறை பிறவா கொல்லோ என்று கருதினுங் கருதற்க என்றற்கு இது கூறப்பட்டது.

---

சு.வே: 1 எதிர்மறுப்பல் என்பது எதிர்மறுப்ப வென்பது (ஏடு)
2 உண்பன் (கா.ந)

**232. தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்.**

எ...ன், இன்னும் அவ்வெச்சங்கட்கு முடிபு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

"இவ்விருவகை எச்சத்திடையும் பிற சொற்களும் புகுதப் பெறும்; அவ்வெச்சத்திற்கு அவ்வழிப் பொருத்தமுடையன தாம் எச்சமலாதன என்பது".

உ...ம்:- 'உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே' என்புழி. இன்றி என்னும் (குறிப்பு) வினையெச்சத்திற்கு முடிபு உண்க என்னும் வியங்கோட் சொல். இனிப் புற்கை என்பது இடைநிலை.

இனிப் பெயரெச்சத்திற்கு உதாரணம்:

அடுஞ்செந்நெற்சோறு, அட்ட செந்நெற்சோறு என்புழி செந்நெல் என்பது இடைநிலை. பிறவும் அன்ன.

"சிவணுங் குறிப்பின் எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்" எனச் சிவணாக்குறிப்பின வரையப்படும் என்ப தாம்.

**233. அவற்றுள்
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகரம்
அவ்விட னறித லென்மனார் புலவர்.**

எ...ன், அவ்வெச்சங்களுள் செய்யும் என்னும் பெயரெச்சத்திற்குப் படுவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

"செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெடுமிடம் அறிக வழக்கினகத்து என்றவாறு".

'வாவும் புரவி, என்பது 'வாம்புரவி' என்றாயிற்று.

---

சு.வே: 1 அவ்வெச்சத்திற்குப் பொருத்தமுடையன தாம் என்றவாறு (கா.ந)

'அவ்விடனறிதல்' என்றதனான், "அம்ப லூரு மவனொடு மொழிமே" என்புழி மொழியும் என்பது[1] மொழிம் என்றாயிற்று.

'அவ்விடனறிதல்' என்றதனான் மெய்யொழிந்து கெடுதலு முடைத்து. அது 'சாரனாடவென் றோழியுங் கலுழ்மே' என்புழிக் கலுழும் என்பது கலுழ்ம் என்றாயிற்று, பிறவும் அன்ன.

**குறிப்பு:-** "வாம் புரவி' செய்யும் என்னும் பெயரெச்சத்திற் கும், 'அம்பலூரும்' என்பதும், 'சாரனாட' என்பதும் செய்யும் என்னும் முற்றிற்கும் எடுத்துக்காட்டாம்.

தொல்காப்பியர் கருத்தையும் இளம்பூரணர் உரைக் கருத்தையும் கொண்டெழுந்தது 'செய்யுமெனெச்சவீற்று, (340) என்னும் நன்னூல் நூற்பா.

**234. செய்தெ னெச்சத் திறந்த காலம்**
**எய்திட னுடைத்தே வாராக் காலம்.**

எ...ன், கால வழுக் காத்தல் நுதலிற்று.

"இறந்தகாலத்துச் செய்து என் எச்சம், ஒழிந்த நிகழ் காலமும் எதிர்காலமும் கொள்வழியுடைத்து என்றவாறு".

உ...ம்:- உழுது வருஞ் சாத்தன், உண்டுவருஞ் சாத்தன் என்புழிச் செய்தெனெச்சம் நிகழ்காலத்திற்கேற்றது. கொடி யாடித் தோன்றும் என்பது. (என்பதும் அது) என்னை? தோற்றமும் ஆட்டமும் உடனிகழு மாகலினென்பது.

'இனி உழுது வருஞ்சாத்தன்; 'இனி உண்டு வருஞ் சாத்தன்' என்புழிச் செய்தெனெச்சமானது எதிர்காலத்திற் கேற்றது பிறவும் அன்ன.

**குறிப்பு:-** புலிசை, துறைசை ஏடுகளிற் கண்ட பாடப் படி உதாரணப்பகுதியைத் தந்துள்ளேன். அச்சுப்பிரதியில் உழுதுவரும் சாத்தன் உண்டுவருஞ் சாத்தன் என்னும் சொற் றொடர்கள் நீக்கப்பட்டுச் "செய்தெனெச்சம் நிகழ்காலத்திற்கு

---

[1] என்றது

ஏற்றது கொடியாடித் தோன்றும் என்பது; என்னை தோற் றமும் ஆட்டமும் உடனிகழுமாகலின் என்பது'' என்ற பகுதி மட்டும் கொடுக்கப்பட்டுளது.

ஏடுகளிற் கண்ட பாடமே சிறந்ததென்க. நிலத்தில் நேருக்கு நேராக உழுதுவருபவனை 'உழுது வருஞ்சாத்தன், என்பர் ஆதலால் அது நிகழ்காலத்திற்கு ஏற்கும் என்க. இரண் டாவது காட்டப்பட்ட உதாரணம் 'இனி உழுதுவருஞ் சாத் தன்' என்பதாகையால் எதிர்விற்கும் பொருந்து மென்க.

**235. முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை**
**எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து**
**மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்.**

எ...ன், ஒரு சார் வினைச்சொற்கெல்லாம் பொதுவாய தோர் கால முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

மூன்று காலமும் புலப்படச் சொல்லும்[1] பாட்டியல்பின வாகிய எவ்வகைப் பொருள்களையும், நிகழுங்காலத்துப் பயின்று மூன்று காலத்திற்கும் பொதுவாகிய செய்யும் என் னும் சொல்லாற் சொல்லுக என்றவாறு.

உ...ம்:- மலை நிற்கும்; யாறு ஒழுகும் என வரும்.

**குறிப்பு:-** உம்மைச் சொல் (செய்யும்) வருங்காலத்தையே காட்டாது மூன்று காலத்திற்கும் பொதுவாய் நிற்கும் என் றறிக. (திருக்கோ.1 உரை)

இந்நூற்பா. திருக்கோ. 1. மேற்கோள்.

**236. வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்**
**ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி**
**இறந்தகா லத்துக் குறிப்பொடு கிளத்தல்**
**விரைந்த பொருள என்மனார் புலவர்.**

எ...ன், இதுவும் வினைச்சொற்குப் பொதுவாயதோர் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

---

சு.வே: 1 புலப்படச் சொல்லாப் (கா.ந)

"எதிர்காலத்துப் பொருளையும் நிகழ்காலத்துப் பொருளையும் இறந்தகாலத்துப் பொருளாகச் சொல்லுக விரைவு நிலைமைக்கண் என்றவாறு".

சோறு வேவ, இருந்து பாணியாநின்றுழிப், புறத்தானொருவன், போகவேண்டுங் குறைப்பொருட்டாக, 'இன்னும் உண்டிலையோ, போதாயோ' என்றக்கால், 'உண்டேன், போந்தேன் என்னும் உண்ணாதிருந்தானே எனினும்;

'உண்டேன், போந்தேன்' என்னும் உண்ணாநின்றானே எனினும். பிறவும் அன்ன.

**237. மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி**
**அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி**
**செய்வ தில்வழி நிகழுங் காலத்து**
**மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.**

எ...ன், இதுவும் காலவழுஉக் காத்தல் நுதலிற்று.

"**மிக்கதன் மருங்கின்** என்பது – உலகத்தாரால் சிறந்ததென்று மதிக்கப்பட்டதன்கண் என்றவாறு;

**வினைச்சொற் சுட்டி** என்பது – வினையாகிய சொல்லைச் சுட்டி என்றவாறு;

**அப்பண்பு குறித்த** என்பது - ஆண்டை வினையது பயனாகிய குணத்தைக் குறித்த என்றவாறு;

**வினமுதற் கிளவி** என்பது - அச்செய்கை செய்தானை நுதலின சொல் என்றவாறு;

**செய்வதில் வழி** என்பது செய்கை முடியாத நிலைமைக்கண் என்றவாறு;

**நிகழுங் காலத்து மெய்பெறத் தோன்றும் பொருட்டாகும்மே** என்பது – அது நிகழுங் காலத்துச் சொல்லுஞ் சொல் பிழையாது என்றவாறு".

உ...ம்:- அறஞ்செய்தான் சுவர்க்கம் புகும். தாயைக் கொன்றான் நிரயம் புகும் என வரும்.

அறம் என்பது மிக்கதொன்று. அதனை ஆக்கினான் அவ்வழிச்[1] சேறல் ஒருதலையாகலாற் (சுவர்க்கம்) புகுகின்றாரைக்

சு.வே: 1 அவ்வுழிச் (கா.ந)

கண்டான் போலப் 'புகும்' என்று நிகழும் காலத்தாற் சொல்ல அமையும் என்பது.

**238. இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி**
**இருவயின் விலையும் பொருட்டா கும்மே**
**தன்பா லானும் பிறன்பா லானும்[1].**

எ...ன், முற்றுச்சொல் பொருள்படும் முறைமை உணர்த்துதல் நுதலிற்று.

"இது செயல் என்னும் வாய்பாட்டுச்சொல் சொல்லப் படும் ஒருவன்மேல் நிற்கற்பாலது. அது பிறவயின் நோக்கியும் நிற்கும் என்றவாறு.

உ...ம்:- சாத்தன் ஓதல் வேண்டும் என்றக்கால் ஓதற் றொழில்[2] வேண்டுவான் சாத்தன் என்றுமன் ஆகற்பாலது; அவ்வாறன்றிச் சாத்தன் ஓதல் வேண்டும், யார்? தந்தைதாய் எனவும் நிற்கும் என்பது.

**239. வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்**
**எதிர்மறுத் துணர்த்தற் குரிமையு முடைத்தே.**

எ...ன், இதுவும், வினைச்சொற் படும் பகுதி வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

"**வன்புற வரூஉம்** என்பது - திட்பஞ் செய்தற்கு வரூஉம் என்றவாறு;

**வினாவுடை வினைச் சொல்** என்பது - ஆ,ஏ,ஓ (நூன். 32 என்னும்) வினாவினையுடைத்தாய் வரும் செய்கைச் சொல் என்றவாறு;

**எதிர்மறுத் துணர்த்தற்கு உரிமையு முடைத்தே** என்பது- மறுதலைப்பட உணர்த்துதற்கு உரிமையுமுடைத்து என்றவாறு".

உ...ம்:- ஒருவனை, ஒருவன், வைதேனா என்று வையாமையை வலியுறுத்தற்கு வினாயக்கால், அது வைதேன் என்று நேர்வுபடும் என்றவாறு.

---

சு.வே: 1 தன்பாலாயினும் பிறன்பாலாயினும் (ஏடு)
2 ஏட்டில் 'ஓதல்த் தொழில்' என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் இப்படியும் எழுதினர் போலும்.

உம்மை எதிர்மறை யாகலாறு 'வைதிலேன்,[1] என்று நேர்வு படுஞ் சிறுபான்மை.

**240. வாராக் காலத்து வினைச்சொற் கிளவி**
**இறப்பினும் நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்றும்**
**இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை.**

எ...ன், இதுவுங் கால வழூஉக் காத்தல் நுதலிற்று.

"எதிர் காலத்துச் செயற்கைச் சொல் அஃது இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கொள்ளும்; இயற்கைக்கண்ணும், தெளிவின் கண்ணும் சொல்லுமிடத்து என்றவாறு".

'இயற்கை' என்பது அதன்மேற்றீமை வரும் என்றுணர்ந்த பெற்றி.

'தெளிவு' என்பது, ஒருநூன் முடிபானும் பிறிதானுங் கண்டு தெளிதல்.

உ...ம்:- இக்காடுபோகிற் கூறை கோட்பட்டான்; கூறை கோட்படும். இஃது இயற்கை.

இனித்தெளிவு: எறும்பு முட்டை கொண்டு தெற்றி ஏறின் மழை பெய்தது; மழை பெய்யும் என்பது.

'சிறப்புத் தோன்றும்' என்பது அவ்விரு காலத்தானும் சொல்லப் பிழையாது, யாப்புற்றுப் புலப்படும் என்றவாறு.

**241. செயப்படு பொருளைச் செய்தது போலத்**
**தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே.**

எ...ன், இதுவும் ஒருவகை வழூஉச்சொல் அமைந்தமை நுதலிற்று.

"வினைக்கண் செய்கை யீறாச் செயப்பட்ட பொருளைத்[2] தான் செய்கை செய்ததனைப் போல[3] அதற்குத் தொழிற்படக்

---

சு.வே: 1 வைதிலன் (துறைசை)

2 செய்கை யீறாய் அச் செய்யப்பட்ட பொருளை (ஏடு)

3 செய்தது போல (கா.ந)

கூறலும்[1] உண்டு வழக்கு அடிப்பட்ட மரபிலக்கணம் என்றவாறு''.

உ...ம்:- இல்லம் மெழுகிற்று. சோறு அட்டது என வரும்.

**குறிப்பு:-**

1. இத்தொல்காப்பிய நூற்பாவினை **நன்னூலாசிரியர்** (நன்.399) தம் நூலுள் எடுத்தமைத்துக் கொண்டுள்ளார்.

2. இந்நூற்பாவிற்கு வேண்டும் விளக்கத்தை இறையனார். களவியல் 18–ஆம் நூற்பாவில் 'அறியக் கிளந்த இடம்' என்பதற்குக் கூறியுள்ள விளக்கவுரையிற் காண்க.

3. **இளம்பூரணர்** எழுதும் உரை ''வினைக்கண் செய்கை யீறாச் செயப்பட்ட பொருளை'' என்று உள்ளது. 'செய்கை யீறா' என்றால் பொருள் விளங்கவில்லை. 'செய்கை உறச் செயப்பட்ட பொருளை' என்று பாடங்கொள்ளின் பொருந்தும் ஏடுகளில் இப்பாடம் கிடைக்கவில்லை.

4. இந்நூற்பாவிற்குச் **சங்கரநமச்சிவாயர்** கூறும் உரை நன்றாக உள்ளது. அதனை ஆண்டுக்காண்க.

**242. இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்**
**சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி.**

எ...ன், இதுவும் கால வழூஉக் காத்தல் நுதலிற்று.

''இறந்த காலமும், எதிர் காலமும் தம்முள் மயங்கி வரப் பெறும் என்றவாறு''.

உ...ம்:- யாம் பண்டு விளையாடுவது இக்கா. பண்டு என்பது இறந்த காலம்; விளையாடுவது என்பது எதிர்காலம்; விளையாடிற்று என்றுமன் ஆகற்பாலது; அஃது எதிர்காலமுங் கொண்டது விளையாடுவதென்று.

(அ) முன்னும், இறந்த காலமும் எதிர்காலமும்

---

பா.வே: 1 தொழிற் கூறலும் (கா.ந)

நிகழ்காலமும் எல்லாம் மயங்குமாறு சொல்லி வைத்தார்.

(ஆ) இனி உடன் றொகையாக உணர்த்தியவாறு.

சிறப்பத் தோன்றும் என்பது சாலவுள்ளவழக்கு என்பது.

**குறிப்பு:-** (அ) 'முன்னும்' என்றது அடுத்த நூற்பாவை.

(ஆ) 'இனி' என்றது இந்நூற்பாவை.

**243. ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்.**

எ...ன், இனி ஒழிந்த காலமும் இறப்பினொடு மயக்குமாறு உணர்த்துதல் நுதலிற்று,

"**ஏனைக் காலமும்** என்பது – ஒழிந்த காலமும் என்றவாறு. **மயங்குதல் வரையார்** என்பது மயங்கி வரும் மரபினை வரையார் இவ்விறப்புக் காலத்தொடு என்றவாறு".

வரலாறு: யாம் பண்டு விளையாடும் கா; பண்டு, என்பது இறந்த காலம்; விளையாடும்; செய்யும் என்னும் நிகழ்காலச் சொல் வந்து முடிந்தது. வரையார் என்பது **மற்றாசிரியர்** என்றவாறு.

மூன்று காலமும் மயங்கும் தம்முள் என்பது நேர்ந்தானாம் ஆசிரியன்; அஃதே யெனின், மூன்று காலமு மல்லது கால மில்லை; அவை மூன்றுந் தம்முண் மயங்குமென்றக்கால், வழூஉ வென்ற தில்லையாம் பிறவெனின், அற்றன்று. எவ்வாற்றானும் மயங்கா மூன்று காலமும்; மேற்காட்டின உதாரண முடிபு போல்வன படுவழி வழக்கிற்கு ஏற்றவாறு மயங்கும் அன்ன வழக்கு உள்வழி என்பது.

**குறிப்பு:- துறைசை** ஏட்டில் வினையியல் முடிவில் "வடிவுடை நாயகி துணை" என்று எழுதப்பட்டுள்ளது.

**வினையியல் முற்றும்.**

## 7. இடைச்சொல்லியல்

**244. இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே.**

எ...ன், என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், இடைச்சொல் லியல் என்னும் பெயர்த்து.

இச் சூத்திரம் இடைச்சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(உரையில்லை)

உ...ம்:- 'அதுமன்' (புறநா.147) என்பது பெயரொடு நடை பெற்றது. (வினையொடு நடைபெற்றதற்கு உதாரணம் இல்லை' சேனாவரையர் ''வருகதில் லம்மவெஞ் சேரி சேர'' (அகநா.276) என்று உதாரணம் காட்டுவர்)

தமக்கியல்பிலவே என்றதனான், இடைச்சொற்கள் பக வின்றியே நின்றிசைப்பனவும் உள என்றவாறு.

உ...ம்:- 'உண்டான்' என்னுந் தொடக்கத்தன.

**குறிப்பு:-** **இளம்பூரணர் உரை எழுதியுள்ள புலிசை ஏட்டில்** ''பெயரியல், வினையியல், **இடைச்சொல்லியல், உரிச்சொல் லியல்**'' என்று இவ்வியல்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன, **நன்னூல் மயிலைநாதர்** உரையிலும், இவ்வாறே எழுதப்பட்டுள் ளன. **நேமிநாதம்** சிறிது மாறுபட்டு பெயர்மரபு, வினைமரபு, இடைச்சொன் மரபு, உரிச்சொன் மரபு என்று இயல்களுக்குப் பெயர் கூறும்.

இளம்பூரணர் உரையுள்ள **துறைசை ஏட்டில்** இடையியல் உரியியல் என்றே இயல்களின் பெயர் எழுதப்பட்டுள்ளன. ஏனைய தொல்காப்பிய உரையாசிரியர் எல்லோரும் இவ்வாறே கூறுகின்றனர்.

நன்னூல் உரையாசிரியராகிய **சங்கரநமச்சிவாயர்** இடையியல், உரியியல் என்றே பெயர் கூறுகின்றார்.

இவ்வாறு எழுதுதற்குரிய காரணம் ஆராயத்தக்கது.

**குறிப்புரை:- இடைச்சொல்**

1. "சுடுபொன் மருங்கிற் பற்றா சேய்ப்ப
இடைநின் றிசைப்ப திடைச்சொல் லாகும்."
**வாய்ப்பியம்** (**யா.க.**வி.கழ.578)

2. இடைச்சொல்லும் உரிச்சொல்லும், தொல்காப்பியம் தக்காணியம், அவிநயம், நல்லாறன் மொழிவரி முதலிவற்றுட் காண்க. (**யா.க.**வி.கழ.579)

3. வடமொழியில் அவ்வியச் (அவ்யயச்) சொல்; தமிழில் இடைச்சொல் (**வீரசோ**.49.உரை).

4. இடைச்சொல்லாவன காரகபத வேற்றுமையானும் கிரியாபத வேற்றுமையானும் விகற்பிக்கப்படாதே ஐ, ஆல் என்றும், மன் இசின் என்றும், மற்று, ஆங்கு, ஒருங்கு என்றும் இவை முதலாக வருவன.
(**வீரசோ**.49.உரை)

5. "..............தனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச் சொல்"
என்பர் **நன்னூலாசிரியர்** (நன்.419)

6. பிறிதின் இடத்தைச் சார்ந்து நடத்தலால் இடைச் சொல் என்க என்பர் **மயிலைநாதர்** (நன்.419)

7. **மயிலைநாதர்** (நன்.130) "இடைச்சொற்கள் பெயருக்கும் வினைக்கும் விகுதி உருபுகளாகியும், வேற்றுமை உவமை சாரியை உருபுகளாகியும், சில பெயராகியும், சில வினையாகியும், தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விழைவு, ஒழியிசை, பிரிப்பு, கழிவு, ஆக்கம், இசை நிறை, அசைநிலை, குறிப்பு முதலான பொருண்மை விளக்குதலானும்" என்பர்.

245. அவைதாம்
புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
தத்தங் குறிப்பின் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை.[1]

எ.. ன், நுதலியதில்லை

"புணரியனிலையிடைப் பொருள்நிலைக்கு உதவுவன, 'இன்னே வற்றே' (எழு.புண.17) என்னுந் தொடக்கத்தன".

வினைசெயன் மருங்கில் காலமொடு வருவன, 'அன் ஆன், அம் ஆம், (சொல்.வினை.8,5) என்னுந் தொடக்கத்தன.

வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுன 'ஐ ஒடு கு இன் அது கண்விளி, (சொல்.வேற்.37) என்னுந் தொடக்கத்தன.

அசைநிலைக் கிளவி, கேண்மியா, கண்டிகும் (ஐங்குறு.121) என்னுந் தொடக்கத்தன.

மற்றையன முன்னே விரிக்கின்றார்.

குறிப்பு:-இடைச்சொற் பாகுபாடு

"சாரியையாய் ஒன்றல், உருபாதல், தங்குறிப்பின்
நேரும் பொருளாதல், நின்றசையாய்ப்-பேர்தல்,
வினைச்சொற் கீறாதல், இசைநிறைத்து மேவல்
அனைத்தே இடைச்சொல் அளவு." (நேமி. சொல்:50)

எனக்கூறும். இதன் உரையாசிரியர், "பிறர் இடைச்சொல் வரும்வழி ஏழென்று சொல்ல, இந்நூலுடையார் ஒப்பில் போலியை நீக்கியது என்னையோ வெனின்,

சு.வே: 1 ஏட்டில், உதனவும், வருவனவும், உருபாகுனவும், வருனவும், வருனவும், செய்குனவும், செய்குனவும் என்று இரு சுழினகரத்தால் எழுதப்பட்டுள்ளன.

'ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்' (இடை.30) என்றதனால், அஃது அசைநிலையுள்ளே அடங்கும் ஆதலால் இங்குக் கொண்டதில்லை என்பர்.

**நன்னூலாசிரியர்**

''வேற்றுமை வினைசா ரியைஒப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்புஎன் எண்பகுதி''. (420) என்பர்.

**நன்னூலார்** ஒப்பில் போலி என்று கூறாமல் ஒப்புருபுகள் என்றார்.

உரையாசிரியராகிய **மயிலைநாதர்** ஒப்புருபு–உவமஉருபு; உவம உருபாவன போல, புரைய முதலாயின என்பர்.

**சேனாவரையர்** ஒப்பில் போலியை உவம உருபென்றே கூறினார்.

**இளம்பூரணர்** ''வினையெஞ்சு கிளவியும் உவமக்கிளவியும்'' (தொல்.எழுத்து:205) என்றவிடத்து உவமக்கிளவியை இடைச்சொல் முடிபென்றே கூறுவர்.

ஒப்பில் போலி என்பது பற்றி உரையாசிரியர்கள் கருத்து ஒருமித்த முடிபாக இல்லை. இவ்வியல் நான்காம் சூத்திரத்தில் இளம்பூரணர் நுதலியதுரைத்தலை நோக்குக.

**246. அவைதாம்**
**முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்**
**தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்**
**அன்னவை யெல்லாம் உரிய வென்ப.**

(நுதலியதில்லை)

''என்பது, பெயரை முன்னும் பின்னும் அடுத்து வருவன 'அது மன்' (புறநா.147) 'கொன்னூர்' (குறுந்.138) என்பன''

வினையை முன்னும் பின்னும் அடுக்குமாறு:–

'வருகதில் லம்மவெஞ் சேரி சேர' (அகநா.276), ஒ தந்தார், ஒ கொண்டார் என்பன.

தம்மீறு திரிந்தவை:–கொன்னை, மன்னை (சொல். இடை.6,7) என்பன.

பிறிதவண் நிலையிற்று:-மகவினை என்பது.

**குறிப்பு:-** இடைச்சொற்போல உரிச்சொல்லும் தம்மீறு திரியும் பிறிதவணிலையுமென்று **இளம்பூரணர்** கருதுகின்றார். இதனை உரியியல்' "எழுத்துப் பிரிந்திசைத்தல்" என்னும் நூற்பாவுரையிற் காண்க.

**247. கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்**
**றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே.**

எ...ன், இடைச் சொற்களை எழுவகையென விரித்தார் அவற்றுள் மூன்றுவகை மேலே உணர்த்தி, ஒழிந்த நான்கு வகையுள், தத்தங் குறிப்பிற் பொருள் செய்குநவற்றை விரிப்பான் தொடங்கினார். அது கருத்து.

'சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே' (புறநா.235)

என்பது, அஃது இப்பொழுது கழிந்ததெனக் கழிவின்கண் வந்தது.[1]

'பண்டு காடுமன்' என்பது,[2] 'இனிக்கயல் பிறழும் வயலாயிற்று' என ஆக்கத்தின்கண் வந்தது.

'கூரியதோர் வாள்மன்' என்பது,[3] இனி, 'இற்று, என்னும் ஒரு சொல்லை ஒழிவுபட வந்தமையின் ஒழியிசை என்பது.

**குறிப்பு:- ஒழியிசை:**

இனி இற்று-இப்பொழுது இந்நீர்மைத்து என்று பொருள்.

**மயிலைநாதர்**, இப்போது கோடிற்று என்றானும், வாய் போயிற்று என்றானும், இளநீர்த்தாயிற்று என்றானும் ஒரு சொல் ஒழிய நின்றமையின், இஃது ஒழியிசை என்பர்.

---

சு.வே: 1 எனக் கழிவின்கண் வந்தது

2 என்பது (கா.ந.பதி.இல்லை)

3 என்பது (கா.ந.பதி.இல்லை)

**248. விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.**

எ...ன் (நுதலியதில்லை)

"வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே". (குறுந்.14)

இது விழைவின்கண் வந்தது.

"பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே" (குறுந்.14)

இது காலம் பற்றி வந்தது.

"வருகதில் லம்மவெஞ் சேரி[1] சேர" (அகநா.279)

என்பது, 'வந்தக்கால் இன்ன தொன்று செய்வல், என்னுஞ் சொல் ஒழிந்து நின்றமையான், ஒழியிசைக்கண் வந்தது.

யாதானும் ஒருசொல் ஒழிவுபடவரின், அஃது ஒழியிசை எனப்படும் என்றவாறு.

**குறிப்பு:-** "தில்லை, பருவம் விழைவு நயனில் ஒழியிசையும் நாட்டு" (நேமி.சொல் 51)

**எடுத்துக்காட்டு:**

'பெற்றாங்கு அறிக தில்' என்பதில், பெற்றாங்கு-பெற்றபின் அறிகதில்-அறிக அக்காலத்தே என்று காலப்பொருள் தருகிறது.

**நச்சினார்க்கினியர்** 'வருகதில்-வருக இக்காலத்தே' என்று வேறு உதாரணம் காட்டுவர்.

**249. அச்சம் பயமிலி[2] காலம் பெருமையென்
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.**

எ...ன் (நுதலியதில்லை)

---

சு.வே: 1 என்சேரி (ஏடு)
2 பயனிலி (ஏடு)

"கொன்முனை யிரவூர் போலச்[1]
சிலவா குகநீ துஞ்சு நாளே" (குறுந்.91)

என்பது அச்சத்தின்கண் வந்தது.

"கொன்னே வந்து[2] கொன்னே போயினார்" என்பன பய மின்றி வந்தன.[3]

'கொன்வரல் வாடை நினதெனக் கொண்டேனோ' என்று, நலியுங்காலை அறிந்து வந்த வாடை என்றவாறு. இது காலத்தின்கண் வந்தது.

'கொன்னூர் துஞ்சலு மியான்துஞ் சலனே'[4] (குறுந்.138) என்பது பெருமைக்கண் வந்தது.

**250. எச்சஞ் சிறப்பே ஐயம் எதிர்மறை**
**முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்**
**றப்பா லெட்டே உம்மைச் சொல்லே.**

எ...ன் (நுதலியதில்லை)

"சாத்தனும் வந்தான் என்றால், அவனையன்றிப் பிறரையும் வரவு விளக்குமாகலின் இஃது[5] எச்சவும்மை.

தேவரே தின்னினும் வேம்பு கைக்கும்,[6] (நால.மெய்.உ) என்பது சிறப்பும்மை. 'குறவரும் மருளுங் குன்றத்துப் படினே' (மலைபடு.275) என்பதும் அது.

'பத்தானும் எட்டானும் கொடு' என்பது[7] ஒன்று[8] துணியாமை மேல் நின்றமையின் ஐயத்தின்கண் வந்தது.

---

சு.வே: 1 கொன்முனையினூர் போலச் (துறைசை, புலிசை)
2 கொன்னே வந்தது (கா.ந)
3 வந்தது (கா.ந)
4 கொன்னூர் துஞ்சினு மியாந்துஞ் சலமே (கா.ந)
5 அஃது (கா.ந)
6 கைக்குமாந் தேவரே தின்னினும் வேம்பு (நாலடி.பா
7 பத்தானும் எட்டானும் என்பது (கா.ந)
8 ஒன்று என்பது (கா.ந.பதி.இல்லை)

'கொற்றன் வருதற்கும் உரியன்' எனின் வாராமை[1] செப்பி நிற்குமாகலின் எதிர்மறை உம்மையாயிற்று.

தமிழ்நாட்டு மூவரும் வந்தார் என்பது முற்றும்மை.

நிலனும் நீரும் தீயும் வளியும் என்பது எண்ணும்மை.

நன்றும் அன்று தீதும் அன்று; இடைநிகர்த்தாயிற்று என்பது தெரிநிலையும்மை. இடைநிகர்த்தானமை தெரிந்து ஒழிந்தனம் அவ்விரண்டும்; அத்துணைத்து ஒழிய நின்றிலாமையின்.

நெடியனும் வலியனும் என்பது ஆயினான் என்னும் ஆக்கத்துக்கண் வந்தது ஆக்கவும்மை.

**251. பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை**
**தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ**
**இருமூன் றென்ப ஓகா ரம்மே.**

எ...ன் (நுதலியதில்லை)

''பிரிநிலை; அவனோ கொண்டான் என்பது.

வினா; அவனோ அலனோ என்பது.

எதிர்மறை; யானோ கொண்டேன் என்பது.

ஒழியிசை; கொளலோ கொண்டான் என்பது. கோடற்குத் தகுமாயினும் கொண்டுய்யப் போயினானல்லன் என ஒரு சொல் ஒழிவுபட வந்தமையின் ஒழியிசையாயிற்று.'

தெரிநிலை: நன்றோ அன்று, தீதோ அன்று இடைநிகர்த்தாயிற் றென்பது.

சிறப்பு: ஓஒ பெரியன் என்பது.

**குறிப்பு:-**

''சிறப்பும் வினாவும் தெரிநிலையும் **எண்ணும்**
உறப்பின் எதிர்மறையி னோடும் - வெறுத்த
ஒழியிசையும் **ஈற்றசையும்** ஓகாரம்'' (சொல்.54)

---

சு.வே: 1 வாராமையும் (கா.ந)

என்பது **நேமிநாதம்**. இதனுள் எண்ணும் ஈற்றசையும் **தொல் காப்பியர்** கூறாதன.

"ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே" (422)

என்பது **நன்னூல்**. இதனுள் **கழிவும் அசைநிலையும் தொல் காப்பியர்** கூறாதன.

**252. தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே**
**ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே.**

எ...ன் (நுதலியதில்லை).

"தேற்றம்; அவனேகொண்டான் என்பது.

வினா; நீயே கொண்டாய் என வினாவிச் சொல்லுவது.

பிரிநிலை; அவனே கொண்டான் என்பது; பலருள் ஒருவனைப் பிரித்துச் சொல்லுவது.

எண்; நிலனே நீரே தீயே வளியே ஆகாயமே எனவரும்.

ஈற்றசை; 'கடல்போற் றோன்றல காடிறந் தோரே (அகநா.1) எனவரும் ஈற்றின்கண் என்றவாறு".

**குறிப்பு:-**

"தேற்றம் வினாஎண் **எதிர்மறையும்** தேமொழியாய்
ஈற்றசையும் ஏகாரம் எண்". (சொல். 51)

என்று கூறும் **நேமிநா தம்**. இது பிரிநிலையை நீக்கிவிட்டு எதிர் மறையைக் கூறுகிறது. உதாரணம் "தூற்றாதே தூர விடல்" (நாலடி. 8–5) தூற்று என்று பொருள் பட்டமையால் எதிர் மறை ஏகாரம் என்பர் அதன் **உ**ரையாசிரியர். மேலும் அவர், "தேற்றேகாரத்துள்ளே அடங்குமாதலால் பிரிநிலை ஏகாரம் வேண்டிற்றிலர் என்றறிக" என்பர்.

**நன்னூலார்** இசைநிறை என்ற ஒன்றினைக் கூட்டி ஏகாரம் ஆறு பொருளில் வரும் என்பர்.

"பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை எனவாறு ஏகா ரம்மே" (421)

என்பது அந்நூற்பா.

(1) **களவியல் உரை (நூற்-1) மேற்கோள்**

"நாறும் தகைமையவே" என்பது ஐந்து ஏகாரத்துள்ளும் இவ்வேகாரம் வினாவின்கண் வந்த ஏகாரம் எனக் கொள்க என்று கூறி "தேற்றம்" என்ற நூற்பாவை எடுத்துக்காட்டுவர்.

(2) யா. க. வி. பாயிரவுரையில் மேற்கோள் (கழ. பக். 14)

**253. வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி.**

எ...ன் (நுதலியதில்லை).

"வினை; கொள்ளெனக் கொண்டான் என்பது.

**குறிப்பு**:– விண்ணென விசைத்தது என்பது.
துண்ணெனத் துடித்தது என்பதும் அது.

இசை; ஒல்லென ஒலித்தது என்பது.

பண்பு; வெள்ளென விளர்த்தது என்பது.

எண்; நிலனென ... வளியென வரும்.

பெயர்; ஊரெனப்படுவது உறையூர் எனவரும்.
நாடெனப்படுவது சோணாடு என்பதும் அது.

**குறிப்பு**:–

தொல்காப்பியர் கூறியுள்ள 'என' (இடை. 10) 'என்று'. (இடை. 11) என்னும் இரண்டு எச்சங்களையும் **நேமிநாதம்** ஒரு நூற்பாவாக்கி,

"வினைபெயரும் எண்ணும் இசைகுறிப்பும் பண்பும்
என, என்று இரண்டும் இயலும்" (சொல். 53)

என்று கூறும்.

**நன்னூல்** (423) நூற்பாவும் இவ்வாறே கூறும்.

**254. என்றென் கிளவியு மதனோ ரற்றே.**

எ ..ன் (நுதலியதில்லை)

''வினை; கொள்ளென்று கொண்டான் என்பது.

**குறிப்பு**:- விண்ணென்று விசைத்தது என்பது.
துண்ணென்று துடித்தது என்பதும் அது.

இசை: ஒல்லென்று ஒலிக்கும் (ஐந்திணைஐம். 28) என்பது.

பண்பு: வெள்ளென்று விளர்த்தது என்பது.

எண்: நிலனென்று ....வளியென்று என வரும்.

பெயர்: ஊரென்று சொல்லப்படுவது உறையூர் என்பது.

**255. விழைவின் தில்லை தன்னிடத் தியலும்.**

எ ன் (நுதலியதில்லை)

மேல் 'தில்' என்னும் இடைச்சொல் மூன்றன் பொருட்கும் உரித்தென்று போந்தான்;[1] அவற்றுள் 'விழைவின் தில்லை' தன்மை யிடத்திற்கே ஆவது.

உ . ம்:- ''பெறுக தில்ல யானே''[2] (குறுந். 14)

என வரும். என,[3] மற்றைய இரண்டும் எல்லாவிடத்திற்கும் உரிய[4].

**குறிப்பு**:- இந்நூற்பாவிற்கு உரை எழுதப்பட்டுள்ளது.

உரையுள் 'போந்தான்' என்பது கூறிப்போந்தான் என்னும் பொருட்டு.

**நேமிநாதஉரை** (சொல். 52) ''ஆண்டறிகாலம் என்று மிகுத்துச் சொல்லியவதனால், தில்லை இடைச்சொல் விழைவின்கண் வரும்பொழுது தன்மையிலன்றி வாராது என்றறிக''

---

சு.வே: 1 போந்தார் (கா. ந)
2 பெறுகதில் லம்ம யானே (கா. ந)
3 எனவே (கா. ந)
4 உரிய என்றவாறாம் (கா. ந)

என்று கூறி 'விழைவின்தில்லை' (இடை.12) என்னும் இந்நூற் பாவை மேற்கோள் காட்டும்.

**256. தெளிவின் ஏவும்[1] சிறப்பின் ஓவும்**
**அளவின்[2] எடுத்த இசைய என்ப.**

எ...ன், மேற் கூறிப் போந்த ஏகார ஓகாரங்களில்[3] வேறு பாடு கண்டு, ஈண்டு உணர்த்துதல் நுதலிற்று.

உ...ம்:-நீயேஎ கொண்டாய்.

ஓஒ பெரியன் என வரும்.

**257. மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை**
**அப்பா லிரண்டென மொழிமனார் புலவர்.**

எ...ன், மேல் தத்தம் குறிப்பிற் பொருள் செய்குவென உணர்த்தினார்; இனி மற்று என்பதோர் இடைச்சொல் வினை மாற்றும் அசைநிலையுமாய் வரும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(உரையில்லை)

உ...ம்:- 'இஃது உண்' என்றார்க்கு; மற்று உண்பல்' என வினைமாற்றாயிற்று.

யாவரோடாயினும் சொல்லாட நின்றுழி[4] மற்றோ மற்று' என்னும் இடையே அஃது[5] அசைநிலைக் கட்டுரை.

**ஒத்தநூற்பா**

1. "வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே".(**நன்.** 432)

2. மற்று; வேறுபொருளிலும் வரும் போலும்.

---

சு.வே: 1 ஏயும் (கா.ந)
2 அளபின் (கா.ந)
3 ஓகாரங்களின் (கா.ந)
இந்நூற்பாவிற்குப் பொழிப்புரை இல்லை.
4 சொல்லாடா நின்று (கா.ந)
5 இ∴து (கா.ந)

"மற்றென் கிளவியும் மன்றவென் கிளவியும்
தெற்றென் கிளவியும் தேற்ற மாகும்" (**திவாகரம்**).

**258. எற்றென் கிளவி இறந்த பொருட்டே.**

எ...ன், இதுவும் தத்தங்குறிப்பிற் பொருள் செய்குவன வற்றின்மேல் உணர்த்துதல் நுதலிற்று.

"எற்று என்பது இறந்தபொருள் விளக்கி நிற்கும்[1] என்ற வாறு"

உ.. ம்:- "எற்றென் னுடம்பின் எழில்நலம்" எனவரும். எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன் என்பதும் அது. இஃது இரக்கப்பொருண் மேற்று.

**குறிப்பு**:- இறந்த பொருட்டு–கழிந்த பொருட்டு 'எற்றென் னுடம்பின் எழின்நலம்' என்பது என்னலம் இறந்ததென்னும் பொருள்பட நின்றது. 'எற்றேற்ற மில்லாருள் யானேற்ற. மில்லாதேன்' என்பதூஉம் 'இது பொழுது துணிவில்லாருட் டுணிவில்லாதேன் யான்' என்று துணிவிறந்த தென்பதுபட நின்றது" என்பர் (சேனா)

'எற்று, என்பது இரங்குவார் கூற்றுமாம்.
"எற்றென்றிரங்குவசெய்யற்க" (குறள் 655.)

**259. மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை யொழிய இனங்குறித் தன்றே.**

எ...ன் (நுதலியதில்லை)

"பல புத்தகங்[2] கிடந்தவழி, ஒருவன், ஏவலாளனைப் பார்த்துப் 'புத்தகங் கொண்டுவா' என்றால், அவன் ஒரு புத்தகங் கொண்டு வந்தவிடத்துத் தான் கருதிய புத்தகம் அன்றெனில், 'மற்றையது கொணா' என்னும்; என்றக்கால், இக்கொணர்ந்ததனை ஒழிக்குஞ் சொல் இக்கொணர்ந்த

சு.வே: 1 விளங்கி நிற்கும் (ஏடு)
2 அச்சுப்பிரதியில் 'பொத்தகம்' என்ற பாடம் உள்ளது. புலிசைஏட்டில் 'புத்தகம்' என்றே உள்ளது.

புத்தகம் சுட்டிற்றாகலான், கொணர்ந்ததனை ஒழிக்குஞ் சுட்டு நிலை அதனை ஒழித்து ஒழிந்ததென்று அவ்வினத்தல்லது, பிறிதொன்று குறித்தது சொல்லோவெனிற் குறியா; மற்று அப் புத்தகத்துள் ஒன்றே பின்னுங் குறித்தது எனப்படும்''.

(உரையின் பிற்பகுதியில் தெளிவில்லை)

**ஒத்தநூற்பா**

''மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்'' நன்.433. இதற்கு **மயிலைநாதர்** ''பல பொத்தகம் கிடந்துழி ஒருவன், ஏவுவான் ஏவலாளனைப்பொத்தகங் கொடுவா என்றால், அவன் ஒரு பொத்தகங் கொடுவந்த விடத்துத் தான் கருதியதன் றெனின், அவன் 'மற்றையது கொணா' என்னும். என்றால், கொணர்ந்ததன் இனமாயதனை அச்சொற் சுட்டிற்றாகலான். கொணர்ந்ததனை ஒழித்து, அதற்கினமான பொத்தகம் கொணருமென்பது'' என்று கூறும் உரை **இளம்பூரணர்** உரையைத் தழுவியுள்ளது.

**260. மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:-

''கார்மன்ற என்பவள் கண்ணுள்ளே காதலர்
தேர்மன்றத் தோன்றிய''

என்றக்கால், (கார்காலமென்று) தெளிந்தாள் அவள் என்றவாறு.

**261. தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:-

''ஏனோரோ[1] தஞ்சம் இருபிறப்பி னோர்வெகுளின்
வானோர்க்கும் வாழ்த லரிது''. (நேமி.இடை.4)

---

சு.வே: 1 ஏனோரே (நேமி.உரை)

**குறிப்பு:-** **அச்சுப்பிரதியிலும், ஏட்டிலும்,** உதாரணப்பகுதி "ஏனோரோ தஞ்சம் இருபிறப்பினோர்க்கும் வாழ்தலரிது" என்றே உள்ளது.

**நேமிநாதஉரை** "முரசுகெழு தாயத் தரசேதஞ்சம்" என்பது எளிமைக்கண் வந்தது. "ஏனோரே தஞ்சம்' இருபிறப்பி னோர் வெகுளின், வானோர்க்கும் வாழ்த லரிது' என்பதும் அது" என்றுள்ளது.

**262.** **அந்தில் ஆங்கு[1] அசைநிலைக் கிளவியென்**
**றாயிரண் டாகு மியற்கைய வென்ப.**

எ...ன், இதுவும் தத்தங்குறிப்பிற் பொருள்செய்குவன வற்றையும், அசைநிலையையும் உணர்த்துதல் நுதலிற்று.

(உரையில்லை)

உ...ம்:- **இடஞ்சுட்டி வந்தது.** (ஆங்கு):-

"வருமே[2] சேயிழை அந்திற்
கொழுநற் காணிய அளியேன் யானே" (குறுந்.293) என வரும்.

அசைநிலை:-

"கழறுப என்பவன் பெண்டிர் அந்திற்
கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்" (அகநா.76)

எனவரும்.

**நூற்பா பாட ஆய்வு:-** தொல்.அகத்திணையியல் 44-ஆம் நூற்பாவுரையில் "காவல் பாங்கின் ஆங்கு ஓர் பக்கமும் என்ப தன் உரையில் **இளம்பூரணர்** 'ஆங்கு' என்பது இடங் குறித்து நின்றது. "நின்னாங்கு வருஉமென் நெஞ்சினை" (கலி.பாலை 22) என்றாற் போலக் கொள்க என்பர். அதனால் 'ஆங்கு' என்றே பாடம் ஓதுக. ஆங்க என்பதாயின, அது உரையசை யாகும். **சேனாவரையரும்** இந்நூற்பா உரையுள் "ஆங்கு வருமென்றவாறாம்" என்று உரைப்பர்.

---

பா.வே. 1 'ஆங்க' என்பது பிழையான பாடம் (கா.ந)
சு.வே: 2 வருமோ (ஏடு)

நூற்பாவிற்கு ''அந்தில் என்னும் சொல், ஆங்கு என்னும் இடப்பொருளும் அசைநிலையும் என இரண்டாம்'' என்று உரை கொள்க.

'ஆங்கு' இடம் சுட்டி வருவதன்றி அசைநிலையாகவும் வரும். ''நடைநவின்றொழுகும் ஆங்கென மொழிப'' (தொல். செய்.131) என்னும் நூற்பாவில் 'ஆங்கு' அசை என்றனர். (இளம்)

**263. கொல்லே ஐயம்.**

எ..ன் (நுதலியதும் உரையும் இல்லை).

உ..ம்:-குற்றிகொல்லோ மகன்கொல்லோ;
நாய்கொல்லோ நரிகொல்லோ எனவரும்.

**264. எல்லே விளக்கம்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:- ''எல்வளை'' (புறநா.24) எனவரும்.

**நூற்பா பாட ஆய்வு.**

**இளம்பூரணம் தொல்-செய்யுளியல் 206**-ஆம் நூற்பா உரையில் இந்நூற்பா 'எல்லே இயக்கம், என்ற பாடத்துடன் உள்ளது.

**சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார்** என்னும் இவரெல்லோரும் 'எல்லே இலக்கம்' என்று பாடங் கொண்டனர்.

விளக்கம் என்பதும், இலக்கம் என்பதும் உரிச்சொற் பொருளாயிருத்தலின், 'எல்லே விளிக்கும்' என்று பாடம் இருக்கலாமோ என்று அறிஞர் கருதுகின்றனர்.

**குறிப்பு**:-'எல்லே விளக்கம்' (இடை.21)
'கொல்லேயையம்' (இடை.20)

என்னும் இவை, சொல்லைப் பொருளிற்கு வேறன்று என்றும் கூறினார் என்பர். (இல.கொ.பா.6.உரை).

**265. இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி**
**பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே.**

எ...ன் 'ஆர்' என்னும் இடைச்சொல் பெயர்முன்னல்லது வாரா என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(உரையில்லை).

உ...ம்:-அரசனார் வந்தார்; பார்ப்பார் வந்தார் என வரும்.

விலங்கின் மேலும், யானையார் வந்தார்; நரியார் வந்தார் எனவரும்.

''பெயர்முன் ஆரைக்கிளவி பலர்க்குரி எழுத்தின் வினை யொடு முடிதல் இயல்'' பல[1] எல்லாப் பெயரும் அடங்க மொழி மாற்றி உரைக்க.

**குறிப்பு:- இளம்பூரணர்,** 'இயற்பெயர்' என்பதில் 'இயல்' என்னும் சொல்லையும், பெயர் என்னும் சொல்லையும் தனித் தனியாகப் பிரித்துப் பெயர் முன் என்று தொடங்கி, 'இயல்' என்பதை ஈற்றில் வைத்து முடிக்கின்றார். **'இயற்பெயர்' என்பதை இவ்வாறு பிரித்து, மொழிமாற்றி உரைக்கும் முறை புதிது.** தாம் செய்து கொண்ட உரைக்கு இயைய உதாரணமும் எல்லாப் பெயர் மேலுமே காட்டப்படுகின்றது. இயற்பெயரில் உதாரணம் காட்டப்படவில்லை.

**சேனாவரையர்** ''இயற்பெயர் முன்னர்வரும் 'ஆர்' என்னும் இடைச் சொல் பலர் அறி சொல்லால் முடியும்'' என்று கூறி, ஈண்டு இயற்பெயரென்றது இருதிணைக்கும் அஃறிணை இரு பாற்கும் உரிய பெயரை'' என்பர்.

**266. அசைநிலைக் கிளவி யாகுவழி யறிதல்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:- இது ''செல்ல மன்னார் நெடுந்தகை'' எனவரும்.

**குறிப்பு:**- மன்ஆர் என்பதில் 'ஆர்' அசைநிலைக்கிளவி.

---

சு.வே: 1 இயல்பல என (கா.ந)

**சேனாவரையர்** "மேல் நூற்பாவிற் கூறிய ஆரைக்கிளவி அசைநிலையாமிடம் அறிக" என உரை கூறுவர்.

"**ஆரைக்கிளவி**

"எரியார் எழில் அழிக்கும்" என்பதற்கு எரியினது எழில் அழிக்கும் என்பார். **ஆரைக்கிளவிகொடுத்து இழித்துக் கூறினார்** எனினும் அமையும். (திருக்கோ.340) என்பதை நோக்கினால், அது இழித்தற் பொருளினும் வரும் என்பது புலனாம்.

**267. ஏஎவுங்[1] குரையும் இசைநிலை அசைநிலை
ஆயிரண் டாகு மியற்கைய வென்ப.**

எ...ன் (நுதலிய தில்லை)

"ஏஎ - இசைநிறை; குரை - அசைநிலை என, நிரனிறையாகக் கொள்க".

உ...ம்:- "ஏஎ அம்பன் மொழிந்தனள் யாயே"[2]

'ஏஎ' இசைநிறை யாயினவாறு.

'பல்குரைத் துன்பங்கள் சென்றுபடும்" (குறள்.1045) எனக் 'குரை' அசைநிலை.

**குறிப்பு**:- 1. இவ்வியலில் 'தேற்றம் வினாவே' (9) என்னும் நூற்பாவில் ஏகார இடைச்சொல் கூறப்பட்டது. அடுத்து 'தெளிவின் ஏயும்' (13) என்னும் நூற்பாவில் தெளிவுப் பொருளில் வரும் ஏகாரம் மட்டும் அளவின் எடுத்த இசையவாய் வரும் என்று கூறப்பட்டது. இந்நூற்பாவிற் சொல்லப்பட்டது 'ஏ' ஆயின் மேற்குறிப்பிட்ட இரண்டு நூற்பாக்களில் இடம் பெற வேண்டும்;

**தொல்காப்பியர்** அவற்றின் வேறாகக் கொண்டு இந் நூற்பாவைக் கூறுவதால் உதாரணத்திற் கண்டவாறு 'ஏஎ' என்னும் வேறு சொல்லாகவே இது இருத்தல் வேண்டுமென்க.

---

பா.வே: 1 ஏவுங் (கா.ந)
ஏயுங் (சேனா, நச்,

சு.வே: 2 ஏஎ அம்பன் மொழிந்தனம் யாமே (கா.ந)

**நன்னூலாசிரியர்** இசைநிறைப் பொருளையும் சேர்த்துக் கொண்டு

"பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே" (இடை.3)

என நூற்பா செய்துள்ளார். இவர் இவ்வாறு சேர்த்தோதியது பிழை என்க. இசைநிறையில் இது 'ஏஎ' என்று செய்யுளில் மட்டும் வரும் என்க.

**திவாகரம்.** 10 'ஏயுங் குரையும் இசைநிறை யசைநிலை' என இவ்வடியை மட்டும் எடுத்தமைத்துக் கொண்டது.

2. **இளம்பூரணர்** எச்சவியலில் "இசைநிறை அசைநிலை" (15) என்னும் நூற்பாவுரையில் 'இசைநிறை' எனவே அது செய்யுளிலக்கணமென்பது போந்தது என்று உரைத்து,

"ஏஎ ஏஎ அம்பன் மொழிந்தனர்" என உதாரணம் காட்டுவர். மற்ற எச்சவியல் 27-ஆம் நூற்பா உரையிலும் **இளம்பூரணர்** "இசைநிறை எனவே, அது செய்யுட் கென்பது முடிந்தது" என்பர்.

**திவாகரம்:**- 'குரையே ஒலியும் இடைச்சொல்லு மாகும்" என்றும் கூறும்.

**268. மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்.**

எ..ன் (நுதலியதும் உரையும் இல்லை).

உ..ம்:- "மாயக் கடவுட் குயர்கமா வலனே". 'உயர்க' என்னும் வியங்கோட்கண் 'மா' என்னுஞ் சொல் அசைநிலையாய் வந்தது.

**269. மியாயிக மோமதி இகுஞ்சின் னென்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை யசைச்சொல்.**

'மியாவிக' (திவாகரம்)

எ...ன் (நுதலியதில்லை).

''முன்னிலைக்கண் அசைச்சொல்லாய் வருவன இவை என்றவாறு''.

உ...ம்:-

மியா — 'கேண்மியா'

இக — 'தண்டுறை யூரயாங் கண்டிக'

மோ — 'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ' (குறுந்.2)

மதி — 'சென்மதி பெரும'

இகும் — 'மெல்லம் புலம்ப கண்டிகும்'[1]

சின் — 'காப்பும் பூண்டிசின் கடையும் போகல்[2] (அகநா.7)

என் வரும்.

**திவாகரம்** ஒலிபற்றிய (10) பெயர்த்தொகுதியில் இந்நூற்பா எடுத்தமைத்துக் கொள்ளப்பட்டது.

**குறிப்பு**:- 'தண்டுறை யூர யாங் கண்டிக' என்பது தன்மை போலும். **சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்** 'கண்பனி யான்றிக என்றி தோழி'' என உதாரணம் காட்டுவர்.

**270. அவற்றுள்**
**இகுமுஞ் சின்னும் ஏனை யிடத்தொடுந்**
**தகுநிலை யுடைய வென்மனார் புலவர்.**

எ...ன் (நுதலியதும் உரையுமில்லை)

உ...ம்:-

**இகும்[3] தன்மைக்கண் வருமாறு:**

''கண்டிகு மல்லமோ கொண்க'' (ஐங்குறு—121)

என வரும்.

---

சு.வே: 1 கண் டிகும் யாமே (கா.ந)
2 போகலை (கா.ந)
3 இஃது (ஏடு)

படர்க்கை: "புகழ்ந்திகு மல்லளோ[1] பெரிதே"

என வரும்.

**'சின் தன்மைக்கண் வருமாறு:**

"கண்ணும் படுமோ என்றிசின் யானே" (நற். 61)

**படர்க்கைக்கண் வருமாறு:** "யாரஃ தறிந்திசினோரே" என வரும்.

**271. அம்மகேட் பிக்கும்.**

எ...ன் (நுதலியதும் உரையுமில்லை).

உ...ம்:-'அம்ம வாழி தோழி' என்ற வழி அது கேளாய் வாழி தோழி என்றவாறாம்.

**குறிப்பு:- தொல்காப்பியர்** எழுத்ததிகாரத்தே,

"அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்" (211)

என்னுமிடத்தே 'அம்ம' என்பதற்கு 'உரைப்பொருட் கிளவி' என்று பெயர் வைத்துள்ளார். பின்னர், "உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்" (213) என்னும் நூற்பாவால் அது 'அம்மா' என நீளும் என்றார்.

சொல்லதிகாரத்தே விளிமரபில் (36)

"அம்ம வென்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே"

என்னும் நூற்பாவால் 'அம்ம' இடைச்சொல்லாயினும் விளிப் பெயர் போல் விளிபெறும் என்றார்.

**திவாகரம்** "அம்ம கேட் பிக்கும் உரையசைச் சொல்லே" (10) என்று கூறும்.

---

சு.வே: 1 அல்லரோ (ஏடு)

**இலக்கணக் கொத்துரை** பொருளிற்கு வேறாய் ''அம்ம கேட்பிக்கும்'' என ஏவுதற் கருத்தாவாகக் கூறப்பட்டுள்ள தென்பர். (பாயி.6.நூ.உரை)

**272. ஆங்க உரையசை.**

எ...ன் (நுதலியதில்லை).

''ஆங்க என்னும் இடைச்சொல் அஃதோர் கட்டுரைத் தொடர்பினிடை[1] அசைப்பொருள்பட வரும் என்றவாறு''.

உ...ம்:-

''ஆங்கக் குயிலும் மயிலுங் காட்டிக்
கேள்வனை விடுத்துப்[2] போகி யோளே''[3]

என வரும்.

**குறிப்பு:- ஆங்க**

ஆங்கவும், ஆங்கும் தம்முள் வேறுபாடுடையன. 'ஆங்'கு என்பது அவ்விடம் என்னும் பொருளில் வரும், 'ஆங்க' என்பது அசைச்சொல்லாக வரும்.

**இறையனார் களவியலில்** ''ஆங்கவ் விரண்டே'' (3) ''ஆங்கவ் வாறே'' (35) ''ஆங்கவ் விரண்டும்'' (39) ''ஆங்கப்பத்தே'' (56) என்ற இடங்களில் அதன் உரையாசிரியர் 'ஆங்க' என்பது அசைச்சொல் என்றே எழுதுகிறார்.

**தொல்காப்பியர்** ''ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்'' (தொல்.எழு.உயிர்.2) என்றே கூறுகிறார்.

**273. ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்.**

எ...ன் மேல், இடைச்சொல் எழுவகைய என்று நிறுத்தவற் றுள், ஒப்பில் போலி என்னும் இடைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று.

''ஒப்பில் போலியாவது, ஒப்பில்லாதவழி ஒப்பித்த வாசகம் பட வருவ தென்பது''.

---

1 இடைச்சொல் கட்டுரைத் தொடர்பினிடை (கா.ந)

2 கொள விவனை விடுத்தும் (கா.ந), கேசவனை விடுத்து (ஏடு)

3 போக்கியோள் (கா.ந)

உ . ம்:- "மங்கலம் என்பதோர் ஊர் உண்டு போலும் மழ நாட்டுள்" என, ஒப்பில்லாத வழிப் போலும் என்னும் இடைச் சொல் வந்தவாறு.

குறிப்பு:- 1. **இளம்பூரணர்** 'அப்பொருட்டு' என்பதற்கு விளக்கந் தரவில்லை.

2. **"ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவும் ஒப்பில் போலியும்".**

**தொல்காப்பியர்** இடையியல் இரண்டாம் நூற்பாவில் ஏழு பகுப்பான இடைச்சொற்களைக் கூறியுள்ளார்.

**நன்னூலார்** அவ்வேழுடன் குறிப்பிடைச் சொல்லைச் சேர்த்து இடைச்சொல் எண்பகுதி என்பர்.

**தொல்காப்பியர்** கூறும் ஏழு பகுப்புள் ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல்லும் ஒன்றாகும். இதனைச் **சேனாவரையர்** முதலியோர் உவம உருபென்றே கூறுவர். **நன்னூலார்** கூறும் எட்டுள் ஒப்புருபுகள் என்பதும் ஒன்றாகும். இவை உவம உருபே யாகும்.

**சேனாவரையர்** ஒப்பில் வழியாற் பொருள் செய்குந உவம உருபாதலால் அது வேறென்றும், ஒப்பில் போலி அப்பொருட்டாகும் இடைச்சொல்லாதலால் இது வேறென்றும் கருதுகிறார்.

ஆனால் **இளம்பூரணர்** அதுவும் இதுவும் ஒன்றென்றே கருதுகிறார்.

**274. யாகா**

**பிறபிறக்கு அரோபோ மாதென வரூஉம்**
**ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி.**

எ...ன், அசைக்கும் இடைச்சொற்களைத் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(உரையில்லை).

உ...ம்:-

"யா பன்னிருவர் உளர் போலும் மாணாக்கர் அகத்திய னார்க்கு"[1] என 'யா' வந்தவாறு.[2]

கா–'உதுகா' என வரும்.

பிற–அது பிற, இது பிற, உது பிற ஏனப்பிற வந்தவாறு.

'அது பிறக்கு' எனப் 'பிறக்கு' வந்தவாறு.

'கொடியுவணத்தவ ரரோ' என அரோ வந்தவாறு.

'பிரியேன் வாழேன் போதெய்ய' எனப் போ வந்தவாறு. 'நீ போ நேரிகை புகன்'[3] என்பதும் அது.

'விளிந்தன்று மாதவர்த்[4] தெளிந்தவென் னெஞ்சம்' (நற்.178) என மாது வந்தவாறு.

மேல் நூற்பா "யாகா பிறபிறக்கரோ
போமா தெனவரூஉம்
ஆயேழ் சொல்லும்
அசைநிலைக் கிளவி"

என்ற வடிவில் திவாகரப் பதிப்பில் (தாண்டவராய முதலியார். 1904) உள்ளது.

**275. ஆக ஆகல் என்ப தென்னும்[5]**
**ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை.**

எ...ன் (நுதலியதும் உரையுமில்லை).

உ...ம்:- 'நீ இன்னை, இனையை' என்று ஒருவனை ஒருவன் ஒன்று சொல்லுமிடத்து, அமையும் அமையும் என்னுமிடத்து[6] 'ஆக ஆக' என்னும் அவ்விடத்து ஆக என்னும் இடைச்சொல் பிரிவின்றி இரட்டித்தவாறு கண்டு கொள்க.

---

சு.வே: 1 மாணாக்கனாரகத்தியனார்க்கு (ஏடு)
2 வந்தவாறு காண்க (கா.ந)
3 நீர் போ நேரிகை புகன் (கா.ந)
4 மாதவத் (கா.ந)
5 என்ப வென்னும்
6 அமையும் அமையும் ஆக ஆக என்னும் (கா.ந)

யான் உனக்கியாதும் ஆகேனோ என்றக்கால் 'ஆகல் ஆகல்' என்பது (என்னும்). அவ்விடத்து 'ஆகல்' என்னும் இடைச் சொல் பிரிவின்றி வந்தவாறு காண்க.

ஒருவனை ஒருவன் ஒன்று சொன்னால், கேட்டு நின்றா னொருவன் 'என்பது என்பது' என்னும். அது புகழ்ச்சியிடத்துப் பயிற்சி உடைத்து. அறிந்து கொள்க.

**276.** **ஔஎன வரூஉம் இறுதியி லுயிரே**
**ஆயியல் நிலையுங் காலத் தானும்**
**அளபெடை நிலையுங் காலத் தானும்**
**அளபெடை யின்றித் தான்வரு காலையும்**
**உளவென மொழிப பொருள்வேறு படுதல்**
**குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.**

எ...ன், 'ஔ' என்னும் இடைச்சொல் மூன்றுவகையாற் பொருள்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

'ஆயியல் நிலையுங் காலத்தால், வருதலாவது மேற்கூறிய மூன்றும் போல் வருதல் (இடை.32) ஒன்று உரைக்குங்கால் இரட்டித்து 'ஔ ஔ' என வரும்.

அளபெடை நிலையுங் காலத்தால் வந்தது பொருள்படுமாறு, 'ஔஉ' என வரும்.

யாதானும் ஒரு துன்புறவின்கண் அளபெடையின்றித் தான் வருமாறு, 'ஔ' என ஒரு குறிப்புப் பொருட்கண் வருவது என்ற வாறு.

இம்மூன்று பொருட்பகுதியும் குறிப்பினான் வேறுபடுத்தி அறிந்து கொள்க.

**277.** **நன்றீற் றேவும் அன்றீற் றேவும்**[1]
**அந்தீற் றோவும் அன்னீற் றோவும்**
**அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்.**

---

பா.வே. 1 நன்றீற் றேயும் அன்றீற் றேயும்

எ...ன், இதுவும், சொல்லுதற் குறிப்பினால் பொருள் வேறு படும் இடைச் சொற்களை உணர்த்துதல் நுதலிற்று.

(உரையில்லை).

உ...ம்:-

நன்றீற்றே; நன்றே நன்றே என வரும்.

அன்றீற்றே; அன்றே அன்றே என வரும்.

அந்தீற்றோ; அந்தோ அந்தோ என வரும்.

அன்னீற்றோ; அன்னோ அன்னோ என வரும்.

**278. எச்ச வும்மையும் எதிர்மறை யும்மையும்
தத்தமுண் மயங்கும் உடனிலை யிலவே.**

எ...ன், (நுதலியதில்லை).

உ...ம்:- 'சாத்தனும்' வந்தான், கொற்றனும் வரும்' என்பது எச்சவும்மை; அதனைச், சாத்தனும் வந்தான், கொற்றனும் வரலும் உரியன்' என, எதிர்மறையும்மையொடு கூட்டிச் சொல்லப்படா தென்றவாறு.

"எச்சவும்மையும் எதிர்மறை யும்மையும் தத்தமுண் மயங்கும் உடனிலை இலவே" என்பது தம்முண் மயங்கி உடனிற்குந் தன்மை இல என்றவாறு

**குறிப்பு**:- ஏட்டில் உள்ளவாறு உரைதரப்பட்டது.

**279. எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்.**

எ...ன், (நுதலியதில்லை).

"எஞ்சுபொருட் கிளவி என்பது-எச்சவும்மை என்றவாறு. செஞ்சொல் ஆயின் என்பது-செவ்வெண்ணாயின் என்றவாறு. பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல் என்பது-கால முன்னாகச் சொல்லார் இடமுன்னாகச் சொல்லுவர் என்றவாறு".

உ...ம்:-

''அடகுபுலால் பாகு பாளிதமும் உண்ணான்
கடல்போலும் கல்வி யவன்.'' (நன்.மயிலை 426)

என்பதனுள், அடகு புலால் பாகு என்று செவ்வெண்ணாலே எண்ணிப் பின்னைப் பாளிதமும் என்று எச்சவும்மையை இட முன்னாக்கி வைத்து எண்ணினவாறு கண்டு கொள்க.

**குறிப்பு**:- செவ்வெண் ணீற்றதாம் எச்சவும்மை.நன். 426
பாளிதம்-புளிம்பாளிதம் (நன். மயிலை. 174)

**280. முற்றிய உம்மைத் தொகைச்சொன் மருங்கின்
எச்சக் கிளவி யுரித்து மாகும்.**

எ . ன், (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:- 'பத்துங் கொடான்' என்றக்கால்

எல்லாங் கொடான் என்றுமாம். (அவற்றுட் சில கொடுப்பான் என்றுமாம்)

'தொகைச்சொல்' என்றதனான், எல்லாம் கொண்டாம், கொண்டார் என்னும்; எல்லாரும் வாரார் என்றும், வருவர் என்றும் (தொகைச் சொல் அல்லாதவற்றினும்) கொள்ளப் படும்.

எச்சவும்மை ஒழிவுப் பொருளை உடைத்தானது போல, முற்றும்மையும் ஒழிவுப் பொருள்பட வரும் என்று கொள்க.

**குறிப்பு**:- நூற்பாவில் தொகைச் சொல், என்றது
எண்ணின் தொகையை.

**ஒத்தநூற்பா**: ''முற்றும்மை ஒரோவழி எச்சமுமாகும்'' (நன். 425) இதற்கு **மயிலைநாதர்**. உரை; 'பத்துங் கொடால்' என்றார், அனைத்துங் கொடால்' என்றுமாம். அவற்றுட் சில கொடு என்றுமாம்.

'எல்லாரும் வந்திலர்' என்றால், அனைவரும் வந்திலர் என்றுமாம்; சிலர் வந்தார் என்றுமாம்.

**281. ஈற்றுநின் றிசைக்கும் ஏயென் னிறுதி**
**கூற்றுவயின் ஓரள பாகலு முரித்தே.**

எ...ன், (நுதலியதில்லை).

''மேற் சொல்லப்பட்ட ஐந்து ஏகாரத் துள்ளும் ஈற்றசை ஏகாரம் (கூற்றின்கண்) ஓரளபாம் என்றவாறு''.

உ...ம்:- ''கடல்போ னிற்றல காடிறந் தோரே'' என வரும்.

உம்மை எதிர்மறையாகலான் குறையாது நிற்றலே பெரும் பான்மை.

**குறிப்புரை:-** நூற்பா 'கூற்றுவயின் என்றிருத்தலால் உலக வழக்கில் கூற்று நிகழ்த்தும் பொழுது ஈற்றிலே வரும் ஏகாரம் ஓரளபாய் வரும் என்று கொள்க. பேச்சுவழக்கில் இறுதி ஓசை குறைந்தே ஒலிக்குமாதலால் ஈற்றேகாரம் குறைந்து வரும் என்றார்.

அதனால், இதற்குச் செய்யுளிலிருந்து உதாரணம் காட்டு தல் பொருந்தாதென்க.

**282. உம்மை எண்ணும் எனவென் எண்ணும்**
**தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே.**

எ...ன், (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:- நிலனும் நீரும் தீயும் வளியும்[1] வெளியும் நல்ல வெனினும் அமையும்; தொகை கொடுத்தெண்ணினும் ஆம்.

'என'வென் எண்ணிற்கும் தொகை கொடுத்தும் கொடாதும் சொல்லி உம்மை எண்போல ஒட்டிக்கொள்க.

**283. எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்**
**எண்ணுக்குறித் தியலும் என்மனார் புலவர்.**

எ...ன், (நுதலியதில்லை).

''எண்ணேகாரம் இடைநின்று ஒழிந்த எண்ணால் வந்தன வற்றையும் ஏகார எண்ணால் எண்ணினவே என்றவாறு,

---

சு.வே: 1 நிலனும் நீரும் தீயும் வளியும் நல்ல (ஏடு)

ஏகாரம் எண்ணிடையே நின்றதெனினும் எண்ணிவருகின்ற எண்ணேயாம் என்றுமாம் எனக் கொள்க.

உ...ம்:-

"தோற்றம் இசையே நாற்றம் சுவையே
உறலோ டாங்கைம் புலனென மொழிப"

(இதனுள்) செவ்வெண் ஓடாநின்றே, ஏகாரம் எண்ணிடையே[1] புகுந்தவாறு கண்டு கொள்க.

**குறிப்புரை:- நச்சினார்க்கினியர்** எண் என்பதைத் தனியாகப் பிரித்து "உம்மையும் ஏகாரமும் எனவும் என்றும் எனாவும் என்றாவும் செவ்வெண்ணுமாகிய எழுவகை எண்களுள் ஒன்று முதல் நின்று', ஏகாரம் இடையிட்டுக் கொளினும்" என்று உரை கூறுவர்.

**284. உம்மை தொக்க எனாவென் கிளவியும்
ஆவீ றாகிய என்றென் கிளவியும்
ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன.**

எ...ன், (நுதலியதும் உரையுமில்லை).

உ...ம்:- உம்மை தொக்க எனா என் கிளவி வருமாறு: நிலனெனா, நீரெனா, தீயெனா, காலெனா என வரும்.

ஆவீறாகிய என்றென் கிளவி (வருமாறு);

நிலனென்றா, நீரென்றா, தீயென்றா, வளியென்றா என வரும்.

**குறிப்பு**: "ஆ ஈறு ஆகிய என்று என் கிளவி - முன்னர் எண்ணும்மை அடுக்கி நின்ற ஆகாரத்தை ஈறாகவுடைய என்று என்னும் இடைச்சொல்" (நச்)

இந்நூற்பா (யா.க. வி. கழ.பதி.30-இல்) மேற்கோள்.

**285. அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குரி மரபின் செவ்வெண் ணிறுதியும்**

---

சு.வே: 1 ஏகார வெண் இடையே (கா.ந)

**ஏயி னாகிய எண்ணின் இறுதியும்**
**யாவயின் வரினுந் தொகையின் றியலா.**

எ...ன், (நுதலியதும்; உரையுமில்லை).

உ...ம்:-எனா; சாத்தனெனா, கொற்றனெனா, பூதனெனா அம்மூவரும் வந்தார் என, எனாவென்னும் எண்ணிறுதிக்கண் 'மூவரும் எனத் தொகை கொடுத்து எண்ணினவாறு.

சாத்தன் என்றா, கொற்றன் என்றா, பூதன் என்றா மூவரும் வந்தார், என வரும் என்றா எண்.

சாத்தன் கொற்றன் பூதன் என மூவரும் வந்தார் என வரும் செவ்வெண்.

சாத்தனே கொற்றனே பூதனே என மூவரும் வந்தார் என வரும் ஏகார எண்,

(இவை) தொகைபெற்று முடிந்தவாறு.

**குறிப்பு:-** **நன்னூலாசிரியர்** இந்நூற்பாவினைக் கருதி,
"பெயர்ச் செவ்வென், ஏ, என்றா, எனா எண்
நான்கும் தொகை பெறும்" என்பர். (427)

**286. உம்மை யெண்ணின் உருபுதொகல் வரையார்.**

எ...ன், (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:- 'யானையுந் தேரும் ஆளும் எறிந்தார்' என்பது, யானையையும், தேரையும், ஆளையும் எறிந்தார் என்றவாறு உம்மை யெண்ணின்கண் உருபு தொக்கவாறாயிற்று.

**287. உம்உந் தாகும் இடனுமா ருண்டே.**

எ...ன். (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:- 'நீர்க்கோழி கூய்ப்பெயர்க் குந்து'[1] (புறநா.395) என்பது.

---

சு.வே: 1 கூப்பெயர்க்குந்து (ஏடு)

எட்டுவகைப்பட்ட உம்மையுள் ஓர் உம்மை எனப்படாது. வினைசெய்மருங்கிற் காலமொடு வந்தது.

**குறிப்பு**:-இந்த உம் எட்டுவகைப்பட்ட உம்மையுள் ஒன்றன்று. பெயரெச்சத்தின் ஈற்றில் வரும் உம் என்க. அதனால், இதனை 'வினைசெயல் மருங்கின் காலமொடு வருந' என்றார்.

**288. வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா**
**நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே.**

எ...ன், மேலே, எண்ணுக்களைக் காட்டின வழியெல்லாம் பெயரொடு படுத்தேகாட்டினார்; இனி வினையொடு அவ்வெண்களைக் காட்டுகின்றார்.

உ...ம்:-அறுத்துக் குறைத்துச் சுகிர்ந்து வகிர்ந்திட்டான், எனச் செவ்வெண் வினையான் எண்ணினவாறு,

அறுத்தும் குறைத்தும் சுகிர்ந்தும் வகிர்ந்தும் இட்டான் என, உம்மை எண் வினையொடு கூட்டி எண்ணினவாறு.

பல எண்ணும் வினைக்கு வாரா; வருமிடத்து இத்தொடக்கத்தனவே வருவன கொள்க.

"மண்டில மழுங்க மலைநிலங் கிளர
வண்டின மலர்பாய்ந் தூத மீமிசைக்
கண்டற் கானற் குருகின மொலிப்ப". (அகநா.290)

என, வினையொடு கூடிச் செவ்வெண் வந்தவாறு.

'நினையல் வேண்டும்' என்பது, அவ்வெண்ணுக்களெல்லாம் தொகை பெற்றே நடக்கும் என்றவாறு'.

சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான், வேடன் வந்தான்; அம்மூவரும் வந்தார், அம்மூவரும் வந்தமையால் கலியாணம் பொலிந்தது எனத் தொகை பெற்று வந்தவாறு.

**289. என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி**
**ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே.**

எ...ன், (நுதலியதும் உரையுமில்லை).

உ..ம்:-

"உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்
றாயிரண் டென்ப" (தொல்.புணரி.15)

என்புழி, என்று என்பதனை முன்னுங் கூட்டி உரைக்க

"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை"

(தொல்.நூன்.7) என்புழி எனவென்பதனை முன்னுங் கூட்டி உரைக்க.

"நிலனே நீரே தீயே வளியே
ஆகா யத்தொ டைந்தே பூதம்"

என்புழி ஒடுவினை எங்குங் கூட்டி உரைக்க.

**குறிப்பு:- ஒத்த நூற்பா**

"என்னும் எனவும் ஒடுவும் ஒரோ வழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்"

(நன்.428) **மயிலைநாதர்** உரை; "இம்மூன்றிடைச் சொல்லும் எண்ணின்கண் ஓரிடத்தே நின்றனவேனும் எண்ணும் பொருள் தொறும் பிரிந்து செல்லும்".

**290. அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல வாயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்து வேறு வரினுந் தெரிந்தனர் கொளலே.**

எ...ன், (நுதலியதில்லை).

"மேல் ஓதப்பட்ட சொற்கள் கூறப்பட்ட இலக்கணத்த வன்றிப் பிறபொருள்பட்டு வருப உளவேனும் கொள்க.

உ...ம்:-

"சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ"

(அகநா.46) என்புழி ஓகாரம் ஈற்றசையும் ஆயிற்று.

"கலங்கொண்டன கள்ளென்கோ
காழ்கோத்தன சூட்டென்கோ
நெய்யணிந்த வறையென் கோ
குய்கொண்ட துவையென்கோ" (யா.வி. கழ. பக்.368)

என ஓகாரம் எண்ணோகாரம் ஆயிற்று.

"ஓர்கமா தோழியவர் தேர்மணிக் குரலே" (நற்.145)

'மா' முன்னிலை அசைச்சொல் ஆயிற்று (இது) வியங்கோட்கு ஓதிய அசைச் சொல் (இடை.25)

"அதுமற் கொண்கன் தேரே"

என்புழி 'மன், அசைச் சொல் ஆயிற்று".

**291. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்**
**கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.**

எ.. ன், இவ்வோத்திற் கெல்லாம் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இது) மேற் சொல்லப்பட்டனவன்றி வரும் இடைச் சொல்லும் கொள்ளப்படும் என்றவாறு".

அவை, காரம் கரம் கான் ஆனம் ஏனம் ஓனம் எனவும் வரும்.

மான, மன், ஆர், தெய்ய, தொய்யல் எனவும் வரும்.

புறனடை என்பது நூலுள் எடுத்தோதாதவற்றைப்[1] பாது காத்து நூற்குமுட்டாகாமை உணர்தற் பொருட்டாக வைத்து உரைப்பது.

**குறிப்பு:-** வேற்றுமை மயங்கியலின் புறடை நூற்பாவும் இதுவும் ஒன்றே.

**மேற்கோள்:-** "பொதியிலாயினும், இமயமாயினும் புகாரே யாயினும்" என்ற தொடரில் 'ஆயினும்' என்பது ஓர் எண்ணிடைச் சொல் "கிளந்தவல்ல" என்னும் புறனடையாற் கொள்க என்பர். (சிலப்.மங்.14, 16) **அடியார்க்கு நல்லார்**".

**இடைச்சொல்லியல் முற்றும்.**

---

சு.வே: 1 நூலுள்ளே தொகாதவற்றை (கா.ந)

# 8. உரிச்சொல்லியல்

**292. உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை**
**இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்**
**பெயரினும் வினையினும் மெய்தடு மாறி[1]**
**ஒருசொற் பலபொருட்[2] குரிமை தோன்றினும்**
**பலசொ லொருபொருட் குரிமை தோன்றினும்**
**பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்**
**தத்த மரபிற் சென்றுநிலை மருங்கின்**
**எச்சொ லாயினும் பொருள்வேறு கிளத்தல்.**

எ...ன், இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், உரிச்சொல் உணர்த்தினமையின் உரிச்சொல் ஒத்து என்னும் பெயர்த்து.

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், உரிச்சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

''உரிச்சொற்கள் தோன்றுமிடத்து இசையுங் குறிப்பும் பண்பும் பற்றிப் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் சென்று, பொருள்களை விளக்கும்[3] என்றவாறு''.

'மெய்' என்பது பொருள்.

'தடுமாறுதல்' என்பது பெயர் பற்றியும் வினைபற்றியும் வரும் வரவினை நோக்கி; அவ்வாறு தடுமாறுங்கால், ஒரு சொல் பல பொருட்கு[4] உரிமைப் பட்டுத் தடுமாறுதலும், பல சொல் ஒரு பொருட்கு உரிமைப் பட்டுத் தடுமாறுதலும் உடைய அவை; அவ்வாறு தடுமாறித் தோன்றுதல் அவற்றிற்கு இலக்கணம்; அவ்வாறு தோன்றுங்கால் பயிலாத உரிச்

---

சு.வே: 1 மெய்தடு மாற (ஏடு)
2 பல்பொருட் (கா.ந)
3 விளைக்கும் (துறைசை)
4 பல்பொருட்கு (கா.ந)

சொற்களைப் பயின்ற உரிச்சொல்லொடு சார்த்தி உணரப் படும்; அவ்வாறு சார்த்திச் சொல்லவே எவ்வகைப்பட்ட சொல்லாயினும் பொருள் விளங்கும்.

"உறுகால்" (நற்.300) என்றக்கால் 'உறு' என்பதனை வழக்கினுள்ளார் பயிலாமையின் 'மிகுகால்' என்று சொல்லுப. மிகு[1]என்பதூஉம் உரிச்சொல். அதனை நடையுள்ளார் பயின்றா ராதலான், அந்நிகரானவற்றாற் பொருத்திச் சொல்ல அவை விளங்கித் தோன்றும் என்பது.

இசைபற்றி நிற்பனவற்றிற்கு, 'இசை சென்றுநிலை மருங்கு' எனவும், குறிப்புப்பற்றித் தோன்றுவனவற்றிற்குத் 'தத்தங் குறிப்புச் சென்றுநிலை மருங்கு' எனவும், பண்பு பற்றித் தோன்றுவனவற்றிற்குப் 'பண்பு சென்று நிலை மருங்கு' என வும்[2] படும் என்பது.

இசை பற்றித் தோன்றின: "துவைத்தலும் சிலைத்தலும்" (தொல்.உரி. 61) என்னுந் தொடக்கத்தன.

குறிப்புப் பற்றி வந்தன: "கறுப்புஞ் சிவப்பும்" (தொல். உரி. 75) என்னுந் தொடக்கத்தன.

"நிறத்துரு வுரைத்தற்கு[3] முரிய" (தொல்.உரி.75) என்றா ராகலின், ஆண்டுப் பண்பெனவும் வரும்.

ஒரு சொல்லாகப் பல பொருட்குரியன: "கடியென் கிளவி" (தொல்.உரி.86) என்னுந் தொடக்கத்தன.

பல சொல் ஒரு பொருட் குரியன: "உறுதவ நனி" (தொல்.உரி.3) என்னுந் தொடக்கத்தன.

முன், "இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப".

---

சு.வே: 1 மிகுவன (ஏடு)
2 கீழ் பண்பு வருதலின் இத்தொடர் இருத்தல் வேண்டும்
3 நிறத் துரு வுணர்த்தற்கும் (வழக்கமான பாடம்)

(பெயரியல்.5) என்புழி நிரனிறைவாய்ப் பட்டதாகலான்[1], அது நீக்குதற்குப் "பெயரினும் வினையினும் மெய்தடு மாறி" என்றார் என்பது.

**குறிப்பு:- குறைச்சொல்**

தொல்காப்பியர் உரிச்சொல்லை "உயிரும் புள்ளியும் இறுதியாகிக் குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப்படவாராக் குறைச்சொற் கிளவி" (தொல்.எழுத் குற்றி.76) என்பர். பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் திணை பால் எண் இடம் விளக்கும் இறுதி எழுத்தைப் (விகுதி) பெற்று நடத்தலைப் போல உரிச்சொல் நடவாததலால் பின்னர் "எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே" (உரி.68) என்றுங் கூறியுள்ளார்.

**ஒத்த நூற்பா:-**

"மருவிய சொல்லொடு மருவாச் சொற் கொணர்ந்து
உரிமையொ டியற்றுவது உரிச்சொல் லாகும்"
(வாய்ப்பியம்) யா.க.கழ.578.

**உரிச்சொல்லியல்பு:-**

"உரிச்சொல் பெயராமெனினும், பொருளை விளக்கலும் பெரும்பான்மையும் உருபேற்றலுமின்றிப் பொருட்குணத்தையே விளக்குதலானும், சில வினைபோல் வருதலானும்," என்பர் **மயிலைநாதர்** (நன்.130).

**293. வெளிப்படு சொல்லே[2] கிளத்தல் வேண்டா**
**வெளிப்பட வாரா உரிச்சொன் மேன.**

எ...ன், இருவகைய[3] உரிச்சொல் வெளிப்படுவனவும் வெளிப்படாதனவு மென; அவற்றுள் வெளிப்பட்ட உரிச்சொற்களது பொருள் சொல்ல வேண்டா[4] அறிந்த பொருட்பெற்றியான்

---

சு.வே: 1 நிரனிறைவாய் பட்டதாகலான் (கா.ந)
நிரனிறை வாய்பாட்டதாகலான் (ஏடு)
2 சொல்லோ (ஏடு)
3 இருவகை
4 'வெளிப்பட்ட உரிச்சொல் கிளந்து
பொருள் சொல்லுதல் வேண்டா' (துறைசை)

பொருட் செல்லுதல் என்பது உணர்த்தியவாறு; அவ்வாறு வெளிப்பட்ட உரிச்சொற்களாவன கலித்தது, குழைத்தது என்னுந் தொடக்கத்தன; இனி வெளிப்பட வாராதனவற்றை விரிக்கின்றார்.[1]

**குறிப்பு:**- நூ. 'மேல' என்பது 'மேன என் நின்றது (சேனா).

**294. அவைதாம்**
**உறுதவ நனியென வரூஉ மூன்று**
**மிகுதி செய்யும் பொருள வென்ப.**

எ...ன், குறிப்புப் பற்றித் தோன்றும் உரிச்சொற்கள் பலவாகலான் அவற்றுப் பகுதி முற்கூறிய தொடங்கினார்[2].

''இக் கூறப்பட்ட மூன்று உரிச்சொல்லும் மிகுதிப்[3] பொருண்மையை விளக்கும் என்றவாறு''.

''உறுகா லொற்ற வொல்கி'' (நற்.300) என்பது, மிகுகால் ஒற்ற ஒல்கி யென்பதாம்.

''தவச்சேய் நாட்டா ராயினும்''[4] (நற்.115) என்பது மிகச் சேய நாட்டார் என்பதாம்.

''நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்'' (மலைபடு.487) என்பது மிகச் சேய்த்தன்றவன் பழவிறன்மூதூர் என்பதாம்.

**குறிப்பு:**-

1. **இளம்பூரணர்** நூற்பாவுள் 'அவைதாம்' என்பதற்கு உரை எழுதவில்லை. **சேனாவரையர்** ''அவைதாம் என்றது வெளிப்படவாரா உரிச்சொற்றாம்'' என்பர்.

2. ''நனியென் கிளவி மிகுதிப் பொருட்டே'' (யா.க.வி. கழ.உ)

---

சு.வே: 1 விரிக்கின்றாம் (ஏடு)
2 துடங்கினார் (துறைசை)
3 மிகுப்
4 நட்டாராயினும் (துறைசை)

**295. உருவுட் காகும் புரையுயர்[1] பாகும்.**

எ...ன், இதுவுங் குறிப்பு.

"உருவக் குதிரை" (அகநா.1) என்றக்கால் உட்கத் தக்க குதிரை என்பதாம்.

"புரைய மன்ற புரையோர் கேண்மை" (நற்.1) என்பது உயர்ந்துயர்ந்தோர் கேண்மை என்பதாகும்.

**குறிப்பு:- இளம்பூரணர்** 'புரை' என்பது பிளவுப் பொருளிலும் வரும் என்பர். (உரி.92)

**திவாகரம்**

"உயர்வும் குற்றமும் உவமச் சொல்லும்
புரையென் கிளவிப் பொருளொடு புணரும்"

என்று கூறும்.

**296. குருவுங் கெழுவு நிறனா கும்மே**

எ...ன், (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "குருத்துளி பொழிந்தது"

"கேழ்கிள ரகலத்து"[2] (மதுரைக்காஞ்சி.493) என்றக்கால் அவை இரண்டினும் நிறஞ் சொன்னவாறு.

**குறிப்பு:-** கெழு என்பது கேழ் எனவும் வரும் - தெய்வச் சிலையார்.

**297. செல்லல் இன்னல் இன்னா மையே.**

எ...ன், இதுவுங் குறிப்பு.

"இவை இரண்டும் நோய்ப் பொருண்மைய வாகும் என்றவாறு".

---

1 உயர்வாகும் (நச்)

பா.வே: 2 கேழ் கிள ரகலம் (துறைசை)

உ...ம்:- "மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்" (அகநா. 22) என்புழி நோய் என்பதாம்.

"வெயிற் புறந் தரூஉம் இன்னல் இயக்கத்து"[1] (மலைபடு. 374) என்றவிடத்தும் அதுவாம்[2].

**298. மல்லல் வளனே ஏபெற் றாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையுமில்லை)

உ...ம்:- "மல்லன் மாமலை" என்றக்கால் வளனுடைய மாமலை என்பதாம்.

"ஏகல் லடுக்கம்" (அகநா. 52, நற்.116) என்றக்கால் அப் பெற்றிய[3] கல்லடுக்கம் என்பதாம்.

**குறிப்பு:-**

**நேமிநாதம்** "ஏ ஏற்றம்" (சொல். உரி. 4) என்று கூறுகிறது. **சேனாவரையர்** 'ஏ' என்பது பெற்று என்னும் குறிப்புணர்த்து மென்று கூறி, பெற்று-பெருக்கம் என்பர்.

**நச்சினார்க்கினியர்** ஏ என்பது பெருக்கம் என்னும் குறிப் பினையுணர்த்தும் என்று கூறி, பெற்று அடுக்குதலுமாம் என்பர்.

**நேமிநாதம்** 'ஏயேற்றம்' என்று கூறுவதால் இந்நூற்பா "மல்லல், வளனே ஏயேற் றாகும்" என்றும் இருந்திருக்கலாம்.

**சேனாவரையரும்** "பெற்று என்பது பெருக்கம் என்ற பொருளில் அக்காலத்துப் பயின்றது போலும்" என்று ஐயமாக எழுதுவதையும் அறிஞர் கருதுக.

"அப் பெற்றிய கல்லடுக்கம்" என்பது அவ்வளவு உயர்ந்த கல்லடுக்கம் என்று பொருள்படும்.

---

பா.வே: 1 இயக்கம் (கா.ந)

சு.வே: 2 என்பதாம் (ஏடு)

3 பெற்றிய (கா.ந)

'அப்பெற்றிய கல்லடுக்கம்' ஏட்டில் உள்ள பாடம்.

**299. உகப்பே உயர்தல் உவப்பே உவகை.**

எ.. ன், (நுதலியதும் உரையுமில்லை)

உ...ம்:- "நாடு காண மேன்மே லுகமின்" என்பது நாடு காணக் கன்மேல் ஏறினான், மேன்மேல் உயர்மின் என்பதாம்.

"உவக்குந ளாயினும் ஊடின ளாயினும்"[1] (அகம் 203) என்புழி உவந்தனளாயினும் என்பதாம்.

**300. பயப்பே பயனாம்.**

எ...ன், இவை யெல்லாங் குறிப்பு (உரையில்லை).

உ...ம்:- "ஆன பயமுந் தூக்கின்"[2] என்புழிப் பயன் கூறிய வாறு.

**301. பசப்பு நிறனாகும்.**

எ...ன், இது[3] பண்புபற்றி வந்தது (உரையில்லை).

உ...ம்:- "பசப்பித்துச் சென்றார்" என்புழி நிறம் கூறிய வாறு.

**302. இயைபே புணர்ச்சி.**

எ...ன், இதுவுங் குறிப்பு (உரை இல்லை).

உ...ம்:- "இயைந் தொழுகும்" என்றக்கால் பொருந்தி யொழுகும் என்பதாம்.

**303. இசைப்பிசை யாகும்.**

எ...ன், இஃது இசைபற்றி வந்தது (உரையில்லை).

---

சு.வே: 1 உடலுந ளாயினும்
2 தூக்கினென் (துறைசை)
3 இதுவும் (ஏடு)

உ...ம்:- "இசைந் தொழுகும்" என்றக்கால், இசையத் தோன்றி விடுமின்[1] என்பதாம்.

**குறிப்பு**:- திவாகரத்தில் (9) "இயைவே புணர்ச்சி இயைப் பிசை வாகும்" என்றும் பாடம் உள்ளது.

ஆனால் பிங்கலம் "இயைபே புணர்ச்சி இசைப் பிசை யாகும்" என்றே பாடம் ஓதுகிறது.

**304. அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ் சுழற்சி.**

எ..ன், இதுவுங் குறிப்பு (உரையில்லை).

உ...ம்:- "அலமர லாயம்" (ஐங்குறு.64)
என்றக்கால் 'சுழன்றுவரல் ஆயம்' என்பதாம்

"தெருமரல் உள்ளம்" என்பது சுழன்றுவரும் உள்ளம் என்பதாம்.

**305. மழவுங் குழவு மிளமைப் பொருள.**

எ...ன், இதுவுங் குறிப்பு (உரையில்லை).

உ...ம்:-குழக்கன்று கடிதியாத்தாள் என்றக்கால், இளங் கன்று கடிதியாத்தாள் என்பதாம்.

"மழகளிறு" (புறநா.103) என்றக்கால், இளங்களிறு என்ற வாறாம்.

**306. சீர்த்தி மிகுபுகழ்.**

எ...ன் (நுதலியதும் உரையுமில்லை)

உ...ம்:- "வயக்கஞ்சால் சீர்த்தி" என்றக்கால் மிக்க புகழ் என்றதாம்.

**குறிப்பு**:- **சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்** சீர்த்தி என்னும் உரிச்சொல்லைக் குறிப்புப் பொருளில் வந்தது என்பர். ஆனால், **பேராசிரியர்** மரபியலுள் (110)

---

சு.வே; 1 தோன்றிவிடும் (கா.ந)

"அன்ன பிறவும் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல்"

என்பது இறந்தது காத்தலாம்; என்னை, இசையும் குறிப்பும் பண்புமேயன்றிச் சீர்த்தியும், புனிறும் போல்வன வேறும் உள எடுத்தோதப்பட்டன எனவும்" என்று எழுதுவதை நோக்கினால் சீர்த்தியும் புனிறும் என்பன இசையும் குறிப்புப் பண்பும் அல்லாத உரிச்சொல் என்று அவர் கருதுவது புலனாம்.

**307. மாலை யியல்பே.**

எ...ன், (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "இரவரன் மாலையன்"[1] (குறிஞ்சிப்பாட்டு. 239) என்றக்கால்[2] இரவின் வரும் இயல்பினன் என்பதாம்.[3]

**308. கூர்ப்புங் கழிவும் உள்ளது சிறக்கும்.**

எ...ன், (நுதலியதும் உரையுமில்லை)

உ...ம்:- "உப்புக் கூர்ந்தது" "உப்புக் கழிந்தது" என்பன சிறப்புச் சொல்லாயவாறாம்.

**குறிப்பு :-**

(1) **தொல்காப்பியர்** உரிச்சொற்களில் உறு, தவ, நனி என்னும் மூன்றும் மிகுதிப் பொருளில் வரும் என்றும் (உரி.3) கூர்ப்பு, கழிவு என்னும் இரண்டும் உள்ளது சிறத்தல் என்னும் பொருளில் வரும் என்றும் வேறுபாடு தோன்றப் பிரித்துக் கூறுகிறார்.

**நன்னூலார்** இத்தகைய வேறுபாட்டினைக் கருதாமல் "சால உறுதவ நனி கூர் கழி மிகல்" (455) என்பர்.

(2) "கூர்ப்புங் கழிவும் உள்ளது சிறத்தல்" என்று **திவாகரமும் பிங்கலமும்** கூறும்.

---

சு.வே: 1 இரவின் வரன்மாலையன்
2 என்ற வழி
3 என்றதாம்

**309. கதழ்வும் துனைவும்[1] விரைவின் பொருள.**

எ...ன், (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "அண்டர் கரிய எருத்திற்[2] கதழுந் துறைவன்" (குறுந். 117) என்றக்கால் விரையுந்துறைவன் என்பதாம்.

"துனைபறை[3] நிவக்கும் புள்ளின மான" என்றக்கால் விரைந்து பறக்கும் என்பதாம்.

**குறிப்பு:- இளம்பூரணர்** 'கதழ்வு' என்பது விரைவே யன்றிச் 'சிறப்பு' என்ற பொருளிலும் வரும் என்பர். (உரி. 92)

உ...ம்:- 'கரிய எருத்தில்', என்பது புலிசை ஏட்டின் பாடம் கரிய-சினந்த.

**310. அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ்[4] செய்யும்.**

எ...ன், இவை யெல்லாங் குறிப்பு (உரை இல்லை).

உ...ம்:- "அதிர்கண் முரசம்" என்றக்கால் நடுங்குகண் முரசம் என்பதாம்.

"விதிர்ப்புற்றுக் கண்ணிமையார்" என்றக்கால் நடுங்குற்று[5] என்பதாம்.

**குறிப்பு:-** அதிர்வு முதலான சொல்லை ஆசிரியர் பொருளிற்கு வேறாய் இயற்றுதற் கருத்தாவாகக் கூறியுள்ளார் என்பர் (இலக். கொத். பாயி 1. உரை)

---

பா.வே: 1 துனையும்

சு.வே: 2 கயிறரி யெருத்திற் (கா.ந)
கயிறிரி யெருத்திற் (ஏடு)

3 துனை பொறை (துறைசை)
துனை பரி (கா.ந)

4 நடுக்கும்

5 நடுக்குற்று (கா.ந)

**311. வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்**
**நேர்பும் நெடுமையுஞ் செய்யும் பொருள.**

எ...ன், இது பண்புபற்றி வந்தது (உரை இல்லை).

உ...ம்:- "வார்கயிற் றொழுகை" என்றக்கால் நேர்கயிற்றொழுகை என்பதூஉம், நெடுங்கயிற்றொழுகை என்பதூஉம் ஆம்.

"போகு கொடி" "ஒழுகு கொடி" என்புழியும் அவ்விரு பொருளும் படும்.

**312. தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.**

எ...ன், இதுவுங் குறிப்பு (உரை இல்லை).

உ...ம்:- "ஊரிற் றீர்ந்தான்" என்றக்கால் ஊரிற் பற்று விட்டான் என்பதாம்.

"பேய் தீர்த்தான்" என்றக்கால் பேய் விடுவித்தான் என்பதாம்.

**313. கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு.**

எ...ன், (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "கெடவர லாயம்" என்றக்கால் விளையாட்டாயம் என்பதாம்.

"பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்"

(தொல். மெய்ப்பா.1) என்றக்கால் விளையாட்டுட் டோன்றிய பொருள் என்பதாம்.

**குறிப்பு**:- "பண்ணைத் தோன்றிய என்பது விளையாட் டாயத்தின்கண் தோன்றிய என்றவாறு; பண்ணை உடையது பண்ணை என்றாயிற்று" என்பர் **இளம்.** (தொல்.மெய்ப்.1)

**314. தடவுங் கயவும் நளியும் பெருமை.**

எ...ன், (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "தடந்தோள்" "கயவெள்ளருவி" (அக. 35) "நளிமலை நாடன்" (புறநா. 150)

**315. அவற்றுள்**
**தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்.**

எ...ன் (நுதலியதில்லை)

"தட என்பது பெருமையே யன்றிக் கோட்டப் பொருளினையும் விளைக்கும் என்றவாறு"

உ. .ம்:- "தடமருப் பெருமை" (நற்.120)

**316. கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்.[1]**

எ...ன் (நுதலியதில்லை)

"கய வென்னுஞ் சொல் பெருமையே யன்றி மென்மைப் பொருளும் படும்[2]"

உ...ம்:- "கயந்தலை மடப்பிடி" (நற்.137)
என வரும்.

குறிப்பு:- "கயவே பெருமையும் மென்மையுங் காட்டும்" (திவா.)

**317. நளியென் கிளவி செறிவும் ஆகும்.**

எ...ன் (நுதலிய தில்லை)

"நளி என்னுஞ் சொல் பெருமையே யன்றிச் செறிவுப் பொருளும் படும் என்றவாறு".

---

ப.வே: 1 மென்மையு மாகும் (சேனா)
2 ஏட்டிலும், கா.ந. பதிப்பிலும் இவ்வுரைப்பகுதி இல்லை. கழகப் பதிப்பில் மட்டும் உள்ளது.

உ...ம்:- "நளியிருள்" என்றக்கால் செறியிருள் என்பதாம். மூன்றிடத்தும்மையும் இறந்தது தழீஇயின.

**குறிப்பு:-** மூன்றிடத்து உம்மை என்றது, இவ்வியல் 24,25, 26 என்னும் எண்ணுள்ள நூற்பாக்களில் முறையே கோட்டமும், மென்மையும், செறிவும் என்னுமிடங்களிலுள்ள உம்மைகளை.

இம்மூன்றுள் கோட்டம், மென்மைப் பண்பு, செறிவு, குறிப்பு.

**318. பழுதுபயம்[1] இன்றே.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "பழுதே வந்தார்" என்றக்கால் பயமின்றியே வந்தார்.

**குறிப்பு:-** பயமின்மை குறிப்புப் பொருள்.

உரியியல் எட்டாவது நூற்பா 'பயப்பே பயனாம்' என்பது. அங்குக் குறிப்பிட்ட பயப்பு செய்யுள் நடை; பயன் என்பது உலகநடை. அவ்விரண்டின் எதிர்மறை பழுது என்பதாம். தொன்றுதொட்டு வரும் பயப்பு, பயன் என்னும் சொற்களின் இயல்பை மறந்த பிற்காலத்தார், 'பிரயோசனம்' என்னும் வடசொல் இவ்வாறு திரிந்ததென்பர்.

**319. சாயன் மென்மை.**

எ..ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "சார னாடன் சாயன் மார்பு" (பதிற்று. 16) என்றக்கால் மெல்லிய மார்பு என்றதாம்.

**குறிப்பு:-** மென்மைப் பண்பு,

"கயவு சாயல் சால்பு மேம்பாடென்,
றுயர்வி னான்கும் மேன்மை யாகும்"

---

சு. வே: 1 பயன் (ஏடு)

(திவாகரம்-பண்பு) என்னும் நூற்பாவை நோக்கினால் மேல் நூற்பா "சாயன் மேன்மை" என்றும் இருக்கலாம் போலும்.

**தொன்னூல் விளக்கம்** "சாயன் மேன்மை" என்றே கூறு கிறது.

ஆனால், உரையாசிரியரெல்லோரும் சாயன் மென்மை என்றே பாடங்கொண்டனர். **நச்சினார்க்கினியர்** சிந்தாமணி உரையில் (செய். 8) அமிர்தன்ன சாயல் என்ற பகுதிக்கு உரை எழுதும் பொழுது, "சாயல் மென்மை" என்று பொதுப்படச் சூத்திரஞ் செய்தது ஐம்பொறியாலும் நுகரும் மென்மையெல் லாம் அடங்குதற்கு என்பர்.

**320. முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "முழுக்கறை[1] பெய்தான்" என்றக்கால் எஞ்சாமை பெய்தான் என்பதாம்.

**321. வம்பு நிலையின்மை.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "வம்ப வடுகர்" (அகநா. 375)

"வம்ப நாரை" (அகநா. 190) என்றக்கால் நிலையில்லாமை கூறியவாறாம்.

**குறிப்பு**:- இது குறிப்புப் பொருள்.

**322. மாதர் காதல்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

---

1 'கறை' என்பது பல பொருள் ஒரு சொல்
"உதிரமும் மாசும் உரலும் நிறமும்
கடுவும் இறையும் கருமையும் கறையே" (பிங்க.10.33)
என்னும் இவற்றுள் ஏற்றது கொள்க.

உ...ம்:- "மாதர் வண்டொடு சுரும்பி சைத்தது" என்றக்கால் காதல் வண்டு என்பதாம்.

**323. நம்பு மேவு நசையா கும்மே.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி" (அகநா.198) என்றக்கால் நச்சி என்பதாம்.

"பேரிசை நவிரம் மேஎ யுறையும்" (மலைபடு. 82) என்றக்கால் நயந்து உறையும் என்பதாம்.

**324. ஓய்தல் ஆய்தல் நிழத்தல்[1] சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன்[2] நுணுக்கம்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:- "ஓய்கலை யொருத்தல்"
என்றக்கால் நுணுகிய கலை யொருத்தல் என்பதாம்.

"கையும் மெய்யும் ஆய்ந்திருந்தார்"
என்றக்கால் சுருங்கியிருந்தார் என்பதாம்.

"நிழத்த யானை[3] மேய்புலம் படர" (மதுரை.303) என்றக்கால் மெலிந்து நுணுகிய என்பதாம்.

"கயலற லெதிர கடும்புனற் சாஅய்" (நெடு. 18) என்றக்கால் சுருங்கி என்பதாம்.

**குறிப்பு:-**

1. இவ்வியல் 17-ஆம் நூற்பா உள்ளது சிறத்தல்' இது உள்ளதன் நுணுக்கம்.

---

சு. வே: 1 நிழற்றல் (ஏடு)

2 உள்ளத்தின். (ஏடு)

3 நிழற்ற யானை

2. **ஆய்தல்**

**திவாகரம்** செயல்பற்றிய தொகுதியில்

"தேர்தல் தூக்கல் ஆய்தல் தெரிதல்
ஓர்தல் தெளிதல் ஆய்வா ராய்தல்"

என வருதலின், உள்ளதன் நுணுக்கப் பொருளில் வரின் உரிச் சொல்லென்றும், ஆராய்தல் என்ற பொருளில் வரின் வினைச் சொல்லென்றும் ஆய்தலுக்கு வேறுபாடறிக.

**சிவஞானமுனிவர்** 'ஆயிழையாய் ஆன்மா' (சி.போ.சூ.7; அதி.3) என்பதற்கு 'நுணுகிய நூல்களை ஆராயும் ஆன்மாவே' என்று உரை கூறிப்பின் இழை நூலாகலான் ஈண்டுச் சாத்திரத்தை உணர்த்திற்று. ஆய்தல்-நுணுகுதல்; "ஒய்தல் . . . . . நுணுக்கம்' (உரி.33) என்றார் **தொல்காப்பியனாரும்**" என்பர்.

**325. புலம்பே தனிமை.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "புலம்புவிட் டிருந்தார்" (**மலைபடு.** 49) என்றக்கால் தனிமை துறந்திருந்தார் என்பதாம்.

**326. துவன்று நிறைவாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "ஆரியர் துவன்றிய பேரிசை மூதூர்[1]"(நச்சி-170) என்றக்கால் 'நிறைந்த மூதூர்' என்பதாம்.

**327. முரஞ்சன் முதிர்வே.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

---

சு.வே: 1 பேரிசை யிமயம் (கா.ந)
பேரிசை முள்ளூர் (நற்.170)
உரையுள் 'நிறைந்த மூதூர்' என்று வருவதால் "ஆரியர் துவன்றிய பேரிசை மூதூர்" (புலிசை) என்ற பாடம் தக்கது

உ...ம்:- "கோடுபல முரஞ்சிய[1] கோளி யாலம்" (மலைபடு. 268) என்றக்கால் முதிர்ந்த ஆலம் என்பதாம்.

**328. வெம்மை வேண்டல்.**

எ. ன். (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "நீ வெம்மையள்" என்றக்கால் நீ வேண்டப் படுவாள்[2] என்பதாம்.

**329. பொற்பே பொலிவு**

எ.. ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "அணிகலம் பொற்ப" என்றக்கால் பொலிய என் பதாம்.

**குறிப்பு**:- 1. "துப்புக் கலித்தல் பம்பல் துவன்றல்
பொற்புக் கஞறல் உவப்பே அமரல்
அதிகம் மங்கலம் மலர்ச்சி என்றிவை
பொலிவின் பெயரென புகன்றனர் புலவர்"
**திவாகரம்**-பண்பு

2. "பொலிவும் அழகும் ஒப்பனையும் பொற் பெனல்"
**பிங்கலம்**.10

3. **தொல்காப்பியர்** பொற்பையும் பொலிவையும் ஒன்றாகக் கருதிப் 'பொற்பே பொலிவு' எனக் கூறினாலும், **கம்பன்** வேறாகக் கருதி

"பொற்பில் நின்றன பொலிவு" (பால.90)

என்று கூறுகிறான்.

---

சு. வே: 1 கொடும்பல முரஞ்சிய (ஏடு)

2 நீ வேண்டப்படுவாளொடு (துறைசை)

**330. வறிது சிறிதாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:-"வறிது நெறியொரீஇ"[1] என்றக்கால் சிறிது நெறியொரீஇ[2] என்பதாம்.

**குறிப்பு:-** "சிறுமை பயனில் சொல் அறியாமை வறிதே" (பிங்கலம்.10)

**331. எற்றம்[3] நினைவும் துணிவு மாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "எற்றத்திருந்தார்"[4] என்றக்கால் நினைத்திருந் தார் என்பதூஉம்; துணிந்திருந்தார் என்பதூஉம் ஆம்.

குறிப்பு:- "கானலம் சேர்ப்பன் கொடுமை எற்றி" (குறுந்.145) என்பதை நோக்கினால் 'எற்றம்' என்ற பாடமே நன்று. நச்சினார்க்கினியர் பாடமும் அது. சேனாவரையர், தெய்வச் சிலையார் உரைகளில் 'ஏற்றம்' என்ற பாடம் உள்ளது. **பிரயோகவிவேக நூலார்** சமாசப் படலத்தில் முன்மொழி யெண்ணக் கருமதாரயனைக் கூறும்பொழுது திருவள்ளுவரும் தொல்காப்பியனாரும் "எண்ணித் துணிக கருமம்" எனவும், "ஏற்றம் நினைவுந் துணிவு மாகும்" எனவும் கூறினாராகலின் ஒரு பொருளை எண்ணும் பொழுது ஒன்றாகவும், துணியும் பொழுது வேறொன்றாகவும் கொள்க" என்று கூறுமிடத்து 'ஏற்றம்' என்றே பாடங்கொண்டு நினைவும் துணிவும் வெவ்வேறு என்று கூறுகின்றார்.

**332. பிணையும் பேணும் பெட்பின் பொருள.**

எ...ன் (நுதலியதில்லை)

---

சு.வே: 1 வறிது வறிது நெறியொரீஇ (ஏடு)
2 சிறிது ஒரீஇ (ஏடு)
3 ஏற்றம் (கா.ந)
4 ஏற்றத்

"பெட்டல் என்பது புறந்தருதல் என்றவாறு"

உ...ம்:–"அரும்பிணை பயக்கற்ற வேட்ட ஞான்று" என்றக் கால், அரும்புறந்தரு வரவிற்றாகி வேட்ட போழ்து என்பதாம்.

"பேணி என னல்லனோ மகிழ்ந" (அகநா.16) என்றக் கால், பெட்டேன் அல்லனோ மகிழ்ந என்பதாம்.

**குறிப்பு:– பிணை**

'விருப்பம் மான்விலங்கின் பெண்டொடர்பும் பிணை'
(பிங்கலம்,10)

**333. பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும்.**

எ...ன், இவை யெல்லாம் குறிப்புச் சொல்.

(உரை இல்லை)

உ...ம்:-"பணைத்துப்போய் வீழ்ந்தது" என்றக்கால் பிழைத் துப்போய் வீழ்ந்தது என்பதாம்.

"பணைத்தோள்" (அகநா.1) என்றக்கால் பெருந்தோள் என்பதாம்.

**குறிப்பு:**– ஏட்டில் எழுதிவரும் பொழுது பிழையாக எழுதி விட்டால் அதனைக் குறிக்க மேலே புள்ளிவைப்பதுண்டு. **துறைசை ஏட்டில்** நூற்பாவை எழுதிவரும்பொழுது "பொருப்பும்" என்று பிழையாக எழுதிவிட்டுப் பிழையைக் குறிக்க "பெர்ருப்பும்" என்று புள்ளி வைத்துள்ளமையை அறிக.

**334. படரே உள்ளல் செலவு மாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:– "படர்மலி வெற்பர்" என்றக்கால் உள்ளல் மலி வெற்பர் என்பதாம்.

"அவ்வாறு படர்ந்தார்"[1] என்றக்கால், சென்றார் என்பதாம்.

---

சு.வே: 1 ஆறுபடர்ந்தார்(கா.ந)

**335. பையுளுஞ் சிறுமையும் நோயின் பொருள.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை).

உ...ம்:-"பையுள் நல்யாழ்" என்பதாம்.

"சிறுமை யுறுப[1] செய்பறி யலர்" (நற்றி.1) என்றக்கால் நோய் உறுப செய்யார் என்பதாம்.

**குறிப்பு**:-இதுவரை **நற்றிணை** முதற்பாட்டின் ஈற்றடியைச் "சிறுமையுறுபவோ செய்பறியலர்" எனப் பாடம் ஓதி செய்வ தறியாராய்த் தடுமாற்றம் அடைவரோ? அங்ஙனம் செய்யார் காண்" என்று உரை எழுதியுள்ளார் **(பின் நாரா.)** ஆனால்,

**இளம்பூரணர்** "சிறுமை உறுப செய்பறியலர்" எனப்பாடம் ஓதி," **நோய் உறுப செய்யார்**" என்று சுருக்கமாகவும் தெளி வாகவும் உரை தந்துள்ளார் (புலிசை, துறைசை ஏடுகள்).

**336. எய்யாமை அறியாமை[2].**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:-"எய்யா மையலை" (குறிஞ்.8) என்றக்கால் அறியா மையலை என்றவாறாம்.

**குறிப்பு:-சேனாவரையர்** முதலியோரெல்லாம் இந்நூற்பா வினை "எய்யா மையே அறியா மையே" என்று அளவடியாகப் பாடம் ஓதுவர். ஆனால், **திவாகரம்** "எய்யாமை அறியாமை ஆகு மென்ப" என்று கூறுவதையும் **பிங்கலமும்** அவ்வாறு கூறு வதையும் கருதினால் **இளம்பூரணர்** பாடமே பழைய பாட மாகும்.

**337. நன்று பெரிதாகும்.**

**338. தெவுக் கொளற் பொருட்டே.**

'இரண்டு சூத்திரமும்' (புலிசை)

---

பா.வே: 1 சிறுமை யுறுபவோ (கா.ந)
2 "எய்யா மையே அறியா மையே" சேனா, நச், தெய்.

'இவ் விரண்டு சூத்திரமும்' (துறைசை)

இரண்டு சூத்திரமும் உரை நோக்கி ஒன்றாயெழுதப்பட்டது.
(கா.ந.பதிப்பு)

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:-''நன்றும் அரிதுற்றனையாற் பெரும'' (அகநா.10)
என்றக்கால் 'பெரிதுற்றனையால்' என்பதாம்.

''நீர்த்தெவு நிரைத்தொழுவர்'' (மது.காஞ். 89)
என்றக்கால் 'நீர் கொள்ளும் நிரைத் தொழுவர்' என்பதாம்.

**குறிப்பு:-சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்
தெய்வச்சிலையாரும்**

கீழ்வருவனவற்றை முறையே,

''நன்று பெரிதாகும்''

''தாவே வலியும் வருத்தமு மாகும்''

''தெவுகொளற் பொருட்டே''

என்று மூன்று நூற்பாவாக, அமைத்துக் கொள்ளுகின்றனர்.

**புலிசை, துறைசை ஏடுகளில்**

''நன்றுபெரிதாகும் தெவுக்கொளற் பொருட்டே'' என்று ஒரேநூற்பாவாக எழுதப்பட்டுள்ளது. நூற்பாவின் கீழ் இரண்டு சூத்திரமும்' என்று குறிப்பு இருக்கிறது. ஆனால், ஒரு நூற்பாவாகக் கருதி 46 என்று எண் கொடுக்கப்பட்டுள்ளது.

**339. தாவே வலியும் வருத்தமு மாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:-''தருங்கட் டாக்கலை''[1] (குறுந்.69)
என்றவழி, வருந்திய கலை என்பதாம்.

---

சு.வே: 1 கருங்கட் டாக்கலை (கா.ந)

"தாவின் நன்பொன்" (அகநா.211) என்றக்கால் வலியின் நன்பொன் என்பதாம். பொன்னுக்குப் போக்குடைமை வலியது.

**குறிப்பு:-** உதாரணம் முன் பின்னாக மாறி உள்ளது, ஏட்டில்.

**340. தெவ்வுப் பகையாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "தெவ்வுத் தேயத்து[1]"
என்றக்கால் பகைத் தேயத்து[2] என்பதாம்.

**குறிப்பு:-**

(1) "வகரக் கிளவி நான்மொழி யீற்றது" என்ற (தொல்.எழு.81) நூற்பாவில் குறிக்கப்பட்ட 'தெவ்' என்பது பெயர்ச்சொல்.

இங்கே 'தெவ்வு' என்பது, பகை என்னும் குறிப்பினை உணர்த்தும் உரிச்சொல் என்க.

(2) கா.ந பதிப்பிலும் கழகப்பதிப்பிலும் 'தெவ்வர் தேயத்து' என்று உதாரணம் காட்டப்பட்டுள்ளது. ஆனால், சேனாவரையரும் நச்சரும் தெவ்வுப்புலம் என்றே காட்டு கின்றனர்.

**341. விறப்பும் உறப்பும் வெறுப்பும்[3] செறிவே.**

எ...ன், இவையெல்லாம் குறிப்பு.

(உரை இல்லை).

உ...ம்:- "விறந்த காப்பொடு" என்றக்கால் செறிந்த காப்பொடு என்பதாம்.

---

சு.வே: 1 தெவ்வர் தேயத்து (கா.ந)
2 பகைவர் தேயத்து (கா.ந)
3 வெறிப்பும் (தொன்னூல்)

"உறந்த விஞ்சி யுயர்நிலை மாடம்" என்புழி செறிந்த இஞ்சி என்பதாம்.

"வெறுத்தார்" என்றக்கால் செறிந்தார் என்பதாம்.

**342. அவற்றுள்**
**விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்.**

எ...ன் (நுதலிபதும் உரையும் இல்லை)

உ...ம்:- "கோடுமுற்றி யளந்த காரொடு விறந்தே[1]" என்றக்கால், வெரீஇ என்பதாம்.

**343. கம்பலை சும்மை கலியே அழுங்கல்**
**என்றிவை நான்கும் அரவப் பொருள.**

எ...ன், இவை இசைபற்றி வந்தன.

(உரையில்லை)

உ...ம்:- "ஊர் கம்பலை யுடைத்து" என்றக்கால் அரவ முடைத்து என்பதாம்.

"ஊர் சும்மையுடைத்து" என்பதும்[2]
'கலிகெழு மூதூர்" "அழுங்கன் மூதூர்" என்பனவும் ஒக்கும்.

**குறிப்பு:- திவாகரம்** "கலித்தல் சும்மை கம்பலை அழுங்கல்" என்ற நான்கையும் **முன்னே கூறி,** இவற்றுடன் "சிலைத்தல் துவைத்தல் சிலம்பல் இரங்கல் இமிழ்த்தல் விம்மல் இரட்டல் ஏங்கல் கனைத்தல் தழங்கல் கறங்கல் அரற்றல் இசைத்தல் என்றிவை ஒலித்தலை இசைக்கும் என்று பல சொற்களையும் கூட்டிக் கூறும்".

**344. அவற்றுள்**
**அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்.**

---

சு.வே: 1 விறந்ததே (ஏடு)
2 என்பதும் அது (கா.ந)

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "மனையிழந்தழுங்கினார்"[1] என்றக்கால் இரங்கினார் என்பதாம்.

"செலவழுங்கினார்" என்றக்கால் செலவுகெடுத்தார் என்பதாம். இப்பொழுது[2] இவை குறிப்புப்பற்றி வந்தன.

**345. கழுமென் கிளவி மயக்கஞ் செய்யும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "கழுமிய ஞாட்பினுள் மைந்திழந் தாரிட்ட" (களவழி. 11) என்றக்கால் மயங்கிய ஞாட்பு என்பதாம்[3].

**346. செழுமை வளனுங் கொழுப்பு மாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "செழுஞ் செந்நெல்" என்றக்கால் வளஞ் செந்நெல் என்பதாம்.

"செழுந்தடி தின்ற செந்நா யேற்றை" என்பது கொழுந் தடி தின்ற என்பதாம்.

வளம் என்பது ஆக்கம். கொழுப்பென்பது ஊன்பற்றிய நிணம்.

**குறிப்பு**:- 1. உரையில் கொழுப்பென்பது ஊன்பற்றிய நிணம் என்று குறிக்கப்பட்டுள்ளது. சேனாவரையர் பண்பு என்பர். நச்சினார்க்கினியர் உரையில் "வளத்தொடு கொழுப்பிடை வேற்றுமை என்னையெனின் வளம் என்பது ஆக்கம், கொழுப்பு என்பது ஊன் தொடக்கத்தனவற்றது நிணங்கோட விழுதிருப்பு" என்றுள்ளது.

---

சு.வே: 1 மகனை (கா.ந)

2 'இப்பொழுது' என்னும் சொல் அச்சுப்பிரதியில் இல்லை; ஏட்டில் உள்ளது.

3 கழுமிய ஞாட்பு மயங்கிய ஞாட்பு என்பதாம் (ஏடு)

**பிங்கலம்**

"கொழுமையும் செழுமையும் வளமையுங் கொழுப்பே" என்று பண்பாகவே ஓதுகிறது.

**347. விழுமஞ் சீர்மையும் இடும்பையும் செய்யும்[1].**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "விழுமியர்" என்றக்கால் சீரியர் என்பதாம். "விழும முற்றிருந்தார்" என்றக்கால், இடும்பை யுற்றிருந் தார் என்பதாம்.

**348. கருவி தொகுதி.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "கருவி தந்து கதழுறை சிதறி" (அகநா.4) என்றக்கால், ஈண்டு மின்னும் முழக்குங் காற்றும் என இத்தொடக்கத்தன வாயின.

**குறிப்பு**:- 1. "தொகுதியும் மொய்யும் தோடும் குழுமலும்
கருவியும் தொகுதிப் பெயர்க்கட்டுரைக்கும்".
(திவா.பண்பு)

**349. கமம் நிறைந்தியலும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "கமஞ்சூன் மாமழை[2] யிசைக்கும்" என்றக் கால் நிறைந்த சூன் மா மழை என்பதாம்.

**குறிப்பு**:- 'கமம் நிறைந்தியலும் (உரி.57)
'உருவுட்காகும்' (உரி.4)

---

பா.வே: 1 "விழுமஞ், சீர்மையும் சிறப்பும் இடும்பையும்" (சேனா.நச்)
"விழுமஞ்சீர்மையும் சிறப்பும் இடும்பையும் செய்யும்" (தெய்)

2 கா.ந. பதிப்பில் "கமஞ்சூன் மாமழை" என்றே உள்ளது. இத்தொடர் திருமுருகாற்றுப்படை 7, அகநா.43, குறுந்.158, பதிற்று.24 என்னும் வற்றில் வந்துள்ளது.

'செல்லில் இன்னல் இன்னா மையே' (உரி.6) என்னும் இவை சொல்லினைப் பொருளிற்கு வேறன்று என்றும் கூறினார் என்பர். (இல.கொ.பாயி.6 உரை)

**350. அரியே ஐமை[1].**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- அரிமயிர்த் திரண் முன்கை' (புறநா.11) என்றக்கால் ஐம்மயிர்த் திரண் முன்கை என்றவாறாம்.

தெய்வச் சிலையார் ஐம்மை என்றதற்கு ஐது என்று பொருள் கூறுவர். நேமிநாத உரையாசிரியர் அரி என்பதற்கு அழகு என்று பொருளுரைப்பர். பிங்கலம் 'ஐ' என்பதை அழகுக் கொரு பெயராகக் கூறும். அது 'அரியும் நசுடும் அயரும் ஐம்மை' என்றும் கூறும்.

**351. கவவகத் திடுமே.**

எ...ன், இவையெல்லாம் குறிப்பு.

(உரை இல்லை)

உ...ம்:- ''கொடும்பூண் கவைஇய கோல மார்பு'' என்றக்கால் கொடும்பூண் அகத்திட்ட கோல மார்பு என்பதாம்.

**குறிப்பு:**- 'கவவு' என்ற சொல் கவை என்றும் கவைஇய என்றும் திரிந்து வரும்.

**352. துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும் இசைப்பொருள் கிளவி யென்மனார் புலவர்.**

எ...ன், இவை நான்கும் இசைபற்றி வந்தன (என்றல்) உரை இல்லை.

உ...ம்:- ''வரிவளை துவைப்ப''[3] (புறநா.158) என்றக்கால்,

---

பா.வே: 1 அரியே யைம்மை (சேனா, நச்)

சு.வே: 2 கவைஇ(ஏடு)

3 வால்வளை (ஏடு)

சங்கிசைப்ப என்பதாம். "கலையி னிரலை சிலைப்ப" என்றக் கால் அதனது குரலிசையைச் சொல்லிற்றாம். ஏறு சிலைக் கும் என்பதும் அது. "இயமரம் இயம்பும்" எனவே ஒலிக்கும் என்பதாம்.

"முரசிரங்கு முற்றம்" என்றக்கால் இசைக்கும் என்பதாம்.

**குறிப்பு**:– உரியியல் 52–ஆம் நூற்பாவை நோக்குக.

**353. அவற்றுள் இரங்கல் கழிந்த பொருட்டு மாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உம்மை இறந்தது தழீஇயிற்று.

உ...ம்:– "உடைய திழந்து உயிரிரங்கி இருந்தார்"[1] என்றக் கால் கழிவினை விளக்கும்; ஈண்டு இரக்கம்.

**354. இலம்பா டொற்கம் ஆயிரண்டும் வறுமை.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:– "இலம்பாடு[2] புலவர்" (மலைபடு. 57) என்றக்கால் வறுமைப்படும் புலவர் என்பதாம்.

"ஊரை யொற்கந்[3] தீர்க்கும்" என்றக்கால் வறுமை தீர்க்கும் என்பதாம்.

**குறிப்பு:– இலம்பாடு**

**இளம்பூரணர்** உரை முதலான எல்லோருடைய உரை களிலும் 'இலம்பாடு' என்ற பாடமே உள்ளது. துறைசை ஏட்டில் "இலம்பாடு புலவர் என்றக்கால் வறுமைப்படும் புலவர் என்ப தாம்" என்று உதாரணமும் எழுதப்பட்டுள்ளது.

**சேனாவரையர்** 'இலம்' என்னும் உரிச்சொல் 'பாடு' என்னும் தொழிற்பற்றியல்லது வாராமையின் 'இலம்பாடு' என்றார் என்று சிறப்புரையும் எழுதியுள்ளார்.

---

சு.வே: 1 இருந்தால் (துறைசை ஏடு)

2 இலம்படு (கா.ந)

3 உரை யொற்கம் (துறைசை)

ஆனால், **தொல்காப்பியநூற்பா** ''இலம் என்கிளவிக்குப் படு வருகாலை'' (எழுத்.317) என்றே கூறுகின்றது. இந்நூற்பா வினைக் கருதினால்

''இலம்படு ஒற்கம்'' என்றே இந்நூற்பா இருக்க வேண்டும் போலும்.

**355. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ.ம்:– ''தண்பெரும் பந்தர்த் தருமணன்

ஞெமிரிய (நற்.143) என்றக்கால் பரப்பிய என்பதாம்.

''புண்ணுமிழ் குருதிப் புனல் பாய்ந்து''[1] என்றக்கால், பரந்து என்பதாம்.

**குறிப்பு:– நற்றிணையில்**

''ஐதே காமம் யானே ஒய்யெனத்
தருமணன் ஞெமிரிய[2] திருநகர் முற்றத்து'' (143)

என்றே பாடம் உள்ளது. மேற்காட்டிய உதாரணம் வேறு இலக்கியத்திலும் இருக்கலாம்.

'வரிமணன் ஞெமர, (புறநா.90) என்றதை நோக்கினால் 'ஞெமர்தல்' என்றும் இச்சொல் இருக்கலாம்.

**356. கவர்வு[3] விருப்பாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:– கொள்ளை மாந்தரி னானது கவரும்'' (அகநா.2) என்றக்கால், விரும்பும்[4] என்பதாம்.

---

சு.வே: 1 புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதர (குறிஞ்சி அச்சுப்பிரதி)
2 ஞெமரிய (ஏடு)
3 கவர்பு (தெய்)
4 விரும்பிய (ஏடு)

**357. சேரே திரட்சி.**

எ..ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:– ''சேர்ந்துசெறி குறங்கு'' (நற்.170) என்றக்கால், திரண்டு செறி குறங்கு என்பதாம்.

**358. வியலென் கிளவி அகலப் பொருட்டே.**

எ..ன் (நுதலியதும். உரையும் இல்லை)

உ...ம்:– ''வியலிரு வானம்'' என்றக்கால் அகலிரு வானம் என்பதாம்.

**359. பேநாம்[1] உரும்என வரூஉங் கிளவி**
**ஆமுறை மூன்றும் அச்சப் பொருள.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:– ''மன்ற மராத்த பேமுதிர்[2] கடவுள்'' (குறுந்.87) என்பது அச்சமுதிர் கடவுள் என்பதாம்.

''நாம் வருந்துறை சேர்ந்து[3] என்பது அச்சமுடைய துறை சேர்ந்து என்பதாம்.

''உருமில் சுற்றும்'' என்பது அச்சமில் சுற்றம் என்பதாம். இவையெல்லாங் குறிப்பு.

**குறிப்பு**:– மேலே உள்ள நூற்பா ''பேஎ நாமுருமென'' என்று அளபெடையுடன் இதே வடிவத்தில் **திவாகரத்தில்** (பண்பு) வந்துள்ளது. இப்பெயர் மூன்றும் பேம், நாம், உரும், என மகர ஈறாகவே கொள்ளப்படுகின்றன. (நச்)

**சேனாவரையர்** ''பே முதலாகிய மூன்று என்பர்.

---

பா.வே: 1 பேம்நாம் (நச்)
பேஎ நாம் (தெய்)
சு.வே: 2 பேஎமுதிர் (கா.ந)
3 போந்து (ஏடு)

**தெய்வச்சிலையார்** உரையுள் ஓர் ஏட்டில் 'பேள நாம்' என்றும் மற்றொரு ஏட்டில் 'பேளம் நாம்' என்றும் எழுதப் பெற்றுள்ளது.

**பிங்கலம்** (பண்பு) "பேழும் நாழும் உருமும்" என்று எல்லாவற்றையும் மகர ஈறாகவே கூறுகின்றது.

**360. வயம்[1] வலியாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "வாள்வரி வேங்கை வயப்புலி"

என்பது வன்புலி[2] என்பதாம்.

**குறிப்பு:-** புலிசை ஏட்டில் 'வயம் வலி யாகும்' என்ற பாடமே உள்ளது. **நேமிநாதம்** "வயம் வலியாம் வந்து" (உரி.4) என்று கூறுகின்றது.

**பிங்கலம்** "வலியும் நீரும் புள்ளும் வயம் எனல்" என்றும், **திவாகரம்** "முரண் வயம் பாழி .....வலி" (பண்பு) என்றும் மகர வீறாகவே கூறுகின்றன.

**361. வாளொளி யாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "கண்ணே நோக்கி வாளிழந் தனவே" (குறுந்.44)

என்பது ஒளியிழந்தன என்பதாம்.

1. குறுந்தொகையில் இப்பாட்டு

"காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே"

என்ற பாடத்தில் உள்ளது. ஏட்டில் உள்ளவாறு நோக்கினால்

---

பா. வே: 1 வய (சேனா. நச், இளம், கா.ந, துறைசை)
சு. வே: 2 வலியுள்ள

"காலே பரித்ப் பினவே
கண்ணே நோக்கி வாளிழந் தனவே"

என்று பாடங்கொள்ள வேண்டும் போலும்.

**362. துயவென் கிளவி அறிவின் றிரிவே.**

*எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)*

*உ..ம்:- "அறிவு துயவுறுத்தார்" என்பது அறிவு திரிவுறுத் தார் என்பதாம்.*

**குறிப்பு:- நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும்** *'துயவு' என்றே பிரிப்பர்.*

**திவாகரம்** *"துயவென் கிளவி அறிவின் றிரிவே" என்றே கூறுகின்றது.*

**363. உயாவே உயங்கல்.**

*எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)*

*உ ம்:- "பருந்திருந், துயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை" (அகநா.19) என்றக்கால், உயங்குவிளி பயிற்றி என்பதாம்.*

**364. உசாவே சூழ்ச்சி.**

*எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)*

*உ..ம்:- "நாமுசாக் கொள்ளாமோ" என்பது சூழ்ந்து கொள்ளாமோ என்பதாம்.*

*இவை குறிப்பு.*

**365. வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்.**

*எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)*

உ.. ம்:- "கூழ்கண்டு வயாவினார்" என்பது வேட்கையர்[1] என்பதாம்.

**குறிப்பு**:- 'வயா' என்பது வயவு என்று திரிந்தும் நிற்கும் என்பர் **நச்சினார்க்கினியர்** கருப்பமுற்ற மகளிர்க்கு நுகரப்படும் பொருண்மேற் செல்லும் வேட்கை வயா வாகும்.

**366. கறுப்புஞ்[2] சிவப்பும் வெகுளிப் பொருள.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "கறுத்து வந்தார்" என்பது
வெகுண்டு வந்தார் என்பதாம்.

"சிவந்து நோக்கினார்" என்பது, வெகுண்டு நோக்கினார் என்பதாம்.

**குறிப்பு**:- இவை குறிப்புணர்த்தும்,

**சேனாவரையர்** "கருமை செம்மை என்னாது, கறுப்புச் சிவப்பு என்றதனான், தொழிற்பட்டுழியல்லது அவை வெகுளி உணர்த்தாமை கொள்க" என்பர்.

**367. நிறத்துரு வுணர்த்தற்கும்[3] உரிய என்ப.**

எ.. ன், அதுவே யன்றிப் பண்புப் பொருளும்[4] படும் என்றவாறு.

(உரை இல்லை)

உ...ம்:- "உடம்பு கறுத்தது" "கண் சிவந்தன"
என்பன நிறத்தின் மேலும் செல்லும்.

---

சு.வே: 1 வேட்கையாயினார் (கா.ந)
பா.வே: 2 கருப்பும் (நாவலர் பதிப்பு)
3 உரைத்தற்கும், உரைத்தற்கு
சு.வே: 4 பண்புப் பொருளையும் (துறைசை)

**368. நொசிவு நுழைவு நுணங்கு நுண்மை.**

பாம்: நச். தெய் "நொசிவும் நுழைவும் நுணங்கும்" என்று பாடம் கொள்வர்[1] இரண்டு ஏட்டிலும் உம்மையில்லாத பாடமே உள்ளது. **சேனாவரையரும்** இவ்வாறே பாடங் கொள்வர்.

"நொசிவு நுணங்கு நுழைவு நுண்மை" என்றபாடமே **நேமிநாத உரையிலும்** உள்ளது.

எ...ன், இவை பண்புபற்றி வந்தன (உரை இல்லை).

உ...ம்:- "நொசி மருங்குல்" என்பது நுண்மருங்குல் என்பதாம்.

"நுழை மருங்குல்" என்பதும் அது.

"நுணங்கு மருங்குல்" என்பதும் அது.

**369. புனிறென் கிளவி யீன்றணிமைப் பொருட்டே.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி[1] யாழிட்டு"[2] (அகநா. 56) என்பது ஈன்றணிய ஆப் பாய்ந்தென என்பதாம்.

**குறிப்பு:- திவாகரம்** (பண்பு)

"புனிறீன் றணிமை"

**370. நனவே களனும் அகலமுஞ் செய்யும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன்" (அகநா.83) என்றால், களம்புகு விறலியிற்றோன்று நாடன் என்பதாம்.

"நனந்தலை யுலகு" (குறுந்.6) என்றக்கால் அகன்றலை யுலகு என்பதாம்.

---

சு.வே: 1 பாய்ந்த தெனக் கலங்கி

2 இனி யாழிட்டு (துறைசை)

**371. மதவே மடனும் வலியும் ஆகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- ''மாதர் வான்முகம் மதைஇய நோக்கே''
என்பது மடம்பட்ட நோக்கு என்பதாம்.

''மத களிறு'' என்றக்கால் வலிய களிறு என்பதாம்.

**குறிப்பு:- துறைசை ஏட்டில்**

நூற்பா 'மதர்வே மடனே' என்றும் உதாரணம் 'மதர் வான்முகம்' என்றும் உள்ளன. ஆனால், அடுத்த உதாரணம் 'மதகளிறு' என்று உள்ளதால் 'மதவே' என்ற பாடமே தக்கது.

**372. மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே.**

எ...ன், அவையே யன்றி, இவ்விரு பொருளும் படும் என்றவாறு.

உ...ம்:- ''மதகளிறு'' என்றக்கால், மிகுகளிறு என்பதூஉம் மதப்புலி[1] என்றக்கால் வனப்புலி என்பதூஉம் ஆம்.

''இளம் பாண்டில் தேரூரச் செம்மாந் ததுபோல் மதைஇனள்''[2] (கலித்.106) என்பது வனப்புடையள் ஆயினள் என்பதாம்.

**373. புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- ''அறாஅ யாண ரகன்றலை நன்னாடு''
(அகநா.44) என்றக்கால் அறாத புதுவருவாயுடைய நாடென்பதாம்.

---

சு.வே: 1 புலிசை துறைசை ஏடுகளில் இவ்வாறு உதாரணம் உள்ளது. வனப்புலி-வனப்புப் புலி.

2 மதவினள் (துறைசை)

**குறிப்பு:-** அகநா. 44-இல் இவ்வுதாரணம் பொருந்துமாறில்லை. இத்தொடர் வந்துள்ள வேறு இடம் அறிக. "அறாஅ யாண ரகன்றலைப் பேரூர்" என்பது பொருநராற்றுப் படை (அடி.1)

**திவாகரம்** (பண்பு) **புதுமையைப்பற்றி,**

"புத்தேள் யாணர் புனைபுணர் விருந்து
நூதனம் வம்பு கடிநவம் புதுமை" என்று கூறும்.

**374. அமர்தல் மேவல்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "கூழமர்ந் துண்டாள்" என்பது கூழை மேவி உண்டாள் என்பதாம்.

**375. யாணுக் கவினாம்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "யாணது பசலை என்றனன்" (நற்றி.50) என்றக்கால், வனப்பின் கண்ணது பசலை என்பதாம்.

**குறிப்பு:-** 'யாண்' என்பதே இவ்வுரிச்சொல். உகரம் புணர்த்தி 'யாணு' என்றனர் ஆசிரியர்.

**376. பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள்**[1]**.**

எ...ன் (நுதல்யதும் உரையும் இல்லை)

உ...ம்:- "கடவுள் பரவினார்" என்றக்கால், வழுத்தினார் என்பதாம்.

"கை தொழூஉப் பழிச்சி" (மதுரைக்.694) என்றக்கால் வழுத்தி என்பதாம்.

---

சு.வே: 1 புலிசை ஏட்டில் உரியியல் 96ஆம் நூற்பாவுரையில் "பரவும் பழிச்சும் வழுத்தின் பொருளவே" என்ற பாடம் காணப்படுகின்றது.

**குறிப்பு:- வழுத்துதல்**

இளம்பூரணர் பின் வரும் உணர்ச்சிவாயில் (95) என்னும் நூற்பாவுரையில் "என்னை, 'பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள' என்பதனால், உணராத மடவோரை மற்றொரு வாய்பாட்டால் உணர்த்துக. அல்லாக்கால், மேல் நோக்கிச் சில மலர்கொடு தூவிக்காட்ட உணருமேல் அஃதே உணர்ச்சி வாயிலாகக் கற்க" என்று எழுதுவதை நோக்கினால் பரவலும் பழிச்சலும் தெய்வத்தை முன்னிலைப் படுத்திச் செய்யும் மலர் வழிபாடு (அருச்சனை) என்று தெரிகின்றது.

**377. கடியென் கிளவி**
**வரைவே கூர்மை காப்பே புதுமை**
**வரைவே விளக்கம் மிகுதி சிறப்பே**
**அச்சம் முன்றேற் றாயீ ரைந்தும்**
**மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.**

எ...ன், இதுவுங் குறிப்பு.

"கடி என்பது இப்பத்துப் பொருளும் படும் என்றவாறு"

உ...ம்:- "ஊர் கடிந்தார்" என்றக்கால் ஊரை வரைந்தார் என்பதாம்.

"வாள்வாய் கடிது" என்றக்கால் வாள்வாய் கூரிது என்பதாம்.

"கடிகா" என்பது (களவழி.39) காப்புடைய கா என்பதாம்.

"கடித்தளிர்" என்பது, புதுத்தளிர் என்பதாம்.

"கடிது வந்தார்" என்பது, விரைந்து வந்தர்ர் என்பதாம்.

"கடும்பகல்" (கலி.நெய்.28) என்பது, விளங்கும் பகல் என்பதாம்.

"கடும்புனல்" (குறுந்.103) என்பது, மிக்க புனல் என்பதாம். அது சிறந்த புனல் என்பதூஉம் ஆம்.

"கடுங்கண் யானை" என்பது,. அஞ்சத்தக்க யானை என் பதாம்.

"கடுஞ்சூள் தருகுவன்" (அகநா.110) என்றக்கால் முன்னின்று தேற்றந்தருகுவன் நினக்கென்பதாம்.

**குறிப்பு:-** இந்நூற்பா **தொன்னூல் விளக்கத்தில்** உரிச்சொல்லியலில் மேற்கோள்.

**378. ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே.**

எ...ன், இவ்விரு பொருளும் படுதற்கும் உரித்து என்றவாறு.

(உரை இல்லை)

உ...ம்:- "கடுத்தன ளல்லளோ வன்னை" என்றக்கால் ஐயுற்றனள் என்பதாம்.

"கடிமிளகு தின்ற கல்லா மந்தி" (மயிலை. நன். 456) என்றக்கால் கரிப்பு ஆர் மிளகு தின்ற என்பதாம்.

**379. ஐவியப் பாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "ஐதே காமம் யானே" (நற். 143) என்றக்கால் வியக்கத்தக்க காமம் என்பதாம்.

**குறிப்பு:-**
உரிச்சொல் இடைச்சொற்போல தம் ஈறுதிரிதல் உண்டு. 'ஐய பொன்னசும்பு' என்ற இடத்தில் 'ஐ' என்றது 'ஐய' என ஈறுதிரிந்ததென்பர் (சிந்தா. 37. நச்).

**380. முனைவு முனிவாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "சேற்றுணிலை முனைய" (அகநா. 46) என்றக்கால் சேற்றுண் நிலை முனிந்த என்பதாம்.

**குறிப்பு:-**

மேற்காட்டிய அகநானூற்றடி "சேற்று நிலை முனைஇய" என்ற பாடத்திலே உள்ளது. அப்பாடத்தைக் காட்டிலும் 'சேற்றுணிலை' என்ற பாடம் சிறந்தது.

**381. வையே கூர்மை.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ.ம்:- "வையிலை நெடுவேல்" என்றக்கால் கூரிலை வேல் என்பதாம்.

**382. எறுழ் வலியாகும்.**

எ...ன் (நுதலியதும் உரையும் இல்லை)

உ...ம்:- "வாளுடை யெறுழ்த்தோள்" என்றக்கால், வலியுடைய தோள் என்பதாம்.

**383. மெய்பெறக் கிளந்த உரிச்சொல் லெல்லாம்**
**முன்னும் பின்னும் வருபவை நாடி**
**ஒத்த மொழியாற் புணர்த்தன[1] ருணர்த்தல்**
**தத்த மரபிற் றோன்றுமன் பொருளே.**

எ...ன், இது புறனடை[2].

"பொருண்மேற் சொல்லப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றையும் முன்னைச் சொல் பின்னைச் சொல் நோக்கி அதற்கியைந்த மொழிநாடி, அவற்றொடு புணர்த்து[3] உணர்த்துக; அவ்வாறு உணர்த்தவே தத்தமரபிற்றிரியாப் பொருளவாய்த் தோன்றும்; அவ்வாறு தெரிந்துணராக்கால் கொள்ளா தாங்கருதிய பொருள்[4] என்பது".

---

சு.வே: 1 புணர்ந்தனர் (புலிசை)

2 ஏட்டில் 'புறநடைப் பொருண்' என்று எழுதப்பட்டுள்ளது. அங்ஙனமாயின், உரை 'மேற்சொல்லப்பட்ட' என்பதிலிருந்து தொடங்க வேண்டும்.

3 புணர்ந்து (புலிசை)

4 'கொள்ளாதாங் கருதிய பொருள்' என்றும் பிரிக்கலாம்.

யாதோ கொள்ளாதவாறெனின்? "கடியுடை வியனகர்" என்றக்காற் கடி என்பது கூர்மையும் விரைவும் படுமால் என்று நகரத்துக்கண் அவை ஏற்றற்க; காப்புடை நகர் என்று கொள்க, அதற் கொத்த மொழியாகலின் என்பது.

**384. கூறிய கிளவிப் பொருணிலை[1] அல்லது வேறுபிற தோன்றினும்[2] அவற்றொடு கொளலே.**

எ...ன், இதுவும் புறனடை.

"சொல்லிப் போந்த உரிச்சொற்கள் அவ்வுரிய வெனப்பட்ட பொருளின ஆகாது, வேறுவேறுபட்ட பொருளினவாய்த் தோன்றினும், அச் சொல்லப்பட்ட பொருளொடு படுத்துப் பொருள் படுமாறு அறிந்து கொள்க என்பதாம்".

"புரைபட்ட" என்புழிப் புரை என்பது ஈண்டுப் பிளவுப் பொருண்மையை விளக்கிற்றாகலின், இதனையும் உயர்வுப் பொருண்மையொடு புணர்த்து இரு பொருளும் அச் சொற்குப் பொருள் என்று கொள்க என்பதாம்.

இனிக் "கண்கதழ எழுதினார்" என்றக்கால் ஆண்டு விரைந்து எழுதினார் என்று விரைவின் பொருள் கொள்ளற்க; சிறப்ப எழுதினார் என்று கொள்க.

பிறவும் அன்ன.

**385. பொருட்குப் பொருடெரியின் அதுவரம் பின்றே.**

எ ன், இதுவும் புறனடை.

"மேற் கூறப்பட்ட உரிச்சொல் உளவன்றே; அப்பொருட்கும் இப்பொருட்கும்[3] உரியவென்று ஓதப்பட்டன; அவை "உறு தவ நனி" (தொல்.உரி.3) என்னுந் தொடக்கத்தன; மற்ற

---

சு. வே: 1 பொருணிலைய (ஏடு)
2 வேறு பிறிதொன்றினும் (ஏடு)
3 எப்பொருட்கும் (ஏடு)

வற்றை மிகுதிப்பொருளவென்றார்; அது பற்றி மிகுதி என்னை எனப் பிறிதொன்றைவிடப் பெரிதாகலென்பவால், அதனானே ஒழியான்;[1] பெரிதாவ தென்னை?[2] யென்றான், எனச் சால வாதல் என்றான் என்பதனானும் ஒழியான்; சாலவாதல் எனப்படுவது என்னை? என்றான்; என, எத்துணையும் இறங்குதல் என்றான்; என, அத்துணையும் என்னை? என்று இவ் வாறு பிரித்துச் சொற்களால் தெரிபு கூறுமேல், அது வேண்டா என்று விலக்கினவாறு''.

386. **பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்.**

எ...ன், இதுவும்[3] மேற் சூத்திரத்திற்குப் புறனடை.

''உரிச்சொல் பிறிதலது, பொருள் உணருமாறு வல்லார்க்குப் பிறசொற்கொணர்ந்து பொருள் உணர்த்தல் வேண்டா; திரிபின்றி அச்சொல்லினானே உணரப்படும் என்றவாறு''.

'உறு' என்ற பதம் மிகுதிப்பொருட்டு என்றக்கால் அம் மிகுதியையும் அதனானே உணரலாம், உணருமாறு வல்லார்க்குப் பிறசொற் கொணர்ந்து உரைத்தல் வேண்டா என்பது.

**குறிப்பு**:- ஆசிரியன் மாணவன் மனங்கொள்ளும் நெறி அறிந்து உணர்த்த வல்லனாயின், பொருளுணர்ச்சி திரிபில்லாமல் நிகழும் என்க. இங்கே 'பொருள்' என்பது பொருளுணர்ச்சியை.

387. **உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே.**

எ...ன் இதுவும் புறனடை[4]

''யாம் சொல்லிய சொல்வாயிலே பற்றி உணர்த்துக; அத்துணையால் உணர்வார்க்கு அதுவே உணர்ச்சி வாயிலாம்; அல்லாக்கால் அவ்வுணர்வோரை வலித்து ஆமாற்றால் உணர்த்துக என்பதாம்''.

---

சு.வே: 1 அதனைக் கேட்டொழியான் (கா.ந)
2 பெரிதெனப்படுவது (கா.ந)
3 இது (கா.ந)
4 புறநடையாம் (புலிசை)

என்னை? "பரவும் பழிச்சும் வழுத்தின் பொருளவே"[1] (தொல்.உரி) என்பதனால், உணராத மடவோரை மற்றொரு வாய்பாட்டான் உணர்த்துக. அல்லாக்கால், "மேல் நோக்கிச் சில மலர்கொடு தூவிக் காட்ட" உணருமேல், அஃதே உணர்ச்சி வாயிலாக அறிக.[2] என்பது.

**388. மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.**

எ...ன், இதுவும் புறனடை.

"மொழிப் பொருள்கள் என்பன அச்சொல்லப்பட்ட பொருள்கள்; (காரணம்) அப்பொருட்கட்டே".

**குறிப்பு:- சேனாவரையர்** விழிப்பத்தோன்றாவென உரிச்சொற் பற்றி ஓதினாரேனும் ஏனைச் சொற்பொருட்கும் இஃதொக்கும் என்பார்.

**389. எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே.**

எ...ன், புறனடை போல்வதோர் விதி கூறுதல் நுதலிற்று.

"எழுத்துக்கள்[3] பிரிந்து இசைக்கப்படா உரிச்சொல் என்றவை; பிறிதிலக்கண முடைய என்பது போந்ததாம்".

என்னை பிறிதிலக்கணமெனின்? "தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலும்" (தொல்.இடை.3) உடைய இவையும் என்பது.

யாதோவெனின், "கடியென் கிளவி" (தொல்.உரி.86) கடும் புனல் (குறுந்.103) என்றாயிற்று. "நம்பு" (தொல்.உரி.32) எனப்பட்டது நம்பி என்றாயிற்று. பிறவும் அன்ன. (இவை தம்மீறு திரிதல்).

---

சு.வே: 1 பொருள (கா.ந)
2 கற்க (ஏடு)
3 எழுத்துகளைப் (ஏடு)

இனி "உருகெழு தோற்றம்" (புறநா.58.17) என்புழி, உரு என்பதூஉம், கெழு என்பதூஉம் உரிச்சொல்.
(இது பிறிதவணிலையயல்)

**குறிப்பு:-** தொல்காப்பியர் கிளவியாக்கம் பத்தாம் நூற்பாவில் ஈற்றில் நின்றிசைக்கும் பதினோரெழுத்தும்" என்றும், அறுபத்திரண்டாம் நூற்பாவில் "தம் வினைக்கியலும் எழுத்து" என்றும் குறிப்பன திணை, பால் முதலியவற்றைக் குறிக்கும் எழுத்துக்களை (விகுதி) யாம். உரிச்சொல் அவ்வெழுத்துக் களைப் பெற்று வினையையும் பெயரையும் போலப் பிரித் திசைக்கப்படா என்பது புறனடை; அங்ஙனமாயினும் இடைச் சொற்போலத் தம்மீறு திரிதலையும் பிறிதவணிலையலையும் பெறும் என்பது புறனடை போல்வதோர் விதியாகும்.

390. அன்ன பிறவும் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னினைத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனார் புலவர்.

எ. ன், இதுவும் ஓர் புறனடை.

"அச் சொல்லிப் போந்த உரிச்சொற்களன்றி, அவை போல்வன பிறவும் உலகத்துப் பலவாற்றானும் பரந்து வரும் உரிச்சொல் எல்லாவற்றையும், இசையுங் குறிப்பும் பண்பு மென்னும் மூன்றுவகைப்பட்ட பொருளையுஞ் சார்த்தி உணர்த்துதற் குறை கூட்ட, அம் மூன்று பொருண்மைக்கண் ணும் அவை இத்துணையே என்று வரையறுக்கும் வரையறை யின்மையின், முன்னர் உரிச் சொற்கு ஓதப்பட்ட இலக்கணத்திற் பிழையாமல் ஓம்படை யாணையிற் கிளந்தவற் றியலான் உணர்க என்றவாறு".

'ஓம்படை யாணை, என்பது பாதுகாவல்பற்றிய ஆணை.

அருமை, இருமை, கருமை, சேண்மை என்னுந் தொடக்கத்தன[1].

அவற்றைப் பிறநூலார் "இருமை பெருமையுங் கருமையும் செய்யும்" என்றும், "தொன்றென் (தொறுவென்) கிளவி தொழிற்பயில்வாகும்" என்றும் எடுத்தோதுப என்பது மது.

**உரிச்சொல்லியல் முற்றும்.**

**குறிப்பு:-**

1. இளம்பூரணர் 'பொருட் குறை கூட்ட' என்பதற்கு இசையும் குறிப்பும் பண்பும் என்னும் மூன்று வகைப்பட்ட பொருளையும் சார்த்தி உணர்த்துதற் குறைகூட்ட" என்று உரை கூறுகிறார்.

சேனாவரையர், பொருட்குறை கூட்ட இயன்ற மருங்கின் இனைத்தென அறியும் வரம்பு தமக்கின்மையின் என்பது; பொருளொடு (சொல்லொடு) புணர்த்துணர்த்த இசை குறிப்புப் பண்புபற்றித் தாம் இயன்ற நிலத்து இத்துணையென வரையறுத்துணருமெல்லை தமக்கின்மையான் எஞ்சாமை கிளத்தலரிதாகலின் என்றவாறு என்று எழுதிப் பின்னர் "பொருளைச் சொல் இன்றியமையாமையின், அதனைக் குறை என்றார், ஒருவன் வினையும் பயனும் இன்றியமையாமையின், "வினைக் குறை தீர்ந்தாரிற் றீர்ந்தின் றுலகு" (குறள் 612) "பயக்குறை யில்லைதாம் வாழும் நாளே" (புறநா. 188) என்றாற்போல" என்று சிறப்புரையும் எழுதியுள்ளார்.

2. **ஒம்படை ஆணை**

"பெயரினும் வினையினும் மெய் தடுமாறி" (உரி.1)

எனவும்

"முன்னும் பின்னும் வருபவை நாடி" (உரி.91)

எனவும்

"எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்" (உரி.1)

எனவும்

---

சு.வே: 1 தொடக்கத்தனவற்றை

''ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே'' (உரி. 91)

எனவும் ஆசிரியரால் கூறப்பட்டவையெல்லாம் ஓம்படை ஆணை என்பர் (சேனா, நச்).

### 3. உரையில் பிறநூலார்

இளம்பூரணர், ''பிறநூலார், இருமை பெருமையும் கருமையும் செய்யும்'' என்றும் ''தொன்றென் கிளவி தொழிற் பயில்வாகும் என்றும் எடுத்தோதுப என்பதும் அது'' என்பர்.

'இருமை பெருமை' என்னும் நூற்பா திவாகரத்திலும் பிங்கலத்திலும் இல்லை. அடுத்த நூற்பா ''தொறுவென் கிளவி தொழிற்பயில் வாகும் என்ற பாடத்தில் உள்ளது. இதனாலே திவாகரம் போல் வேறு நிகண்டும் இருந்தது போலும். யா–க. விருத்தி ''இடைச்சொல்லும் உரிச்சொல்லும் தொல்காப்பியம், தக்காணியம், அவிநயம், நல்லாறன் மொழிவரி முதலியவற்றுட் காண்க'' என்று கூறும்.

### 4. உரியியல் நூற்பாத் தொகை

கா.ந. பதிப்பும் கழகப்பதிப்பும் ''நன்று பெரிதாகும்'. என்பதைத் தனி நூற்பாவாகவும் (46) ''தெவுக்கொளற் பொருட்டே'' (47) என்பதைத் தனி நூற்பாவாகவும் கொண் டுள்ளதால்உரியியல் நூற்பா எண் 99 ஆகிறது அப்பதிப்புகட்கு ஏட்டில் உள்ளபடி 98.

**உரிச்சொல்லியல் முற்றும்.**

## 9. எச்சவியல்

**391. இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்**
**றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே.**

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், எல்லா ஓத்தி னுள்ளும் எஞ்சிய பொருள்களை உணர்த்தினமையின் எச்ச வியல் என்னும் பெயர்த்து.

இனி, இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின் இத்துணைப்பட்ட சொல்லினாற் செய்யுள் செய்யப்பெறும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

"இயற்சொல்லும் திரிசொல்லும் திசைச்சொல்லும் வட சொல்லுமென நான்குஞ் செய்யுட் செய்தற்குரிய சொல் லாதலுடைய என்றவாறு".

**இயற்சொல்** என்பது, தமிழ் வழங்குநாட்டு விகாரமின்றித் தமிழியற்கை இலக்கணப்பாடு செவ்வனுடைய சொல்; அவை முன்னர் உணர்த்துப.

**திரிசொல்** என்பது, செய்யுளின்பம் நோக்கி அவ்வியற் சொற்களை அவ்வாய்பாடு திரித்து வேறுவாய்பாட்டவாக்குஞ் செய்யுளுடைய சொல்.

என்னை?

"சேரிச் சொல்லின் முட்டுற லஞ்சிச்
செய்யுட்குப் புலவர் செய்துகொண் டன்றே".

என்பது புறச்சூத்திரம். அவைதாம் வழக்கினுளின்மை காரண மமைதல் என்பவாகலின்[1] அவையும் முன்னர் உணர்த்துப[2].

---

சு.வே: *1* என்பதாகலின் (ஏடு)

*2* அவை முன்னர் உணர்த்துப (ஏடு)

**திசைச்சொல்** என்பது, செந்தமிழ் நாட்டை அடையும் புடையுங்கிடந்த திசைநாட்டார் வழங்குஞ் சொல்; அவையும் முன்னர் உணர்த்துப.

**வடசொல்** என்பது ஆரியச் சொற்போலுஞ் சொல்; அவை முன்னர் விரித்துரைப்ப.

பெயர் வினை இடை உரி எனப்பட்ட நான்கு சொல்லுமே இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் எனப்பட்டன, பிறவில்லை.

திரிசொல் செய்யுட்கே உரிய. ஒழிந்த மூன்றும் வழக்கிற் குரியவாகிச் செய்யுட்கும் புகும்[1] என்றவாறு.

**392. அவற்றுள்**
**இயற்சொற் றாமே[2]**
**செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்**
**தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே.**

எ...ன், மேல், நிறுத்த முறையானே இயற்சொல்லை இன்ன வென்று இலக்கணமுறைமையாற் பகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

"மேற் சொல்லப்பட்ட நான்கு சொல்லுள்ளும் இயற் சொல் என்று கூறப்படுவன, செந்தமிழ் நிலத்தார் வழங்கும் வழக்கத்திற்குப் பொருந்தித் தத்தம் பொருளின் வழாமல் நடக்குஞ் சொல் என்றவாறு".

அவை சோறு, கூழ், பால், பாளிதம் என்னுந் தொடக்கத்தன.

செந்தமிழ்நிலம் என்பது வையையாற்றின் வடக்கு; மருத யாற்றின் தெற்கு; கருவூரின் கிழக்கு; மருவூரின் மேற்கு.

---

சு.வே: 1 புகுதும் (ஏடு)
பா.வே; 2 இயற்கைச் சொற்றாமே (துறைசை)

மற்று, இவற்றைத் தம்பொருள் வழாமை இசைக்கும் என்பது என்னை? ஒழிந்தன தம்பொருள் வழுவுமோவெனின், அற்றன்று; நாயை ஞமலி என்ப பூழிநாட்டார் என்றக்கால் அச்சொல் எல்லாநாட்டாரும் பட்டாங்குணரார்; நாய் என் பதனை யாயின் எவ்வெத்திசை நாட்டாரும் உணர்ப என்பது.

**393. ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்**
**வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியும்**
**இருபாற் றென்ப திரிசொற் கிளவி.**

எ...ன், முறையானே, திரிசொல் இவையென்று இலக்க ணத்தாற் பகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

''ஒருபொருளைக் கருதிப் பல சொல்லான் வருதலும், பல பொருளைக் கருதி ஒரு சொல்லான் வருதலும் என இரு கூற்றன வாகுந் திரிசொற்கள் என்றவாறு.

ஒரு பொருளைக் குறித்த வேறுசொல்லாகி வருவன, அடுக்கல், பிறங்கல், விண்டு, ஓங்கல் என இவை.

வேறுபொருள் குறித்த ஒருசொல், உந்தி என்பது; ஆற் றிடைக் குறையும், கொப்பூழும், தேர்த்தட்டும்; யாழகத்ததோர் உறுப்புமான ஞெழிலும்[1] என இவையெல்லாம் விளங்கி நிற்கும்.

இனிக் கிள்ளை மஞ்ஞை என்னுந் தொடக்கத்தன, ஒரு கூறு நிற்ப ஒரு கூறு திரிந்தன. உந்தி அடுக்கல் என்னுந் தொடக்கத்தன, முழுவதூஉம் வேறுபடத்திரிந்தன; பிறவும் அன்ன.

**புலிசை துறைசை ஏடுகளில்** இந்நூற்பா உரை "ஒரு சொல்லைக் கருதிப் பல சொல்லான் வருதலும், பல சொல் லைக் கருதி ஒருசொல்லான் வருதலுமென இரு கூற்றனவாகுந் திரிசொற்கிளவிகள் என்றவாறு" என இவ்வாறு உள்ளது.

---

க.வே: 1 உறுப்பும்மன ஞெழிலும் (கா.ந)

**394. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.**

எ...ன், நிறுத்த முறையானே திசைச்சொல் இவை என்பதும் இலக்கணத்தாற் பகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

"செந்தமிழ் நாட்டை அடையும் புடையுங் கிடந்த பன்னிரு நிலத்தார் தங்குறிப்பினையே இலக்கணமாகவுடைய திசைச் சொற் கிளவிகள் என்றவாறு".

உ...ம்:- தாயைத் தள்ளை என்ப குடநாட்டார். நாயை ஞமலி என்ப பூழி நாட்டார்; பிறவும் அன்ன.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலமாவன:

பொதுங்கர் நாடு, தென்பாண்டிநாடு, ஒளிநாடு, குட்டநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு[1], பூழிநாடு, மலைநாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு, குடநாடு என இவை.

'தங்குறிப்பினவே' என்றது, அவை ஒரு வாய்பாட்டவே யல்ல, தத்தம் மரபினும் பின் வேறு வேறு வாய்பாட்ட என்றற்கும், அவர் எவ்வாறு குறித்து வழங்கினாரோ அஃதே அவற்றிற்கு இலக்கணம் என்றற்கும் என்பது.

**395. வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.**

எ...ன், நிறுத்தமுறையானே வடசொல் இவை யென்று அவற்றிற்கு இலக்கணத்தான் அறியக் கூறுதல் நுதலிற்று.

"வடசொற் கிளவி என்று சொல்லப்படுவது ஆரியத்திற்கே உரிய எழுத்தினை ஒரீஇ, இருதிறத்தார்க்கும் பொதுவாய எழுத் தினை உறுப்பாக உடையவாகுஞ் சொல் என்றவாறு.

அவை மூலகம், குங்குமம், நரகுணம்[2] என்னுந் தொடக் கத்தன.

---

சு.வே: 1 சிதைநாடு, சீதைநாடு (ஏடு)

பா.வே: 2 உலகம் குங்குமம் நற்குணம் (கா.த)

குங்குமம் என்றவிடத்து இரு சார்க்கும் பொதுவெழுத்தினான் வருதலுடைமையும் ஆரியத்தானுந் தமிழானும் ஒரு பொருட்கே பெயராகி[1] வழங்கி வருதலுடைமையும் அறிக.

**குறிப்பு:- சுவடிகளில்** வடசொல்லுக்கு உதாரணம் உலகம் என்பது இல்லை. மூலகம் என்றே உள்ளது. நற்குணம் என்பது இல்லை. 'நாகுணம்' என்றே உள்ளது. இது நரகுணம் என்றும் நாகுணம் என்றும் படிக்குமாறு உள்ளது.

**396. சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்.**

எ...ன், இதுவும் வடசொற்கிளவியாமாறு கூறுகின்றது[2]

''இருசார் எழுத்திற்கும் ஒத்த வழக்கினான் வாராது சிதைந்து வந்தனவாயினும் பொருந்தி வந்தன வரையப்படா வட சொல்லாதற்கு என்பது''

அவை, ''நிதியந் துஞ்சும்'' (அகநா. 227) எனவும், ''தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்''(நெடுநல். 11) எனவும் வரும்

**397. அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை**
**வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி**
**மெலித்தலும்**
**விரிக்கும்வழி[3] விரித்தலும் தொகுக்கும்வழித்**
**தொகுத்தலும்**
**நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்**
**நாட்டல் வலிய வென்மனார் புலவர்.**

எ...ன், அந்நான்கு வகைச் சொல்லானும் செய்யுட் செய்யுமிடத்து இவ்வறுவகைப்பட்ட விகாரமும்படச் செய்யுட் செய்யப்பெறுப என்பது உணர்த்தியவாறு.

---

பா.வே: 1 உரியவாகி (கா.ந)

2 உணர்த்துதல் நுதலிற்று. (கா.ந)

3 விரிக்கும்வழி விரித்தலும் குறைக்கும்வழிக் குறைத்தலும் எனப் பாடம் உண்டு போலும். இறை.கள.நூ.1 என்மனார் என்பதற்கு எழுதிய உரையை நோக்குக.

"நாட்டல் வலிய" என்றது ஒருவரால் நாட்டுதல் வன்மை யிலக்கணத்தினை அவை யுடைய என்றவாறு.

வலிக்கும்வழி வலித்தல்; குறுந்தாட் கோழி என்பதனைக் 'குறுத்தாட் கோழி' என வலித்தல்.

'தட்டை' யெனற்பாலதனைத் 'தண்டை' யென மெலிக்கும் வழி மெலித்தல்[1].

விரிக்கும்வழி விரித்தல்; தண்டுறைவர் எனற்பாலதனைத் "தண்ணந் துறைவர்" (குறுந்.296) என விரித்தல்.

'தொகுக்கும்வழித்தொகுத்தல்: மழவரை யோட்டிய எனற் பாலதனை "மழவ ரோட்டிய" (அகநா.1) எனத் தொகுத்தல்.

நீட்டும்வழி நீட்டல்; பச்சிலை எனற்பாலதனைப் பாசிலை (புறநா.54) என நீட்டல்

குறுக்கும்வழிக் குறுக்கல்; "உண்டார்ந்து" என்பதனை "உண்டருந்து" எனக்குறுக்கல்.

பத்துவகை விகாரத்துள் அறுவகை விகாரம் ஈண்டுக் கூறினார்.

இனமில்லதனை இனமுடையது போலச் சொல்லுதலும்[2], இனமுடையதனை இனமில்லது போலச் சொல்லுதலும் "இனச்சுட் டில்லாப் பண்பு கொள் பெயர்க்கொடை" (கிளவி:18) என்பதனுட் சொல்லிப் போந்தாம்.

இனி, இடைச்சொற் போக்கல், புடைச்சொற் புகுத்தல் என இரண்டும் "நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று" (எச்ச.8) எனப்பட்டு அடங்கும்.

---

1 இத்தொடர் ஏட்டில் உள்ளது போல் கொடுக்கப்பட்டுள்ளது. கா.ந. பதிப்பில் "மெலிக்கும் வழி மெலித்தல் தட்டை எனற் பாலதனைத் தண்டை யென மெலித்தல்" என்றுள்ளது.

2 கா.ந. பதிப்பில் "இனமில்லதனை 'இனமுள்ளது போலச் சொல்லுதலும்,இனமுள்ளதனை இனமில்லதுபோலச் சொல்லு தலும்" என்று உள்ளது. ஏட்டிற் கண்டவாறு மேலே தரப் பட்டுள்ளது.

**குறிப்பு:- துறைசை** ஏட்டில் "வலிக்குவழி, மெலிக்குவழி விரிக்குவழி, தொகுக்குவழி, நீட்டுவழி, குறுக்குவழி என்று மகர மெய் இல்லாத பாடமாகவே நூற்பா எழுதப்பட்டுள்ளது. உரையும் அவ்வாறே உள்ளது.

**398. நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்**
**றவைநான் கென்ப மொழிபுண ரியல்பே[1].**

எ...ன், நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என நான்கு வகையான் மொழிகள் தம்முள் புணருஞ் செய்யுளகத்து என்பது உணர்த்தியவாறு.

அவையாமாறு அவையவற்றின் சிறப்புச் சூத்திரங்களால் அறிக.

**ஏட்டில்** "நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்றென நான்குவகையாகிய மொழிகள் புணருஞ் செய்யுள் என்பது உணர்த்தியவாறு" என்று உள்ளது. மேலே உள்ளவை கா.ந. பதிப்பு.

**குறிப்பு:- சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை**

சொல்வகை நான்கு வகைப்படும்: சுண்ணம்; சுரிதகம், வண்ணம், வரிதகம் என.

அவற்றுள் சுண்ணம் நான்கடியான் வருவதென்பர்.

**399. அவற்றுள்**
**நிரனிறை தானே**
**வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்**
**சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்[2]**

எ...ன் நிரனிறைப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

பா.வே: 1 பொருள்புண ரியல்பே (தெய்)
2 நிலையும் (யா.க.வி)

இச் சொல்லப்பட்டவற்றுள் நிரனிறையென்று சொல்லப் படுவது யாதோவெனின், வினையினானும் பெயரினானும் ஆராயத் தோன்றிச் சொல்வேறு நிற்பப்[1]பொருள்வேறு நின்று உணரப்படும் என்றவாறு''.

அவற்றுள் வினையிற் றோன்றியது:-

''உடலும் உடைந்தோடும்[2] ஊழ்மலரும் பார்க்கும்
கடலிருள் ஆம்பல்பாம் பென்னக்-கெடலருஞ்சீர்த்
திங்கள் திருமுகமாய்ச் சேர்ந்து''

என்பது, உடலும் உடைந்தோடும் மலரும் பார்க்கும் என்ற வினைச் சொற்கள் தம்முள் பொருளியைபின்றி வேறு நின்றன. இனிக் கடல் இருள் ஆம்பல் பாம்பு என நின்ற பெயர்ச் சொல் லும் அவ்வாறே வேறு நின்றன.[3] அவை தம்முள் பொருள் இயையுமாறு:-

உடலுங்கடல். உடைந்தோடும் இருள், மலரும் ஆம்பல், பார்க்கும் பாம்பு எனக் கூட்டுக.

இனிப் பெயர் நிரனிறை வருமாறு:

''கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி''

எனவரும். இனி, அவை பொருள்கொள்ளுமாறு கொடி நுசுப்பு, குவளை உண்கண், கொட்டை மேனி எனவரும்.

''நினையத் தோன்றும்'' என்றதனான் மொழிமாற்றுப் போல நிற்கும் நிரனிறையும் உள என்பது.

''களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றும்''

---

1 வேறு வேறு நிற்ப (துறைசை)

2 ''அடல்வே லமர்நோக்கி நின்முகங் கண்டே
உடலும் இளிந்தோடும் ஊழ்மலமே பார்க்கும்
கடலும் கனையிருறாம் ஆம்பலும் பாம்பும்
தடமதிய மாமென்று தாம்''
(யா.வி, தொல், பொருள் இள, பேரா;
தொல்.சொல். தெய்வ. மேற்கோள்)

3 அவ்வாறே வேறு நின்றமை அறிக(கா.ந)

என வரும். களிறும் கந்தும் முறையானே கலனும் கூம்பும் எனற்பாலார்[1]. அவ்வாறு கூறாது கூம்புங் கலனும் என்றமை யான் மயக்கநிரனிறை யாயிற்றென்ப.

**400. சுண்ணந் தானே**
**பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்**
**ஒட்டுவழி அறிந்து துணித்தன ரியற்றல்.**

எ...ன், நிறுத்த முறையானே சுண்ணம் என்னும் பொருள் கோளாமாறு[2] உணர்த்துதல் நுதலிற்று.

"சுண்ணம் எனப்படுப இரண்டடியால் எட்டுச்சீரால் பொருந்துமாறறிந்து துணிந்தியற்ற வரும் என்றவாறு".

உ...ம்:-

"சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை"

என வரும்.

இதனை ஒட்டுமாறு: மொழிகளைத் துணித்தியற்றிச்[3] சுரைமிதப்ப, அம்மிஆழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனக் கூட்ட இயைந்தவாறு கண்டு கொள்க.

'பட்டாங்கமைந்த' என்பது இயைபுடைய செய்யுள் நடைக்கு ஒத்த அடியாகல் வேண்டும் என்றற்கென்பது.

**குறிப்பு:-** 'சுரையாழ' என்ற அடிக்கு முன், "கரையாடக் கெண்டை கயத்தாட மஞ்ஞை" என்ற அடியைச் சேர்த்து நான்கடிப் பாட்டாகவும் வழங்குவர்.

---

1 எனற்பால (கா.ந)
பா.வே: 2 பொருளாமாறு (கா.ந)
3 மொழிகளைச் சுரைமிதப்ப ...எனத் துணித்தியற்றுக (கா.ந)

**401. அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து**
**சீர்நிலை திரியாது தடுமா றும்மே.**

சேனாவரையர் கூறும் பாடவேறுபாடு:-

நிரனிறைதானே, சுண்ணந்தானே, மொழிமாற்றியற்கை என்பன போல ஈண்டும் 'அடிமறிச் செய்தி' என்பதனைக் குறளடி யாக்கி

"அடிமறிச் செய்தி
அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது
தடுமா றும்மே பொருடெரி மருங்கின்"

என்று சூத்திரமாக அறுப்பாரும் உளர் என்பர்.

எ...ன், நிறுத்த முறையானே அடிமறிப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"அடிமறி என்று சொல்லப்படுவது சீர் கிடந்துழியே கிடப்ப, அடிகள் முதலும் இடையும் கடையும்படச் சொல்லிக் கண்டு கொள்க.

**402. பொருடெரி மருங்கின்**
**ஈற்றடி இறுசீர் எருத்துவயிற் றிரியுந்**
**தோற்றமும் வரையார் அடிமறி யானே.**

எ..ன், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

"அடிமறிப் பொருள்கோள் ஆராயுமிடத்து,ஈற்றடியின் இறுதிச்சீர் எருத்தத்துச் சிராய்க் கிடந்தும் வரையப்படாது என்றவாறு".

"சார னாட நீவர லாறே
வார லெனினே யானஞ் சுவலே"

என்புழி 'அஞ்சுவல் யான்' என இறுதிச் சீர் எருத்துவயிற் றிரிந்தவாறு கண்டு கொள்க. இவ்வாறு எங்கும் மாற்றுக.

1. **கா.ந. பதிப்பில்**

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
சார னாட நீவர லாறே
வார லெனினே யானஞ் சுவலே"

என்று இப்பாட்டின் முழுவடிவமும் தரப்பட்டுள்ளது. ஏட்டில், மேற்கண்டவாறு வேண்டிய அடிகளே தரப்பட்டுள்ளன.

**யா.க.விருத்தியில்**

"வாரலை எனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே"

என அடிகள் மாறியுள்ளன.

**குறிப்பு**:- **சேனாவரையர்** வேறு உரை கூறி, இலக்கியம் வந்தவழிக் காண்க என்றனர். அவர் இளம்பூரணர் உரையை மறுப்பர்.

**403. மொழிமாற் றியற்கை**
**சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய**
**முன்னும் பின்னும் கொள்வழிக் கொளால்.**

எ...ன், ஒழிந்துநின்ற மொழிமாற்றுப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"மொழிமாற்றினது தன்மையாவது நின்றசொல்லை மொழிமாற்றி, முன்னும் பின்னும் கொள்ளுமிடம் அறிந்து கொள்க என்றவாறு"

உ...ம்-:

"குன்றத்து மேல குவளை குளத்துள
செங்கொடு வேரி மலர்".

இதனைக் குவளை குளத்துள, செங்கொடுவேரி மலர் குன்றத்துள என மொழிமாற்றுக.

மற்றுச் சுண்ணத்தொடு இதனிடை வேற்றுமை என்னையெனின், கண்ணம் ஈரடி எண்சீருள் அவ்வாறு செய்யப்படும்; இதற்கு அன்னதோர் வரையறையில்லை என்றவாறாம்.

**404. தநநு[1] எஎன் னவைமுத லாகிய**
**கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா.**

எ..ன், ஐய மறுத்தல் நுதலிற்று.

"த,ந,நு, எ என்று சொல்லப்பட்ட நான்கெழுத்தினையும் முதலாகவுமாய் ன, ள, ர என்னும் மூன்றெழுத்தினையும் ஈறாகவுமாய் உடையவாகிய தொடர்ச்சிக் கிழமை கருதிவரும் பெயர வற்றைப் பிரித்துஇடையறுத்தும்[2] உணராங்கொல்லோ வெனின், அவை பிரிப்பப் பிரியா, நின்றவாற்றானே நின்று பொருள் படினன்றி என்பது".

உ...ம்:- அவை தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள் நுமர்; எமன், எமள், எமர் எனவரும்.

உம்மையால் பிறவும் பிரிப்பப் பிரியாதன உள; அவை தாய், ஞாய், யாய் என வரும்.

வில்லி, வாளி என்பனவும், பிறவும் அவ்வாறு வருவன பிரிப்பப் பிரியா என்று கொள்க.

இவை ஒட்டுச்சொற் பொருளொடு நிற்பன வென்றும், இவற்றை ஒருசொல்லென்றும் மயங்கற்க[3], ஒரு சொல்லே என்று கருத்து.

**குறிப்பு:-** தமன் முதலானவற்றை ஒட்டுச்சொற் பொருளொடு நிற்பனவென்றும், ஒருசொல்லென்றும் இருபாற் கவர்வுற்று ஒருபாற்படாது மயங்கற்க; ஒரு சொல்லென்றே கருதுக என்பது கருத்து.

---

பா.வே: 1 எஎனு மவைமுத (கா.ந)
சு.வே: 2 இடையறுத்து(கா.ந)
3 இப்பகுதி ஏட்டில் உள்ளவாறே எழுதப்பட்டுள்ளது
இவற்றை ஒருசொல் அன்று என்றும் மயங்கற்க (கா.ந)

**405. இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்**
**றவைமூன் றென்ப ஒருசொல் லடுக்கே.**

எ...ன், இதுவும் வழக்கிற்குஞ் செய்யுளிற்கும் பொதுவாய தோர் முடிபு கூறுதல் நுதலிற்று.

"ஒரு சொல் பலகால் அடுக்கி மூன்று காரணமும்படச் சொல்லப்படும்[1] என்றவாறு"

இசைநிறை எனவே, அது செய்யுளிலக்கணம் என்பது போந்ததாம்.

உ...ம்:- "ஏஎ/ஏஎ/அம்பன்/மொழிந்தனள்/" என வரும்.

ஒழிந்தன இரண்டும் வழக்கினுள் அடுத்து வரும்.

உ...ம்- அசைநிலை "ஒக்கும் ஒக்கும்" எனவும்,
"மற்றோ மற்றோ" எனவும் வரும்.

பொருளொடு புணர்தல் "பாம்பு பாம்பு",

"கள்ளர் கள்ளர்", "படை படை", "தீத்தீ" எனவரும்

அவற்றை இணைத்தால் அடுக்கிவரும் என்பதனை முன்னர்ச் சொல்லுதும்.

**குறிப்பு:**- இசைநிறை இடைச்சொல்லின்வடிவம் 'ஏஎ'

இவ்விசைநிறை இடைச்சொல் இரண்டுமுறை அடுக்கி 'ஏஎ ஏஎ' எனவரும்.

**தொல்காப்பியர்** இடைச்சொல்லியலில் "ஏஎயுங் குரையும் இசைநிறை அசைநிலை" (24) என்று இதனைக் கூறுகின்றார்.

**406. வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே**
**வினையின் றொகையே பண்பின் றொகையே**
**உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்**
**றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.**

---

சு.வே: 1 அடுக்கிச் சொல்லப்படும்.

எ..ன், தொகைச் சொற்களைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

"பெயரும் முறையும் தொகையும் அதுவே."
வேற்றுமைத் தொகையை முன் வைத்தார்;

அப்பகுதிப் படுமாதலின்[1]. அன்மொழித் தொகையைப் பின் வைத்தார்: அஃது எல்லாவற்றையும் பற்றிப் பிறக்கு மாகலான்.

**குறிப்பு:– தொகைமொழி:** நன்.131 மயிலை.

தொகைப்பதம், இரண்டும் பலவும் பகாப்பதமும் பகுபதமும் நிலைமொழி வருமொழியாய்த் தொடர்ந்து இரண்டு முதலாய பொருள் தோன்ற நிற்கும். அவை யானைக்கோடு, கொல் யானை, கருங்குதிரை என்றற்றொடக்கத்தன" என்பர்.

**மேற்கோள்:–** 'வேற்றுமைத் தொகையே' என்னும் இந் நூற்பா இறை-களவியல் இரண்டாம் நூற்பா உரையுள் மேற்கோள்.

407. அவற்றுள்
**வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல.**

எ...ன், நிறுத்த முறையானே வேற்றுமைத் தொகைய திலக்கணம் கூறுதல் நுதலிற்று.

"வேற்றுமை யுருபு தொக்குநின்ற தொகைச் சொற்கள், அவ்வுருபு இருந்தாங்கே பொருள்படும் என்றவாறு".

அவையாவன: நிலங்கடந்தான், தாய் மூவர், கரும்பு வேலி வரைவீழ் அருவி, யானைக்கோடு, குன்றக் கூகை என இவை.

இவற்றையும் அவ்வுருபு விரிந்தாங்கே பொருள்படுமாறு அறிந்து கொள்க.

சு.வே: 1 படுமாகலான் (கா.ந)

அத்தொகுதிக்கண் உருபுகள் பலவகையும் புலப்படாதே நின்றன என்பர் ஒரு சாரார். ஒரு சாரார் இல்லை என்பர்.'

**408. உவமத் தொகையே உவம இயல.**

எ..ன், நிறுத்த முறையானே உவமத் தொகை உணர்த்துதல் நுதலிற்று.

"உவமத் தொகைக்கண் அவ்வுருபு தொக்கு நின்றாலும் அவ்வுருபு விரிந்தாங்கே பொருள்படும் என்றவாறு".

உவமந் தொகுங்கால் வினை, பயம்[1], மெய், உரு என்ற நான்கும் பற்றித் தொகும்.

வினையுவமம்-புலிப்பாய்த்துள் என்பது.
பயவுவமம்-மழைவண்கை என்பது.
மெய்யுவமம்-துடிநடு என்பது.
உருவுவமம்-முத்து முறுவல் என்பது.

'முத்து-போலும் முறுவல்' என்று உவமவுருபு விரிந்து[2] நின்றாங்கே, அவ்வுருபு தொக்கநிலைமைக்கண்ணும் பொருள் ஒக்கும் என்பது.

மற்று, இவ்வுவமத் தொகையென்றுகாட்டினவெல்லாம் வேற்றுமை உருபு பற்றியன்றி வாரா; என்னை? துடிநடு என்ற விடத்துத் துடியை ஒக்கும் நடு, 'துடிநடு, என்று இரண்டனுருபு பற்றி வருமாதலின், உவமத்தொகை என்றது என்னை எனின்?

அதற்கு ஒரு சாரார் சொல்லுவது:– துடிநடு என்புழி உவம வுருபும் வேற்றுமை உருபும் என இரண்டுந் தொக்கவென்னும்; துடிபோலும் நடுவெனத் தொகைக்கு உவமப்பொருளே சிறப் புடைத்ததாகலின் அது தொகை என்பது. ஐகார உருபு அவ் வுவம உருபினை நோக்கி வந்தது என்ப. என்னை, துடியை நடுவாகக் கொள்ளாதாகலினென்பது.

இனி, அதற்கு மெய்யுரை வல்லார்வாய்க்[3] கேட்டுணர்க.

---

சு.வே: 1 பயன் (கா.ந)
2 விரித்து (ஏடு)
3 வல்லோர் (கா.ந)

**409. வினையின் றொகுதி காலத் தியலும்.**

எ...ன் (நுதலியதில்லை)

உரை "வினைச்சொற் றொகுங்கால் காலந் தோன்றத் தொகும்[1]. 'காலத்தியலும்' என்பது எக்காலும் காலம் உடையவாய் இயலும் என்றவாறு".

உ...ம்:- கொல்யானை என்பது கொன்ற யானை; கொல்லாநின்ற யானை; கொல்லும் யானை என மூன்று காலத்திற்கும் அதுவே வாய்பாடு; பிறிதில்லை.

மற்றுக் கொல்யானை என்றானேல் நிகழ்காலமும் அறியலாம். கொல்லிய ஓடுவதனைக் கண்டு.

கொல்யானை என்றானேல் எதிர்காலம் என்பது அறியலாம்.

பிறவும் அன்ன.

**410. வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்**
**றன்ன பிறவு மதன்குண நுதலி**
**இன்ன திதுவென வரூஉம் இயற்கை**
**என்ன கிளவியும் பண்பின் றொகையே.**

எ...ன், பண்பு தொகுமிடத்து இந்நான்கும் பற்றித் தொகும் என்பது கருத்து.

வண்ணம் பற்றித் தொக்கது, கருங்குதிரை என்பது; இது விரியுங்காலை, கரியது குதிரை என விரியும். கரியதும் அதுவே, குதிரையும் அதுவே; கருமையுடைமையிற் குதிரை கரியது எனப்பட்டது. 'இன்னது இது' என நிற்றல் அதற்கு இலக்கணம் இன்னது என்பது கரியது என்றல்; இது என்பது குதிரை என்றல்.

---

சு.வே: 1 தொகும் என்றது (ஏடு)

இனி, வடிவுபற்றித் தொகுதல்[1]:-வட்டப்பலகை என்பது; அது விரியுங்கால், வட்டமாகியது பலகை என விரியும். ஆண்டும் 'இன்னது இது' என்னும் குணம் நுதலிநிற்கும்.

இனி, அளவு பற்றித் தொக்கது, குறுங்கோல் என்பது; அது விரியுங்கால். குறியது கோல் என விரியும். ஆண்டும் 'இன்னது இது' என நிற்கும்.

இனிச், சுவைபற்றித் தொக்கது, தீங்கரும்பு என்பது, அது விரியுங்கால், தீவியது கரும்பு என் விரியும் ஆண்டும் 'இன்னது இது' எனும் குணம் நுதலிற்று.

இனி, 'அன்ன பிறவும்' என்றதனால், தண்ணீர், நறும்பூ, நன்னுதல், பருநூல், மெல்லிலை, நல்லாடை என எத்துணை யுளமன் அப்பொருள் குணம் அக்குணம் நுதலி 'இன்னது இது' என வரும்; அவையெல்லாம் பண்புத்தொகையே யென்று கொள்க என்பதாம்.

இனி, என்ன கிளவியும் என்றதனால் கேழற் பன்றி, வேழக் கரும்பு, சகரக் கிளவி (தொல். எழுத். 62), அகரமுதல் (தொல். எழுத். 1), மாமரம் என இவையுங் கொள்க. இவை ஒரு பொருட்கண் இருபெயர் பட வரும். இவற்றுக்கண்ணும் 'இன்னது இது' என நிற்றல் ஒக்கும். கேழல் எனப்பட்டதுவும் அதுவே. பன்றியும் அதுவே. பிறவுமன்ன.

மற்று, வேற்றுமைத் தொகையும் உவமத் தொகையும் வேற்றுமை உருபும் உவமஉருபும் தொக்கமையிற்றொகை யென்றல் அமையும்; ஒழிந்த வினைத்தொகையும் பண்புத் தொகையும் அவ்வாறு தொக்கு நின்றிலவால் எனின், அவ்வாறு தொகுதலே யன்று தொகையாவது;

கொல்யானை என்புழிக் கொல்லும் என்னும் வினைச் சொல் ஒரு கூறு நிற்ப ஒரு கூறு தொக்கமையின் வினைத் தொகை ஆயிற்று கருங்குதிரை என்புழிக் கரியது என்னும் பண்புப் பெயர் ஒரு கூறுநிற்ப ஒரு கூறு தொக்கமையின் பண்புத்தொகையாயிற்று.

---

சு.வே: 1 தொகுத்தல் (கா. ந)

**குறிப்பு:-'இன்னது இது'**

'இன்னது இது, என ஒருபால்பற்றி ஓதினாரேனும்,

"உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்"
(தொல்.எழு.குற். 7)

என்னும் நூற்பா விதியால், இன்னவன் இவன், இன்னவள் இவள், இன்னவர் இவர், இன்னது இது, இன்னவை இவை என ஐம்பாலும் கொள்க.

**411. இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைபெயர்க் கிளவி
எண்ணின் பெயரொ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே.**

எ...ன், என்பது இவ்வாறிடத்தும் உம்மை தொகற்பாலது என்று உணர்த்தியவாறு.

இருபெயர்க்கண் தொக்கது, 'உவாப் பதினான்கு, என்பது. அது விரியுங்கால் உவாவும் பதினான்கும் என விரியும்.

பலபெயர்க்கண் தொக்கது, 'புலிவிற் கெண்டை, என்பது. அது விரியுங்கால் புலியும் வில்லும் கெண்டையும் என விரியும்.

அளவு பற்றித் தொக்கது, 'தூணிப் பதக்கு' என்பது, அதுவிரியுங்கால் தூணியும் பதக்கும் என விரியும்.

எண்ணியற்பெயர் பற்றித் தொக்கது, 'பதினைவர்' என்பது. அது விரியுங்கால் பதின்மரும் ஐவரும் என விரியும்.

நிறைப்பெயர் பற்றித் தொக்கது, 'தொடியரை, என்பது. அது விரியுங்கால் தொடியும் அரையும் என விரியும்.

எண்ணின் பெயர்பற்றித் தொக்கது, 'பதினொன்று, என்பது. அது விரியுங்கால் பத்தும் ஒன்றும் என விரியும். மற்றும், 'பலபெயர்' என அமையாதே 'இருபெயர்' என வேண்டிய தென்னை, இரண்டையும் பலவென்பவாலெனின், அற்றன்று; இரண்டையும் பன்மையென்று வேண்டான் இவ்வாசிரியன் என்பது.

ஆணின், மேல் "ஒன்றறி சொல்லே பலவறி சொல்" (தொல்.கிளவி.3) என்புழி இரண்டையும் பல வென்று வேண்டி னனாலெனின், அது விகாரம்; என்னை. இரண்டும், இரண்டி றந்த பன்மையும், வந்தன, போயின வென, ஒருபன்மைச் சொல்லே ஏற்குமாகலின், ஆண்டு இரண்டினைப் பலவற்றுள் அடக்கிக் கூறினார் என்பது.

**412. பண்புதொக வரூஉங் கிளவி யானும்**
**உம்மை தொக்க பெயர்வயி னானும்**
**வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்**
**ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே.**

எ...ன், மேல் நிறுத்த முறையானே ஒழிந்து நின்ற அன்மொழித்தொகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"அக் கூறப்பட்ட மூன்று தொகைச்சொல்லீற்றுக்கண்ணே நின்று நடக்கும் அன்மொழித்தொகை என்றவாறு"

**பண்புத்தொகைப் புறத்துப் பிறந்தது** 'வெள்ளாடை' என்பது. அதனைப் படுத்தலோசையாற் சொல்ல வெண்மை மேலும் ஆடை மேலுங் கிடவாது, அவ்வாடை உடுத்தான்[1] மேற் கிடக்கும் என்பது. அந்நிறை மொழியோசையன்றிப் பிறிதோர் மொழியோசைபட்டுப்பொருள் **கொள்ளுமாகலான்**[2] அம்மொழி அன்மொழியாயிற்று என்பது. அது அன்மொழித் தொகை ஆயக்காலும் 'வெளியது ஆடை' என்றே விரியும்; பிறி தில்லை (பண்புத் தொகையாக விரியும் என்பது கருத்து).

**உம்மைத் தொகைபற்றிப் பிறந்தது** 'தகர ஞாழல், என்பது. அது விரியுங்கால் தகரமும் ஞாழலும் என விரியும். அன்னதன் தொகைக்கண் ஓசை வேறுபடச் சொல்லத் தகரத்தின் மேலும் ஞாழலின் மேலுங் கிடவாது அவை உடையான்[3] மேல் நிற்கும்[4]

---

பா.வே: 1 உடுத்தாள் (கா.ந)
2 கொள்ளுமாகலானாயிற்று (ஏடு)
3 உடையாள் (கா.ந)
4 கிடக்கும் (கா.ந)

**குறிப்பு:-** தகரமும் ஞாழலும் உறுப்பாகவுடைய சாந்து என்பர் **மயிலை** (நன்.368)

இனி, **வேற்றுமைத் தொகைபற்றிப் பிறந்தது**, 'பொற்றாலி' என்பது. அது விரியுங்கால், பொன்னானாயதாலி பொற்றாலி என்றாம். பிறிதானும் விரியும். பின்னர் அத்தொகை பொன் மேலும்[1] தாலிமேலுங் கிடவாது பொற்றாலியுடையாண்மேல் நிற்கும் ஓசை வேறுபாட்டான் என்பது.

(அன்மொழித்தொகை) இம் மூன்று தொகையும் பற்றிப் பிறத்தலின், ஓர் மிகுதி குறையில்லை ஒக்கும் என்றவாறு.

மற்றுத் தொகையதிகாரத்தின் முன் வைக்கப்பட்டதூஉம் சிறப்புடையதூஉம் வேற்றுமைத் தொகையாதலின், ஈண்டு இதனை முற்கூறாது, பண்புத்தொகை முற்கூறிய தென்னை யெனின், அதனாற் பிறவும் உள கொள்ளப்படுவன; அவை யாவையோ வெனின், ஒழிந்து நின்ற உவமத்தொகை, வினைத் தொகை பற்றியும் பிறக்கும் அன்மொழித் தொகை என்பது.

**உவமத்தொகை பற்றிப் பிறந்தது,** அறற் கூந்தல் என்பது. அது விரியுங்கால் அறல்போலுங் கூந்தல் என விரியும். (தொடர் விடுபட்டுள்ளது)

**வினைத் தொகைபற்றித் தோன்றியது,** திரிதாடி, என்பது. அது விரியுங்கால் திரித்ததாடி என விரியும். அது தொக்குழித் திரிவின் மேலும் தாடி மேலுங் கிடவாது திரித்ததாடி யுடையான் மேல் நிற்கும்.

இவை இரண்டும் வழக்குப் பயிற்சி அவை போல இன்மை யின்[2] இலேசு பற்றி எடுத்துக் கொண்டார் என்பது.

**413.** **அவைதாம்**
**முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்**
**இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்**

---

சு.வே: 1 பொன்னின்மேலும் (புலிசை)
2 அவை போல்வன அக்காலத்தின்மையின் (கா.ந)

**அம்மொழி நிலையா தன்மொழி[1] நிலையலும்**
**அந்நான் கென்ப பொருணிலை மரபே.**

எ...ன், இதுவும் அத்தொகைக்கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"தொகுவன இருவகை மொழிகளான; அவ்விருவகை மொழியும் இருபொருளின; பின் தொக்கவிடத்து[2] அவற்றைச் சொல்லுவான் அத்தொகைக்கண் முன்னதன் பொருள் உணர்தலுற்றுச் சொல்லுதல், பின்னதன் பொருள் உணர்தலுற்றுச் சொல்லுதல், இரண்டன்[3] பொருள் உணர்தலுற்றுச் சொல்லுதல், இரண்டின் மேலும் நில்லாது பிறிததோர்[4] பொருள் உணர்தலுற்றுச் சொல்லுதல் என நால்வகை இலக்கணத்தாற் பொருள் உணர நிற்கும் என்றவாறு".

அவற்றுண், முன்மொழிப்பொருள் உணர நின்றது 'வேங்கைப் பூ' என்பது.

முன்மொழி பின்மொழியாதல், இடமுங் காலமுமென இருவகையால் உணரப்படும். அவற்றுள் இடத்தான் முன்மொழிப் பொருளாயிற்று; காலவகை நோக்கிப் பின்மொழிப் பொருளாம்.

வேங்கை என்பதூஉம் பொருளில்லாததன்றுமன்; அப் பொருளுறாது அவன் அறியலுற்ற பூவினை அதனைச் சிறப்பிப் பான் வந்தது வேங்கை என்னுஞ் சொல்லென்பது.

(பின்மொழிநிலையலைப் பற்றியவை அச்சுப் புத்தகத்திலும் இல்லை. ஏட்டிலும் இல்லை. ஆனால், மயிலைநாதர் (நன்.369) "இனி, **இளம்பூரண ஆசிரியர்** வேங்கைப்பூ வென்பதனை முன்னிடத்திற்கும், **அடைகடலென்பதனைப் பின்னிடத்திற்கும் காட்டுவர்**" என்று எழுதுவதைக்கொண்டு அறிக.)

---

சு.வே: 1 தயன்மொழி (கா.ந)
பா.வே: 2 தொகுவன இருவகை மொழிகளான், அவ்விருவகைமொழியும் இருபொருளின்கண் தொக்கவிடத்து (கா.ந)
3 இரண்டுடன் (கா.ந)
4 பிறிதோர் (கா.ந)

இருமொழிப் பொருள் உணரநின்றது 'உவாப் பதினான்கு' என்பது. பிறவும் உம்மைத்தொகையான் வருவன வெல்லாம் இருமொழிப்பொருள்பட நிற்கும் என உணர்க.

**அம்மொழி நிலையாது அன்மொழிப்பொருள்பட[1] நின்றன** முன், அன்மொழித்தொகைபடக் காட்டினவெல்லாம் என்பது. அவை வெள்ளாடை என்னுந் தொடக்கத்தன.

மற்று, இன்னுழியும் பொருள் நிற்குமெனின் ஒழிந்துழி யெல்லாம் பொருளில்லையாமாகாதே; ஆகவே, "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" (தொல்.பெயரி.1) என்பத னொடு மலைக்கும் பிறவெனின், மலையாது; என்னை, மற்றையுழிப் பொருளில்லை என்பதன்று,அவன் உணர்தலுறவு[2] நோக்கி இது சொல்லினாரென்பது.

**குறிப்பு:-** முன்மொழிநிலையல் முதலியன சொல்லினைப் பொருளிற்கு வேறாக இடமாகக் கூறியதென்பர். **(இல.கொத்.** பாயி.6.உரை)

414. **எல்லாத் தொகையும் ஒருசொன் னடைய.**

எ...ன், இதுவும் ஒட்டுச்சொற்கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"அறுவகைத் தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமை இயல்பாம் என்று ஈண்டு எய்துவித்தார் என்றவாறு".

மற்று, ஒட்டுச்சொற்களை ஒரு சொன்னடையன எனப் போந்த இலேசு என்னையெனின், அவை பல சொன்மைப்படப் பொருளிசையா, ஒருசொல் விழுக்காடுபடத் திரண்டிசைக்கும் என்பது கருத்து.

அஃதினை யானைக்கோடு, வேங்கைப்பூ என்பனவற்றான் அறிக. 'கற்சுனைக் குவளையிதழ்' என்பதும் அது.

---

பா.வே: 1 அயன்மொழிப்பொருள்பட (புலிசை)

2 உணர்தல் உணர்தலுறவு (துறைசை)

**குறிப்பு:-** **இளம்பூரணர்** அறுவகைத் தொகைச்சொல் எல்லாம் எழுவாய் வேற்றுமை இயல்பாம் என்பர்.

ஆனால், **சேனாவரையர்** "அவை (அறுவகைத் தொகைச் சொல்) உருபேற்றலும் பயனிலை கோடலும் முதலாகிய பெயர்த்தன்மையும், பயனிலை யாதலும் பெயர் கோடலும் முதலாகிய வினைத்தன்மையும் உடையவாதல் அவ்வச் சொல் லொடு கூட்டிக் கண்டு கொள்க" என்பர்.

**மயிலைநாதர்** "ஒரு மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர் மொழி (360) என்னும் **நன்னூல்** நூற்பாவடிக்கு "ஒரு பெயர்ச்சொற்போலவும் ஒரு வினைச்சொற்போலவும் வழங்கு வன தொகைநிலைத் தொடர்மொழிகளாம்" என்று உரை கூறிவிட்டு, "ஒரு மொழி போலாவது பல சொல்லே எனினும், தொடர்ந்து ஒற்றுமைப்பட்டு ஒருபெயராய் எட்டு வேற்றுமை களையும் வினைகளையும் ஏற்றலும், நிலைமொழி வருமொழி களாய்ப் புணர்ச்சிவகையேற்றலும், ஒரு வினைச் சொல்லே யாய்ப் பெயரேற்றல் முதலான வினையிலக்கணமெல்லாம் ஏற்றலும் என மூவகையாகக் கொள்க" என்பர்.

**415. உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே**
**பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்.**

எ...ன், உம்மைத் தொகையுள் ஒருசாரனவற்றுக்கண் படுவ தோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

"உயர்திணை மருங்கின் உம்மைத் தொகைச் சொல்லுக்கு இறுதி பலரைச் சொல்லுஞ் சொன்னடைத்தாக என்று சொல்லுப ஆசிரியர் என்றவாறு".

உ.. ம்:- கபில பரணர்.

இவ்வாறு அத்தொகைச் சொல்லிறுதி பலர் சொன்னடைத் தன்றிக் கபிலன் பரணன் என னகரவீறாய் நிற்பின், அது வந்தான், போயினான் என்னும் ஒருமைவினை ஏற்பினல்லது, வந்தார், போயினார் என்னும் பன்மைவினை ஏலாது.

இனிப், 'பலர் சொன்னடைத்து' எனவே, அவ்விருவர் மேலும் வினையேற்கும்; அதனான் இது சொல்லினார் என்பது.

மற்றுத் தொகைச் சொற்கள் தொகுவது தொக்கு நின்றக் கால், தம்மீறு கருதின பொருட்கேற்கும் முடிவினை நின்றாங்கே நின்றுகொள்ளும்; இதுவாயின் இறுதி நின்றாங்கே நிற்பப் பொருட்கேற்ப முடிபு ஏலாமையான் இறுதிபோதல் வேண்டிற்று என்பது.

**குறிப்பு:- மயிலைநாதர்** கபில பரணர் வந்தாரெனவும், சாத்தன் கொற்றன் வந்தாரெனவும் வரும்'' என்பர் (நன். 371).

**416. வாரா மரபின வரக்கூ றுதலும்**
**என்னா மரபின எனக்கூ றுதலும்**
**அன்னவை எல்லாம் அவற்றவற் றியலான்**
**இன்ன வென்னுங் குறிப்புரை யாகும்.**

எ...ன், மேல் தொகையதிகாரங் கூறினார்; அவையெல்லாம் விட்டு, இனி ஒரு சொன்மரபு வழூஉக்காத்தல் நுதலிற்று.

''இயங்காதவற்றை இயங்குவதுபோலச் சொல்லுதலும், சொன்னிகழாதவற்றைச் சொன்னிகழ்த்துவன போலச் சொல்லு தலும், அவ்வப் பொருளியல்புபற்றி அவை அன்ன செய்கை யுடையவற்றைப் போலச் சொல்லலுற்றான்; அது மனக் குறிப் பினான் ஆய்ந்து அவற்றது உரை அன்று என்பது கொள்க''.

'அன்னவை எல்லாம்' என்பது அவ் வாராமரபினவும் பல வகைய; ஒரோ வொன்றே யல்ல என்றற்கு என்பது.

**வாராமரபின வரக்கூறுதல் வருமாறு:-**

மலை வந்து கிடந்தது, நெறி வந்து கிடந்தது என வரும்; மலைக்கும் நெறிக்கும் அன்ன செய்கையின்றாகலின் என்பது.

இனி, **என்னா மரபின எனக் கூறுதல் வருமாறு:-**

நிலம் வல்லென்றது, நீர் தண்ணென்றது, இலை பச்சென் றது, எனவும் செங்கானாராய்! எனவும் வரும்.

விலங்கும், மரனும், புள்ளும் உள்ளநோய் உற்றாற்கு மனக் குறைக்கு மறுதலை மாற்றம் கூறுவனபோலுங் குறிப்பினவாகப் புலப்படுதலான் இது சொல்லப்பட்டதென்பது.

**குறிப்பு:-** **சேனாவரையர்** "நிலம் வல்லென்றது, நீர் தண்ணென்றது என்பன காட்டினாரால் உரையாசிரியரெனின், சொலற்பொருள அன்மையின், அவை காட்டல் அவர் கருத்தன் றென்க" என மறுப்பர். **மயிலைநாதர்** "இத்தொழில்கள் இல்லனவும் உள்ளன போல அஃறிணையிடத்துச் சொல்லப்பெறும்" (நன். 408) என்பர்.

**417. இசைபடு[1] பொருளே நான்குவரம் பாகும்.**

**418. விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்.**

இவை இரண்டு சூத்திரமும் உரை இயைபு நோக்கி உடன் எழுதப்பட்டன.

எ...ன், மேல் "இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென் றவைமூன்றென்ப ஒரு சொல் லடுக்கு" (எச்ச.15) என்புழி மூன்று வகையான் அடுக்கிவரப் பெறும் என்றவை எல்லையின்மையான், அவை இத்துணை என்னும் வரையறை கூறினார் ஈண்டென்பது.

"அம் மூன்றினுள் இசைநிறைத்தற்கு அடுக்கப்படும் பொருள் நான்கு வரம்பாகும் என்றவாறு".

இரண்டும் அடுக்கும், மூன்றும் அடுக்கும், நான்கும் அடுக்கும்; நான்கிறந்து அடுக்கா வென்பது கருத்து. அது, "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" என வரும். இவை நான்கு அடுக்கி வந்தன; இசைநிறை எனவே அது செய்யுட் கென்பது முடிந்தது.

---

பா.வே: 1 இசைப்படு (ஏடு)

"இனி, அம்மூன்றுடன் பொருளொடு புணர்தலை விரைசொல்லடுக்கென்பது; அது தான் மூன்று வரம்பு இறவாது என்பது". அது 'பாம்பு பாம்பு பாம்பு' 'தீத் தீத் தீ' என வரும். இரண்டு மூன்றிறவாது.

மற்று, அசைநிலை இனைத்தால் அடுக்கும் என்பது எற்றாற் பெறுதுமெனின்? மூன்றடுக்கும் பொருளொடு புணர்தலை முற்கூறற்பாலார்; என்னை மூன்று நான்கு என்னும் எண்ணு முறைமை நோக்கி. அவ்வாறு சொல்லாது மயங்கக் கூறியவதனான்[1], மூன்றின் கீழ்க்கு முதல், இரண்டல்லது இல்லையன்றே; அவ்விரண்டெண்ணினால் கூறப்படும்[2] அசைநிலை என்பது கொள்க என்றவாறு.

உ...ம்: மற்றோமற்றோ, அஃதே அஃதே எனவரும். இரண்டிறவாது என்பதிதனை[3] இலேசினாற் கொண்டார், இடைச் சொல்லடுக்காகலின்[4] என்பது. ஒழிந்த, நால்வகைச் சொல்லும் அடுக்கும்.

**குறிப்பு:- மயிலைநாதர்** (நன்.394)

"அசைநிலை இரண்டினும் பொருண்மொழி மூன்றினும்
இசைநிறை நான்கினும் ஒருமொழி தொடரும்".

என்றார் **அகத்தியனார்** என்பர். அவர், பொருணிலை அடுக்கு விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் முதலிய பொருளில் வரும் என்பர்.

**419. கண்டீ ரென்றா கொண்டீ[5] ரென்றா**
**சென்ற தென்றா போயிற் றென்றா**
**அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி**
**நின்றவழி இசைக்குங்[6] கிளவி யென்ப.**

---

சு.வே: 1 மயக்கங் கூறியவதனான் (கா.ந)
2 அடுக்கப்படும் (கா.ந)
3 என்பதனை (கா.ந)
4 இடைச்சொல்லடுக்காதலின் (கா.ந)
பா.வே: 5 கேட்டீர் (தெய், நச்)
6 அசைக்கும் (சேனா. நச்); உரையை நோக்கின் இளம்பூரணர் பாடமும் இதுவே

எ...ன், இவை வினையியல் ஒழித்து நின்ற ஒழிபு கட்டுரை எடுத்தது.

“வினைச் சொற்கள் இங்ஙனம் வினாவொடு பட்டு நின்ற வழியாயக்கால் அசைச்சொல்லாய்நிற்கும் என்பது கருத்து”.

உ...ம்:- “கண்டீரோ கண்டீரோ” “கொண்டீரோ கொண்டீரோ” “சென்றதே சென்றதே” “போயிற்றோ போயிற்றோ” என வினாவொடு பட்ட வழி அடுக்கி அசை நிலையாய் நிற்கும்.

அவ்வினாவொடு சிவணாக்கால் வினைச்சொல்லேயாம் என்பது.

‘அன்றியனைத்தும்’ என்பது, அவையிற்றைத் தொகை கொடுத்துக் கூறினவாறு.

‘வினாவொடு சிவணி’ என்பது, ஆ,ஓ என்னும் வினாக் களைக் கடையாத்து நின்றவழி என்றவாறு.

**குறிப்பு:-** ஈற்று வினாவெழுத்துக்கள் ஆ, ஏ, ஓ என்பன. இம்மூன்றற்குமுரிய எடுத்துக்காட்டுக்கள் உரையுள் இல்லை.

**420.** **கேட்டை யென்றா நின்றை யென்றா**
**காத்தை யென்றா கண்டை யென்றா**
**அன்றி யனைத்தும் முன்னிலை யல்வழி**
**முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே.**

எ...ன், இவை முன்னைய நான்கும் போல வினாவொடு படாது, வாளாதே நின்றுழி, இவையும் அசைச்சொல்லாய் நிற்கும் என்பது கருத்து.

முன்னின்றவற்று நிலைமை அல்வழி என்பார், ‘முன்னிலை யல்வழி’ என்றார் என்பது.

உ...ம்:- “கேட்டை கேட்டை” “நின்றை நின்றை” “காத்தை காத்தை” “கண்டை கண்டை” என வரும்.

இவையும் கட்டுரைக்கண் வருமிடம் அறிந்துகொள்க.

இனி இவை வினாவொடு பட்டுழியாயக்கால் அசைநிலை ஆகா என்பது.

**421.** **இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்**
**சிறப்புடை மரபின் அம்முக் காலமும்**
**தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்**
**அம்மூ விடத்தான்[1] வினையினுங் குறிப்பினும்**
**மெய்ம்மை யானும் இவ்விரண் டாகும்[2]**
**அவ்வா றென்ப முற்றியன் மொழியே.**

எ...ன், இவை வினையியலுள் ஓதப்பட்டன சில சொற்கள் முற்றுச்சொல் என்னுங் குறி எய்துதல் நுதலிற்று.

அதனாற் பயந்ததென்னை யெனின், அச்சொற்கு முன்பு, முடிபுகூறி, ஈண்டுக் குறியிட்டான் என்பது பயன் என்பது.

''இதன் பொழிப்பு இறந்தகாலம், எதிர்காலம் நிகழ்காலம் என்னும் மூன்று காலமும் உடையவாய்த் தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் மூன்றிடத்தும்,வினையும் வினைக்குறிப்பும் பற்றி அம்மூன்றிடங்கடோறும் வினையும் வினைக்குறிப்புமென இரண்டாம்; அவ்வறுகூற்றுச் சொற்களை முற்றுச்சொல் என்று கூறுப ஆசிரியர் என்றவாறு''.

'அவ்வாறு' என்றது தன்மை இரண்டு குப்பையவாயும்[3], முன்னிலை இரண்டு குப்பையவாயும், படர்க்கை இரண்டு குப்பையவாயும் வருதல் நோக்கி என்பது.

உ...ம்:- உண்டேன், கரியேன் எனவும், உண்டாய், கரியை எனவும், உண்டான், கரியான் எனவும் வரும்.

பிறவும் அன்ன.

---

பா.வே: 1 மூவிடத்தான (தெய்)
2 ஈரிரண் டாகும் (நச்.தெய்)

சு.வே: 3 தன்மை இரண்டு பகுப்பவாயும் முன்னிலை இரண்டு பகுப்பவாயும் படர்க்கை இரண்டு பகுப்பவாயும் (கழகம்)

முற்றுச்சொல் என்றது, செய்கையும் பாலுங் காலமும் செயப்படுபொருளும் தோன்றிநிற்றலின் முற்றுச்சொல் என்பாரும், மற்றோர் சொன் னோக்காது முடிந்து நிற்றலின் முற்றுச் சொல் என்பாரும், எக்கால் அவை தம் எச்சம் பெற்று நின்றன அக்கால் பின் யாதும் நோக்காவாய்ச் செப்பு மூயிற்றுப் போல அமைந்து மாறுதலின் முற்றுச் சொல்லென்பாருமென இப் பகுதியர்[1] ஆசிரியர் என்பது.

**குறிப்பு:- முற்று**

''பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே'' (நன். 323)

**மயிலைநாதர்**

முற்றிநிற்றலான் முற்று; மற்றுச் சொன்னோக்கா மரபின வனைத்தும், முற்றி நிற்பன முற்றியன் மொழியே'' என்றார் **அகத்தியனார்**, என்பர். (நன்.323)

ஒரு தொழிற் சொல் தன் எச்சமான பெயர்கொண்டு முடியின் முற்றுவினைச் சொல்லாம் (நன்.131)

**422. எவ்வயின் வினையும் அவ்வியன்[2] நிலையும்.**

எ...ன், இது, முற்றுச் சொல்லொழித்து ஒழிந்த பெயரெச்ச வினையெச்சங்கட்கு ஆவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

''மேற் கூறப்பட்ட முற்றுச்சொல்லே யன்றிப் பெய ரெச்சமும் வினையெச்சமும் மூன்று காலமும் மூன்றிடமும் உடையவாய் வினையும் வினைக்குறிப்பும் பற்றி வருமென்பான் ''எவ்வயின் வினையும் அவ்வியன் நிலையும்'' என்றான் என்பது.

மற்று, ''வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்''

சு.வே: 1 இருபகுதியர் (கழகம்)
பா.வே: 2 அவ்வயின் (தெய்)

என்புழி, எல்லா வினைச்சொல்லும் மூன்று காலத்திற்கும் உரிய எனப்பட்டது.

இனி, "எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கு முரிய" (வினை.26)

என்புழி, எவ்விடத்திற்கும் உரிமையுங் கூறப்பட்டது. பிற வெனின், மேல், அங்ஙனம் கூறினாரே எனினும்[1] அது விலக்குப் பட்டது; ஈண்டுப் போதந்து முற்றுச் சொல்லையே விதந்து மூன்றிடத்திற்கும் உரிய என்றமையால், அது நோக்கி ஈண்டு இது கூறினார் என்பது.

**423. அவைதாம்**
**தத்தங் கிளவி அடுக்குந[2] வரினும்**
**எத்திறத் தானும் பெயர்முடி பினவே.**

எ...ன், இது முற்றுச் சொல் என்று மேற்கூறப்பட்டன வற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

"மேற் சொல்லப்பட்ட முற்றுச் சொற்கள்தாம் எத்துணைச் சொல்லையும் அடுக்கிப் பலவாய் வரினும் பெயர் கொண்டு முடிதல் இலக்கணத்தன என்றவாறு".

உ...ம்:- உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் சாத்தன் எனவரும். இது வினை.

நல்லறிவுடையன் செவ்வியன் சான்றார்மகன் எனவும் வரும். இது வினைக் குறிப்பு.

மற்று, 'எத்திறத்தானும்' என்றது என்னை எனின், உண் டான் சாத்தன் என்பது பெயரை முன்னடுத்தும், சாத்தன் உண்டான் என்பது பெயரைப் பின்னடுத்தும் வரும் என்பது அறிவித்தற்கு 'எத்திறத்தானும்' என்றாரென்பது.

**பிறருஞ் சொல்லுப** "முன்னும் உரிய முற்றுச் சொல லென்றா" என்பது.

---

சு.வே: 1 கூறினாரேனும் (கா.ந)
2 அடுக்குன (ஏடு)

**424. பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை**
**எதிர்மறை உம்மை எனவே சொல்லே**
**குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்**
**நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி.**

எ...ன், மேல் அ. வினையியலுள்ளும் ஆ. இடைச்சொல்லுள்ளும் முடிபு கூறப்படாதுநின்ற எச்சங்கட்கு முடிபு உணர்த்துவான் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

எல்லாவற்றையும் எச்சம் என்பதனைக் குறைத்துப் பின்னை எஞ்சுபொருட்கிளவி என்றார் இறுதிவிளக்காக.

''பிரிநிலை எச்சம் முதலாகக் கூறப்பட்ட பத்துவகை எச்சங்களும் முன்பு முடிபு கூறப்படாது நின்றனவேனும், இனி நெறிப்படத் தோன்றுமவை என்றவாறு''.

குறிப்பு:- அ. பத்து எச்சங்கட்கும் அவிநய நூலுள் **இராச பவித்திரப் பல்லவதரையன்** கூறும் வெவ்வெறு உரைகளைக் கூறிவிட்டு, ''இனி, இவற்றை இவ்வாறன்றி வினையியலுள்ளும் இடைச் சொல்லியலுள்ளும் மொழிந்தனவாக்கி... இவ்வாறு சொல்லுவர் **இளம்பூரணர்** என்பர் **மயிலைநாதர்** (நன். 359)

ஆ. ''இடைச்சொல்லியலுள்ளும்'' என்றிருப்பின் நன்று.

**425. அவற்றுட்**
**பிரிநிலை யெச்சம் பிரிநிலை முடிபின.**

எ...ன், நிறுத்த முறையானே பிரிநிலையெச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

''பிரிநிலை என்ப இருவகைய, ஏகாரப் பிரிநிலையும் ஓகாரப் பிரிநிலையு மென; அவை பிரிக்கப்பட்ட பொருள் தன்னையே கொண்டு முடிக என்றவாறு.

உ...ம்:- அவனே கொண்டான், அவனோ கொண்டான் என வரும். அவ்னே யெனப் பிரிநிலையெச்சம் ஏகாரந்தான் நின்றுமன்; அவனே எனப் பிரிக்கப்பட்டானையே கொண்டு முடிதலின் அவை[1] அவற்றுக்கு முடிபாவன என்றவாறு.

---

சு.வே: 1 முடிதல் இவை (கா.ந)

குறிப்பு: "அவனோ கொண்டான், அவனே கொண்டாள் என்பன பிரிநிலை யெச்சம்; இவை ஒரு குழுவிற் பிரிக்கப் பட்டானையே கொண்டன" என்று நன்னூல் 359-ஆம் நூற்பா உரையில் **மயிலைநாதர்** மேல் குறிப்பிட்ட வற்றையும் பிறவற்றையும் "**இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள்; உளங்கூர் கேள்வி இளம்பூ ரணரெனும், ஏதமின் மாதவர் ஓதிய உரையென்றுணர்க**" என்பர்.

மயிலைநாதர் உரையை நோக்கும் பொழுது இளம்பூரணர் உரையில் "அவனோ கொண்டான், அவனே கொண்டான்" என்று உதாரணம் இருப்பது நன்று. இது இடையியல் வைப்பு முறைக்குத் தக அமைந்துள்ளது.

**426. வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்**
**நினையத் தோன்றிய முடிபா கும்மே**
**ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே.**

எ...ன், நிறுத்த முறையானே வினையெச்சத்திற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

"வினையெச்சம் முடியுங்கால் வினையும் வினைக்குறிப்பும் கொண்டு முடியும்; அவ்விடத்துக் குறிப்பு வினைச்சொல் ஆக்கச் சொல்லொடு வரும் என்றவாறு".

உ...ம்:- 'உழுது வந்தான்' என்பது வினையெச்சம் தெரிநிலை வினை கொண்டு முடிந்தது.

'மருந்து உண்டு நல்லனாயினான்' என்பது வினையெச்சம் வினைக் குறிப்புக் கொண்டு முடிந்தது; அவ்விடத்து வினைக் குறிப்பு ஆக்கமொடு வந்தவாறு கண்டு கொள்க.

இனி 'நினையத் தோன்றிய' என்றதனான் உழுது வருதல், உழுது வந்தான் எனத் தொழிற்பெயரானும் முடியும் என்றவாறு.

மற்று, இச்சூத்திரத்தால் வினை யெச்சத்திற்கு முடிபு கூறவேண்டியதென்னை?

வினையியலுள், "முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின" (31) என்றும், ஒழிந்தனவற்றுக்கு "ஏனை எச்சம் வினைமுத லானும் ஆன்வந் தியையும் வினைநிலையானும்" (33) முடியுமென்றுங் கூறியதே அமையும் பிறவெனின், அதற்கு விடை:- ஆண்டுவினை முதலானும் முடியும் என்றுழிப் பெயர் வினைமுதலானும் முடியும் என்பது பட்டது; என்னை, வினை வினைமுதலென்றும் பெயர் வினைமுதலென்றும் பகராது, பொதுவகையாற் கூறினாராகலின், இச் சூத்திரம் வேண்டும். இது கூறாக்கால், உழுது சாத்தன் எனப் பெயர் வினை முதலானும் முடிவான் செல்லும் என்பது.

அன்றியும், வினையெச்சத்திற்கு வினைக்குறிப்பு முடிபாங் கால், ஆக்கமொடு வருதல் எடுத்தோத வேண்டும் என்பது.

**குறிப்பு:-** "உழுதுவந்தான், மருந்துண்டு நல்லனாயி னான், உழுது வருதல் என்பன வினையெச்சம் வினையும் குறிப்பும் வினைப்பெயரும் கொண்டன", என்னும் இவற்றை **இளம்பூரணர்** உரையாகக் காட்டுவர் **மயிலைநாதர்** (நன் . 354).

**427. பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.**

எ...ன், நிறுத்தமுறையானே பெயரெச்சதிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

"பெயரெச்சம் பெயர் கொண்டு முடியும் என்றவாறு"

உ...ம்:- உண்ணுஞ் சாத்தன், உண்ட சாத்தன் என வரும். உண்ணும், உண்ட என்பன பெயரெச்சம்.

மற்று, இது கூறவேண்டிய தென்னை?

"நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய"
(வினை.35)

எனப் பெயர்கொண்டு முடிதல் கூறப்பட்டது பிறவெனின், அதற்கு விடை:- ஆண்டு 'வினைமுதற் கிளவியும்' வினை யும்' எனவே, வினைச் சொல்லும் முடியும் என்பது பட்டது;

'வினைமுதற் கிளவி' என்றக்கால், வினை, வினைமுதலும் வினை முதலாகலானும், இனி, வினை என்றக்கால் வினைப் பெயரேயன்றி வினைச் சொல்லுமாகலானும் இச்சூத்திரம் வேண்டு மென்பது.

**குறிப்பு:**- "உண்ட சாத்தன் உண்ணும் சாத்தன் உண்டவூண், உண்ணும்ஊண்" என்னும் இவற்றை **இளம் பூரணர்** பெயரெச்சத்திற்குக் காட்டும் எடுத்துக்காட்டாகக் கூறுகின்றார் **மயிலைநாதர்** (நன். 359)

**428. ஒழியிசை யெச்சம் ஒழியிசை முடிபின.**

எ...ன், நிறுத்த முறையானே ஒழியிசை யெச்சம் உணர்த்து தல் நுதலிற்று.

"ஒழியிசை எச்சமாவன மூன்று. அவை, மன்னை ஒழியிசை யும், தில்லை ஒழியிசையும், ஒகார ஒழியிசையும் என; அவை மூன்றும் ஒழியிசைப் பொருள் கொண்டு முடியும் என்றவாறு".

உ.. ம்:- 'கூரியதோர் வாள் மன்" வாய் கோடிற்று,[1] இற்றது எனப் பின்னும் வாள் மேலே முடிபு சென்றது.

இனி, "வருகதில் கொண்கன்" என, வருக எனப்பட்டானும் அவனே, கொண்கன் எனப்பட்டானும் அவனே; அதனால், அதுவும் அப்பொருள் கொண்டு முடிந்தது.

இனிக் "கொளலோ கொண்டான்" என்புழிக் கொளலோ எனப்பட்டானையே கொண்டான் என்பது. அதனால், அதுவும் அவ்வொழியிசைப் பொருள்கொண்டு முடிந்தது.

**குறிப்பு:**- யாதானும் ஒரு சொல் ஒழிவுபட வரின் அஃது ஒழியிசை எனப்படும் (தொல். இடை. 5)

**குறிப்பு:**- "ஒழியிசை யெச்சமாவது மன்னும் தில்லும் ஒவுமென மூன்றும்.

---

சு.வே: 1 வாள் கோடிற்று (கழகம்)

அவை:- பண்டு கூரியதோர் வாண்மன் என்பது இப்போது கோடிற்று இற்றது என்பவற்றையும்; வருகதில் அம்ம என்பது வந்தால் இன்னதொன்று செய்வல் என்பதனையும்; கொளலோ கொண்டான் என்பது கொண்டுய்யப் போயினானல்லன் என்பதனையும் கொண்டு முடிந்தன'' என்றும் இவற்றை **இளம்பூரணர்** உரையாகக் காட்டுவர் **மயிலைநாதர்** (நன்.359).

**429. எதிர்மறை யெச்சம் எதிர்மறை முடிபின.**

எ...ன், நிறுத்த முறையானே எதிர்மறை எச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

"எதிர்மறை யெச்சம் என்பன இரண்டு, ஓகார எதிர்மறையும் உம்மை எதிர்மறையும் என; அவை, அவைதம் எதிர்மறைப் பொருள் கொண்டு முடியும் என்றவாறு''.

உ...ம்:- யானோ கொண்டேன் என்றாலும் யானோவன்றே கொண்டேன் என்றாலும், அதனால் அப்பொருள் கொண்டு முடிந்தது எனப்படும். நீயே கொண்டாய் என்றாற்கு எதிர் மறுத்தவாறு; யான் கொண்டிலன் என்பது.

இனி, உம்மை எதிர்மறை 'வரலும் உரியன்' என்பது ஆண்டு, 'வரலும்' எனப்பட்ட உம்மை எதிர்மறை. உரியன் எனப் பின்னும் அவனையே கொண்டு முடிந்தது. 'வாராமையும் உரியன், என்பது அதற்கு எதிர்மறை. அவை ஒன்றொன்றனை நோக்க எதிர்மறை என்றவாறாயிற்று.

**குறிப்பு**:- "எதிர்மறையெச்சம் இரண்டு. ஓகார எதிர் மறை உம்மை எதிர்மறை என, யானோ கொண்டேன் என்பது, யான் கொண்டிலன் என்பதையும், வரலும் உரியன் என்பது வாராமைக்கும் உரியன் என்பதையும் கொண்டு முடிதலின் எதிர்மறையெச்சம்'' என்னும் இவற்றை **இளம்பூரணர்** உரை யாக **மயிலைநாதர்** கூறுகிறார் (நன்.359).

**430. உம்மை யெச்சம் இருவீற் றானும்
தன்வினை ஒன்றிய முடிபா கும்மே.**

எ...ன், இது முறையானே உம்மை யெச்சத்திற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

'உம்மையெச்சம்' என்பது எச்சவும்மையாயிற்று; 'இருவீற்றானும்' என்றது தானும், தன்னாற்றழுவப்பட்டதுவும் என இரண்டினையும் ஆயிற்று; அவை யிரண்டும் ஒன்றிய வினையே கொண்டு முடியும் என்றவாறு.

உ...ம்:-சாத்தனும் வந்தான் என்றக்கால் பின்னைக் கொற்றனும் வந்தான் என்றானும், கொற்றனும் வரும் என்பதானும் ஒன்றிய வினையே கொண்டு முடிக என்பது. சாத்தனும் வந்தான் என்றக்கால், கொற்றனும் போயினான் என்று விடின் அமையாதென்பதாம்.

குறிப்பு:- மயிலைநாதர் (நன். 359).

"சாத்தனும் வந்தான் என்பது உம்மை எச்சம்;
கொற்றனும் வந்தானெனத் தன்னெச்சங் கொண்டது"
என்ற இதனை இளம்பூரணர் உரையாகக் கூறுவர்.

**431. தன்மேற் செஞ்சொல் வருஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமும்
இறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலை யான.**

எ..ன், இஃது, அவ்வெச்சவும்மையது மயக்கங் கூறுதல் நுதலிற்று.

'தன்' என்பது எச்சவும்மை; 'செஞ்சொல்' என்பது உம்மையில் சொல்;

"எச்சவும்மைச் சொல்லின் மேல் உம்மையில் சொல் வந்தக்கால் நிகழ்காலமும் எதிர்காலமும் மயங்கும்; இறந்த காலமும் எதிர்காலமும் மயங்கும்; மயங்கப்படும் முறை இலக்கணமாகலான் வரையார் என்றவாறு".

உ...ம்:- கூழ் உண்ணாநின்றான், சோறும் உண்பன் என வரும். கூழ் உண்ணாநின்றான் என்பது செஞ்சொல், சோறும் உண்பன் என்னும் உம்மைச்சொல்லின்மேல் வந்தது.

உண்ணாநின்றான் என்னும் நிகழ்காலம்[1] தன்னிகழ்காலமே கொள்ளாது, சோறும் உண்பன் என்னும் எதிர்காலங்கொண்டமையின் வழுவாயிற்றாலும் அமைக என்பது.

இறந்தவும் எதிர்வும் மயங்குமாறு:- கூழ் உண்டான் சோறும் உண்பான் என வரும்.

இனி, 'முறைநிலையான' என்றதனான் இறந்ததனொடு நிகழாநின்றதூஉம் மயங்கும், எதிர்வதனொடு இறந்ததுவும் மயங்கும் என்றவாறு.

உ...ம்:- கூழ் உண்டான் சோறும் உண்ணாநின்றான் என வரும். சோறுண்பான் கூழுமுண்டான் என வரும் பரிமாறிக் கொள்க.

## 432. எனவென் னெச்சம் வினையொடு முடிமே[2].

எ...ன், நிறுத்த முறையானே எனவென் னெச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

''எனவென நின்ற எச்சம் பெயர்கொண்டு முடியாது வினை கொண்டு முடியும் என்றவாறு''.

உ...ம்:- 'தோள்ளெனக் கொண்டான்' என வரும். பிறவும் அன்ன.

'வினையொடு முடியுமே' என்றது எவ்வினை என்னின், தன்வினையையோ பிறவினையையோ என இன்ன வினையென்பதொன்றில்லை; ஏற்ற வினையான் முடியும் என்பது.

---

சு.வே: 1 உண்ணாநின்றான் என்னும் நிகழ்காலமும் எதிர்காலமும் (ஏடு)
பா.வே: 2 இப்பகுதி ''தன்வினையையோ பிறவினையையோ வெனின், இன்ன வினையென்பதில்லை ஏற்ற வினையான் முடியும் என்பது'' என்று மட்டும் உள்ளது. கா.ந. பதிப்பில் மேல் உள்ளது, ஏட்டிற் கண்டது.

**குறிப்பு:-** "கொள்ளெனக் கொண்டான் என்பது எனவென்னெச்சம், இது கொண்டான் என்னும் வினை கொண்டது. 'கொள்' என்பது முற்று; அது முற்றேலாமையின், இறுதி எனவென்பது முற்றுக்கொண்டது" என்னும் இவற்றை **இளம்பூரணர்** உரையாகக் காட்டுவர்**மயிலைநாதர்.** (நன்.359)

**சங்கர நமச்சிவாயர்** "கடல் ஒல்லென ஒலித்தது, நரம்பு விண்ணென விசைத்தது, தலை இடியென இடித்தது என்பது எனவெச்சம். இவை தம் எச்சமாகிய வினை கொண்டன; மிகவும் ஒலித்தது, மிகவும் விசைத்தது, மிகவும் இடித்தது என்பன இவற்றிற்குப் பொருளாதலின், இவ்வென வெச்சம் மிகுதிப்பொருள் தருவதோர் இடைச்சொல்லாமென்க" (நன்.360) என்பர்.

**433. எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்**
**எஞ்சுபொருட் கிளவி யிலவென மொழிப.**

எ...ன், ஒழிந்துநின்ற எச்சங்கள் திறத்துப் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"எஞ்சிய மூன்றுமென்பன அவை மூன்றும் முந்தையவற்றைப் போலத் 'தம்மை இன்ன வந்து முடிப்பன'வென்று காட்டப்படும் எச்சச்சொல் இல்லை என்றவாறு".

'மூன்றும் மேல்வந்து முடிக்கும் எச்சச்சொல் இல' என ஒன்று உடைத்து என்பதாம். அஃது யாதோவெனின், சொல்லெச்சம்; அதனை முன்னர்ச் சொல்லும்.[1]

**குறிப்பு:-** எஞ்சிய மூன்று:- சொல்லும் குறிப்பும் இசையுமாகிய எச்சம் மூன்று.

**434. அவைதாம்**
**தத்தங் குறிப்பின் எச்சஞ் செப்பும்.**

எ...ன், இது "குறிப்பே இசையே" (எச்ச. 34) என்று

பா.வே: 1 சொல்லுதும் (கா.ந)

கூறப்பட்ட இரண்டெச்சமும் தங்குறிப்பிற் பற்றிய எச்சத் தானே முடிபு கூறப்படும் பிறிதில்லை என்பது.

(நுதலியதும் உரையும் ஒன்றே)

உ...ம்:- "விண்ணென விசைத்தது" குறிப்பெச்சம். அது தன் குறிப்பினையே கொண்டு முடிந்தது.

விண்ணென்றதே விசைத்தது எனப்பட்டது. அதனால் தத்தங் குறிப்பின் எச்சந்தானே முடிந்தது என்பது.

இனி, **இசையெச்சம்**, ஒல்லென வொலித்தது.

இடைச்சொல் ஓத்துள் அறு பகுதிய என்று ஓதப்பட்ட என (இடைச்சொல்.10) விகற்பித்து இரண்டு முடிபு கூறப்பட்ட தென்பது. மற்று, ஆண்டு சொல்லெச்சம் என்பது இல்லையால் எனின், விடை:- "எனவெனெச்சம் வினையொடு முடிமே" (எச்ச. 42) என்று முடித்தார். 'வினை' என, வினை பின்னுந் தன் கண்ணதே சொல்லெச்சம். அது கொண்டு முடிதலில்[1] அவ் வாய்பாடு அவ்வேற்றுமை நோக்கி, வேறு சொல்லெச்சம் என வேண்டினார் என்பது.

முன்னர், "மூன்றும் மேல்வந்து முடிக்கும் எஞ்சுபொருட் கிளவி இலவென" (எச்ச.43) ஒன்று உடைத்து என்பது பட்டு நின்றது; அஃது யாதோ? சொல்லெச்சமென்பது.

**குறிப்பு**:- "ஒல்லென ஒலித்தது" என்பது ஒல்லென்ற அநுகரண ஓசையே இசைத்ததென்று முடிதலின் இசையெச்சம். "விண்ணென விசைத்தது" என்பது விண்ணென்றதே விசைத்த தென்று முடிதலிற் குறிப்பெச்சம். "சலங்கொண்டநோயின் நோவு விண்ணெனத் தெறித்தல் செய்யும்" என்னுங் குறிப்பி னான் விண்ணென்றது குறிப்பெச்சமாயிற்றென்று இவ்வாறு சொல்லுவர் **இளம்பூரணர்** என்பர் **மயிலைநாதர் (நன்.359)**

**435. சொல்லென் னெச்சம் முன்னும் பின்னுஞ்**
**சொல்லள வல்லது எஞ்சுத லிலவே.**

எ..ன், சொல்லெச்சத்திற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

---

பா.வே: 1 முடிதல் இவ்வாய்பாடு (கா.ந)

"சொல் என் எச்சம் முன்னாயினும், பின்னாயினும், சொல் என்னுஞ் சொற்கொண்டு முடிதலல்லது, பிறிதில்லை என்ற வாறு".

உ...ம்:- "பசித்தேன் பழஞ்சோறு தாவென நின்றாள்"

என்பது சொல்லெச்சம்; அஃது அச்சொல்லினாளே தாவென நின்றாள்[1] என்பதாம். அற்று, அத்தாவென நின்றாள் பிறளே எனின், தாவெனச்சொல்லி நின்றாள் என்பதாம். அவற்றுள் சொல் என்பது 'சொல்லி' என்றானும், 'சொல்ல' என்றானும் ஆக இரண்டனுள் ஒன்றானான் முடியுமது வென்பது.

'முன்னும் பின்னும்' என்றது[2] தா எனச் சொல்லி நின்றாள் என்று கொணர்ந்து முன் முடிப்பின்[3], அது பின்முடிவுபட நின்ற தாம் என்பது.

**குறிப்பு:- மயிலைநாதர்** (நன்.359)

"பசித்தேன் பழஞ்சோறு தாவென்று நின்றாள்
நுசுப்போ உலகம் பெறும்"

என்பது சொல்லெச்சம். இது தா வென்று சொல்லிநின்றாள் எனச் 'சொல்லி' என்பதனைக் கொண்டது" என்பர் **இளம் பூரணர்** என்பர்.

**அடியார்க்குநல்லார்** 'அமரர் தலைவனை வணங்குதும் யாமென' (சிலப்.கடலா.26) "அமரர் தலைவனை வணங்குவோம் வருவாயாகவெனச் சொன்ன அப்பொழுதே" என்று கூறி, இனி எனவென்பதனை "மனவெனச்சம் வினையொடு முடிமே' என்ப தனான் என்று சொல்லிப்போந்து எனச் சொல்லெச்சமாக்கி முடிப்பினும் அமையும் என்பர்.

**சங்கர நமச்சிவாயர்** எனவே, எச்சங்கள் சொல்லெச்சம் குறிப்பெச்சமென இருவகைய வென்பதும் சொல்லெச்சம் ஒன்பதெனத் தொகை கூறினார்.

---

பாவே: 1 இப்பகுதி கா.ந பதிப்பில் தெளிவாக இல்லை
2 முன்னம் என்றது (கா.ந)
3 கொணர்ந்து முடிப்பின் (கா.ந)

வகையுள் ஒன்றனையும் சொல்லெச்சமென்றமையான் அவ் வகையுள் ஒன்றாகிய **சொல்லெச்சமென்பது** சொல் விகற்பங்களின்றிச் சொல்லென்னுஞ்சொல் எஞ்சிநிற்ப தென்பதூஉம் பெற்றாம். சொல்லெ ...... வின்றே'' என்றார் ஆசிரியர் **தொல்காப்பிய**னாரென்க. இவ்வாசிரிய வசனத்திற்கு இப்பொருளன்றி வேறு பொருள் கூறுவாருமுளர் என்பர் நன்.360).

''மிடியென்னும் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார்'' என்பது சொல்லெச்சம்.

'கடியென்று சொன்னார், எனச் சொல்லென்னும் தம்மெச்சங் கொண்டது. இது பெயரெச்சம் வினையெச்சம் என்றாற்போலச் சொல்லென்னும் எச்சத்தையுடைய இடைச்சொல்லைச் சொல் லெச்சமென்றார் என்பர்.

**436. அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்.**

எ...ன், இது ''தகுதியும் வழக்கும்'' (கிளவி.17) என்பதனுட் கூறப்படாது ஒழிந்து நின்றதோர் மரபு வழூஉக்காத்தல் நுதலிற்று.

''நன்மக்களுட் கூறப்படாத சொல்லைக் கிடந்தவாறே சொல்லற்க, பிறிது வாய்பாட்டான் மறைத்துச் சொல்லுக என்றவாறு''.

உ.. ம்:- கான்மேல் நீர்பெய்து வருதும்[1],
வாய்பூசி வருதும் என வரும்.

**குறிப்பு:-** **'அவை'** என்ற சொல்லிற்கு **இளம்பூரணர்** 'நன்மக்கள்' என்று பொருள் கூறுகின்றார்.

**'பிங்கலம்'**

''சவையும் பண்ணையும் சங்கமும் கோட்டியும்
அவையும் ஆடவர் கூட்டமென் றாகும்''

---

பாவே: 1 கான்மேல் நீர்பெய்தும் (கா.ந)
கான்மேல் நீர் பெய்தும் வாய்பூசியும் வருதும்

என்று கூறுவதால், சவையின் வேறான சொல் அவை என்க. சுட்டி உணரத்தக்க நன்மக்களை அவை என்றும், அவையோர் என்றும் வழங்குவர்.

**அவையல் கிளவி.**

"இடக்கர் மறைமொழி எக்கரு மாகும்" (பிங்கலம்).

**437. மறைக்குங் காலை மரீஇய தொரால்.**

எ...ன், இறந்தது காத்தது.

"மேல், அவைக்கு உரிய அல்லனவற்றை மறைத்தே சொல்லுக என்றார்; இனி, அவைதாம் மரீஇ அடிப்பட்ட வழி யாயக்கால் மறைக்க வேண்டுவதன்று; அவை ஒழித்து ஒழிந்தன மறைத்தே சொல்லுக என்றதென்பது".

இனி, அவ்வாறு மரீஇ வந்தன, 'யாட்டுப்[1] பிழுக்கை' "ஆப்பி" என வரும்.

**438. ஈதா கொடுவெனக் கிளக்கு மூன்றும்**
**இரவின் கிளவி ஆகிட னுடைத்தே.**

எ...ன், இதுவும் கிளவியாக்கத்துக் கூறப்படாது ஒழிந்து நின்றதோர் மரபிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"இக் கூறப்பட்ட மூன்றும் இரப்போர் சொல்லுதற்குரிய என்றவாறு".

ஒருவரை, ஒருவர் இரக்குங்கால், இம் மூன்றனுள் ஒன்று சொல்லி இரப்பது என்றவாறு.

**439. அவற்றுள்**
**ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே.**

எ...ன் (நுதலியதில்லை)

"மேற் கூறப்பட்ட மூன்றனுள் ஈ என்னுஞ் சொல் இரக்கப் படுவோரை இழிந்தோர் கூறி இரக்குஞ் சொல் என்றவாறு".

---

சு.வே: 1 ஆட்டுப் (கா.ந)

உ...ம்:- உடுக்கை ஈ, மருந்து ஈ என வரும்.

**குறிப்பு**:- 'ஈயென விரத்தல் இழிந்தன்று, (புறநா.204) இழிந்தோன் கூற்றால் ஈயெனச் சொல்லி இரத்தல் இழிந்தது. (அதன் உரை)

**440. தாவென் கிளவி ஒப்போன் கூற்றே.**

எ...ன் (நுதலியதும் உரையும் ஒன்றே)

"இரக்கப்படுவானை ஒப்பான்[1] இரக்குங்கால் தா என்னுஞ் சொற்சொல்லி இரக்கும் என்பது உணர்த்தியவாறு".

உ...ம்:- சோறு தா, ஆடை தா என வரும்.

**441. கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே.**

எ...ன் (நுதலியதில்லை)

"கொடு என்னுஞ் சொல், உயர்ந்தோனாற் கூறப்படுஞ் சொல் என்றவாறு".

உ...ம்:- இவற்கு ஊண் கொடு, ஆடை கொடு என வரும்.

**குறிப்பு**:- "கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று" (புறநா.204).

**442. கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்**
**தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பின்**
**தன்னிடத் தியலும் என்மனார் புலவர்.**

எ...ன், மேற் சூத்திரத்திற்குப் புறனடையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

"கொடு என்பது தன்மைக்கு ஏற்றதன்று; படர்க்கைக்கு உரியதோர் சொல்லாயிற்று. உயர்ந்தோன் இழிந்தோனை

---

கூ.வே: 1 இரக்கப்படுவான் ஒப்பான் (துறைசை)

இரக்குங்கால், தமன் ஒருவனைக்காட்டி இவற்குக் கொ என்பது. ஆண்டுப் படர்க்கையிடத்திற்கு உரித்தாகக் கூறினான் மன்; ஆயினும், அது தன்மையிடத்தே இயல்புகாட்டப் படர்க்கை இட்த்தாற்கு[1] உரித்தாகாது, அவ்விரக்கப்படுபொருளும் அக் கொடு என்ற சொல்லும் என்பது தன்னைப் பிறன் போற் கூறுங் குறிப்பிற்று. அவன் கொடு வென்றது வாய்பாடன்ற தேனும் அது தனக்கே சொல்லியவாறு"

உம்மையாற் பிறகிளவியும் படர்க்கையாயினும் தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பிற்றன்னிடத்தியலும் என்றவாறு. ஆண்டு, இரவின் கிளவி அல்வழி என்றது.

அங்ஙனஞ் சொல்லுவானோ பெருஞ்சாத்தன் தந்தை; அங்ஙனஞ் சொல்லப்படுவளோ பெருஞ்சாத்தன் தாய் என்னும் தன்னைப் பிறன்போல்வாரும். அது தன்னிடத்தியலும் என்ற வாறு.

**443.** **பெயர்நிலைக் கிளவியின ஆஅ குநவும்[2]**
**சினைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்[3]**
**தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்**
**மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்**
**மந்திரம் பொருள்வயின் ஆஅ குநவும்**
**அன்றி அனைத்துங் கடப்பா டிலவே.**

எ...ன். ஒரு சார் வழுக்காத்தல் நுதலிற்று.

"இவை மேற்கூறப்பட்ட இலக்கணத்தினையன்றி **யாகாமை** இல (கடப்பாடில). என்றவாறு".

பெயர்நிலைக் கிளவியின் என்பது ஈண்டு உயர்திணைப் பெயரையாயிற்று. அவ்வுயர்திணைப் பெயர் உயர்திணைப் பெயர்மேல் வழங்கப்படுதலின்றியும் அமையும் என்றவாறு.

சு.வே: 1 இடத்திற்கு (கா.ந)
பா.வே: 2 'ஆஅகுனவும்' என்ற பாடம் ஏட்டில்.
3 'திசைநிலைக் கிளவியின் ஆகுந' என்பது சேனாவரையர் முதலானவரின் பாடம்.

நம்பி என்னும் உயர்திணைப் பெயர் ஒரு யானை மேலானும், ஒரு கோழி மேலானும், பிறவற்றின் மேலானும் நிற்கும். நங்கை என்ப ஒரு கிளியையும் என்பது.

இனிச் சினைநிலைக் கிளவியின் ஆவன கடப்பாடின்றி வருமாறு:-

வெண்கொற்றப் படைத்தலைவன், வெள்ளேறக் காவிதி என்பன.

இவற்றை, முன்னர்க் கிளவியாக்கத்துச் சிறப்புப் பெயர் நின்றவழி இயற்பெயர் பின் வைத்துக் கூறுப என்றார். இனிச் சினைச்சொற்கணாயின் அது வேண்டுவதன்று என்பது கருத்து. 'தொன்னெறி மொழிவயின் ஆகுநவும்' என்பது, முற்றுச்சொல் அவற்றையும் இவ்வாறே சொல்லப்படுதலின் இப்பொருள என்றோர் கடப்பாடில[1] என்றார்.

உ...ம்:- "ஆற்றுட் செத்த எருமை ஊர்க்குயவற்கு இழுத்தல் கடன்" எனவும் "யாட்டுனாணின்னுரைதாரான்" எனவும் வரும். பிறவும் அன்ன.

'மெய்ந்நிலை மயக்கின் ஆகுநவும்' என்பது, மேல் "தகுதியும் வழக்கும் தழீஇன வொழுகும்" (கிளவி . 17) என்புழி, மங்கல மரபினானும் குழுவின் வந்த குறிநிலை வழக்கினானும் கூறப்படும் என்றாரன்றே, இனி, அவை அவ்வாறன்றித் தத்தம் இலக்கணத்தானுஞ் சொல்லப்படும் என்றவாறு.

உ...ம்:- சுடுகாட்டை நன்காடு என்னாது சுடுகாடு என்றும், செத்தாரைத் துஞ்சினார் என்னாது செத்தார் என்றும் கூறவும் அமையும் என்றவாறு.

---

1 'இலக்கணத்தினை யன்றியாகாமையில' என்ற சொற்றொடர்க்குத் தெளிவாகப் பொருள் விளங்கவில்லை. ஏன் ஏட்டில் இவ்விடம் சிதைந்துள்ளது. கீழ்வரும் உரையை நோக்கினால் 'இன்றியும் அமையும்' என்றோ 'இலக்கணத்தினை இன்றியமையாமை இல' என்றோ இருக்கலாம் போலும். நூற்பா 'கடப்பாடில' என்று கூறுகின்றது.

இனி, 'மந்திரப் பொருள்வயின் ஆகுநவும்' என்பது, "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப". (செய்யுளியல் 171) அவை கூறப் பட்ட எழுவகை வழுவிற்றீர்ந்து வருக என்ற கடப்பாடில என்ற வாறு.

உ...ம்:- அவை

"திரிதிரி திரிதிரி சுவாகா
கன்றுகொண்டு கறவையும் வர்த்திக்க சுவாகா"

என்றாற்போல வரும்.

இச்சூத்திரத்திற்குப் பிறிதுமோர் பொருள் உரைப்பாரும் உளர். அதுவும் மெய்யுரை போலும்.

**444 செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிட னுடைத்தே.**

எ...ன், இது, வினையியலுள் ஒழிந்து நின்ற ஒழிபு உணர்த்து தல் நுதலிற்று.

"செய்யாய் என நின்ற முன்னிலை வினைச்சொல், செய் என்னும் சொல்லும் ஆமிடன்[1] உடைத்து என்றவாறு.

இந்நாள் எம் இல்லத்து உண்ணாய் என்பது;

அது 'செய்யாய்' என்பது; அது இனி 'செய்'[2] என்றுமாம்.

**குறிப்பு**:- 'செய்யாய் என்னும் முன்னிலை எதிர்மறை, எதிர்மறை படாது செய்யென் விதிவினையாதலும் உரித் தென்று உரைத்தாரால் உரையாசிரியரெனின்' என்னும் **சேனாவரையர்** கூற்றால் இளம்பூரணர் உரைக்கருத்தினை அறியலாம்.

**நச்சினார்க்கினியர்** இளம்பூரணர் உரையினையே கொண்டு சேனாவரையர் உரையை மறுப்பர். ஆண்டுக் காண்க.

---

சு.வே: 1 ஆயிடனும் (துறைசை)
2 அது செய் இனி (கா.ந)

**445. முன்நிலை முன்னர் ஈயும் ஏயும்**
**அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.**

எ...ன், இடைச்சொல்லோத்தினுள் ஒழிந்து நின்ற ஒழிபு உணர்த்துதல் நுதலிற்று.

"முன்னிலைக்கண்ணான ஈகார ஏகார இடைச்சொற்கள் முன்னிலைக்குப் பொருந்திய மெய்யை ஊர்ந்து வரும் என்றவாறு".

உ...ம்:- "சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ"[1] (அகநா.46) எனவும்

"அட்டி லோலை தொட்டனை நின்மே" (நற்.300) எனவும், இவை இரண்டும் தத்தங்குறிப்பிற் பொருள் செய்யும் இடைச்சொல் என்பது. ஈண்டு, எப்பொருளை விளக்கிநின்றனவோ வெனின், **புறத்துறவு நீர்மைப் பொருள்பட** வந்த என்றவாறு.

**குறிப்பு:-** மேல் நூற்பாவினை **இளம்பூரணர்** இடைச்சொல்லோத்தின் ஒழிபாகக் கருதுவர். ஆனால் **நன்னூலாசிரியர்** வினையியலின் ஒழிபாகக் கருதி இந்நூற்பாவினை நன்னூல் வினையியலில் முப்பாலொருமை முன்னிலை வினையை உணர்த்தும் நூற்பாவிற்குப் பின், சிறப்பு விதியாக எடுத்தமைத்துக் கொள்ளுகிறார்.

**446. கடிசொல் லில்லைக் காலத்துப் படினே.**

எ...ன், மேற் கூறப்பட்டனவற்றுக்கெல்லாம் பொதுவாய தோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(உரையில்லை)

அழான் புழான் என்பன, அக்காலத்தவை உண்மையான் ஆசிரியன் ஓதி முடிபு கூறப்பட்டன.

---

பா.வே: 1 யாரே (கா.ந)
**'யாரோ' என்ற பாடமே தக்கது. இடையியல் 47-ஆம் நூற்பா பார்க்க.**

இனிச் சுட்டுச்சினை நீடிய ஐகார வீற்றுப்பெயர் (தொல்.தொகைமரபு.17) உறழ்ந்து முடிக என்றான் ஆசிரியன், அக்காலத்து அவை உண்மையான்; இப்பொழுது அவற்றிற்கு உதாரணம் இல்லை. பிறவும் அன்ன.

இனி, "ஆசிரியனால் ஆகாவென்றோதப்பட்டன தோன்றுவ உள". அவை ஞெண்டு[1] என்றும், நீர்கண்டக என்றும், சம்பு, சள்ளை என்றும்[2] வரும்.

**447. குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்**
**குறைத்தன[3] வாயினும் நிறைப்பெய ரியல.**

எ...ன், செய்யுட்கு ஆவதோர் முடிபு கூறுதல் நுதலிற்று.

"முன் செய்யுளீட்டத்[4] தன்மையானே கடியப்படும் என்றே அறியக்கிடந்தது. இனி, அவற்றை முழுவதூஉம் கிடை கடா வாது, குறைத்துக் கடாவப்படுதலும் உடைய ஒரோவழி; அங்ஙனங் குறைக்கப்பட்டதேனும், குறையாது நின்றவிடத்தியலு மாறே புலப்பட்டியலுஞ் செவிக்கு என்றவாறு".

இனி, அவை குறைக்குமிடத்துத் தலைக்குறைத்தலும் இடைக்குறைத்தலும் கடைக்குறைத்தலுமென மூன்றுவகையாற் குறைக்கப்படும் என்பது.

அவற்றுள், **தலைக்குறைத்தது** "மரையிதழ் புரையுஞ் செழுஞ்செஞ் சீறடி[5]" என்பது. ஆண்டுத் தாமரை எனற்பாலார் மரை என்று தலைக்குறைத்தார் என்பது.

**இடைக்குறைத்தல்** என்பது "வெரிநி லோதி[6] வெருக் கண்டன்ன". என்பது. ஆண்டு 'ஓந்தி' எனற்பாலார் ஓதி என்று இடைக்குறைத்தார் என்பது.

---

சு.வே: 1 ஞண்டு (கழகம்)
2 எனவும் (துறைசை)
பா.வே: 3 குறைந்தன (தெய்)
சு.வே: 4 செய்யுளீட்டும், செய்யுளீட்டந்
5 மஞ்செஞ் சீறடி
6 வெரிநி னோதி

இனிக் **கடைக்குறைத்தல்** என்பது, "நீலுண்டுகிலிகை கடுப்ப" என்பது, நீலம் உண் துகிலிகை எனற்பாலார் "நீல்உண் துகிலிகை" என்றார் என்பது.

'குறைக்கும் வழி அறிதல்' என்பது, குறைக்கைக்குத் தகக் குறைக்கப்படுவது என்றற்கென்பது.

'நிறைப்பெயரியல' எனவே இவ்விகாரம் பெயர்க்கண்ணதே என்பது பெற்றாம்.

மற்றுச் "சென்றார் அன்பில தோழி" என அன்பிலர் எனற்பாலார் அன்பில என்றார்; எனவே, வினைச் சொல்லுங் குறைக்கப்பட்டதெனின், நிறைப்பெயரியல என்றது பெயர்ச் சொல் என்றவாறு.

அக்குறைக்கப் பெறுவன அம் மூன்றிடத்துள் எவ்விடத்தும் குறைக்கப்பெறினும் பெறுக.

பெற்றன குறையாதபோதுநின்ற தத்தம் நிறைபு நிலைப் பெயரவேயாக உணரப்படும் என்பார் 'நிறைப்பெயரியல' என்றார் என்பது. இதுவும் ஒரு கருத்து.

**குறிப்பு**:– இந்நூற்பாவின் இரண்டு அடிகளையும் தனித்தனி நூற்பாவாகக் கொண்டனர். **சேனாவரையர்** முதலியோர். 'வெரிநில் ஓதி வெருக்கண்டன்ன" என்பது 'முதுகில் ஓந்தியின் வெருதலைக் கண்டாற்போல' என்று பொருள்படும்.

**448. இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே.**

எ...ன், இடைச்சொல் எனப்பட்டனவற்றுக்கட் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"முன்னர் வேற்றுமை யோத்தினுள்" ஐ ஒடுகுஇன் அதுகண்" (தொல். எழுத்.114) என்னும் உருபுகளையன்றே வேற்றுமைச் சொல்லென்று உணர்த்தியது. இனி, அவையன்றி ஒழிந்த இடைச்சொற்களையும் வேற்றுமைச் சொல்லென அமையும் என்றவாறு".

என்னை, அவையுந் தாமாக நில்லா, பெயருந் தொழிலும் அடைந்து நின்றும், **அவற்றையே பொருள் வேற்றுமைப்படுக்கு மாகலின்** என்பது.

**குறிப்புரை**:- தொல்காப்பியர் வேற்றுமையியலில் பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என்னும் எட்டினையும் (நூற்பா.3) வேற்றுமை என்றனர். எழுத்ததிகாரத்தில் "ஐ ஒடுகுஇன் அது கண் என்னும் அவ்வாறென்ப வேற்றுமை உருபே" (114) என்றனர்.

இடைச் சொல்லியலில் "வேற்றுமைப் பொருள்வயின் உரு பாகுநவும்" (2) என்றனர். இங்கே 'இடைச்சொல்லெல்லாம் வேற்றுமைச் சொல்லே, என்பர்.

**449. உரிச்சொன் மருங்கினும் உரியவை உரிய.**

எ...ன், உரிச்சொற்கள் திறத்துப் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"இடைச்சொல்லெல்லாம் வேற்றுமைச்சொல்லாதற்கு எவ்வாறு உரியவாயினமன்; அவ்வுரிமை உரிச்சொற்கண்ணும் எய்தும் என்றவாறு".

உம்மை இறந்தது தழீஇயிற்று.

'உரிச்சொல்லெல்லாம் வேற்றுமைச் சொல்' என்றது, மேற்கூறிய இடைச்சொல்லே போல், உரிச்சொல்லும் தாமாக நில்லா, பெயரும் வினையும் அடைந்து பொருள் வேறுபடுத லுடைய, அது நோக்கி என்பது.

இருதலையாக அவற்றை வேற்றுமைச் சொல் என்றவாறு.

**குறிப்பு**:- "வேறுபடுத்தலுடைய" என்றிருப்பின் நன்று. சேனாவரையர் உரையைப் பார்க்க.

**450. வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.**

எ...ன், முன்னர் வினையியலுள் வினையெச்சம் என்று ஓதப்பட்டனவற்றுக் கண் ஆவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

"வினையெச்சம் என்று கூறப்பட்டன. செய்யுட்கண் தாம் வந்து முடிபு கொண்டதன் றன்மைப்பாலே நில்லா; நின்றாற் பொருளிசையா வாதலால் ஓர் எச்சந் திரிந்து ஓர் எச்சமாகியும் நிற்கும் இலக்கணத்தினையுடைய என்றவாறு".

உ...ம்:- ஞாயிறு பட்டு வந்தான், ஞாயிறுபடவந்தான், என்பதுமன்[1] ஆகற்பாலது. பட என்பது செயவென்னெச்சம்; அது திரிந்து பட்டு என்னும் செய்து என் எச்சமாகி நின்ற தென்பது.

"கோழி கூவிப்[2] புலர்ந்தது" என்பதூஉம் செயவென் னெச்சம் செய்து என் எச்சமாகித் திரிந்தது.

இங்ஙனம் நின்ற வேனும் அவற்றைச் செயவென்னெச்ச மாக உணர்ந்துகொளல் வேண்டும். அல்லாக்காற் சொன் முடிபு எய்தாது. என்னை, ஞாயிறு பட்டு என்றக்கால், வந்தான் என்றலும் முடியற்பாலது, பின்னும் ஞாயிற்றின் மேல் வினை கொண்டு முடியற்பாற்று, 'முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின' (வினையியல். 31) என்று உரைத்தாராகலின் என்பது.

கோழிகூவிப் புலர்ந்தது என்பதற்கும் அஃதொக்கும்.

இனி, (அ) "மோயினள் உயிர்த்த காலை" (அகநா. 5) என்புழி, மோந்து என்னும் வினையெச்சம், மோயினள் என முற்றுச் சொல் வாய்பாட்டாற் றிரிந்து நின்றதேனும் வினை யெச்சமே ஆகல் வேண்டும். பிறவும் அன்ன.

(ஆ) 'பிற என்றதனால்'

"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்" (குறள். வான். 4)

என்பது, குன்றியக்கால் என்னும் வினையெச்சம் குன்றிக் கால் என நின்றது.

---

சு.வே: 1 என்பதுமுன் (துறைசை)

2 கோழி கூவ (துறைசை)

**குறிப்பு:-** (அ.) **இளம்பூரணர்** அகத்திணையியல் இரண்டாம் நூற்பாவில் முன்னே 'ஒழிய என்பதை வினையெச்சமாகக் கொண்டு பொருள் கூறிவிட்டுப் பின், 'ஒழிய, என்பதனை எச்சப்படுத்தாது முற்றுப்படக் கூறிப் "படுதிரை வையம் பாத்திய பண்பு நடுவண தொழிய" எனப் பொருள் உரைப்ப என்று, எழுதி. அஃதேல் வினையெச்ச வாய்பாட்டால் வரும் முற்றுளவோ வெனின்? "வினையெஞ்சு கிளவியும் வேறு பல் குறிய" என்று முற்றுவாய்பாட்டான் வினையெச்சம் வருதலின், வினையெச்ச வாய்பாட்டால் முற்றுவருமென்பதூஉம் அச்சூத்திரத்தின் அமைத்துக் கொள்ளப்படும் என்ப" என்பர்.

இது பற்றித் தொல்-வினையியல் 31-ஆம் நூற்பா **நச்சர்** உரையும் '**இலக்கணக் கொத்தாசிரியர்** 'வினையெச்சம்மே வினை முற்றாகலும்' (பாயிரம் . 6 . உரை) என்பதையும் ஒப்பு நோக்குக.

இளம்பூரணர் கருத்தை உட்கொண்ட **நன்னூலார்** 'வினை முற்றே வினையெச்ச மாகலும்" (350) என்று நூற்பா செய்தனர்.

**(ஆ.) இளம்பூரணர்** 'பிற என்றதனால், என்று எழுதுவதை நோக்கினால் மேல் நூற்பா 'வினையெஞ்சு கிளவியும் வேறுபிற குறிய" என்றோ, "பிற பல் குறிய" என்றோ பாடம் இருக்கலாம் போலும்.

**451. உரையிடத் தியலும் உடனிலை அறிதல்.**

எ...ன் உலகத்து மாறுகொண்டு வேறுபட்டியலும் சொற்களவை அமைக என்பது உணர்த்துதல் நுதலிற்று.

"கட்டுரை உரைக்குமிடத்து நடக்கும் ஒருங்கு நிலையும் அறிக என்றவாறு".

என்பது, ஒன்று உரைக்குமிடத்து இயைபில்லாத இரண்டு சொல் ஒருபொருட்கண் நிற்பச் சொல்லுதல் உண்டு. உண்டேனும், அஃது அமைக என்றவாறு.

உ...ம்:- இந்நாழிக்கு இந்நாழி சிறிது பெரிதே[1] என்பது.

---

சு.வே: 1 சிறிது பெரிது (கா.ந)

சிறிதென்ற சொல்லும், பெரிதென்ற சொல்லும், தம்முண் மாறுகோள் உடையன; அந்நாழிமேலே நின்றனவேனும் அமையும் என்பது. என்னை அமையுமாறெனின்? சிறிது என்று நின்றதன் சிறுமையே பெரிதென்பான் சொல்லினானல்லன்; அந்நாழிக்கு இந்நாழி பெரிய (தொரு) துணை மிகுதியில்லை; பெருமை சிறிது (என) எண்ணிய சொல்லினான் அமையும் என்பது.

**452. முன்னத்தின் உணருங் கிளவியும் உளவே
இன்ன என்னுஞ் சொன்முறை யான.**

எ...ன், இதுவும் சொற்கண்ணதோர் பொருள்படுதல் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

"சொல்லின விடத்துச் சொற்கிடந்தவாறே குறிப்பினாற் கொண்டுணரப்படும் பொருளும் உள; சொற்களது யாண்டாயினும் அன்ன இன்னவென்று தன்மை வேறுபாடு சொல்லுதன் முறைக்கண் என்றவாறு".

உ...ம்:- "செஞ்செவிய வெள்ளொக்கலர்" எனவும் "குழை கொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்" எனவும் வரும்.

"செஞ்செவிய வெள்ளொக்கலர்" என்றால், உதிரஞ் சொரியும் செவிய வெளிய சுற்றத்தார் என்பதன்று; செவியெல்லாம் சாலச் செம்பொன் அணிந்து, முட்டில் செல்வத்துக் கிளையுடையர்[1] என்றவாறு.

'குழை கொண்டு கோழியெறியும்'[2] என்றக்காலும், குழை கொண்டு கோழியெறிதலென்று உணரற்பாலதன்று; முட்டில் செல்வத்தார் என்பது உணரற்பாற்று.

**குறிப்பு**:- வெள் ஒக்கலர் - மாசற்ற சுற்றத்தினையுடையார் என்றும், முட்டில் செல்வத்துக் கிளையுடையார் என்றும் பொருள் கூறுவர் **மயிலைநாதர்** (நன். 407.)

---

சு. வே: 1 செல்வத் தாக்கிளையுடையர்
2 இத்தொடர் "கோழியெறிந்த கொடுங்காற் கனங்குழை" (பட்டி-23) என்ற அடியின் கருத்தைத் தழுவியது.

இந்நூற்பாவின் முதலடி **நன்னூலில்** 407–ஆம் நூற்பாவாக உள்ளது. "சொற்கிடந்த வாறன்றிச் சொல்லுவான் குறிப்பினானே வேறு பொருள்பட வருஞ் சொற்களும் சிலவுளவாம்" என்பது **மயிலைநாதர்** உரை.

**நேமிநாதம்** "இன்னரென முன்னத்தாற் சொல்லுதல்" (சொல். 65) என்று கூறும்.

**453. ஒருபொருள் இருசொற்[1] பிரிவில வரையார்.**

எ...ன், இது மரபுவழுக் காத்தது.

"ஒரு பொருண்மேற் கிடந்த இரு சொல் பிரிவின்றி நின்றன வரையப்படாது என்றவாறு".

உ...ம்:-

"வையைக் கிழவன்[2] வயங்குதார் மாணகலம்
தையலாய் இன்றுநீ நல்குதி நல்காயேற்
கூடலார் கோவொடு நீயும் படுதியோ
நாடறியக் கவ்வை யொருங்கு".

வையைக்குக் கிழவன் எனப்பட்டானும்[3] கோவெனப்பட்டானும் அவனாதலால் அவ்விரு சொல்லும் ஒரு பொருட்கண் மேலே நின்றன. பிற பொருட்குப் பிரியா; அங்ஙனம் நிற்பன அமையும் என்பதாம்.

இனிப் 'பிரிவில வரையப்படா, எனவே, பிரிவுடையன வரையப்படும் என்பதாம். அஃதியாதோவெனின்,

"கொய்தளிர்த் தண்டலைக் கூற்றப் பெருஞ்சேந்தன்
வைகலு மேறும் வயக்களிறே – கைதொழுதேன்
காலேக வண்ணனைக் கண்ணாரக் காணவெஞ்
சாலேகஞ் சார நட"

---

பா.வே: 1 பல்பெயர் (நன். 396)

சு.வே: 2 வையைக் கிறைவன் (கா.ந)

3 வையைக்கு 'இறையெனப் பட்டானும்' (கா.ந)

இதனுட் கூற்றப் பெருஞ்சேந்தன் என்றார்; பின்னைக் காலேக வண்ணன் என்றார். அவை இரண்டு சொல்லும் பிரிவுடைய; அதனால் அமையா;

யாவோ பிரிவெனின், காலேக வண்ணம்என்பது சாந்து; கூற்றப் பெருஞ் சேந்தற்கே உரித்தாய் நிற்ப தொன்றன்று. காலேக வண்ணம் என்னுஞ் சாந்து பூசினார்க் கெல்லாம் காலேகவண்ணர் என்று பெயராம்; அதனாற் பிரிவுடைத்தது[1] ஆதலால் வரையார் என்பது. மேல் கிளவியாக்கத்து

"இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்" (38) என்றும்,

"சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு" (41) என்றும்,

"ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி" (42) என்றும், ஒரு பொருண்மேல் இருபெயர் வழுவும், பலபெயர் வழுவும் கூறிப்போந்தான். அவற்றோடு இதனிடை வேற்றுமை தெரிந்து கொள்க.

**குறிப்பு:-** "காலேக வண்ணன்" என்ற பாட்டினைப் போல

"சேலேக வண்ணனெஞ் சேரி புகுதுங்காற்
சாலேகஞ் சார நட." (முத் தொள்.45)

என்ற பாடற் பகுதி உள்ளது.

"ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார்" தொல்-எச்.63) என்னும் நூற்பாவினையும், அதன் இளம்பூரணர் உரையினையும் மேலே காண்க.

**சேனாவரையர்** வேறு உரை கூறியுள்ளார். அவ்வுரை வருமாறு:-

"பொருள் வேறுபாடின்றி, ஒரு பொருண்மேல் வரும் இரண்டு சொல் பிரிவின்றித் தொடர்ந்து வரின், அவற்றைக் கடியார்" என்று பொருள் கூறி, **'நிவந்தோங்கு பெருமலை'** **'துறுகன்** மீமிசை' என்பனவற்றை எடுத்துக் காட்டாகக்

---

பா.வே: 1 பிரிவுடைத்து அமையாது என்பது (கா.ந)

காட்டிப் பின் **இளம்பூரணர் கூறியுள்ள உரையை மறுக்கின்றார். தெய்வச்சிலையாரும்** சேனாவரையர் உரையினையே பின் பற்றுகின்றார்.

**நச்சினார்க்கினியர்** இந்நூற்பாவிற்கு "ஒரு சொல் இரு பொருள் பிரிவில வரையார்" எனச் சொற்களை மாற்றி ஓர் உரையினையும், சொற்கள் செவ்வனே கிடந்தவாறு பொருள் கொண்டு மற்றோர் உரையினையும் எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ள மற்றோர் உரை சேனாவரையர் கருதிய உரையாகவே உள்ளது.

ஆனால், **நன்னூலாசிரியர்** சொல்–பொதுவியலில், "ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்" (396) என்றும்,

"ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ"(397)என்றும், இரண்டு நூற்பாக்களை ஒன்றன்பின் ஒன்றாக அமைத்துக் கொண்டுள்ளார். அவ்விரண்டு நூற்பாவுள் முதல் நூற்பா (396) மேற்காட்டிய தொல்காப்பிய நூற்பாவைப் (தொல்.எச்.63) பெரிதும் ஒத்துள்ளது. இதனுள் 'இருசொல்' என்ற பாடத் திற்குப் பதிலாகப் 'பல் பெயர்' என்ற பாடம் உள்ளது. **இப்பாடம் நன்னூலாசிரியர் அமைத்துக் கொண்ட பாடமோ, அல்லது இப்படி ஒரு பாடம் தொல்காப்பிய நூற்பாவிற்கு இருந்திருக்குமோ** என்று எண்ணும்படியாக உள்ளது.

**மயிலைநாதர்** நன்னூல் (396) நூற்பாவிற்கு, "ஒரு பொருள் கருதிவரும் பலபெயர் (இருபெயர்) பொருளின் நீங்காவாயின், ஒருபொருட்குப் பலபெயர்(இருபெயர்) வந்தன வென்று கடியப் படா" என்று பொருள் கூறி, "பிரிவில வரையார் எனவே, பிரிவன கடியப்படுமெனக் கொள்க" என்று சிறப்புரையும் கூறி, இளம்பூரணரைப் போலவே, "வையைக் கிழவன்" என்ற பாட் டினை எடுத்துக்காட்டி, இது பிரிவின்றி இருபெயர் வந்தது என்று கூறிப் பின்னர் "கொய்தளிர்த்தண்டலை" என்ற பாட்டை எடுத்துக் காட்டி, "இது சாலேக வண்ணம் இவனுக்கே உரிமைத்து அன்மையில் பிரிக்கப்படுதலின், ஆகா தென்க. வட மொழிக்கு இரண்டல்லாத வெல்லாம் பலவென்றும் தமிழுக்கு ஒன்றல்லாத வெல்லாம் பல வென்றும் அறிக" என்றனர்.

இந் நன்னூல் நூற்பாவின் பின்னர் அமைந்துள்ளது. "ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ" (397) என்ற நூற்பாவாகும். **இது யாப்பருங்கல விருத்தியுரையில் வருதலால் வேறு இலக்கண நூலிலிருந்து நன்னூல் ஆசிரியரால் எடுத்தமைத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.**

இந்நூற்பாவிற்கு **மயிலைநாதர்** "பொருள் வேறின்றி ஒரு பொருளைக் குறிக்க வரும் பல சொற்கள் (இருசொற்கள்) **அப்பொருளைச் சிறப்பித்தலின்** வழுவென்று நீக்கப்படா" என்று பொருள்கூறிச் சேனாவரையர் தெய்வச்சிலையாரைப் போலவே மீமிசை ஞாயிறு', 'உயர்ந்தோங்கு பெருவரை' முதலிய சொற்களை எடுத்துக் காட்டுவர்.

இதனால் மேற்காட்டியுள்ள நன்னூல் நூற்பாக்கள் (396,397) இரண்டும், 'ஒரு பொருட் பல் பெயர்' (396) 'ஒரு பொருட் பன்மொழி (397) என்னும் சொற்றொடரால் ஒத்திருப்பினும், 'பிரிவிலவரையார்' (396) 'சிறப்பினின் வழா' (397) என்னும் சொற்றொடரால் ஒவ்வாமலிருத்தலால், அவை வெவ்வேறு இலக்கணங்களைக் கூறவந்தவையாகும் என்பது புலனாகும்.

**யாப்பருங்கல விருத்தியாசிரியரும்** "வெறிகமழ் தாமரை மீமிசை ஒதுங்கிய" என்ற தற்சிறப்புப் பாயிரவுரையில், "மீமிசை, என்பது மேன்மேல் என்றவாறு. 'மீமிசை' என்பது ஒரு பொருட் பன்மொழி. சிறப்புப் பற்றி வந்தது. "ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ" என்றாராகலின் என்று உரை கூறிச் செல்வதால், இந்நூற்பாவின் பொருள் தெளிவாக உணரப்படுகின்றது.

இதனால், "ஒரு பொருள் இருசொல் பிரிவில வரையார்" என்னும் நூற்பாவிற்குச் **சேனாவரையர் கூறும் உரை பொருந்தாதென்பதும்,** அந்நூற்பாவே "ஒரு பொருள் இரு சொல் சிறப்பினின் வழாஅ" என்ற பாடத்துடன் இருப்பின் அவர் கூறும் உரை பொருந்தும் என்பதும் புலனாகின்றன.

"ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ" என்னும் நூற்பா அவிநயமாதல் அகத்தியமாதல் வேண்டும் என்பர் திருக்குறள் நுண் பொருண் மாலையுடையார் (குறள்-129).

**454. ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி**
**பன்மைத்[1] தாகும் இடனுமா ருண்டே.**

எ...ன், இதுவும் பால் வழு அமைக்கின்றது.

“ஒருமை சுட்டிநின்ற பெயர்ச் சொல்லும் பன்மை கொண்டு முடியும் இடனும் உடைத்து என்றவாறு”.

உ... ம்:-

‘‘அங்கலும் மாமை அகுதை தந்தை
அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்’’

என வரும்.

இதனுள் தந்தை யென நின்ற ஒருமை முறைப்பெயர் சோழர் என்னும் பன்மை கொண்டு முடிந்தமையின் வழூஉ[2]; வழூஉவே யெனினும் அமையும் என்பது.

“யான் எம்ஊர் புகுவல்” என்பதும் அது.

**குறிப்பு:-** ‘பன்மைத்தாகும்’ என்ற பாடம் புலிசை, துறைசை ஏடுகளிற் கண்டது. ‘பன்மை கொண்டு முடியும் இடனும் உடைத்து’’என்று பொருள் எழுதுவதால் இளம்பூரணர் கொண்ட பாடம் இதுவே. சேனாவரையர் ‘பன்மைக்கு’ என்று நான்காம் வேற்றுமை விரித்துப் பொருள் கூறுவர்.

**455. முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி**
**பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே**
**ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்.**

எ...ன், இது செய்யுட்கு உரியதோர் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

“முன்னிலை சுட்டிய ஒருமைச் சொல் பன்மை கொண்டு முடியினும் வரைந்து மாற்றப்படாது ஆற்றுப்படைச் செய்யுளிடத்து; அதனை ஆண்டுப் போற்றி உணர்க என்றவாறு”.

---

பா.வே: 1 பன்மைக்காகும் (சேனா, நச், தெய்.)
சு.வே: 2 முடிந்தமையின் வழூஉவே யெனினும் (கா.நு)

"கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ" (மலைபடு.501) என்புழித் 'தலைவ' என்பது ஒருமைப் பெயர், அது பின்னை "ஒருவீர் ஒருவீர்[1] ஓம்பினர் கழிமின்" (மலைபடு.218) எனப் பன்மை கொண்டு முடிந்ததே யெனினும்[2] அமைக என்பது.

மற்று இதுவும் ஒருமைப்பெயர் பன்மை கொண்டு முடிதல் ஒக்குமாகலின், முன்னர் "ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி" (எச்ச.64) என்னுஞ் சூத்திரத்துள் அடங்கும் பிறவெனின்,

அற்றன்று; முன் செய்யுணோக்கிச் சொல்லினாரல்லர்; இனிச் செய்யுணோக்கிச் சொல்லினார். எங்ஙனம்? முன்னிலை ஒருமை பன்மை கொண்டு முடிதல், ஆற்றுப்படைச் செய்யுட்கு முன்னிலைக் கட்டுரை பயின்றமையானும் மேலதனைக் கொண்டும் அச்செய்யுள் விதியுடைத்தொன்றாதலானும், அதனை அமைக்கவேண்டும்.அதனாற் சொல்லினார் அதற்கே வரைந்து".

மற்று, ஆற்றுப்படை மருங்கினானே அமையாது 'போற்றல் வேண்டும்' என்பதனால், பிறவும் உள ஈண்டுப் போற்றி உணரப்படுவன என்பது.

"நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்

என்னையே குறித்த[3] நோக்கமொடு" (அகநா.110) என்புழித் தானும் அன்னார் உள்ளாள் ஆகலின், பல்லேம் உள்ளும்[4] எனற்பாற்றுமன்; ஆயினும், அஃது அமைக என்பது.

இனி, "புலைய னெறிந்த பூசற் றண்ணுமை
ஏவ விளையர் தாய்வயிறு கரிக்கும்"

எனற்பாற்றுமன். ஆயினும் அமைக என்பது.

மற்று, இளையர் பல்லாரையும் உடைய தாயைச் சொல்லிற்றாகப் பெறாதோவெனின், அற்றன்று; ஆண்டு

---

சு.வே: 1 ஒருவிர் ஒருவிர் (கா.ந)
2 பன்மைகொண்டு முடிந்தது. முடிந்ததே யெனினும் (கா.ந)
3 என்னே குறித்த (ஏடு)
4 அன்னாருள்ளாராகலின் பல்லேமுள்ளேம் (கா.ந)

பூசலாட்களாகலான் அவர்க்கெல்லாம் ஒருதாயாதல் இயை பின்று என்பது.

இனி, ஒருசாரார் "கறையணி மிடற்றினை[1]" என்னும் முன்னிலை ஒருமை கறையணிமிடற்றினவை என்னும் அஃறி ணைப் படர்க்கைப் பன்மையானும் முடிந்ததென்று காட்டுப.

இனிக் கறையணிமிடற்றினவை என்றது அத்தேவனார் கூளிகளை என்ப ஒருதிறத்தார்.

அற்றன்று, பின்னை யனையை யாதலின் அத்தேவனார் தம் மேல் ஏறுமாகலின் அமைக்க வேண்டும் என்பார் முன்னை உரைப்பார்.

பிறவும் இவ்வாறு வருவன போற்றியுணரப்படும்.

**456. செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்**
**மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்**
**பல்வேறு செய்தியின் நூனெறி பிழையாது**
**சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.**

எ...ன், இவ்வதிகாரத்துள் எடுத்தோத்தே இலேசே யன்றி இவ்வாற்றான் முடியாது நின்றவற்றுக்கெல்லாம் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

"செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் முன்னரே முடிவு கூறப் படாது நின்ற சொற்கள் இவையென்று தெரிந்து அவற்றை **உத்திவகை** இலக்கணத்தொடு படுத்திக் காட்டுக என்றவாறு".

உ . ம்:-

"தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகும் உண்டுதாம் மணந்த ஞான்றே"

(குறுந். 25)

---

சு.வே: 1 கறைமிடற்றினை (ஏடு)

என்புழிச் 'சிறுபசுங்கால' என்று பன்மையாற் கூறிப் பின்னைக் 'குருகும் உண்டு' என்று ஒருமையாற் கூறுதல் வழுவாயிற்று; ஆயினும் அமைக என்பது.

''இரண்டனுட் கூர்ங்கோட்ட காட்டுவல்''

என்புழிக் கூர்ங்கோட்டது எனற்பாற்று; என்னை, இரண்டனுள் என்றாற் பின்னை ஒன்றேயாகலின் என்பது. ஆயினும் அமைக என்றது.

இனி, வழக்கினுள் எம்முளவனல்லன் நும்முளவனல்லன் என்னும் பிறவும் இவ்வாறு இடவழுப்பட வருவன அமைத்துக் கொள்க.

இனி, ஒரு சாரார் சம்பு, சள்ளை, சத்தி என்பன ஈண்டுக் காட்டுவாரும் உளர்.

பிறவும் முடியாது நின்றனவெல்லாம் இதுவே விதியோத் தாகக் கொள்க என்பது.

**எச்சவியல் முடிந்தது[1]**

''வேற்றுமை எட்டுத் திணையிரண்டு பாலைந்து
மாற்றுதற் கொத்த வழுவேழும்–ஆறெட்டும்
ஏற்றமுக் காலம் இடமூன்றோ டீரிடத்தும்
ஆற்ற வருவதாஞ் சொல்''

சொல்லதிகாரம் உண்மைப் பொருளும் உதாரணமும் முடிந் தன.

மேற்கூறிய வெண்பா, வீரசோழிய உரையுள் 84 – ஆம் எண்ணுள்ள பாட்டாக உள்ளது. அது,

''வேற்றுமை யெட்டுந் திணையிரண்டும் பாலைந்தும்
மாற்றுதற் கொத்த வழுவேழும் – ஆறெட்டும்
ஏற்றமுக் கால மிடமூன்றோ டிரண்டிடத்தால்
தோற்ற வுரைப்பதாஞ் சொல்''.

---

1 முற்றிற்று (கா.ந)

என்று சிறிது வேறுபட எழுதப்பட்டு, **இவ்வண்ணம் எட்டு வகைப்படுத்துச் சொல்லாராய்ந்தார் தொல்காப்பியனார்** என்று குறிப்பும் எழுதப்பட்டு, உரையும் வரையப்பட்டுள்ளது. அவ்வுரையை ஆண்டுக்காண்க. உரை வகையில் மெய்யுரை என்ப தொன்றுண்டு (திவா). ஈண்டு உண்மைப் பொருள் என்பதை நோக்குக.

யான் முன் பயன்படுத்தியது **திருப்பாதிரிப்புலியூர் திருஞானியார் மடத்துச் சுவடியாகும்.** அதன் ஈற்றில் ''திருஞான சம்பந்த மூர்த்தித் திருவடி துணை, திருநாவுக்கரசர் திருவடி துணை, திருநாவலூரர் திருவடிதுணை, திருவாதவூரர் திருவடி துணை, திருத்தொண்டர் தாள்கள் எஞ்சிந்தையிற்றிகழ்க'' என எழுதப்பட்டுள்ளது.

பின் திருவாவடுதுறைச் சுவடியை வைத்து ஒப்பு நோக்கினேன். அச்சுவடியின் ஈற்றில்,

''சுவாமி சாலிவாடீசர் காந்திமதியம்மன் துணை
வடிவேதுணை குமரகுருபரன் துணை
தொல்காப்பியம் இளம்பூரண உரையாசிரியருரை
எழுத்துஞ் சொல்லும் இரண்டுக்கும் உரை முற்றும்
சிவமயம்'' என்று எழுதப்பட்டுள்ளது.

8.8.1984-இல்
இச்சுவடி பார்த்து
முடிவுற்றது.

**திரு அடிகளாசிரியர்.**

---

# நூற்பா சொல்லகராதி

## அ


அ 2:3, 9:2, 15:2, 16:2, 28: 2,4, 35:2, 36:1, 68:2, 69:2, 72:4, 13, 95:2, 104:2, 105:2, 111:4, 117:3, 125:1, 128:1, 140:2, 150:2, 157:5, 159:7, 160:11, 163:3, 164:6, 165:6, 166:1, 167:3, 173:4, 174:3, 175:5, 197:2, 198:5, 199:4, 200:2, 201:3, 205:2, 207: 2, 208:1, 210:6, 212:1,2, 214:2, 215:1, 216:6, 217:4, 222:2, 223:3, 226:1, 229:3, 233:4, 237:2, 245:9, 247:2, 248:2, 249:2, 250:3, 257:2, 273:1, 397:1, 406:4, 411:3, 413:4,5, 421:2,4,6, 422:1, 445:2,

அஆவ 9:1

அஆவ என வருஉம் இறுதி அப்பான் மூன்றே பலவறி சொல் 9

அஆவ என வருஉம் இறுதி.. பலவற்றுப் படர்க்கை 21:2

அ எனப் பிரித்தல் 105:2

அஃறிணை 1:2, 24:1,2, 43:1, 49:3, 51:2, 57:10, 105:2, 147:1, 148:2, 157:3, 164:7, 167:1, 168:1, 198:3, 216:9.

அஃறிணை இயற்பெயர் 168:1

அஃறிணை இயற்பெயர் ஒருமையும் பன்மையும் வினையொடுவரினே தெரிநிலையுடைய 168:1,2

அஃறிணைக் கிளவியென்று 43:1

அஃறிணைக் குரிமையும் 157:3, 198:3

அஃறிணைப் பிரிப்பினும் 24:1

அஃறிணைப் பெயரே 164:7

அஃறிணை மருங்கில் 105:2

அஃறிணை மருங்கின் 148:2

அஃறிணை மருங்கின் கிளந்தாங்கியலும் 57:10

அஃறிணை மருங்கினும் 49:3

அஃறிணை முடிபின 51:2

அஃறிணைய 214:2

அஃறிணையவ்வே 3:2

அஃறிணை யென்மனார் அவரல பிறவே 1:2

அஃறிணை விரவுப்பெயர் 147:1

அகத்திடும் 351:1
அகம் 77:5
அகரமும் 128:1
அகரமும் ஆகும் 128:1
அகலப் பொருட்டே. 358:1
அகலம் 358:1, 370:1
அகலமும் 370:1
அச்சக் கிளவிக்கு 96:1
அச்சப் பொருள 359:2
அச்சம் 75:5, 96:1, 249:1, 359:2, 377:4
அசை 245:5, 252:2, 266:1
அசைக்கும் 419:4
அசைச்சொல் 150:1, 268:1, 269:2
அசைநிலை 257:1, 262:1, 267:1, 274:3, 275:2, 405:1
அசைநிலைக்கிளவி 245:5, 266:1
அசைநிலைக்கிளவி ஆகி வரு-நவும் 245:5
அசைநிலைக் கிளவியென்று 262:1
அஞ்சல் 72:12
அஞ்சலின் 72:12
அடி 402:2
அடிநிலை 401:1
அடிநிலை திரிந்து 401:1
அடிமறி 398:1, 401:1, 402:1
அடிமறிச்செய்தி 401:1
அடிமறியான 402:2
அடிமை 57:2
அடுக்கிய 98:1
அடுக்கு 405:2, 418:1
அடுக்குந 228:2, 423:2
அடுக்குநவரினும் 228:2
அடுத்த 160:1,2,3, 161:2
அடுத்து 246:2
அடை 26:1
அடைசினை முதலென முறை மூன்றும் 26:1
அடைசினை முதலெனமுறை மூன்றும் மயங்காமை நடைபெற்றியலும் வண்ணச் சினைச்சொல் 26
அண்மை 124:1, 128:1
அண்மைச் சொல்லிற்கு 128:1
அண்மைச் சொல்லே இயற்கையாகும் 124:1
அணிமை 369:1
அத்திணை மருங்கின் இரு பாற் கிளவிக்கும் ஒக்கும் எவன் என்வினாவே 215
அத்திணை மருங்கின் முப் பாற்கும் உரித்தே 207:2
அத்திணையவ்வே 163:3 167:3.
அத்து 28:4, 53:3, 57:8, 60:1, 76:7, 77:3,(3), 94:2, 106:6, 149:3, 193:3, 210:2,

213:2, 220:1, 221:2, 222:2, 234:1, 235:2, 236:1,3, 237:3, 240:1, 255:1, 270:2, 276:2,3, 367:1, 392:3, 394:1, 409:1, 410:1, 421:4' 423:3, 442:3, 446:1, 451:1, 452:1,

அதற்கு 74:4(2)5,6,

அதற்குடம்படுதலின் 74:4

அதற்குப்படுபொருளின் 74:5

அதற்கு யாப்புடைமையின் 74:6

அதற்கு வினையுடைமையின் 74:4

அதற் பொருட்டாதலின் 74:6

அதற்றகு கிளவி 73:4

அதன் 47:1, 72:14, 74:8, 75:12, 131:1, 137:1, 410:2,

அதன் குணம் நுதலி 410:2

அதன் பால 72:14, 73:11, 74:8, 75:12, 77:8,

அதன் பொருட்டு 74:6

அதன் மரபே 47:1

அதன் வினைப்படுதல் 73:5

அதனால் 106:3

அதனாற் செயற்படற் கொத்த கிளவியும் 106:3

அதனிற் கோடல் 73:6

அதனின் ஆதல் 73:5

அதனின் இயறல் 73:4

அதனை 106:2

அதனைக்கொள்ளும் பொருள்வயினானும் 106:2

அதனொடியைந்த ஒப்ப லொப்புரை 73:9

அதனோடியைந்த ஒரு வினைக்கிளவி 73:7

அதனோடியைந்த வேறு வினைக் கிளவி 73:8

அதனோடு 73:6.8,9, 77:7

அதனொடு மயங்கல் 73:6

அதனோரற்றே 131:1, 137:1, 254:1,

அதிர்வு 310:1

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும் 310:1

அது 47:1, 65:3, 72:4, 73:3, 4, 5(2)6,(2)7,8,11, 74:4,(3)5 (2)6,(2)7,8, 75:3,12, 76:2, 3,4, 77:4,8. 83:1, 90:1,2, 106:1,2,3, 131;1 137:1, 164:1, 210:1. 254:1, 385:1,

அது இது உதுவென வரூஉம் பெயரும் 164:1

அதுச்சொல் வேற்றுமை உடையமையானும் 210:1

அதுவாகு கிளவியின் 74:5

அதுவென் வேற்றுமை 83:1 90:1

அதுவென் வேற்றுமை உயர் திணைத் தொகைவயின் 90:1

அது வென்னுருபு 90:2

அதுவென் னுருபு கெடக் குகரம் வருமே 90

அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி 76:2

அதுவே 72:4, 74:7, 75:3, 76:4

அந்தம் 4:4

அந்தில் 262:1

அந்தில் ஆங்கு அசைநிலைக் கிளவியென்றா யிரண்டாகும் 262:1,2

அந்நாலைந்தும் 205:2

அந்நாற் சொல்லும் 28:2 397:1

அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரம் 200:2

அந்நான்கு என்ப 413:5

அந்நான் கென்ப 125:1

அந்நான் கென்ப இயற்பெயர் நிலையே 173:4

அந்நான் கென்ப சினைப் பெயர் நிலையே 174:3

அந்நான்கென்ப சினைமுதற் பெயரே 175:5

அந்நிலை மரபின் மெய் யூர்ந்து வருமே 445:2

அப்பண் பினவே 111:4,245:9

அப்பண்பு குறித்த வினை முதற் கிளவி 237:2

அப்பதினைந்தும் 159:7 160:11

அப்பால் 117:3

அப்பால் இரண்டென 257:2

அப்பால் எட்டே உம்மைச் சொல்லே 250:3

அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன 165:6

அப்பால் நான்கே 117:3

அப்பால் நான்கேகொன்னைச் சொல்லே 249:2

அப்பால் மூன்றே 212:2

அப்பாலான 68:2

அப்பாற் காலங்குறிப்போடு தோன்றும் 210:4

அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும் 216:6

அப்பொருட்கிளவியும் 74:8 பா:வே

அப்பொருட்டு 273:1

அப்பொருள் 95:2

அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல் 36:2

அப்பொருள் கூறின் 36:1

அப்பொருள் புணர்ந்த கிளவி யான 15:2

அப்பொருளாகும் 16:2

அம் 199:2

அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும் 199:2

அம்ம 150:1, 271:1,

அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம் 150:1

அம்ம கேட்பிக்கும் 271:1

அம் முக்காலமும் 421:2

அம் முக்காலமும் குறிப் பொடும் கொள்ளும் 197:2

அம் முக்கிளவியும் 226:1

அம் முதற் பொருள 72:1

அம் முப்பாற் சொல் 2:3

அம்முப்பாற் சொல் உயர் திணையவ்வே 2:3

அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்... இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய 217:4, 6

அம்முறைப் பெயரொடு சிவணாதாயினும் 150:2

அம்முறை யிரண்டும் 140:2

அம்மூவிடத்தான் 421:4

அம் மூவிடத்தும் 28:4

அம்மூவிரண்டும் 214:2

அம்மூவிற்றும் 208:1

அம்மூவுருபின 157:5 பாடம் 198:5

அம்மூவுருவின் 157:5

அம்மூன்றெனப தில்லைச் சொல்லே 248:2

அம்மூன்றெனப மன்னைச் சொல்லே 247:2

அமர்தல் 374:1

அமர்தல் மேவல் 374:1

அமைந்த 400:2

அம்மொழி 413:4

அம்மொழி நிலையாது அன் மொழி நிலையலும் 413:4

அயல் 77:6, 142:1

அயல் நெடிதாயின் 142:1

அர் 130:1, 203:1

அர் ஆர் ப என வரூஉம் மூன்றும் பல்லோர்.. படர்க்கைச்சொல் 203

அரசு 57:3

அரசே 57:3

அரவப்பொருள 343:2

அரவம் 343:2

அரி 350:1

அரியே ஐமை 350:1

அருவும் 135:1

அரோ 274:2

அல் 73:9, 89:1, 270:3, 436;1

அல்ல 18:2, 27:4, 113:1, 171:6, 216:2, 291:1, 390:1,

அல்லது 35:1, 44:2, 169:4, 184:1, 384:1, 435:2,

அல்லது இல் எனின் 35:1

அல்லா 35:2, 80:1, 101:1
அல்லாப் பொருள்வயின் 101:1
அல்வழி 420:3
அல 1:2
அலங்கடை 62:4,71:2, 194:1,
அலங்கடையே 194:1
அலமரல் 304:1
அல் 29:1, 32:1, (2) 53:1, 57:7, 66:1, 68:2, 89:2, 105:1, 113:1, 116:1, 118:1, 127:1, 156:2, 157:1, 159:1, 160:1, 167:8, 171:5, 172:1, 186:1, 201:1, 206:1, 209:1, 218:1,220:1, 224:3, 225:2, 230:1, 233:1, 253:2, 285:2, 270:1, 384:2
அவ் அவ் 290:1
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி 223:3
அவ்வச் சொல்லிற்கு 290:1
அவ்வயின் மூன்றும் 222:2
அவ்வழி 159:1
அவ்வறு கிளவியும் 411:3
அவ்வறு கிளவியும் கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி 253:2, 3
அவ்வறு பொருட்கும் 229:3
அவ்வறு என்ப முற்றியன் மொழியே 421:6
அவ்வாறென்ப தொகைமொழி நிலையே 406:4
அவ்விடன் அறிதல் 233:4
அவ்வியல் திரியாது 201:3
அவ்வியல் நிலையுல் 69:2
அவ்வியன் நிலையும் 422:1
அவ்விரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும் 89:2
அவ் விரு முதலில் 72:4
அவ்வும் 68:2
அவ்வும் உரிய 68:2
அவ்வே 116:1
அவ்வொடுஞ் சிவணும் 104:2
அவண் 246:3
அவர் 1:2, 159:4
அவர் இவர் உவர் என வருஉம் பெயரும் 159:4
அவள் 159:3
அவள் இவள் உவள் என வருஉம் பெயரும் 159:3
அவற்றவற் றியல்பே 288:2
அவற்றவற் றியலான் 416:3
அவற்றவற்று 416:3, 288:2
அவற்றியல்பியலும் 140:2
அவற்றியல் பளவே 167:8, 224:3
அவற்றின் 285:1
அவற்றின் வருஉம் எண்ணின் இறுதியும் 285:1

அவற்று 140:2, 156:2, 160:11, 165:6, 167:8, 224:3

அவற்றுவழி மருங்கிற் றோன்றும் 156:2

அவற்றுள் 29:1, 32:1, 53:1, 66:1, 105:1, 118:1, 127:1, 157:1, 172:1, 186:1, 201:1, 206:1, 218:1, 221:1, 225:1, 233:1. 270:1, 315:1, 342:1, 344:1, 353:1, 392:1, 399:1, 407:1, 425:1, 439:1.

அவற்றொடு 57:7, 113:1, 230:1, 384: 2.

அவற்றொடு கொள்ளும் 209:1

அவற்றொடு சிவணி 57:7

அவற்றொடும் 171:5

அவற்றோரன்ன 160:11

அவன் 159:2

அவன் இவன் உவன் என வருஉம் பெயரும் 159: 2

அவை 65:1, 109:1, 111:1, 117:1, 151:1, 160:9, 164:2, 3, 164:4, 173:1, 199:1, 245:1, 246:1, 246:1, 294:1, 398:2, 404:1, 405:2, 413:1, 423:1, 434:1, 436:1,

அவை அல் கிளவி 436:1

அவை அவை 290:1

அவை அவை பொருளென 290:1

அவை தாம் 65:1 109:1, 111:1, 117:1, 173:1, 199:1, 245:1. 246:1, 294:1, 413:1, 423:1, 434:1,

அவை நான்கென்ப 398:2

அவை முதலாகிய ஆய்தப் பெயரும் 164:2

